


# ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்

## ஆண்டறிக்கை
## 2019/20

SriLankan Airlines

# உள்ளடக்கம்


**மேற்பார்வை**

எமது தூரநோக்கு மற்றும் எமது பணி 2
முன்னிலைப்படுத்தல்கள் 2019/20 3

**முகாமைத்துவ அறிக்கைகள்**

தலைவரின் செய்தி 4
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு 6
இயக்குனர்கள் குழு 10
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 12
நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவ (நி.இ.மு.) வரம்புறுகை 16
முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு 18

**நிதி அறிக்கைகள்**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 44
சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 2019/2020 48
பணிப்பாளர்களின் பொறுப்புக்களிலான கூற்று 49
சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 50
நிதி நிலைமைக் கூற்று 54
இலாப நட்டக் கூற்று 55
விரிவான வருமானக் கூற்று 56
உரித்துவத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று 57
காசுப்பாய்ச்சல் கூற்று 58
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 59

**இணைப்புக்கள்**

அருஞ்சொல் விளக்கக்கோவை 104
பத்து வருட பகுப்பாய்வு 106
விமானப் பயண வரைபடம் 108
மைல்கற்கள் 110
கூட்டாண்மை தகவல்கள் 112

கூட்டம் பற்றிய அறிவித்தல் 113
பதிலாள் படிவம் 114
குறிப்புக்கள் 115


**குறிப்பு:**

இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# எமது தொலைநோக்கு

ஆசியாவிலேயே மிக உயர்ந்த வாடிக்கையாளர் மையமான விமான நிறுவனமாக வருதல்

# எமது பணிநோக்கு

எமது வாடிக்கையாளர்களை, ஓர் நம்பிக்கையுடைய மற்றும் ரம்மியமான பிரயாண அனுபவத்தினை அரவணைப்பு மற்றும் விருந்தோம்பலுடன், ஸ்ரீலங்கன் முறையில் மகிழ்விப்பதற்கு. நாம் ஓர் தகுதிவாய்ந்த, முன்னியக்கம் மற்றும் விடாமுயற்சியுடனான நிதியியல் ரீதியில் சாத்தியமான நிறுவனமாக, எமது பங்குதாரர்களின் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு கடுமுயற்சி செய்கின்றோம்.



# முன்னிலைப்படுத்தல்கள் 2019/20

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2020 | 2019 | 2020 | 2019 |
| **நிதி** | | | | | |
| வருவாய் | ரூ. மில். | 183,531.82 | 184,097.04 | 180,151.02 | 180,340.32 |
| இயக்க செலவு | ரூ. மில். | (188,699.06) | (207,321.53) | (190,321.69) | (209,344.66) |
| வரிக்கு முன் இழப்பு | ரூ. மில். | (44,104.72) | (41,626.91) | (47,197.86) | (44,022.67) |
| ஆண்டின் நிகர இழப்பு | ரூ. மில். | (44,139.40) | (41,700.33) | (47,197.86) | (44,022.67) |
| மொத்த சொத்துக்கள் | ரூ. மில். | 186,428.56 | 82,247.73 | 181,189.60 | 77,339.00 |
| பங்குதாரர்களின் நிதி | ரூ. மில். | (261,173.54) | (168,111.70) | (273,369.08) | (177,556.23) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில். | | | 18,041.41 | 18,925.40 |
| ஓட்டுமொத்த கொள்திறன் | ATK மில். | | | 2,454.30 | 2,577.53 |
| கொண்டுசென்ற பயணிகள் | RPK மில். | | | 5,256.04 | 5,663.01 |
| கொண்டுசென்ற ஓட்டுமொத்த சுமை | RTK மில். | | | 1,664.49 | 1,806.58 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 80.64 | 82.90 |
| ஓட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 67.82 | 70.09 |
| **பணியாளர்கள் உற்பத்தித்திறன்** | | | | | |
| சராசரி வலிமை | எண்ணிக்கை | 7,709 | 7,844 | 6,693 | 6,794 |
| பணியாளர் ஒருவருக்கான வருமானம் | ரூ. மில். | 23.81 | 23.47 | 26.92 | 26.54 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | | | 5 | 5 |
| A321-200 | எண்ணிக்கை | | | 2 | 2 |
| A320neo | எண்ணிக்கை | | | 2 | 2 |
| A321neo | எண்ணிக்கை | | | 4 | 4 |
| A330-200 | எண்ணிக்கை | | | 5 | 7 |
| A330-300 | எண்ணிக்கை | | | 7 | 7 |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 25 | 27 |

# தலைவரின் செய்தி

## “தொற்றின் காரணமாக முன்னெப்போதும் நிகழ்ந்திராத சூழலுக்கு விமான நிறுவனம் முகங்கொடுத்த போதிலும், 2021 இல் எமது விமான நிறுவனமும் துறையும், வழமையான நிலைக்கு திரும்புமென நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.”

நானும் என்னுடன் இணைந்து புதிய பணிப்பாளர்கள் சபையும் திடமான கடப்பாட்டுடன் பெப்ரவரி 2020 இல் கடமையினை பொறுப்பேற்றோம். நாங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை ஓர் இலாபகரமான நிறுவனமாக மாற்றுவதற்கு அதன் உள்ளார்ந்த சாத்தியம் குறித்து திடமான நம்பிக்கையினை கொண்டுள்ளதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிப்பதற்காக இவ்விமான நிறுவனத்தினை புதிய உச்ச நிலைக்கு எடுத்துச் செல்லும் தொலைநோக்கினையும் கொண்டுள்ளோம். முற்றான ஆகாயப் பிரயாணம் மற்றும் சுற்றுலாத் துறையில் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்திய ஏப்ரல் 2019 இல் இடம்பெற்ற பேரிடரான ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் நாம் பதவியினைப் பொறுப்பேற்றோம். பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அவரின் குழுவினால் வழிநடத்தப்பட்ட விமான நிறுவனமானது இந்த தோல்வியிலிருந்து மீண்டு ஏற்கனவே சாதகமான விளைவினை காண்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எவ்வாறாயினும், நீங்கள் அறிந்துள்ளவாறு, விமானப் பிரயாணத்துறையானது இதுவரைக்கும் சந்தித்த மிகவும் கடுமையான நெருக்கடியாக உலகம் பூராவும் விரைவாக பரவும் கோவிட்-19 தொற்று காணப்படுவதுடன் இது எமது விமானக்கம்பனி முகங்கொடுக்கும் சவால்களை கடுமையாக்கியுள்ளது.

### செயற்படும் சூழல்

2019 ஆம் ஆண்டு உலகளாவிய வானூர்திப் பயணத் துறைக்கு சவால்மிக்க ஆண்டாகும். வான்வழி பயணிகள் சேவைகளுக்கான கேள்வியானது பயணி வருவாய் கிலோமீற்றர் (ப.வ.கி.) அளவிடப்படுவதுடன் இது வருடத்துடன் வருடம் ஒப்பிடும்போது 4.2% குறைவான வளர்ச்சியினை பதிவுசெய்துள்ளது. இது 2018 ஆம் பதிவுசெய்த 7.2% வளர்ச்சியிலிருந்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். வான்வழி பிரயாணத்திற்கான கேள்வியில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கம் சவால்மிக்க உலகளாவிய பொருளாதார நிலையிலிருந்து வந்துள்ளதுடன், பிரதானமாக உலகின் அதி சக்திவாய்ந்த பொருளாதாரங்கள் இடையேயான வர்த்தக பதற்றங்களினாலாகும். உலக விமானத்துறை கொள்திறனானது, கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றரினால் (கி.இ.கி.) அளிவிடப்படுகின்றது, 3.2% ஆக காணப்பட்டது. இது 2009 இலிருந்து வருடத்திலிருந்து வருடம் பதிவு செய்த மிகவும் குறைவான வளர்ச்சியாகும். பயணிகள் கேள்விக்கு மாறாக விமானச் சரக்குக்கான கேள்வியானது 2019 இல் 3.2% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன், குறைவடையும் உலக வர்த்தகத்தின் காரணமாக 2012 இலிருந்து முதற்தடவையாக பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சி இதுவாகும்.

அடுத்தடுத்து 8 வருடங்களாக காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கானது தொடர்ந்ததுடன், பயணிகள் விளைவானது கடுமையான போட்டியின் காரணமாக 2019 இல் 3%ஆல் வீழ்ச்சியடைந்தது. சரக்கு விளைவானது 2018 இல் பதிவுசெய்த கவர்ச்சிமிக்க 12% வளர்ச்சியினை தொடர்ந்து 2019 இல் 5%ஆல் வீழ்ச்சியடைந்தது.

சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (ச.வி.போ.ச.) விமானப் போக்குவரத்துத் துறையின் தொழிற்பாட்டு இலாபமானது 2019 இல் அமெரிக்க டொலர்கள் 42.5 பில்லியனாகக் காணப்பட்டுள்ளது என மதிப்பீடு செய்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அமெரிக்க டொலர்கள் 3 பில்லியனுக்கும் அதிகமாக குறைவடைந்துள்ளது. 2019 இல் காணப்பட்ட தொழிற்பாட்டு ஆதாய அளவானது வருவாயின் 5.1% ஆக காணப்பட்டதுடன் இது 2018 இன் 5.7% உடன் ஒப்பிடும்போது ஓர் வீழ்ச்சியாகும்.

மேலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கோவிட்-19 நெருக்கடிக்கு மத்தியில் கடுமையான பிரயாணக் கட்டுப்பாடுகள் பயணிகள் கேள்வி மற்றும் விமானநிறுவன வருவாயில் தொடர்ந்தும் பாரதூரமான தாக்கத்தினைக் கொண்டுள்ளதுடன் உலகளாவிய துறையின் கண்ணோட்டத்தினை சீர்கெடச் செய்தது. இருந்தபோதிலும், வான்வழிப் போக்குவரத்துத் துறையானது உலகம் பூராவும் தவிக்கின்ற பிரயாணிகளை மீள கொண்டுவருதல் மற்றும் மருத்துவ பொருட்கள் உள்ளடங்கலான அத்தியாவசிய பொருட்களது போக்குவரத்து என்பவற்றினை இயலுமையாக்கியதன் மூலம் தொடர்ந்தும் முக்கிய பங்களிப்பினை மேற்கொள்கின்றது.

2019/20 நிதியாண்டானது ஏப்ரல் மாத இறுதியில் இதுவரை நிகழ்ந்திராத ஈஸ்டர் ஞாயிறு சம்பவத்துடன் ஓர் பாதகமான தொடக்கத்துடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வானது எமது நாடு பூராவினையும் பாழாக்கியதுடன் பிரயாண மற்றும் வான்வழிப் போக்குவரத்துத் துறையினை ஓர் முற்றான செயலற்ற நிலைக்கு கொண்டுவந்தது. ஏற்கனவே கொள்திறனால் வழிநடத்தப்படும் சந்தை விளைவின் குறைப்பு சவால்கள், தளம்பலான உலகளாவிய எரிபொருள் விலைகள், நாணய பெறுமதி வீழ்ச்சி மற்றும் பாதகமான வரி மறுசீரமைப்புக்கான வெளிப்பாடுகள் போன்றவற்றுடன் சமரிடும் அதேவேளை ஈஸ்டர் ஞாயிறு நிகழ்வுகளின் தாக்கமானது விமான நிறுவனத்திலான அழுத்தத்தினை பூதாகரமாக்கியது.

இலங்கைக்கான ஒட்டுமொத்த உல்லாசப் பயணிகள் வருகையானது இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து கணிசமானளவு வீழ்ச்சியடைந்து 2019 ஆம் நாட்கட்டி ஆண்டின் இறுதியில் 1.9 மில்லியனை எட்டியதுடன், இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 18.0% வீழ்ச்சியாகும். மொத்த துறைசார் வருமானமும் 2018 இலிருந்து 18.0% ஆல் வீழ்ச்சியடைந்து அமெரிக்க டொலர்கள் 3.6 பில்லியனை பதிவு செய்தது. எவ்வாறாயினும், 2019 இன் குளிர்காலமானது உல்லாசப் பயணிகளின் வருகை கணிசமானளவு அதிகரிப்பினை காட்டியதுடன், முன்னைய ஆண்டின் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களிலான வருகையுடன் ஒப்பிடும்போது முறையே 4.5% மற்றும் 6.5%ஆல் குறைவடைந்திருந்தது. இருந்தபோதிலும் 2020 இன் ஆரம்பத்தில் ஆசியப் பிராந்தியத்தில் கோவிட்-19 தொற்றின் விரைவான பரவலானது பெப்ரவரி தொடக்கம் உல்லாசப் பயணிகளின் வருகையில் சடுதியான வீழ்ச்சியினை பதிவுசெய்து மார்ச் இறுதியில் முற்றாக வருகை நிறுத்தப்பட்டது. கோவிட்-19 இன் திடீர் பெருக்கம் காரணமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மூடப்பட்டதுடன், செயற்பாடுகள் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களை மீள்கொண்டுவருதல் விமானசேவைகள் மற்றும் சரக்கு விமானசேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றின் காரணமாக முன்னெப்போதும் நிகழ்ந்திராத சூழலுக்கு விமான நிறுவனம் முகங்கொடுத்த போதிலும், 2021 இல் எமது விமான நிறுவனமும் துறையும், அரசாங்கத்தினால் தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட செயல்முறைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீளெழுச்சிக்கு வசதியளித்தல் என்பவற்றின் பின்னணியில் ஓர் திருப்புமுனையினை அடையும் என நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.

## செயற்திறன்

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் உலகளாவிய தொற்று ஆகியவற்றினால் ஏற்பட்ட இரட்டை பேரிடியினால் குழுமத்தின் செயற்திறனானது தடைப்பட்டபோதிலும், அமெரிக்க டொலர் அளவீட்டில் வருவாயானது 8% வீழ்ச்சியினையும் இலங்கை ரூபாவின் அளவீட்டில் வருவாயானது ரூபா 183.5 பில்லியனை அடைந்து 0.3% ஆல் மாத்திரமே வீழ்ச்சியடைந்தது பாராட்டத்தக்கதாகும். வட்டி, வரி, பெறுமானத்தேய்வு, பெறுமானக்குறைப்பு மற்றும் வாடகை (வ.வ.பெ.பெ.வா.) என்பவற்றுக்கு முந்திய வருமானம் ரூபா 9.3 பில்லியனிலிருந்து ரூபா 15.9 பில்லியனாக மேம்பட்டது. இது அடிப்படை வணிகத்தின் மெய்யான செயற்திறனின் அளவீடாகும். 2019/20 க்கான குழுமத்தின் தொழிற்பாட்டு நட்டமானது முன்னைய ஆண்டின் ரூபா 23,224 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 5,167 மில்லியன் ஆகவும், தேறிய நட்டமானது முன்னைய ஆண்டின் ரூபா 41,700 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 44,139 மில்லியனாகவும் காணப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நட்டத்திற்கு பங்களிக்கும் முக்கிய காரணிகள் தொழிற்பாடு சாராதவை என்பதுடன் அவை நிதிச் செலவினங்கள், பரிமாற்றல் நட்டம் மற்றும் பிடித்து வைத்தல் வரி என்பவற்றால் என்பதை குறிப்பிடுவது முக்கியமாகும். மேலும், நிதியியல் செயற்திறனின் விளக்கமானது பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தியிலும் முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வில் கொடுக்கப்பட்டுள்ளது.

## எதிர்கால கண்ணோட்டம்

புதிய சபையும் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வழிநடத்தப்படும் குழுவும் ஒன்றிணைந்து கம்பனியின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு ஏற்கனவே பல குறுங்கால மற்றும் நீண்டகால வழிமுறைகளை எடுத்துள்ளது.

விமானக் கம்பனியினை திருப்புமுனையாக கொண்டுசெல்வதற்கு அவசியமான முக்கிய சிக்கல்களாக மரபு நடைமுறைகள், அளவுக்கதிகமான கடன் மற்றும் வானூர்திகள் தொடர்பான சிக்கல்கள் என்பவற்றிலிருந்து எழும் முக்கிய சிக்கல்கள் என்பவற்றை நாம் இனங்கண்டுள்ளோம். தற்போதைய சூழலானது இத்திட்டங்களின் அமுலாக்கத்தினை தாமதமாக்கினாலும், விமான நிறுவனத்தின் மீள்கட்டமைப்பிற்கான திட்டங்கள் இந்த அனைத்து அடிப்படை சிக்கல்களையும் நிவர்த்தி செய்யும். மீள்கட்டமைப்பிற்கான பிரேரணையானது, மூலதன உட்பாய்ச்சல் மற்றும் தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு குறுங்கால உதவிகள் உள்ளடங்களானவை, அமைச்சர்களின் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையினால் குறுங்கால நிதியளித்தல் உறுதுணையானது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மூலதன உட்பாய்ச்சலானது அரசாங்கத்தினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. பிடித்து வைத்தல் வரியிலிருந்து தேவையான நிவாரணம் உள்ளடங்களாக மேலதிக நடவடிக்கைகள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டன.

வருவாய் மேம்படுத்தல்கள் உடன் செலவுக் குறைப்பு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கிய நடைமுறை சவால்களை சந்திப்பதற்காக பல குறுங்கால நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன. தொற்றின் விரிவாக்கம் மற்றும் இதன் காரணமாக பயணிகள் போக்குவரத்திற்கான சர்வதேச எல்லைகளின் மூடுதல் என்பவற்றினை தொடர்ந்து, விமான நிறுவனமானது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அதன் சரக்கு தொழிற்பாட்டினை மேம்படுத்துவதில் உடனடியாக களமிறங்கியது. முதற் தடவையாக, ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்கின் குழுவானது பயணிகள் விமானமொன்றை சரக்கு கொண்டுசெல்வதற்கு மாற்றியதுடன் சரக்கு விமானசேவைக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய செலவுக் குறைப்பு நடவடிக்கைகள், சம்பளக் குறைப்பு மற்றும் ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாட்களது எண்ணிக்கை குறைப்பு என்பவற்றை உள்ளடக்கின. முக்கிய வழங்குநர்களுடன் ஒப்பந்தங்கள் மீளப் பேச்சுவார்த்தைக்குட்பட்டதுடன், நடைமுறையிலுள்ள விமான குத்தகை ஒப்பந்தங்களுக்கு முக்கிய விமான குத்தகை அளிப்பவருடன் சிறந்த விதிமுறைகளை மீளப் பேசுவதில் கணிசமானளவு வெற்றியினை கண்டுள்ளோம்.

கடந்த காலங்களில் இலங்கையின் உல்லாசத் துறையினை ஊக்குவிக்கும் அரசாங்க முகவர்களிடையே ஒருங்கிணைப்பு காணப்படாமையானது ஓர் முக்கிய குறைபாடாகும் என்பதுடன், இதனை நிவர்த்திசெய்யும் நோக்கில், சீனா, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவை இலக்குவைத்த சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பதற்காக இலங்கை உல்லாசத்துறையுடன் இணைந்து நாம் ஓர் அமைச்சரவை பத்திரிகையினை சமர்ப்பித்துள்ளோம்.

தொற்றின் முன்னர், விமான நிறுவனமானது ஐரோப்பா, தூர கிழக்கு, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய புதிய இலக்குகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களை உருவாக்கியிருந்தது. ஆனால் தற்போது இவை தாமதிக்கப்படலாம் மற்றும் உல்லாசத் துறையின் மீளெழுச்சியினை பொறுத்து அடுத்த சில ஆண்டுகளுக்கு விரிவாக்கப்படலாம். கடந்த ஆண்டில் ஓர் விமானமானது குறைக்கப்பட்டதுடன் இவ்வருடத்தில் குத்தகை திருப்பியளித்தல் ஊடாக மேலும் இரண்டு விமானங்களை குறைத்து விமான நிறுவனத்தின் நிலையான செலவினை குறைப்பதற்கு உதவலாம். இந்த விமானங்கள் 2021 மற்றும் அதற்கப்பால் மாற்றீடு செய்யப்படலாம் என்பதுடன் மீளெழுச்சி இடம்பெற்றவுடன் நாங்கள் புதிய இலக்குகளை ஆரம்பிப்பதற்கு தயாராயிருப்போம்.

தேசிய வானூர்தியானது பல வருடங்களாக நாட்டிற்கு அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளது என்பது ஏற்றுக்கொள்வதுடன், விசேடமாக நெருக்கடியான காலப் பகுதியில் இலங்கையினை உலகின் மற்றைய நாடுகளுடன் இணைத்தும் மற்றைய நாடுகளை இலங்கையுடன் இணைத்தும் சேவையாற்றியுள்ளது. அதேசமயம் பணிப்பாளர் சபையானது, விமான நிறுவனம் நாட்டின் நிதியில் தொடர்ந்தும் ஓர் சுமையாக காணப்படாததை உறுதிசெய்வதற்கு கடப்பாடுடையவர்களாய் இருப்பதுடன் இந்த இலக்கு நோக்கி தற்போது அனைத்து உள்வாரி மற்றும் வெளிவாரி பங்காளிகளுடன் மிகவும் நெருக்கமாக செயலாற்றுகின்றோம். விமான நிறுவனமானது தற்போது முன்னெப்போதும் நிகழ்ந்திராத நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளபோதிலும், நிலைத்திருக்கக்கூடிய திருப்புமுனையினை அடைவதற்காக அபரிமித மரபுரீதியான பிரச்சனைகளிலிருந்து வெற்றிகொள்ள வேண்டியுள்ளதுடன், இத்துறையில் நன்கு பரிச்சயமான திறமைமிக்க ஆட்களை உள்ளடக்கிய நிபுணத்துவம் மிக்க குழுவின் உறுதுணையுடன் வெற்றி ஈட்டமுடியும் என நான் திடமான நம்புகின்றேன்.

நிறைவாக, மதிப்பிற்குரிய ஜனாதிபதி, உல்லாசத்துறை மற்றும் வான்வழிப் போக்குவரத்துக்கான மாண்புமிகு அமைச்சர் உள்ளடங்களாக அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலுமுள்ள உல்லாசத்துறை மற்றும் வான்வழிப் போக்குவரத்து அமைச்சின் உத்தியோகத்தர்கள், நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள், மற்றும் நாம் கடமையுரியும் ஏனைய அனைத்து அரசாங்க முகவர்களுக்கும் குறுகிய தலைவனான எனக்கு கிடைக்கப்பெற்ற பாரிய உறுதுணைக்காக எனது மனமுவந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நான் இந்த சந்தர்ப்பத்தில் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அவர்களது உள்ளீடுகள் மற்றும் உறுதுணைக்கு நன்றியினை தெரிவிக்கின்றேன். இறுதியாக, ஒட்டமொத்த ஸ்ரீலங்கன் குழுவிற்கும் தொழிற்சங்கங்களுக்கும் கம்பனிக்கு அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் அவர்களது கடப்பாட்டிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**அசோகா பத்திரகே**
*தலைவர்*
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

31 ஜூலை 2020

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

**மீளாய்வாண்டிற்கான நிதியியல் விளைவுகள் சாத்தியமான வ.வ.பெ.பெ.வா. ஐ (வட்டி, வரி, பெறுமானத்தேய்வு, பெறுமதிகுறைப்பு, மற்றும் வாடகைச் செலவினம் என்பவற்றிற்கு முன்னரான வருமானம்) பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டின் வ.வ.பெ. பெ.வா. ஆன ரூபா 9.3 பில்லியனுடன் (USD 89.8 மில்லியன்) ஒப்பிடும்போது இவ்வருடத்தில் ரூபா 15.9 பில்லியனாக (USD 135.5 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாச்சலானது முன்னைய ஆண்டின் ரூபா 3.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது சாத்தியமான ரூபா 26.1 பில்லியனாக உயர்வடைந்தது.**

### துறைசார் மீளாய்வு

இவ்வாண்டின் முதலாம் அரையாண்டில், சர்வதேச வர்த்தக பதட்டங்களினால், விசேடமாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில், உலகளாவிய பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், 2019 ஆம் வான்வழி பயணிகள் சேவைக்கான கேள்வியினது வளர்ச்சியானது (வருமானப் பயணிகள் கிலோமீற்றர் - வ.ப.கி.) 2018 இன் 7.2% இலிருந்து 4.2% ஆக மந்தமடைந்தது. துறைசார் வ.ப.கி. ஆனது சர்வதேச வான்வழிப் போக்குவரத்து சங்கத்தின் (ச.வா.போ.ச.) மதிப்பிடப்பட்ட நீண்டகால துறைசார் சராசரி வளாச்சி வீதமான 5% இலும் பார்க்க முதற்தடவையாக 2012 இலிருந்து குறைவடைந்தது. மேலும், 2009 இலிருந்து உலகளாவிய விமானக் கொள்திறன் அல்லது கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர் (கி.இ.கி.) ஆகக் குறைவான வளர்ச்சி வீதமான 3.2% இனை பதிவு செய்தது. போஹிங் 737 மெக்ஸ் இன் எதிர்பாராத தரையிறக்கமானது விமானக் கொள்திறனின் மிதமான வளர்ச்சியில் பாரிய செல்வாக்கினை செலுத்தியது. கொள்திறனின் வளர்ச்சியிலும் பார்க்க வான்வழி பிரயாணத்திற்கான கேள்வி அதிகரித்ததன் காரணமாக, பயணிகள் சுமைக் காரணியானது 0.5% ஆல் அதிகரித்து 2019 இல் 82.6% இனை எட்டியது. இது ஓர் புதிய சாதனையாகும்.

மீளாய்வாண்டானது விமானச் சரக்கு போக்குவரத்திற்கு ஓர் இருண்ட ஆண்டாகக் காணப்பட்டது. உலகளாவிய சரக்கு தொன் கிலோமீற்றர்கள் (ச.தொ.கி.) 2018 இலிருந்து 3.2% ஆல் குறைவடைந்ததுடன் 2012 இலிருந்து முதற்தடவையாக எதிர்மறையான வளர்ச்சியினை பதிவுசெய்துள்ளது. வர்த்தக பதட்டங்களினால் வழிகாட்டப்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தநிலையானது 2019 இல் விமானச் சரக்கு பருமனின் வீழ்ச்சிக்கான பிரதான பங்களிப்பு காரணியாகும். 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பாகத்தில், உலக வர்த்தக பதட்டங்களை தணிப்பது நோக்கிய சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் நிமித்தம் விமானச் சரக்கு சந்தையானது மேம்படக்கூடிய அறிகுறிகளை காட்டியது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் கோவிட்-19 தொற்றின் தீவிர நோய் பரவலானது உலகளாவிய வான்வழி பிரயாணத்தில் பேரழிவான தாக்கத்தினை விளைவித்தது. ச.வா. போ.ச. வான்பயணவியல் துறையின் வரலாற்றில் மிகவும் மோசமான ஆண்டாக 2020 இனை எதிர்வுகூறியுள்ளது. விமான நிறுவனங்கள் எதிர்மறையான இலாப சதவீதமான 20% இனை எட்டி USD 84 பில்லியன் நட்டமடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இறுதியான ச.வா. போ.ச. இன் மதிப்பீடுகளின் பிரகாரம் வருவாயானது 50% ஆல் வீழ்ச்சியடையும். மொத்த துறைசார் நட்டத்தின் பெரும் விகிதாசாரமானது ஆசிய பசிபிக் பிராந்தியத்தினால் சந்திக்கப்படும் என்பதுடன் இது USD 29 பில்லியன் நட்டமாகும். இந்த நெருக்கடியின் சிற்றலை விளைவானது 2021 இனையும் பாதிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளதுடன் விமானநிறுவனங்கள் USD 15.8 பில்லியனை இழக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ச.வா.போ.ச. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார், “மக்கள் மீண்டும் பறக்க விரும்புவார்கள், அவர்களுக்கு அவர்களது தனிப்பட்ட நிதியியல் நிலைமை குறித்தும் பயணிகளை பாதுகாப்பாக வைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்தும் நம்பிக்கை இருந்தால் மாத்திரமே இவ்விருப்பம் சாத்தியமாகும்.”

### குழுமத்தின் செயற்திறன்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2019 செப்டம்பரில் 40 வருட சேவையினை கொண்டாடி ஓர் தனித்துவமான மைற்கல்லை எட்டியது. மீளாய்வாண்டானது எமது விமான நிறுவனத்திற்கு மிகவும் சவால்மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. வருடத்தின் முதலாம் அரைப் பகுதியில் ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து விமான நிறுவனத்தின் வருவாயானது கீழிறங்கியதுடன் வருடத்தின் இறுதிக் காலாண்டின் நிதி நிலைமைகள் கோவிட்-19 நோய்ப் பரவலினால் தடையுற்றதுடன் நடப்பு நிதியாண்டினையும் தொடர்ந்து பாதித்துள்ளது. இத்தொற்றின் பரவலை தடுப்பதற்காக சர்வதேச எல்லைகள் மூடப்பட்டும் நாடுகள் மூடப்பட்டும் உள்ளதனால் பயணிகளது கேள்வியானது வீழ்ச்சியடைந்தது.

மீளாய்வாண்டிற்கான நிதியியல் விளைவுகள் சாத்தியமான வ.வ.பெ. பெ.வா. ஐ (வட்டி, வரி, பெறுமானத்தேய்வு, பெறுமதிகுறைப்பு, மற்றும் வாடகைச் செலவினம் என்பவற்றிற்கு முன்னரான வருமானம்) பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டின் வ.வ.பெ. பெ.வா. ஆன ரூபா 9.3 பில்லியனுடன் (USD 89.8 மில்லியன்) ஒப்பிடும்போது இவ்வருடத்தில் ரூபா 15.9 பில்லியனாக (அமெரிக்க டொலர் 135.5 மில்லியன்) காணப்பட்டது. நிதிச் செலவினம் மற்றும் பரிமாற்றல் நட்டத்தின் பின்னர், குழுமத்தின் நட்டமானது முன்னைய வருடத்தின் இறுதியில் ரூபா 41.7 பில்லியனுடன்

(அமெரிக்க டொலர் 169 மில்லியன்) ஒப்பிடும்போது இவ்வருடத்தின் இறுதியில் ரூபா 44.1 பில்லியனாகக் (USD 112 மில்லியன்) காணப்பட்டது. குழுமமானது பிடித்து வைத்தல் வரியாக ரூபா 8.1 பில்லியனை செலவு செய்தததுடன் 2020 மார்ச் 31 இல் காணப்பட்ட நிலுவையிலுள்ள கடன் தொகையான ரூபா 352 பில்லியனுக்கு ரூபா 40.7 பில்லியனை நிதிச் செலவினமாக செலவழித்தது. குழுமத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாச்சலானது முன்னைய ஆண்டின் ரூபா 3.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது சாத்தியமான ரூபா 26.1 பில்லியனாக உயர்வடைந்தது.

மீளாய்வாண்டில் விமான நிறுவனத்தின் கொள்திறனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 5% ஆல் வீழ்ச்சியடைந்த வேளை ஒட்டுமொத்த விமானப் பயணியர்அறை காரணியானது 2% ஆல் குறைவடைந்து USD 5.55 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டுக்கு எதிரான குழுவின் வருமானமானது ஒட்டுமொத்தமாக 0.3% ஆல் வீழ்ச்சியடைந்தது. வருமானத்திலான வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக பயணிகளின் வருகையிலான வீழ்ச்சி காணப்பட்டது. இது ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் மற்றும் நிதியாண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்பட்ட கோவிட்-19 நோய் பரவலின் நிமித்தம் சர்வதேச விமானநிறுவனங்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு (ப.ச.வி.நி.) அவற்றின் செயற்பாடுகளை குறைத்தமையின் நிமித்தம் ஏற்பட்டது. ப.ச.வ.நி. க்கு செயற்படும் ஏனைய விமானநிறுவனங்களின் கொள்திறன் குறைப்பு மற்றும் ஓர் அமைச்சரவை தீர்மானத்தில் ஏனைய விமானநிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தரை கையாளுதல் வீதத்திலான சலுகைகள் தரை கையாளுதல் வருமானத்தில் குறிப்பிடத்தக்க ரூபா 1.1 பில்லியன் எதிர்மறையான தாக்கத்தையும் உணவளித்தல் வருமானத்தில் கிட்டத்தட்ட ரூபா 0.4 பில்லியன் எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தின.

குழுமத்தின் மொத்தச் செலவுகள் ரூபா 161.1 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.9% முன்னேற்றத்தை பிரதிபலித்தது. வருமானத்திலான வீழ்ச்சியானது தொழிற்பாட்டு செலவினத்திலான வீழ்ச்சியான 4% ஆல் ஈடுசெய்யப்பட்டது. எரிபொருள் செலவில் ரூபா 5.3 பில்லியன் சேமிக்கப்பட்டது. இதில் 42.5% சாதகமற்ற நாணயமாற்று வீத அசைவினால் ஈடுசெய்யப்பட்ட எரிபொருள் விலை குறைப்பும் மற்றும் 57.5% ஆனது எதிர்பார்க்காத நிகழ்வுகளின் மத்தியில் குறைக்கப்பட்ட இடைவிடாது வரும் வானூர்தி எண்ணிக்கையுமாகும். மேலும், பொறியியல், பயணிகள் சேவைகள், நிலையப் போக்குவரத்து மற்றும் வர்த்தக பிரிவுகள் தொடர்பான பல்வேறு முகாமைத்துவ முன்னெடுப்புகளூடாக ரூபா 6.6 பில்லியன் சேமிக்கப்பட்டது. பொறியியல் பிரிவினால் குறிப்பிடத்தக்க சேமிப்பான ரூபா 4.2 பில்லியன் அடையப்பட்டதுடன் வர்த்தகம், நிலையப் போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளினால் அமுல்படுத்தப்பட்ட முன்னெடுப்புகளின் காரணமாக ரூபா 2.4 பில்லியன் சேமிக்கப்பட்டது.

விமான நிலையம் மற்றும் தரை கையாளுதல், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மிகவும் இலாபகரமான மூலோபாய வணிக அலகானது வருவாயாக ரூபா 11.8 பில்லியனை (முன்னைய ஆண்டிலும் பார்க்க 8% குறைவு) பதிவுசெய்ததுடன் வருடத்திற்கான குழுமத்தின் மொத்த வருவாயானது ரூ 183.5 பில்லியனை (USD 1 பில்லியன்) விஞ்சியது. வருவாயிலான ரூபா 9.1 பில்லியன் வீழ்ச்சியானது ஏப்ரல் 2019 ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் குறைக்கப்பட்ட செயற்பாடுகளின் நிமித்தமாகும். மேலும் வருவாய் நட்டமான ரூபா 9.8 பில்லியன் வருடத்தின் இறுதிக்காலாண்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றின் விளைவினாலாகும். மீளாய்வாண்டின் எதிர்வுகூறப்பட்ட வ.வ.பெ. பெ.வா. க்கு முன்னரான உழைப்பு, மேற்கூறப்பட்ட வருவாய் இழப்பான ரூபா 19 பில்லியனை தவிர்த்து, ரூபா 24 பில்லியன் ஆக காணப்படும்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற துரதிஷ்டவசமான தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 நோய் பரவலானது எமது செயற்திறன் எதிர்வுகூறல்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவித்ததுடன் வணிகத் திட்டத்தின் சில குறுங்கால மற்றும் மத்தியகால மூலோபாயங்களை நிறைவேற்றுவதற்கு சவாலாக அமைந்தன. சில முக்கிய சந்தைகளிலிருந்து விமான நிறுவனமானது பயணிகள் முன்பதிவுகளில் வீழ்ச்சியினையும் மற்றும் ரத்துசெய்தல்களையும் கண்டது. கோவிட்-19 காரணமாக நாடுகளினால் அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் பயணிகள் கேள்வியிலான வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக அட்டவணையில் ஓர் தொடரான விமானப் பயண ரத்துசெய்தல்களுக்கும் மற்றும் விமான தர மதிப்புக்குறைத்தலுக்கும் வசதியளிக்கப்பட்டது. மீளெழுவதற்கான ஓர் செயல்முறையாக, மேலதிக கொள்திறனை சரக்கு விமானப் பயணத்திற்கு வரிசைப்படுத்தினோம். முகாமைத்துவமானது மூலோபாய வணிகத் திட்டத்தினை விமர்சன ரீதியாக மீளாய்வு செய்வதுடன் மற்றும் வியாபித்திருக்கும் மற்றும் எதிர்பார்க்கப்படும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சில யதார்த்தமான திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஐரோப்பிய, ஆசிய மற்றும் அவுஸ்திரேலிய இலக்குகளுக்கு முன்மொழியப்பட்ட வணிகத் திட்டமானது, சந்தை தூண்டுகை மற்றும் பயணிகள் நம்பகத்தன்மையின் மேம்பாட்டினை உறுதிசெய்யும்வரை, திட்டமிடல் வானவெளியில் ஒத்திவைக்கப்பட்டன.

நாம் அனைத்து சோதனைகள் மற்றும் உபத்திரவங்களை அனுவபித்தபோதிலும், மீளாய்வாண்டானது சாதனைகளில் எவ்வித குறைபாட்டினையும் காணவில்லை.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் உத்தியோகபூர்வ இயங்கலை மேடையினை துறையின் முன்னணி விமான நிறுவனங்களுக்கு ஒத்ததாக கொண்டுவரும் வேட்கையில், அனைத்து பிரயாண தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு மேம்படுத்தப்பட்ட சிறப்பம்சங்கள், புத்தம் புதிய கொடுப்பனவு தெரிவுகள் மற்றும் புத்தாக்கத் தீர்வுகளுடன் தொடர்ந்தும் Srilankan.com இனை மேம்படுத்துகின்றது. மீளாய்வாண்டில், இயங்கலை கோளத்தில் பயணிகள் அணுக்கமானது விமான நிலையத்தின் மொத்த வருவாயின் 14% ஆக அதிகரித்தது. இது முன்னைய ஆண்டில் 11% ஆக காணப்பட்டது. அடுத்த மூன்று வருடங்களுக்கான இலக்கு இயங்கலை வருவாய் பங்களிப்பினை 30% ஆக அதிகரிப்பதாகும். கடந்த வருடத்தின் 42% உடன் ஒப்பிடும்போது இணையத்தளத்திற்கு மீண்டும் மீண்டும் வரும் பயணிகளின் எண்ணிக்கையானது 54%ஆக காணப்படுகின்றது. இது மேம்படுத்தப்பட்ட விசுவாசம் மற்றும் விமான நிறுவனத்தின் இயங்கலை விற்பனை வழிக்கு எப்போதும் அதிகரிக்கும் வாடிக்கையாளர் தளத்தினையும் சுட்டிக்காட்டுகின்றது. ஓர் பார்வையில்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

செயல் விரைவுடைய டிக்கட் விலையிடல்களை பெற்றுக்கொள்வதற்கு பயணிகளுக்கு வசதியளிக்கும் சந்தைப்படுத்தல் சிறப்பியல்பு போன்ற மேம்படுத்தல்களுடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் இயங்கலை வழியின் வாடிக்கையாளர் அனுபவத்தினை பலப்படுத்த எண்ணியுள்ளது. இது பயணிக்கு உலகத்தை ஓரடி நெருக்கமாக கொண்டுவருவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கும் மேலாக, அலிபே, வீசெட், பேபேல், எப்பிள் பே, மற்றும் பொலி போன்ற பல்வேறு கொடுப்பனவு தெரிவுகளது அறிமுகத்துடன் Srilankan.com ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கான வருவாயில் அதன் பங்களிப்பினை அதிகரிக்க முயல்கின்றது. இது உயர்த்தப்பட்ட பெறுமதி சேர்த்தல்கள், Srilankan.com இனை மிகவும் கவர்ச்சிகரமாக்குதல், மற்றும் பயணிகள் பயணத்தினை மிகவும் திறமையாக்குவதற்கு மேம்படுத்தப்பட்ட கண்டுபிடிப்புகள் என்பவற்றின் மூலமாகும். அதிநவீன தொழில்நுட்பத்திற்கு ஒத்ததாக பயணிகள் அனுபவத்தினை சீராக்கும் அதேவேளை, ஸ்ரீலங்கன் ப.ச.வி.நி. இல் வரிசையிடலை தவிர்ப்பதற்காக இயங்கலை மற்றும் கியோஸ்க் பயண ஆயத்த வசதிகளை ஊக்குவிக்கின்றது. Flysmiles, ஸ்ரீலங்கன் உடனான வாடிக்கையாளரது விசுவாச அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு முயற்சிப்பதில் கவனஞ்செலுத்துவதுடன், தற்போது அதன் விசுவாச அங்கத்தவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளை வழங்குகின்றது. இது இணையத்தளத்தினூடாக மற்றும் மொபைல் பயன்பாட்டினூடாக மாத்திரமன்றி மிகவும் பழக்கப்பட்ட தொடு புள்ளிகளான, அழைப்பு மையம், தொடர்பயணி சேவை மையம் மற்றும் அனைத்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் காரியாலங்களூடாக மீட்பு டிக்கட்டுக்களை பதிவுசெய்வதற்கான தெரிவுகளை வழங்குதலாகும்.

எமது தனித்துவமான செரன்டிப் வணிக வகுப்பு ஓய்விடத்தில் ஸ்கைலைட்சுடன் கூட்டு சேர்ந்து தெற்காசியாவிலேயே கற்பனையான யதார்த்த (க.ய.) சினிமாவினை அறிமுகப்படுத்திய முதலாவது வினமாநிறுவனமாக ஸ்ரீலங்கன் காணப்படுகின்றது. மாஸ ஹோல்டிங்சின் புத்தாக்கல் அங்கமான, டுவைனரியுடன் கூட்டுசேர்ந்து ஸ்பிரிங் எனப்படும் "உலகின் மிகவும் மேம்பட்ட தசை மீட்பு கருவி" இனையும் வழங்கியுள்ளோம். இந்த அணிந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்பமானது இரத்த ஓட்டத்தை உந்தச்செய்து உங்களது பாதத்தில் இரத்தம் தேங்கிநிற்பதை குறைப்பதனால் நீங்கள் உங்களது நீண்ட பயணத்திற்கு முன்னர் புத்துணர்சியடைகின்றீர்கள்.

விமான நிறுவனத்தின் விமான குத்தகை செலவினத்தை குறைப்பதற்காகவும், பராமரிப்புச் செலவினத்தில் ஓர் குறைப்பினை அடைவதற்கும், விமானங்களின் குத்தகை வழங்குநர்களுடன் பல குத்தகை மீள் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு, இதன்மூலம் விமானக் கம்பனிக்கு பல மில்லியன் டொலர்களை சேமிக்கக்கூடியதாயிருந்தது. இதற்கும் மேலாக, ஒரு ஏ330-300 விமானமானது ஓமான் எயார் நிறுவனத்திற்கு ஓர் குறுங்கால இலாபகரமான ஒப்பந்தத்தில் பணியாளுடன் குத்தகைக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் நான்கு மாதங்களுக்கு குறிப்பிடத்தக்க இலாபத்தை விமான நிறுவனம் அடையக்கூடியதாயிருந்தது.

விமான நிறுவனத்தின் விமானப் பராமரிப்பு அங்கமான ஸ்ரீலங்கன் இன்ஜினியரிங் ஐரோப்பிய வான்பயணவியல் பாதுகாப்பு முகவர் (ஐ.வா.பா.மு.) சபை 145 சான்றளிப்பினை மீள அடைந்ததுடன், மூன்றாந்தரப்பு விமான திறந்தவெளி மற்றும் விமானக்கொட்டகையிலான பராமரிப்புச் சேவைகள் மேலதிக வருவாயாக வழங்கின. மேலதிக திறந்தவெளி பராமரிப்பானது எயார் சைனா, எயார் இந்தியா, ஓமான் எயார் மற்றும் மலேஷியன் எயார்லைன்ஸ் ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்டதுடன், மேலதிக விமானக்கொட்டகையிலான பராமரிப்பு வேலைகள் எயார் ப்ளூ மற்றும் எயார் சீசெல்ஸ் ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுவினது புத்தாக்க முயற்சிகள், விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) உலகளாவிய 'சிறந்த சந்தைப்படுத்தல் புத்தாக்கம்' விருதினை தேசிய வானூர்தி பெற்றுக்கொள்வதனை விளைவித்தது. ஸ்ரீலங்கன் 3ஆவது தொடர்ச்சியான வருடமாக 'முக்கிய விமான நிறுவனங்கள்' வகுப்பில் நான்கு நட்சத்திர தரப்படுத்தலை பெற்றுக்கொண்டது.

விமான நிறுவனமானது. இலங்கைக்கும் மெல்போர்னுக்கும் இடையேயான உள்ளார்ந்த ஒப்பமைவுகளது அனுபவத்திற்கு பிரயாணிகளை வசீகரிக்கும் நோக்கில் 'இரண்டு நகரங்கள், ஒரு மனநிலை' விளம்பரப் பிரச்சாரத்திற்கு "சந்தைப்படுத்தல் - வானூர்தி" பிரிவின் மதிப்பிற்குரிய பசிபிப் ஏசியா பிரயாணச் சங்கம் (ப.ஏ.பி.ச.) தங்க விருதினை வென்று அதன் சந்தைப்படுத்தல் தகவல் தொடர்பு முயற்சிகளுக்கான உலகளாவிய ஈர்ப்பு சக்தியினை தொடர்ந்தும் நிரூபித்தது.

கடந்த 12 மாதங்களில், ஸ்ரீலங்கன் இரு தடவைகள் "உலகின் மிகவும் காலந்தவறாத விமானம்" என பெயரிடப்பட்டது. சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கத்தினால் ச.வா.போ.ச. செயற்பாட்டு பாதுகாப்பு கணக்காய்வினை ஸ்ரீலங்கன் தரைச் சேவைகளும் வெற்றிகரமாக நிறைவுசெய்தது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இந்திய உப கண்டத்தில் ஓர் முன்னணி விமான நிறுவனமாக அதன் தோற்றத்தினை உறுதிப்படுத்தி, உலக பிரயாண விருதுகள் ஆசியா மற்றும் ஓசியானா விழாவில் பிரசித்திமிக்க "உலகின் முன்னணி விமானநிறுவனம்" மற்றும் 'இந்திய சமுத்திரத்திற்கான ஆசியாவின் முன்னணி விமான நிறுவனம' என்ற பட்டத்தை வென்றது.

ITB – பேர்லின் 2020 கோல்டன் சிட்டி கேட் விருதுகளில் 3 வகுப்புகளில் ("சர்வதேச விமான நிறுவனம்", "சர்வதேச இசை" மற்றும் "பிரச்சாரம்") முதலாம் நட்சத்திர விருதுகளை வென்று தேசிய வானூர்திக்கு பெருமையைச் சேர்த்தது.

கொழும்பிலுள்ள அதன் கூட்டாண்மை காரியாலங்களை கட்டுநாயக்காவில் காணப்படும் இடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இடம்மாறலானது குறிப்பிடத்தக்க நிதியியல் சேமிப்புகளையும் தொழிற்பாட்டு செயற்திறன்களையும் விளைவித்தது. கிடைக்கப்பெற்ற இடத்தினை சிறப்பான பயன்படுத்துவதற்காக முன்னர் கவனிக்காது விடப்பட்ட கொழும்பின் மத்தியில் அமைந்துள்ள எமது சொந்த பிராந்திய காரியாலயத்தினை புதுப்பிக்கும் திட்டங்கள் நடந்தவண்ணமுள்ளன. ஸ்ரீலங்கனது பொறியியல் பிரிவானது எயார்பஸ் ஏ320 மற்றும் ஏ330 விமானங்களுக்கான EASA தள பராமரித்தல் அங்கீகாரத்தினை வெற்றிகரமாக மீளப் பெற்றதுடன்

போஹிங் 737 என்.ஜி. விமானத்திற்கான திறந்தவெளி பராமரிப்பு சான்றளிப்பினையும் பெற்றுக்கொண்டது. இது ஓர் ப.தி.செ. (பராமரிப்பு, திருத்தம், செயற்பாடுகள்) நிறுவனமாக எமது கொள்திறனை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்துவதுடன் 3 ஆந் தரப்பு விமானப் பராமரிப்பு சேவைகளூடாக வருவாய் உருவாக்கும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கூட்டாண்மை சமூக பொறுப்பு (கூ.ச.பொ.) அங்கமானது குழந்தைகள், பூகோளம் மற்றும் திறமை என்ற பிரிவுகளின் கீழ் சமூகத்தின் சமூக, கல்வி மற்றும் ஆரோக்கியம் தொடர்பான நியமங்களை தரமுயர்த்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, தரமான கல்வி மற்றும் சுத்தமான குடிநீர் மற்றும் துப்புரவு தொடர்பான பல திட்டங்கள் நாட்டின் நீடிப்புத்திறனான அபிவிருத்தி இலக்குகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 நோய் பரவலின்போது சேவையாற்றியது போன்றே நாம் ஓர் விமானக் கம்பனியாக நாட்டுக்கு தொடர்ந்தும் சேவை செய்வோம். இதுவரைக்கும் தொற்றின் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள எல்லைக் கட்டுப்பாடுகளின் நிமித்தம் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்கள் 15,000 பேரை நாம் திருப்பிக் கொண்டுவரக் கூடியதாயிருந்தது. செயற்படும் விமானிகள், வானறை பணியாட்கள், தரை கையாளும் பணியாட்கள், திட்டமிடுபவர்கள் மற்றும் பின்னால் இருந்து செயற்பட்ட ஏனையோர் உள்ளடங்களான பல பிரிவுகளிலுள்ள எமது அர்ப்பணிப்புடனான பணியாட்கள் தமது மற்றும் தங்களது குடும்பத்தாரது உயிர்களின் பாதுகாப்பை பணயம் வைத்து ஓர் வாணிக நோக்கமற்ற மனிதாபிமான வானூர்திகளை செயற்படுத்தினார்கள்.

### புதிய வழக்கத்துடனான முன்னோக்கிய பார்வை

கோவிட்-19 தொற்றானது அனைத்து விமான நிறுவனங்களும் பயணிகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வால்விற்கு முன்னுரிமை வழங்கும் “புதிய வழக்கம்” என்பதனை உருவாக்க வழிசமைத்தது. பாதுகாப்பான வான்பயணத்திற்கு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கொழும்பிலுள்ள எமது தளமான சர்வதேச விமான நிலையத்தில் வழக்கமான செயற்பாடுகள் ஆரம்பிக்கும்போது அனைத்து பயணிகளுக்கும் ஓர் பிரயாண சுகாதாரப் பொதியொன்று வழங்கப்படும். இப்பொதியானது ஓர் மூன்று மடிப்பு முகக்கவசம் மற்றும் சுத்திகரிப்பான் என்பவற்றை உள்ளடக்கிய நிலையான பொதிகட்டுதலைக் கொண்டிருக்கும்.

பயனுறுதிமிக்க கொள்திறன் பயன்படுத்தலினூடான வருவாய் மேம்படுத்தல், வருவாய் முகாமைத்துவம் மற்றும் செலவுக் குறைத்தல் மூலோபாயங்கள் என்பன முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான முன்னிறுத்தலாக காணப்படுவதுடன் இது விமான நிறுவனத்தை வணிக திட்டத்திற்கமைய நீடிப்புத்திறன் மிக்க நிதியியல் இயலுமைக்கு இட்டுச்செல்லும். அடுத்த நிதியாண்டில் நட்டங்களை குறைப்பதற்காக, முகாமைத்துவமானது கம்பனி முழுவதுமான செலவினச் சேமிப்பு மற்றும் துணை வருவாய் முன்னெடுப்புகளை அதிகரித்தல் என்பவற்றை தீவிரமாக தொடரும். மேலும், நாம் அகலமான உருவமைப்பினை உடைய பயணிகள் விமானத்தை சரக்குக்கான தனிப்பயன் விமானமாக மாற்றியுள்ளோம். இது 45 மெட்ரிக் தொன் தாங்குசுமையினைக் கொண்டுள்ளதுடன் தொற்றின் போது உலக பொருளாதாரத்துடன் நாட்டினை இணைப்பதற்கு மற்றும் இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு உதவுவதற்குமாக மாற்றப்பட்டது. நாம் தற்போது ஐரோப்பா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் தூர கிழக்கு பிராந்தியங்களடங்கிய 20 இலக்குகளுக்கும் விசேட சரக்கு விமானங்களாக ஏனைய விமானங்களை செயற்படுத்தும் அதேவேளை வாடகை சரக்கு விமான செயற்பாடுகளுக்கான கொள்திறனை தேவையான வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றோம். தேசிய வானூர்தியின் திரவத்தன்மையினை பாதுகாப்பதற்காக பல்வேறு வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்கள் மற்றும் விமான நிறுவனத்தின் முக்கியமான வழங்குநர்களுடனான குறைப்பு போன்றவற்றிலான பேச்சுவார்த்தை மூலம் இதுவரைக்கும் USD 46 மில்லியனை விளைவித்துள்ளது.

மேலும், குத்தகைக் குறைப்புகள் பேச்சுவார்த்தை செய்யப்பட்டவண்ணமுள்ளதுடன், விமான நிறுவனமானது ஓர் பாரிய குத்தகைக்கு விடுபவருடன் ஓர் குத்தகை மறுசீரமைப்பினை முடிவுறுத்தக் கூடியதாயிருந்ததுடன் இது அடுத்த ஆறு வருடங்களில் USD 104 மில்லியனுக்கும் அதிகமான காசுச் சேமிப்பினைக் கொண்டு வருவதுடன் ஏனைய பாரிய குத்தகைதாரர்களுடனான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

நான் முன்னாள் மற்றும் தற்போதைய பணிப்பாளர் சபை, முகாமைத்துவக் குழு, பணியாட்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் ஏனைய அனைத்து பங்காளிகளுக்கும் மிகவும் கஷ்டமான வருடத்தில் அவர்களது தொடர்ச்சியான உறுதுணை மற்றும் ஆதரவிற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்களது பங்குதாரராகிய இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் வழங்கிய உறுதுணையினை குறிப்பிடாவிட்டால் நான் எனது கடமையினை தவறுவதாகக் கருதுகின்றேன். தொற்றின் காரணமாக உலகம் பூராவுமுள்ள விமான நிறுவனங்கள் உடனடியான வங்குரோத்துநிலைக்குச் சென்ற வேளை, சமீபத்தைய காலங்களில் தேவையான நிதியியல் மற்றும் கொள்கை மட்டத்திலான உறுதுணையினை வழங்கியிருக்காவிட்டால் தொற்றின் பேரழிவான விளைவுடன் சமாளிக்க முடியாதிருந்திருக்கும்.

இத்தொற்றின் சவால்களை வெற்றிகொள்வதற்கு எமது முயற்சிகளில் நாம் தொடர்ந்தும் மீளெழுச்சியுடனும் தளராதும் காணப்படுவோம் என நான் நம்பிக்கை கொண்டுள்ளதுடன் எமது தொலைநோக்காகிய ஆசியாவின் பெரும்பாலான வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட விமான நிலையமாக வருதலை எட்டுவோம்.

**விபுல குணாதிலக**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

31 ஜூலை 2020

# இயக்குனர்கள் குழு

## 01

### திரு. அசோக் பத்திரகே (தலைவர்)

திரு. அசோக் பத்திரகே அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2019 டிசம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி சர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி மற்றும் ஒடெல் பிஎல்சி ஆகிய நிறுவனங்களின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இவர் சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் குழுமத்திலுள்ள ஏனைய கம்பனிகளுக்கும் தலைவராக சேவையாற்றுகின்றார். இவர் என்.டி.பி. கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டின் தலைவருமாவார்.

இவர் இலங்கையின் கூட்டாண்மை உலகத்தின் தொலைநோக்குத் தலைவராவதுடன் இலங்கையின் முன்னணி பன்கூட்டாண்மையின் ஸ்தாபக அங்கத்தவராவார். இவர் 50 கம்பனிகளை நடைமுறை நோக்கோடு முகாமைப்படுத்துவதுடன் 10,000 க்கும் அதிகமான பணியாட்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளார். திரு. பத்திரகே அவர்கள் நான்கு செங்குத்துத் துறைகளான, சில்லறை மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரச் சேவைகள், நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஓய்வு மற்றும் வாகனம் ஆகியவற்றின் முன்னணி சந்தை பிரசன்னத்தைக் கொண்டு குழுமத்திற்கு மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றார்.

## 02

### திரு. அஷ்ரவ் ஓமார்

திரு. அஷ்ரவ் ஓமார் அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் ஆகிய இரண்டினதும் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் தலைவராவார்.

பிராண்டிக்ஸ் லங்கா லிமிட்டட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. அஷ்ரவ் ஓமார் அவர்கள் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் ஆடை உற்பத்தித் துறையின் மீள்வரையறைக்கு காரணகர்த்தவாக காணப்பட்டார். ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு தீர்வுகளை வழங்கும் உற்பத்தி மற்றும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தி வசதிகளை உள்ளடக்கிய ஓர் கம்பனிகள் குழுமத்தினை வழிநடத்துகின்றார். ஐக்கிய இராச்சியம், கம்போடியா, ஹய்ட்டி, ஸ்ரீலங்கா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் உள்ளடங்களாக டோக்கியோவிலிருந்து அமெரிக்கா வரை உலகின் மிகவும் பிரசித்திபெற்ற வணிக நாமங்களுக்கு இத்தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இவை வாடிக்கையாளர்களுக்கு 'ஊக்கமளிக்கும் தீர்வுகளை' வழங்குவதற்கு கடப்பாடுடையவையாக உள்ளன.

உலகிலேயே சூழல் நட்பான ஆடை உற்பத்தியினை ஆரம்பித்தமை மற்றும் சூழல் நட்பான உற்பத்திக்கான உலகின் முதலாவது 'வலு மற்றும் சூழல் வடிவமைப்பின் தலைமைத்துவம்' பிளாட்டினம் தரத்தையுடைய உற்பத்திச்சாலை வசதியினை நிறுவிய பெருமை இவரைச் சாரும். இவரது பரவலான அனுபவம் மற்றும் வழக்கத்துக்கு அப்பால் சிந்திக்கக்கூடிய ஆற்றல் என்பன இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளில் இவருக்கு பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு காரணிகளாயிருந்தன. இலங்கையின் ஆடை உற்பத்தித் துறையின் உயர்ந்த அங்கமான கூட்டு ஆடை உற்பத்தி சங்கத்தினது மன்றத்தின் ஸ்தாபக தலைவருமாவார்.

## 03

### திரு. மலிக் ஜே பர்னாந்து

திரு. மலிக் பர்னாந்து அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். திரு. பர்னாந்து அவர்கள் டில்மா டீ இன் பணிப்பாளர் மற்றும் ரெஸ்பிளென்டென்ட் சிலோன் இன் முகாமைத்துவ பணிப்பாளரும் ஆவார். இது முதலாவது உள்ளூர் ஆடம்பர உல்லாசப்போக்கிட வணிக நாமமாகும். இது நாடுபூராவுமான குறிப்பிடத்தக்க சுற்றுலா தளங்களை விருத்திசெய்து அத்துடன் நம்பத்தக்க பல அனுபவங்களையும் வழங்குகின்றது. எம்.ஜே.எவ். ஸ்தாபனம் மற்றும் டில்மா பாதுகாப்பினூடாக உள்ளூர் சமூகத்திற்கும் சூழலுக்கும் பங்களிப்பு செய்கின்றது. ஈஸ்டர் ஞாயிறு அட்டூழியத்தின் பின்னர், திரு. பர்னாந்து அவர்கள் இலங்கை உல்லாசத்துறை கூட்டமைப்பிற்கு தலைமைதாங்கி 'ஸ்ரீலங்காவை விரும்புங்கள்' பதாகையின் கீழ் ஒற்றைக் குரலுடன் தனியார்துறை உல்லாசத் துறையினை ஒன்றுதிரட்டினார்.

திரு. பர்னாந்து அவர்கள் அமெரிக்காவின் பெப்சன் கல்லூரியில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

## 04

### திரு. மனோஹர ஆர் டி சில்வா ஜ.ச.

திரு. மனோஹர ஆர் டி சில்வா ஜ.ச. அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

திரு. மனோஹர ஆர் டி சில்வா அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் கடமையாற்றும் ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் 1988 ஆம் ஆண்டு சட்டத்துறைக்குள் வந்து 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். இவர் சட்ட ஆணைக்குழு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவின் அங்கத்தவராவார். இவர் சட்ட கல்வியின் ஒன்றிணைப்பட்ட சபையின் அங்கத்தவராக பல வருடங்கள் சேவையாற்றியுள்ளார். 2006 இல் அரசியலமைப்பிலான அனைத்து கட்சி பிரதநிதிகள் குழுவின் நிபுணர் குழுவிற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார்.

திரு. டி சில்வா ஜ.ச. அவர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக சபையின் அங்கத்தவருமாவார். இதற்கு முன்னர் அதே பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராக சேவையாற்றினார்.

இவர் இலங்கை வழக்குரைஞர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவில் சேவையாற்றியதுடன் சட்ட சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார். அதேபோன்று பல வருடங்களுக்கு முன்னர் SAARC LAW எனும் அமைப்பிலும் சேவையாற்றியுள்ளார். திரு. டி சில்வா ஜ.ச. அவர்கள் அரசியலமைப்பில் பல புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# 05

## திரு. சமந்த ரத்வத்த

திரு. சமந்த ரத்வத்த அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இவர் குடியியல் சட்டத்தில் விரிவான பயிற்சியினைக் கொண்ட ஓர் ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆளுமைச் சபையின் அங்கத்தவராவதுடன் அதே பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தில் வருகை தரும் விரிவுரையாளராகச் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவருமாவார்.

ஆட்கள் பற்றிய சட்டம், காணிச் சட்டம் மற்றும் வணிகப் பிணக்குகள் தொடர்பான விடயங்கள் போன்ற துறைகளில் பரவலான வாடிக்கையாளர்கள் இவரது சேவையினைப் பெற்றுள்ளார்கள். இலங்கையின் நீளம் மற்றும் அகலம் முழுக்க வியாபித்திருக்கும் ஆரம்ப நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் பரவலான தொழில் பயிற்சியினை உடையவராவார்.

குடியியல் விடயங்கள் தொடர்பான சிக்கலான சட்டப் பிரச்சனைகளில் இவரது குறிப்பிட்ட திறமைகள் காரணமாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இவரது சேவையினை பெற்றுக்கொள்வதனை விளைவித்துள்ளன. இவர் அவரது முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கல்வியினை கண்டி திரித்துவக் கல்லூரியில் பெற்றுள்ளார்.

# 06

## கலாநிதி. ஹன்ச விஜயசூரிய

கலாநிதி. ஹன்ச விஜயசூரிய அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இவர் தற்போது அக்ஷியாட்டா குழுமத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன் மலேஷியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை மற்றும் கம்போடியா போன்ற பிராந்தியங்களின் சந்தைகளிற்கான குழுமத்தின் தொலைதொடர்பு செயற்பாட்டிற்கு தலைமை தாங்குகின்றார். அக்ஷியாட்டா என்பது ஆசியாவின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு குழுமமாகும்.

கலாநிதி விஜயசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றுவதுடன் அக்ஷியாட்டா குழுமத்தின் ஏனைய பல பிராந்திய துணைக்கம்பனிகளிலும் சபை அங்கத்தவராவார். 2016 ஆம் ஆண்டு வரை கலாநிதி. விஜயசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி குழுமத்தின் (டயலொக்) குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் ஓர் சுயாதீன பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

2016 ஆம் ஆண்டில், கலாநிதி. விஜயசூரிய அவர்கள் 'ஆசிய மொபைல் துறைக்கான முதன்மையான பங்களிப்பு' விருதினை முதல் முறையாக பெற்றதையிட்டு GSM சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் GSM ஆசிய பசிபிக்கின் முன்னாள் தலைவருமாவார். இது GSM சங்கத்தின் பிராந்திய நலனையுடைய குழுவாகும். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் 2008 இல் இலங்கையின் முன்னணி வணிக சஞ்சிகையான LMD இனால் 'வருடத்திற்கான இலங்கையர்' என்று பெயரிடப்பட்டார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் இலங்கையின் முன்னணி வணிகச் சம்மேளனமான இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் தற்போதைய தலைவராவார்.

கலாநிதி. விஜயசூரிய அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவராவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்திலிருந்து அவரது கலாநிதி பட்டத்தினைப் பெற்றுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் தொழில்நுட்ப நிருவகத்தின் ஓர் பட்டய பொறியியலாளர் மற்றும் ஓர் சமூக அங்கத்தவருமாவார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் வோர்விக் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார்.

# 07

## திரு. சன்ஜய மொஹொட்டால

திரு. சன்ஜய மொஹொட்டால அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 பெப்ரவரி 01 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் ஆகிய இரு நிறுவனங்களதும் கணக்காய்வுக் குழுவின் சார்பு காலத் தலைவராவார்.

திரு. சன்ஜய மொஹொட்டால அவர்கள் பொஸ்டன் கொன்சல்டிங் குழுமத்தின் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறைகளுக்கான ஆசிய-பசிபிக் முனையமாவார். இவர் தென்கிழக்கு ஆசியாவின் கூட்டாண்மை அபிவிருத்தி மற்றும் பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் தனிப்பட்ட உரித்துடைமை நடைமுறைகளின் முக்கிய அங்கத்தவருமாவார்.

இவர் மூலோபாயம், கொடுக்கல் வாங்கல்கள், மீள்கட்டமைப்பு, செயற்பாட்டு மேம்படுத்தல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், மேம்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் நிறுவன வடிவமைப்பு ஆகியவற்றில் பரவலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

திரு. மொஹொட்டால அவர்கள் பலதரப்பட்ட இணைப்புகளது கலந்துரையாடல்கள் மற்றும் இணைப்பின் பின்னரான ஒன்றிணைப்பு முயற்சிகளை வழிநடத்தியுள்ளார். இவர் பாரிய அளவிலான உருமாற்றங்களில் செயலாற்றியுள்ளதுடன், பல உலகளாவிய கம்பனிகளுக்கு மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வுக் கருவிகளை விருத்திசெய்வதற்கும் காரணமாயிருந்துள்ளார்.

இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (கௌரவ) பட்டத்தையும் அமெரிக்காவின் UCLA இன் அன்டர்சன் ஸ்கூல் ஒவ் மெனேஜ்மன்ட் இலிருந்து வணிக நிருவாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும், CIMA, சந்தைப்படுத்தலில் டிப்ளோமா என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் ஒரு வுல்பிரைட் பண்டிதருமாவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

**விபுல குணதிலக்க**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

திரு. விபுல குணதிலக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஆகஸ்ட் 2018 இலிருந்து கடமையாற்றுவதுடன், இவர் இலங்கையின் தேசிய வானூர்தியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாளியாவார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் இணைவதற்கு முன்னர், திரு. குணதிலக்க டாக் அங்கோலா விமான நிறுவனத்தின் பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் சபை அங்கத்தவராக இருந்தார். அங்கோலாவின் தேசிய வானூர்தியின் மீள்கட்டமைப்பில் எமிரேட்ஸ் விமான நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்சார் முகாமையாளர்களுடன் ஓர் முக்கிய பங்கினை வகித்தார். இதன் நிமித்தம் விமான நிறுவனமானது ஓர் குறுகிய காலப்பகுதியில் சமநிலையினை அடைந்து ஓர் திடமான காசுப் பாய்ச்சல் நிலையினை அடையக்கூடியதாயிருந்தது.

விமான நிறுவனமானது எமிரேட்சினால் முகாமைப்படுத்தப்படும்போது திரு. குணதிலக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பிரதம நிதியியல் அதிகாரி பதவியினை வகித்தார். எமிரேட்ஸ் விமான நிறுவனத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு முகாமைத்துவ நிலைமாற்றல் காலப்பகுதியில் மாற்றாள் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஓர் முக்கிய பங்கினை வகித்தார்.

திரு. குணதிலக்க அவர்கள் இலங்கை, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள கம்பனிகளில் சிரேஷ்ட தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளதுடன் விமானச்சேவை, தகவல் தொழில்நுட்பம், தொலைதொடர்பு, வங்கியியல் மற்றும் சேவை துறைகளில் இருபத்து ஐந்து வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இவர் இலங்கை உல்லாசத்துறை ஆலோசனைச் சபையின் அங்கத்தவர், ஓருலக கூட்டணியின் ஆளுமை சபை அங்கத்தவர் மற்றும் வான்வழி நிதியியல் சஞ்சிகையின் ஆலோசனை அங்கத்தவரும் ஆவார்.

இவர் CIMA ஸ்ரீலங்கா பிராந்திய சபையின் முன்னாள் தலைவர் மற்றும் இவர் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டுக் கண்காணிப்புச் சபையின் அங்கத்தவருமாவார்.

திரு. குணதிலக்க அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர், இலங்கையின் பட்டயக் கணக்காளர், அவுஸ்திரேலியாவின் சான்றிதழளிக்கப்பட்ட பொது கணக்காளர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாகத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். இவர் புது இனால் பயிற்றுவிக்கப்பட்ட ஆறு சிக்மா ஆவார்.

**திரு. டி.ஏ.ஜி. ஜயசூரிய**
*பிரதம தொழில்நுட்ப அதிகாரி*

திரு. டி.ஏ.ஜி. ஜயசூரிய அவர்கள் 2018 செப்டம்பர் 01 இல் ஸ்ரீலங்கன் எயர்லைன்சில் சேர்ந்து பிரதம தொழில்நுட்ப அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அவர் முதலில் 1982 இல் அப்போது எயார்லங்கா என்றழைக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்சில் ஒர சிரேஷ்ட உரிமம்பெற்ற பொறியியலாளராக சேர்ந்தார். அதன் பின்னர் அவர் 2009 ஆம் ஆண்டுவரை பல்வேறு முகாமைத்துவ பதவிகளை வகித்தார். இதன் பின்னர் ஓமான் எயார்லைன்சில் சிரேஷ்ட முகாமையாளர் (தொழில்நுட்ப ஒப்பந்தங்கள்) பதவியினை வகித்தார்.

2016 இல் அவர் இலங்கையின் சிவில் விமானச்சேவை அதிகாரசபையின் பறக்கத்தகுதி பணிப்பாளராக சேர்ந்தார்.

அவர் ஐக்கிய இராச்சியத்தின் சிவில் விமானச்சேவை அதிகாரசபையிலிருந்து விமானப் பராமரிப்பு பொறியியலாளர்கள் உரிமத்தினையும், பாகிஷ்தானின் சிவில் விமானச்சேவை அதிகாரசபையிலிருந்து விமானப் பராமரிப்பு பொறியியலாளர் உரிமத்தினையும், இலங்கை சிவில் விமானச்சேவை அதிகாரசபையிடமிருந்து விமானப் பராமரிப்பு பொறியியலாளர் உரிமத்தினையும் பெற்றுள்ளார்.

**திரு. ஷமிந்த சமரவீர**
*பிரதம நிதியியல் அதிகாரி*

திரு. ஷமிந்த சமரவீர அவர்கள் தொலை தொடர்பு, உற்பத்தி, புகையிலை, வானோடல் மற்றும் வங்கியியல் உள்ளடங்களான பல தொழிற்துறைகளில் 15 வருடங்களுக்கும் மேலான சிரேஷ்ட மட்டத்திலான கூட்டாண்மை அனுபவத்தினை கொண்டுள்ளார். ஏப்ரல் 2019 இல் ஸ்ரீலங்கன் குடும்பத்திற்கு வரவேற்கப்படுவதற்கு முன்னர் எடிசலாட் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு பிரதம நிதியியல் அதிகாரியாக சேவையாற்றிக்கொண்டிருந்தார். சிலோன் டுபேக்கோ கம்பனி பி.எல்.சி., டயலொக் எக்ஷியாட்டா பி.எல்.சி., அமெரிக்காவின் NAVTEQ வட அமெரிக்கா உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். கூட்டாண்மை வியூகம் மற்றும் அபிவிருத்தியில் நிபுணத்துவம் பெற்ற இவர் முன்னைய பணியளிப்பவர்களுடனான பதவிக்காலத்தில் தலைமைத்துவ விருதுகளை வென்றுள்ளார்.

இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமானி பட்டமும் வடக்கு டக்கோட்டா மாநில பல்கலைக்கழகத்திலிருந்து பல முதுமானி பட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர் (அமெரிக்கா) நிருவகத்தினது அங்கத்தவரும் பட்டய முகாமைத்துவ கணக்காளர் (ஐக்கிய இராச்சியம்) நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனிச் செயலாளர்/கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைமை*

திருமதி. டெல்ரீன் திருக்குமார் அவர்கள் 2013 இல் கம்பனியில் சேர்ந்தார். இவர் கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைமையும் ஆவார். இப்பிரிவானது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, சிரேஷ்ட முகாமைத்துவத்தினது சம்பளப்பட்டியலுக்கு வசதியளிக்கின்றது. இவர் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நம்பிக்கை பொறுப்பிற்கு நம்பிக்கை பொறுப்பாளரும் ஆவார்.

இவர் 20 வருடங்களுக்கும் மேலான தகமையின் பின்னரான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கையில் பொது பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட மற்றும் பொறுப்பான பதவிகளை வைத்துள்ளார்.

இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய செயலாளர்கள் மற்றும் நிர்வாகத்தர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் அங்கத்தவருமாவார்.

**திரு. யசந்த திசாநாயக்க**
*நிதியியல் முகாமைத்துவத்தின் தலைமை*

திரு. யசந்த திசாநாயக்க அவர்கள் 2004 இல் கம்பனியில் இணைந்தார். இவர் தற்போது நிதியியல் முகாமைத்துவத்தின் தலைமைத்துவ பதவியினை வகிக்கின்றார். கம்பனியின் நிதியியல் மற்றும் வணிகக் கொள்முதல் செயற்பாடுகள் இவருக்கு அறிக்கையிடுகின்றன.

இவர் முதலாவது சர்வதேச முறிகள் வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் உள்ளடங்கலான கம்பனியின் பல முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு தலைமைதாங்கினார். இவ்விரண்டு நிதியளிப்புகளும் இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டன.

இவர் புதிய ஏ330-300 விமானங்களுக்கான முன்-விநியோக நிதியளித்தலை (மு.வி.நி.) உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாயிருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது 2014 இல் ஏயார் வைனான்ஸ் சஞ்சிகையினால் 'வருடத்திற்கான மு.வி.நி. நிதியளித்தல் வாணிபமாக' அங்கீகரிக்கப்பட்டது. திரு. திசாநாயக்கா அவர்கள் முதலீட்டு வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஓர் கணக்காளர் ஆவார் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிவ்விலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**திரு. பிரதீப கெக்குலாவல**
*சொத்துக்கள் மற்றும் ஏற்பாட்டியலின் தலைமை*

திரு. பிரதீப கெக்குலாவல அவர்கள் கூட்டாண்மைத் துறையில் 3 தசாப்தங்களுக்கும் மேலாக முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்ட முகாமைத்துவ தொழில்வல்லுநர் ஆவார். இதில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலானவை சிரேஷ்ட முகாமைத்துவ பங்களிப்பாகும். இவர் திட்ட முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், தொழில்நுட்ப நிர்வாகம், சந்தைப்படுத்தல் மற்றும் வணிக அபிவிருத்தி ஆகிய துறைகளில் முக்கியமாக முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். இதன் பின்னர் 20 வருடங்களுக்கு முன்னர் இவர் மனித வள அபிவிருத்தியில் ஆர்வத்தை முன்னிறுத்தி அத்துறையில் பதவிகளை வகித்துள்ளார். திரு. பிரதீப அவர்கள் கல்வி, அலுவலக தன்னியக்கமயமாக்கல், பொறியியல் மற்றும் ஆடைத் துறைகள் போன்றவற்றிலுள்ள பல முன்னணி கம்பனிகளில் பொது முகாமையாளர், பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, குழும மனித வளங்கள் தலைமைத்துவம் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். இவர் ஆகஸ்ட் 2011 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 'ல் அதன் மனித வளங்களின் தலைமையாக இணைந்து எட்டு வருடங்கள் அப்பதவியில் சேவையாற்றினார். ஜனவரி 2019 இல் இவர் சொத்துக்கள் மற்றும் ஏற்பாட்டியலின் தலைமைத்துவத்தினை பொறுப்பேற்றார்.

திரு. பிரதீப அவர்கள் பட்டப்படிப்பிற்கு பின்னரான தகமையினை பின்வரும் துறைகளில் பெற்றுள்ளார். முகாமைத்துவம், மனித வளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றுடன் பொதுநலவாய கற்றல்களிலிருந்து வணிக நிர்வாகத்தில் ஓர் முதுமானி பட்டத்தையும், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிருவகத்திலிருந்து அறிவு முகாமைத்துவத்திலான தனிச்சிறப்புடன் தகவல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகம் ஆகியவற்றிலிருந்து மனித வளத்தில் நிறைவேற்றுநர் பயிற்றுவித்தலைப் பெற்றுள்ளார். இவர் அமெரிக்க மனித வள முகாமைத்துவ சங்கத்தின் ஓர் தொழில்சார் அங்கத்தவர், இலங்கையின் மனித வள தொழில்வல்லுநர் சங்கத்தின் தொழில்சார் அங்கத்தவர் மற்றும் முன்னாள் தலைவர், ஐக்கிய இராச்சியத்தின் வணிக நிறைவேற்றுநர்கள் சங்கம் மற்றும் முகாமைத்துவ நிருவகம் ஆகியவற்றின் அங்கத்தவர், மற்றும் கனிஷ்ட சர்வதேச சம்மேளனத்தின் சான்றிதழளிக்கப்பட்ட தேசிய பயிற்றுவிப்பாளரும் ஆவார்.

**திரு. மயூகா ரணசிங்க**
*குழுமத்தின் சட்ட அலுவல்களின் தலைமை*

திரு. மயூகா ரணசிங்க அவர்கள் ஸ்ரீலங்கன் குழுமத்தின் சட்ட அலுவல்களின் தலைமைப் பதவியினை வகிக்கின்றார். இவர் இவரது தொழில் வாழ்க்கையினை வழக்காடல்களில் ஆரம்பித்து பின்னர் விமான நிறுவனத்தில் இணைவதற்கு முன்னர், தொலைத்தொடர்பு துறையில் ஈடுபட்டிருந்தார். 2009 இல் கம்பனியில் இணைந்ததிலிருந்து பல்வேறு மட்டங்களில் விமான நிறுவனத்திற்காக சிக்கலான, கட்டமைப்பு சார்ந்த மற்றும் நாடுகடந்த வர்த்தக ஒப்பந்தங்கள் என்பவற்றை கையாண்டு சிறந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் கம்பனியின் சார்பில் பல்வேறு நாடுகளில் அறிவுசார் சொத்துக்கள் மற்றும் வேலைவாய்ப்பு விடயங்கள், முறைமைப்படுத்தல் அலுவல்கள், பிணக்கு தீர்த்தல்கள் மற்றும் பல நியாயாதிக்கங்களிலான வழக்காடல்கள் என்பவற்றை முகாமைப்படுத்தியுள்ளார்.

இவர் தொழில்ரீதியாக ஓர் சட்ட வழக்குரைஞர் என்பதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் இளமானி பட்டத்தினைப் பெற்றுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் முதுமானி பட்டத்தையும் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**திரு. சாமர பெரேரா**
*தகவல் தொழில்நுட்பத்தின் தலைமை*

திரு. சாமர பெரேரா அவர்கள் விமான நிறுவனத் துறையில் அனுபவம் நிறைந்த தொழில்வல்லுநராவார். இவருக்கு விமானப் பயணவியல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை தன்னியக்கமயமாக்கல் மூலோபாய விநியோக தலைமைத்துவத்தினை விமான நிறுவனம் மற்றும் குழுமத்தினது தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்மின் நிலை உருமாற்றல் என்பவற்றுக்கு வழங்குகின்றார்.

திரு. சாமர பெரேரா அவர்கள் 1999 இல் விமான நிறுவனத்துறையில் நுழைந்து தேசிய வானூர்தியில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் பல்வேறு வகையான முகாமைத்துவம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் விமான நிறுவனத்தில் சேவையாற்றியுள்ளதுடன் 2012 இல் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமையாக நியமிக்கப்பட்டார்.

இவர் விமான நிறுவனம் மற்றும் குழுமத்தினது வான்வழிப் பயண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் எண்மின் நிலை சூழல் முறைகளுக்குப் பொறுப்பாயுள்ளார். இவர் அடிமட்டத்திலான தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளிலிருந்து விமானத்தினுள்ளான இணைப்பு வரையான தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் விமான நிறுவன வணிக மற்றும் செயற்பாடுகளை கவனிக்கின்றார். திரு. பெரேரா அவர்கள் பல தொழில்நுட்ப புத்தாக்கங்களது ஆரம்ப அமுலாக்கல்களுக்கு தலைமை தாங்கியுள்ளார். இவை பயணிகளை மையப்படுத்திய சேவைகளை நிறுவுவதற்கு, இவற்றுள் சில சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் வணிக எளிமையாக்கல்

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு தொடர்ச்சி

திட்டம், விமான போக்குவரத்திற்கான விரைவான பிரயாண புத்தாக்கத் தீர்வுகள் என்பவையாகும். இவர் விமானநிறுவனத்தின் முற்றுமுழுதான தகவல் தொழில்நுட்ப மேடையினை உறுதிப்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நியமங்களுடன் இணங்கியொழுகுதலை இயக்கினார். ஸ்ரீலங்கன் தொழில் நுட்பமானது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு ISO/IEC 27001:2013, மென்பொருள் தர முகாமைத்துவத்திற்கு ISO 9001:2015 மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்திற்கு ISO/IEC 20000:2018 சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. திரு. பெரேரா அவர்கள் விலையுயர்ந்த மரபுரீதியான விமான நிறுவன முறைகளை மலிவான கிரயமுடைய பிரயோக தொகுப்புக்கு மாற்றி மாற்றீடு செய்வதற்கு தொழில்நுட்ப குழுக்களை வெற்றிகரமாக வழிநடத்தினார். மேலும், உள்வாரியாக விருத்தி செய்யப்பட்ட பிரயோகங்கள் இவரது வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினை வைத்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஓர் பொறியியலாளர் என்பதுடன் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இரத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமானி விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் பல தகவல் தொழில்நுட்ப விசேடத்துவங்கள் மற்றும் சர்வதேச அளவில் சான்றளிக்கப்பட்ட அங்கங்களிலிருந்து தொழில்சார் தகமைகளையும் சான்றிதழ்களையும் கொண்டுள்ளார்.

**திரு. சாமர ரணசிங்க**
*சரக்குச் சேவைகளின் தலைமை*

திரு. சாமர ரணசிங்க அவர்கள் 2013 இல் சரக்குச் சேவைகளின் தலைமையாக கம்பனியில் இணைந்தார். இவர் வாடிக்கையாளர் சேவைகள், சரக்கு இட ஒதுக்கீடுகள், சரக்கு விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விமான நிலைய சரக்குச் செயற்பாடுகள் என்பவற்றில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

கம்பனியில் இணைவதற்கு முன்னர், இவர் இலங்கைக்கு செயற்பட்ட பிரசித்திபெற்ற சர்வதேச விமான நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்தார்.

**சுமுது உபதிஸ்ஸ**
*வருவாய் முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வணிக உறுதுணையின் தலைமை*

திரு. சுமுது உபதிஸ்ஸ அவர்கள் 2000 இல் கம்பனியில் நிறைவேற்று பயிலுநராக இணைந்து அத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் 2001 இல் வணிகப் பிரிவிற்கு மாறினார். இவர் 19 வருடங்கள் துறைசார் அனுபவத்தினைக் கொண்டவர். இதில் 14 வருடங்களுக்கும் மேலாக பின்வரும் பிரிவுகளில் முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்டுள்ளார். சர்வதேச தொடர்புகள், அட்டவணைத் திட்டமிடல்கள், வலையமைப்பு மற்றும் வருவாய் திட்டமிடல், வருவாய் முகாமைத்துவம் என்ற பிரிவுகளிலாகும். இவர் 2017 இல் வருவாய் முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வணிக உறுதுணைக்கு தலைமையாக நியமிக்கப்பட்டார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் முகாமைப்படுத்தலில் இளமானி விஞ்ஞான பட்டதாரியாவார். அத்துடன் இவர் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் விமான நிறுவன கற்கையில் டிப்ளோமா (மொன்ரியல்) மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தினை பெற்றுள்ளதுடன் இந்நிருவகத்தின் இணைந்த அங்கத்தவராவார்.

**திரு. திமுத்து தென்னக்கோன்**
*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்தின் தலைமை*

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் தற்போது விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள், விநியோக வழி முகாமைத்துவம் மற்றும் அனைத்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு தலைமையாக சேவையாற்றுகின்றார். இவர் இப்பதவிக்கு ஏப்ரல் 2017 இல் நியமிக்கப்பட்டார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனத்துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்ட ஓர் மூதறிவர் ஆவார். இவர் 15 வருடங்களுக்கும் அதிகமான, ஓமான் விமான நிறுவனம் உள்ளடங்களாக விமான நிறுவன விற்பனைச் செயற்பாடுகளில் அனுபவமுள்ளவர். இவர் பகுதி, நாட்டு மற்றும் பிராந்திய முகாமையாளர் பதவிகளை ஆசிய பசிபிக், தூர கிழக்கு, மத்திய கிழக்கு, இந்திய துணைக்கண்டம் மற்றும் வட அமெரிக்க பிராந்தியங்களில் வகித்துள்ளார். இதலிருந்து இவர் தேசிய வானூர்தியின் வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பொது முகாமையாளராக இருந்து தற்போதைய பதவிக்கு உயர்ந்தார். விற்பனையிலான இவரது அனுபவங்களுக்கும் மேலாக, வருவாய் திட்டமிடல், வருவாய் முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ கணக்கீடு போன்றவற்றில் பொறுப்புள்ள பதவிகளை இவரது வான்வழி விமானச் சேவைத்துறை தொழிலில் வகித்துள்ளார்.

இவர் தற்போது கம்பனியின் சந்தைப்படுத்தல், இலத்திரணியல் வர்த்தகம், உலகளாவிய விநியோக வழிகள், வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் (வாடிக்கையாளர் விசுவாசத்திட்டமான குடலளஅடைநள உள்ளடங்களாக), துணை வருவாய் திணைக்களங்கள், விமான நிறுவனத்தின் ஸ்ரீலங்கன் விடுமுறை வணிக அங்கம் என்பவற்றுடன் வலையமைப்பு ஊடான விற்பனை செயற்பாடுகள் என்பவற்றைக் கவனிக்கின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் பட்டம் பெற்றவர் மற்றும் தற்போது இலங்கை விமான நிறுவனங்களின் சபையின் தலைவராகவும் இருக்கின்றார். அத்துடன் இலங்கை மாநாட்டு பணியகத்தின் சபை அங்கத்தவருமாவார்.

**திருமதி. புத்திக மானகே**
*மனித வளங்கள் மற்றும் வானறைச் சேவைகள்*

திருமதி, புத்திக மானகே அவர்கள் 2003 இல் கம்பனியில் முகாமைப் பயிற்சியாளராக இணைந்து அவரது தொழிலை 2004 இல் வர்த்தகக் கொள்முதல் திணைக்களத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக ஆரம்பித்தார். இவர் 16 வருடங்கள் அனுபவத்தினை பின்வரும் பிரிவுகளில் கொண்டுள்ளார். வர்த்தக கொள்முதல் நிறைவேற்றுநனர் (திட்டங்கள்), சிரேஷ்ட விமானத்திநுள்ளான சேவைகள் நிறைவேற்றுநர் (நிர்வாகம் மற்றும் வானறைப் பணியாள் சேவைகள் ), விமானத்தினுள்ளான சேவைகள் முகாமையாளர் ( நிர்வாகம் வானறை பணியாள் அட்டவணைப்படுத்தல் ), முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை போன்றவையாகும். வானறைச் சேவைகள் தலைமைப் பதவிக்கும் மேலாக ஜனவரி 2020 இல் இவர் மனித வளங்களின் மாற்றாள் தலைமையாக நியமிக்கப்பட்டார். ஜூலை 2020 முதல் இவர் மனித வளங்கள் மற்றும் வானறை சேவைகளின் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியலில் இளமானி விசேட விஞ்ஞான (கௌரவ) பட்டத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவகத்தில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் IPM நிருவகத்திலிருந்து மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தொழில்சார் தகமையினைப் பெற்றுள்ளார். இவர் தொழிலாளர் சட்டம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பற்றில் தகமையினைப் பெற்றுள்ளார்.

**கெப்டன் பிரவீன் வெத்திமுனி**
*வானூர்தி செயற்பாடுகளின் தலைமை*

கெப்டன் வெத்திமுனி அவர்கள் ஸ்ரீலங்கன் குடும்பத்தில் ஓர் இளம் படைப்பயிற்சி விமானியாக 2001 இல் இணைந்தார். இவர் அவரது ஆரம்ப நியமனமான பிரதி பிரதம விமானியிலிருந்து ஐந்து வருடங்களுக்கும் மேலாக முகாமைத்துவத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தார். இவரது உயர் முகாமைத்துவ பங்களிப்பிற்கும் மேலாக, கெப்டன் வெத்திமுனி அவர்கள் தற்போது ஏ330/ஏ320 விமானங்களின் இணைப்பு விமானியாகவும் அதில் வகை ஏ குறிப்பிடப்பட்ட சரிபார்த்தல் விமானியுவமாவார்.

இவர் ஐக்கிய இராச்சியத்தின் டர்ராம் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகப் பொருளியலில் கௌரவ இளமானிப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

**லெப்டினன்ட் கேர்னல் பந்துல வேரகம**
*பொது முகாமையாளர், விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள்*

லெப்டினன்ட் கேர்னல் பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 23 வருடங்கள் சேவையுடன் 2012 இல் கம்பனியில் இணைந்தார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர் பெப்ரவரி 2016 இல் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டார்.

இவர் களணிய பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஓர் முதுமானி பட்டத்தினையும் பாக்கிஸ்தானின் க்குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

**திரு. பிரிமால் டி சில்வா**
*பொது முகாமையாளர், ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரி*

திரு. பிரிமால் டி சில்வா அவர்கள் 1988 இல் வானறை பணியாள் அங்கத்தவராக கம்பனியில் இணைந்து 2006 வரை ஓர் பின்தொடர்பவராக இருந்தார். தற்போது இவர் ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரியின் பொது முகாமையாளர் பதவியினையும் பொறுப்பான முகாமையாளர் (பகுதி 147), விமான பராமரிப்பு பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு என்பவற்றுக்கான பொறுப்பினையும் வகிக்கின்றார். இந்நியமனத்திற்கு முன்னர், வானறை பாதுகாப்பு முகாமையாளர் மற்றும் முகாமையாளர் விமானத்தினுள்ளான செயற்பாடுகள் மற்றும் பயிற்சி போன்ற முன்னைய பதவிகளையும் வகித்துள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் நிறைவேற்று முதுமானி பட்டத்தினையும் இலங்கை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிருவகத்திலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தியில் தேசிய டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார்.

# நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவ (நி.இ.மு.) வரம்புறுகை

**செயல்முறை மீளாய்வு**

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவ வரம்புறுகையானது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு குழுமத்தின் உத்தரவாதம் மற்றும் ஆலோசனை சேவைகள் பிரிவினால் மையமாக வசதியளிக்கப்படுகின்றது. ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நி.இ.மு. வரம்புறுகையானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு இடர்நேர்கைகளின் தாக்கத்தைக் குறைப்பதிலான செயல் திட்டங்களை வரைதல் மற்றும் வணிக இடர்நேர்கைகளை இனங்காண்பதில் துறைசார் ஒழுங்குவிதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளது தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக நிறுவப்பட்டது. இடர்நேர்கைகள் மூலோபாய, செயல்முறை மற்றும் திட்ட மட்டங்களில் இனங்காணப்படுவதுடன் இவை நிதியியல், செயற்பாடு, தகவல் தொழில்நுட்பம், பத்திரம் மற்றும் பாதுகாப்பு, சந்தைப்படுத்தல், மனித வளங்கள், மற்றும் பாரிய சூழல் இடர்நேர்கைகள் என்பவற்றை உள்ளடக்கும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நல்ல ஆளுமையின் ஓர் அடிப்படை பிரிவாக பயனுறுதி மிக்க இடர்நேர்கை முகாமைத்துவத்திற்கு கடப்பாடுடையதாயிருப்பதுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர்நேர்கை கலாச்சாரமானது அனைத்து பணியாட்களையும் பொருத்தமான இடர்நேர்கை அடிப்படையிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்கின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவத்தினை அமுல்படுத்தும் பொறுப்பானது இடர்நேர்கை முகாமைத்துவ இயக்கக் குழு (சிரேஷ்ட முகாமைத்துவக் குழு), நி.இ.மு. ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டு முகாமைத்துவம் (இடர்நேர்கை உடமையாளர்கள் ) ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இ.மு.இ.கு. ஆனது கம்பனியின் இடர்நேர்கை முகாமைத்துவ கொள்கைக்கு ஏற்ப ஒவ்வொரு பிரிவும் செயற்படுவதனை வழிநடத்துவதற்கும் மற்றும் இடர்நேர்கை விழிப்புணர்வு கலாச்சாரத்தினை கட்டியெழுப்புவதற்கும் பொறுப்பாளியாவார்கள். செயல்பாட்டு முகாமைத்துவமானது இடர்நேர்கைகளை இனங்கண்டு அவற்றை மதிப்பிடுதல், பொருத்தமான இடர்நேர்கை செய்கைமுறை திட்டங்கள் மற்றும் முன்னேற்றத்தினை கண்காணித்தல் என்பவற்றுக்கு பொறுப்பாயுள்ளது.

**இடர்நேர்கை முகாமைத்துவ நிறுவன கட்டமைப்பு**






**இடர்நேர்கை முகாமைத்துவ செயல்முறை**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இடர்நேர்கை முகாமைத்துவ செயல்முறையானது பின்வரும் நான்கு பிரிவுகளை உள்ளடக்குகின்றது. இடர்நேர்கை இனங்காணுதல், இடர்நேர்கை பகுப்பாய்வு, இடர்நேர்கை செய்கைமுறை மற்றும் இடர்நேர்கை அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல் என்பனவாகும்.

இடர்நேர்கை இனங்காணுதல்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் செயல்பாட்டு மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதில் ஏதேனும் தடைகளை ஏற்படுத்தக்கூடிய உள்வாரி மற்றும் வெளிவாரி காரணிகளை இனங்காண்கின்றது. இடர்நேர்கைகள் இடர்நேர்கை உடைமையாளர்களினால் இடர்நேர்கை இனங்காணுதல் கருவிகள் மற்றும் பாரிய செயல்முறைகள், திட்டங்கள் மற்றும் வணிக இலக்குகளை பகுப்பாராய்தல் என்பவற்றினை பயன்படுத்தி இனங்காணப்படுகின்றன. செயல்பாட்டு முகாமைத்துவமானது அனைத்து தேவையான தகவல்களையும் பிரிவுகளின்/திணைக்களங்களின் நி.இ.மு. ஒருங்கிணைப்பாளருக்கு இடர்நேர்கை இடாப்பினை புதுப்பிப்பதற்காக வழங்குகின்றது. இனங்காணப்பட்ட இடர்நேர்கைகள் இடர்நேர்கை முகாமைத்துவ இயக்கக் குழுவினால் (சிரேஷ்ட முகாமைத்துவம் ) மீளாய்வு செய்யப்பட்டு சபையின் கணக்காய்வுக் குழுவுக்கு ஆண்டுக்கு இருமறை அறிக்கையிடப்படுகின்றது.

இடர்நேர்கை பகுப்பாய்வு

இனங்காணப்பட்ட இடர்நேர்கைகள் அதன் சாத்தியப்பாடு மற்றும் இடர்நேர்கையின் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடர்நேர்கை மதிப்பெண்களின் அடிப்படையில் கணிசமானது, உயர், மத்திமம், அல்லது குறைவானது என தரப்படுத்தப்படுகின்றது. இடர்நேர்கை மதிப்பெண்ணானது சாத்தியப்பாட்டு தரத்தினை தாக்கத் தரத்தினால் பெருக்கல் செய்யப்பட்டு கணிப்பிடப்படுகின்றது.

இடர்நேர்கை செய்கைமுறை

செயல்பாட்டு முகாமைத்துவமானது இடர்நேர்கை தரப்படுத்தல் மற்றும் இடர்நேர்கை மதிப்பெண் அடிப்படையில் செயல் திட்டங்களினை உருவாக்குவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. இடர்நேர்கை செய்கைமுறைக்கு இனங்காணப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர்நேர்கை பதில்கள் குறைத்தல், மாற்றல், தவிர்த்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. கணிசமானளவு இடர்நேர்கை செய்கைமுறை நடவடிக்கைகள் பிரதம நிறைவேற்று அதிகாரி/உரிய சிரேஷ்ட முகாமைத்துவ குழு அங்கத்தவர் ஆகியோரால் மீளாய்வு செய்யப்படுகின்றது. உயர்ந்த இடர்நேர்கை செய்கைமுறை நடவடிக்கைகள சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. மத்திம இடர்நேர்கை செய்கைமுறை நடவடிக்கைகள் திணைக்கள முகாமையாளர்களால் மீளாய்வு செய்யப்படுகின்றது. குறைவான இடர்நேர்கைகள் நடைமுறை கட்டுப்பாடுகளினுள் முகாமைப்படுத்தப்படுவதுடன் இடர்நேர்கை தரப்படுத்தலிலான மாற்றங்கள் நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றன.

இடர்நேர்கை அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல்

இடர்நேர்கை முகாமைத்துவ இடாப்பு பிரிவுகள்/திணைக்களங்களது தலைமைகளினால், நடவடிக்கை உருப்படிகள் நேரகாலத்துடன் அமுல்படுத்தப்படுவதனை கண்காணிப்பதற்காக ஒவ்வொரு காலாண்டும் மீளாய்வு செய்யப்படுகின்றது. இடர்நேர்கை முகாமைத்துவ இயக்கக் குழு முக்கிய இடர்நேர்கைகளை மீளாய்வு செய்து சபை கணக்காய்வுக் குழுவுக்கு வருடத்திற்கு இருமுறை அறிக்கையிடுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவானது வருடத்திற்கு இருமுறை வீதம் முக்கிய கூட்டாண்மை இடர்நேர்கைகளை மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்கு வருடத்திற்கு இருமுறை வீதம் அறிக்கையிடுகின்றது. பணிப்பாளர் சபையின் உடனடி கவனம் தேவைப்படும் சூழ்நிலைகளில் அது உடனடியாக அறிக்கையிடப்படுகின்றது.

## முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு



"ஈஸ்டர் ஞாயிறு நிகழ்வுகள் மற்றும் தற்போதுள்ள கோவிட்-19 தொற்றின் பின்னணியில் செயற்பாட்டிற்கு ஏற்பட்ட எதிர்பாரா இடையூறுகளுக்கு மத்தியில், குழுமமானது வருவாயினை மேம்படுத்தும் பல்வேறு முன்னெடுப்புகளினூடாக முன்னைய நிதியாண்டிற்கு ஒத்ததான வருவாய் மட்டங்களை இலங்கை ரூபாவின் பிரகாரம் அடையக்கூடியதாக இருந்தது. இதில் ஓர் விளிம்புநிலை வீழ்ச்சியினை அடைந்து ரூபா 183,532 மில்லியனை (2018/19 இன் ரூபா 184,097 மில்லியனுக்கு எதிராக) வருவாயாக பதிவுசெய்தது."

## நிதியியல் மீளாய்வு

ஈஸ்டர் தொடர் பயங்கரவாத தாக்குதல்களுடன் ஆரம்பித்து உலகம் முழுவதும் தற்போது இடம்பெறும் தொற்றுடன் நிறைவடைந்த 2019/20 நிதியாண்டானது விமானக் கம்பனி வரலாற்றில் மிகவும் சவால்மிக்க வருடங்களுள் ஒன்றாகும்.

இந்த எதிர்பாராத நிகழ்வுகள் விமான நிறுவனத்தினை பின்வருவனவற்றுடன் ஓர் உயர்ந்த நிச்சயமற்ற காலப்பகுதியில் பயணம் செய்வதற்கு வழிசமைத்தது. நாடு பூராவுமான ஊரடங்கு வழிமுறைகளின் மத்தியில் சர்வதேச விமானப் பிரயாணத்திற்கான கேள்வியில் தீவிரமான வீழ்ச்சி, விமான நிலைய மூடல்கள், சர்வதேச எல்லை மூடல்கள், கடுமையான பிரயாணக் கட்டுப்பாடுகள் மற்றும் உல்லாசத் துறையின் முழுவதுமான நிலைகுலைவு என்பவையாகும். மேலும், வருவாய் இழப்பிற்கு மத்தியில் வணிக இலக்குகளை விநியோகிப்பதற்கும், அரசாங்கத்தின் பணிப்புரைகள் மற்றும் பொருத்தமான செயற்பாட்டு நெறிமுறையினூடாக எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாட்களது ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் இடையே மென்மையான சமநிலையினை அடைவது ஓர் கடினமான பணியாகக் காணப்பட்டது.

இதற்கும் மேலாக, அதிகரித்த போட்டித்தன்மை, அதிகளவு கொள்திறன், அதிகரித்த நிதிச் செலவுகள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிராக மேலும் பலப்படுத்தப்பட்ட அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய சர்வதேச நாணயங்கள் கம்பனியின் இலாபத்தில் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தின. விமான எரிபொருள் வீழ்ச்சியிலிருந்து பெறப்பட்ட நலன்கள் பகுதியளவில் மேற்குறிப்பிட்டவற்றை ஈடுசெய்தது.

குழுமமானது 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கு ஓர் தேறிய நட்டமாக ரூபா 44,030 மில்லியனை (இது முன்னைய நிதியாண்டிலும் பார்க்க 5.6% அதிகமாகக் காணப்பட்டது) பதிவுசெய்த போதிலும், மேற்குறிப்பிட்ட நட்டத்திற்கு முக்கியமாக பங்களித்தவைக்கு உடைமையாக பின்வரும் செற்பாடல்லாத உருப்படிகள் காணப்பட்டன.

| | 2019/20 ரூபா மில்லி. | 2018/19 ரூபா மில்லி. | அதிகரிப்பு % |
|---|---|---|---|
| நிதிச் செலவினம் | 40,667 | 19,483 | 108.7 |
| பரிமாற்றல் நட்டம் | 5,270 | 2,328 | 126.4 |
| பிடித்து வைத்தல் வரிச் (பி.வை.வ.) செலவினம் | 8,062 | 6,972 | 15.6 |

நிதிச் செலவுகளிலான இரட்டிப்பான அதிகரிப்பு SLFRS 16 இனை கடைப்பிடித்ததன் தாக்கத்தின் விளைவினாலாகும். ஓர் உள்ளார்ந்த சொத்துடனான அனைத்து பாரிய செயற்பாட்டு குத்தகைகளும், இதுவரைக்கும் வாடகைச் செலவினமாக (செயற்பாட்டு குத்தகை) கணக்கீடுசெய்யப்பட்டவை, நிதியியல் கூற்றுக்களில் ஓர் சொத்தாகவும் அதற்கு ஒத்திசைவான ஓர் பொறுப்பாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டியுள்ளது. அனைத்து விமானக் குத்தகைகளும் அமெரிக்க டொலர்களில் குறிப்பிடப்பட்டுள்ளதனால், இப்பொறுப்பின் மீள்மதிப்பீட்டின் விளைவிலிருந்தான நாணயமாற்று நட்டம் ரூபா 12,960 மில்லியனாகவும், இதன் விளைவான நிதிச் செலவு ரூபா 10,683 மில்லியனாகவும் காணப்பட்டது.

பி.வை.வ. செலவினமானது இலங்கையில் வதிவிடமற்ற தரப்பினருக்கு பி.வை.வ. கொடுப்பனவுக்கு பொறுப்பாயுள்ள வெளிநாட்டு கொடுப்பனவுகளிலான வரிப் பொறுப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. 1 ஏப்ரல் 2018 முதல் பின்னோக்கியவாறு வெளிநாட்டு கொடுப்பனவுகளில் பி.வை.வ. விலக்களிப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது பெறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பி.வை.வ. க்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள், நிதி அமைச்சினாலும் இறைவரித் திணைக்களத்தினாலும் அவசியமான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொண்டு இந்த விலக்களிப்பு முறைப்படுத்தப்படும்வரை காணப்படுவதுடன், அதன் பின்னர் பி.வை.வ. செலவினம் மீள் எழுதப்படும்.

### நாணயமாற்று வீதத்தின் அசைவின் தாக்கம்




2019/20 நிதியாண்டில் இலங்கை ரூபாயானது அமெரிக்க டொலருக்கு எதிராக தொடர்ந்தும் பெறுமதி குறைவடைந்ததுடன், கோவிட்-19 தொற்றின் நிமித்தம் ஏற்பட்ட நிச்சயமற்றதன்மையினால் உந்தப்பட்டு மார்ச் 2020 இல் ஓர் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டது. மார்ச் 2020 இல் ஏற்பட்ட இலங்கை ரூபாயினது பெறுமதி வீழ்ச்சி 4.5% ஆகவும் முழு ஆண்டிற்குமான வீழ்ச்சி 7.8% ஆகவும் காணப்பட்டது.

சாதகமற்ற நாணய அசைவானது விமான நிறுவனத்தின் இலாபத்தை மோசமாக பாதித்ததுடன், ரூபா 23,076 மில்லியனை ஓர் பரிமாற்றல் நட்டமாக விளைவித்ததுடன், இது வருடத்திற்கான தேறிய நட்டத்தில் 52.3% இற்கு பொறுப்பாயிருந்தது.

### குழுமத்தின் உழைப்புகள்

ஈஸ்டர் ஞாயிறு நிகழ்வுகள் மற்றும் தற்போதுள்ள கோவிட்-19 தொற்றின் பின்னணியில் செயற்பாட்டிற்கு ஏற்பட்ட எதிர்பாரா இடையூறுகளுக்கு மத்தியில், குழுமமானது வருவாயினை மேம்படுத்தும் பல்வேறு முன்னெடுப்புகளினூடாக முன்னைய நிதியாண்டிற்கு ஒத்ததான வருவாய் மட்டங்களை இலங்கை ரூபாவின் பிரகாரம் அடையக்கூடியதாக இருந்தது. இதில் ஓர் விளிம்புநிலை வீழ்ச்சியினை அடைந்து ரூபா 183,532 மில்லியனை (2018/19 இன் ரூபா 184,097 மில்லியனுக்கு எதிராக) வருவாயாக பதிவுசெய்தது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

**வருவாய் போக்கு இலங்கை ரூபா மில்லியனில்**




**ஆக்க அமைவு**



- பயணிகள் - 81.1%
- சரக்கு - 8.7%
- தீர்வையற்றவை - 0.5%
- விமான உணவகச்சேவை - 1.9%
- வி.நி.மற்றும் ஏனைய சேவைகள் - 7.7%

**ஏற்றிச்செல்லப்பட்ட பயணிகள**




**பூகோள ரீதியான வருவாய் ரூபா மில்லியனில்**

| வருடம் | இலங்கை | ஆசியா (இலங்கை தவிர்த்து) | ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா | மத்திய கிழக்கு | வட மற்றும் தென் அமெரிக்கா | தென் மேற்கு பசிபிக் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 | 48,478 | 63,318 | 18,715 | 36,857 | 4,491 | 11,673 | 183,532 |
| 2019 | 48,412 | 67,267 | 21,112 | 32,909 | 4,642 | 9,755 | 184,097 |
| % மாற்றம் | (0.1) | (5.9) | (11.4) | 12.0 | (3.3) | 19.7 | (0.3) |

எதிர்பாரா நிகழ்வுகளின் விளைவிலான வருவாய் இழப்பானது பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது:

| | ரூபா மில்லியன் |
|---|---|
| ஈஸ்டர் தாக்குதலின் நிமித்தம் | 9,147 |
| கோவிட்-19 நிமித்தம் | 9,765 |

**ஏற்றிச்செல்லப்பட்ட சரக்கு**




### கம்பனியின் உழைப்புக்கள்

அதேபோன்றே, மீளாய்வாண்டிற்கான கம்பனியினது வருவாயானது ரூபா 180,151 மில்லியனாக மீளெழுச்சியுடன் காணப்பட்டது. இது பயணிகள் மற்றும் சரக்குக்கான போக்குவரத்திற்கான கேள்வியின் நிறுத்தம் மற்றும் விமானப் பயணங்களுக்கான எதிர்பாரா இடையூறுகளின் மத்தியில் அடையப்பட்டது.

**வருவாய் போக்கு**




**வ.ப.கி. க்கான வருவாய்**




### இலாபம் அல்லது நட்டக் கூற்று அமெரிக்க டொலர்களில்

எமது செலவினங்களின் 75% அமெரிக்க டொலரிலும் மற்றும் எமது வருவாயின் 84% இலங்கையை ரூபாயினைத் தவிர்த்த ஏனைய நாணயங்களில் பெற்றுக்கொள்ளப்படுவதனால், கம்பனியின் முகாமைத்துவக் கணக்குகள் அமெரிக்க டொலர்களின் தயாரிக்கப்படுகின்றன. அமெரிக்க டொலர்களிலான இலாபம் அல்லது நட்டக் கூற்றின் சுருக்கமான வடிவம் (கணக்காய்வு செய்யப்படாதது) தகவல் நோக்கத்திற்காக மாத்திரம் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அமெரிக்க டொலர் இலாபம் அல்லது நட்டத்தில் பரிமாற்றல் நட்டங்களினது தாக்கம் இல்லை).

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020 USD மில் | 2019 USD மில் | 2020 USD மில் | 2019 USD மில் |
| **வருவாய்** | 1,029.0 | 1,112.6 | 1,010.2 | 1,090.2 |
| **செலவினம்** | | | | |
| விமான எரிபொருள் செலவு | (309.1) | (361.8) | (309.1) | (361.8) |
| பணியாட்கள் செலவு | (128.0) | (130.8) | (118.5) | (121.5) |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | (476.1) | (544.8) | (495.1) | (562.0) |
| **செயற்பாட்டு இலாபம்** SLFRS 16 **செம்மையாக்கலுக்கு முன்னர்** | 115.8 | 75.3 | 87.4 | 45.0 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் SLFRS 16 கடைப்பிடிப்பின் தாக்கம் | (109.2) | (184.4) | (108.9) | (183.5) |
| **செயற்பாட்டு இலாபம்/நட்டம்** | 6.6 | (109.2) | (21.4) | (138.5) |
| ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள் | 7.6 | 5.7 | 17.0 | 25.2 |
| நிதியியல் வருமானம் | 2.1 | 0.8 | 1.8 | 0.5 |
| நிதியளித்தல் நடவடிக்கைகளில் SLFRS 16 கடைப்பிடிப்பின் தாக்கம் | (59.7) | (0.6) | (59.0) | (0.6) |
| நிதிச் செலவுகள் (ஏனையவை) | (68.0) | (65.4) | (67.3) | (64.6) |
| **வரிக்கு முந்திய நட்டம்** | (111.5) | (168.8) | (128.9) | (178.0) |
| வருமான வரிச் செலவினம் | (0.2) | (0.4) | - | - |
| **வருடத்திற்கான நட்டம்** | (111.7) | (169.2) | (128.9) | (178.0) |
| வ.வ.பெ.பெ.வா. க்கு முந்திய உழைப்பு | 135.5 | 89.8 | 113.6 | 79.0 |
| வ.வ.பெ.பெ.வா. க்கு முந்திய உழைப்பு (பி.வை.வ. தவிர்த்து) | 180.6 | 131.3 | 158.7 | 120.6 |

மேற்குறிப்பிடப்பட்ட USD இலாபம் மற்றும் நட்டக் கூற்றானது பங்குதாரர்களின் தகவலுக்காக மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது ரூபாவிலான நிதிக் கூற்றுக்களின் நேரடி பரிமாற்றம் அல்ல என்பதுடன் இது பரிமாற்றல் நட்டங்களை உள்ளடக்கவில்லை.

2019/20 நிதியாண்டில் குழுமத்தின் வருவாயானது அமெரிக்க டொலரின் அடிப்படையில் 7.5% ஆல் குறைந்து USD 1,029.0 மில்லியனாகக் காணப்பட்டது. எனினும், குறைவடைந்த விமான எரிபொருள் விலைகள் மற்றும் செலவுக் கட்டுப்பாடு மற்றும் வருவாய் மேம்படுத்தும் நடைமுறைகள் உள்ளடங்களான முகாமைத்துவத்தின் முன்னெடுப்புக்களின் காரணமாக, மீளாய்வாண்டில் குழுமமானது 106.0% கணிசமான மேம்பாட்டினை செயற்பாட்டு விளைவாக அடைந்ததுடன் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட செயற்பாட்டு நட்டமான USD 109.2 மில்லியனை USD 6.6 மில்லியன் இலாபமாக மாற்றுவதற்கு இயலுமையாயிருந்தது.

இதற்கும் மேலாக, குழுமத்தின் வ.வ.பெ.பெ.வா. க்கு முந்திய உழைப்பானது முன்னைய ஆண்டிற்கு எதிராக 50.9% ஆல் அதிகரித்து USD 135.5 மில்லியனை எட்டியது. இதற்கமைய, பி.வை.வ. விலக்கப்பட்ட வ.வ.பெ.பெ.வா. க்கு முந்திய உழைப்பானது USD 180.6 மில்லியனாக அதிகரித்து 37.6% அதிகரிப்பினை பிரதிபலித்தது.

### செலவினம்

2019/20 நிதியாண்டில், குழுமத்தின் மொத்த செலவினங்கள் ரூபா 229,366 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2018/19 ஆண்டில் குழுமத்தின் மொத்த செலவினத்துடன் ஒப்பிடும்போது 1.1% அதிகரிப்பினை பிரதிபலித்தது. எனினும், புத்தாக்கமான மற்றும் நீடிப்புத்திறனுடைய செலவை சேமிக்கும் முன்னெடுப்புகள் மற்றும் விமான எரிபொருள் விலையிலான வீழ்ச்சி என்பன குழுமம் அதன் செற்பாட்டு செலவினங்களை (செயற்பாட்டு நடவடிக்கைகளில் SLFRS 16 கடைப்பிடிப்பின் தாக்கம்/பி.வை.வ. தவிர்த்த) 4.9%ஆல் குறைத்து மீளாய்வாண்டில் ரூபா 161,094 மில்லியனாக வைத்திருப்பதற்கு இயலுமையாக்கியது (2018/19 - ரூபா 169,420 மில்லியன்).

## முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

குழுமத்தின் மொத்த செலவினங்களின் தொகுப்பு பின்வருமாறு:

| செலவினம் ரூபா மில்லியனில் | 2020 | | 2019 | | வேறுபாடு (சாதகம்/ எதிர்மறை) | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | மொத்த செலவினங்களின்மூ | பெறுமதி | மொத்த செலவினங்களின்மூ | பெறுமதி | % |
| விமான எரிபொருள் செலவு | 55,328 | 24.2 | 60,673 | 26.7 | 5,345 | 8.8 |
| பணியாட்கள் செலவு | 22,903 | 10.0 | 21,928 | 9.7 | (975) | (4.4) |
| விமான நிலையம் வழியாக மற்றும் பயணிகள் செலவுகள் | 25,277 | 11.0 | 25,813 | 11.4 | 536 | 2.1 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் | 22,820 | 9.9 | 26,333 | 11.6 | 3,513 | 13.3 |
| பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு | 1,545 | 0.7 | 1,568 | 0.7 | 23 | 1.5 |
| விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | 14,550 | 6.3 | 15,786 | 7.0 | 1,236 | 7.8 |
| விமானப் பணிக்குழு செலவினங்கள் | 6,557 | 2.9 | 6,582 | 2.9 | 24 | 0.4 |
| பரிமாற்றல் நட்டம் - செயற்பாட்டு | 5,270 | 2.3 | 2,328 | 1.0 | (2,942) | (126.4) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் (SLFRS 16 -இன் தாக்கம் மற்றும் பி.வை.வ. நீங்கலாக) | 6,844 | 3.0 | 8,409 | 3.7 | 1,565 | 18.6 |
| செயற்பாட்டுச் செலவினங்கள் | 161,094 | 70.2 | 169,420 | 74.7 | 8,326 | 4.9 |
| SLFRS 16 -இன் தாக்கம் செயற்பாட்டு நடவடிக்கைகள் | 19,543 | 8.5 | 30,931 | 13.6 | 11,388 | 36.8 |
| SLFRS 16 -இன் தாக்கம் நிதியளித்தல் நடவடிக்கைகள் | 23,643 | 10.3 | 165 | 0.1 | (23,478) | (14,229.1) |
| பி.வை.வ. செலவினம் | 8,062 | 3.5 | 6,972 | 3.1 | (1,090) | (15.6) |
| நிதிச் செலவு (ஏனையவை) | 17,024 | 7.4 | 19,318 | 8.5 | 2,294 | 11.9 |
| மொத்த செலவினங்கள் | 229,366 | 100.0 | 226,805 | 100.0 | (2,561) | (1.1) |

விமான எரிபொருள் செலவினமானது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 8.8% ஆல் குறைவடைந்தது. இது எரிபொருள் விலையிலான வீழ்ச்சி மற்றும் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் உலகளாவிய தொற்று என்பவற்றுக்கு மத்தியில் குறைவான விமானப் போக்குவரத்தின் விளைவாக ஏற்பட்ட குறைவான எரிபொருள் நுகர்வு என்பவற்றாலாகும். 2020 இல் சராசரி எரிபொருள் விலையானது 2019 இல் காணப்பட்ட USD 227 உடன் ஒப்பிடும்போது USD 203 ஆக குறைவடைந்து ரூபா 6,415 மில்லியனை சேமிக்கக்கூடியதாயிருந்தது. மேலும், எரிபொருள் பருமனிலான குறைப்பின் காரணமாக அடைந்த செலவுச் சேமிப்பு ரூபா 3,072 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் வீழ்ச்சியின் மோசமான பாதிப்பு கம்பனியின் எரிபொருள் செலவினை ரூபா 4,142 மில்லியனால் அதிகரித்தது.

**எரிபொருள் விலை எதிர் செலவினம்**




அமெரிக்க டொலரின் நாணயமாற்று வீதமும் எரிபொருள் பயன்பாடும் நிலையாக இருக்கும் போது, எரிபொருள் விலைகளில் US 298 Gallon (USG) ஒன்றிற்கு ஒரு US சதம் மாற்றமடைந்தால் இது குழுமத்தின் வருடாந்த செலவினத்தை அண்ணளவாக ரூபா 298.16 மில்லியனால் பாதிக்கும்.

விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினமானது 2019 இன் ரூபா 26,333 மில்லியனிலிருந்து 2020 இல் ரூபா 22,820 மில்லியனாக குறைவடைந்தது. இது பிரதானமாக ஒரு ஏ330-200 விமானத்தினை முன்னரே திருப்பிக்கொடுத்தமை மற்றும் ஓர் என்ஜினது பரிமாற்றம் உள்ளடங்களான செலவுக் குறைப்பு முன்னெடுப்புகளினூடாக பெறப்பட்டது.

விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகளிலான 7.8%வீழ்ச்சியானது, எதிர்பாரா நிகழ்வுகளின் மத்தியில் காணப்பட்ட குறைந்த விற்பனையின் விளைவாக, கட்டுப்பாடு நீக்கப்பட்ட தரகுக்கூலி, விசேட ஊக்கத்தொகைகள் மற்றும் உலகளாவிய விநியோக முறைச் செலவுகள் போன்றவை குறைவடைந்ததனால் அடையக்கூடியதாயிருந்தது.

பணியாட்கள் செலவினமானது 4.4% அதிகரித்தது. இது கூட்டு பேரம்பேசுதல் உடன்படிக்கைகள் அடிப்படையிலான சம்பள திருத்தங்களினால் ஏற்பட்டது. விமானப் பணிக்குழுவின் செலவுகள் மாறாதிருந்தன.

செயற்பாட்டு பரிமாற்றல் நட்டத்திலான கணிசமானளவு அதிகரிப்பு அமெரிக்க டொலரில் குறிப்பிடப்பட்ட வர்த்தக பொறுப்புக்களின் விளைவாக ஏற்பட்டன, முக்கியமாக விமான நிறுவனத்தின் முக்கிய எரிபொருள் வழங்குநரான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டியவைகளாகும்.

SLFRS 16 இன் அமுலாக்கத்தினைத் தொடர்ந்து, குத்தகைகளை கணக்கீடு செய்யும் முறையானது கணிசமானளவு மாற்றமடைந்ததுடன், குத்தகை வாடகைச் செலவினங்கள் குத்தகைச் சொத்துக்களிலான பெறுமானத்தேய்வினாலும் நிதிச் செலவுகளாலும் மாற்றீடு செய்யப்பட்டன. செயற்பாடு மற்றும் நிதியளித்தல் நடவடிக்கைகளிலான இதன் தேறிய தாக்கம் ரூபா 12,090 மில்லியனாகக் காணப்பட்டதுடன், பிரதானமாக அமெரிக்க டொலரில் குறிப்பிடப்பட்ட குத்தகை பொறுப்பான ரூபா 176,327 மில்லியனை பரிமாற்றல் செய்யும்போது எழுந்த பரிமாற்றல் நட்டத்தினாலாகும்.

நிதிச் செலவினங்களின் வீழ்ச்சியானது 11.9% அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கத்தினாலாகும் 2018/19 இல் காணப்பட்ட 13.1% வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது 2019/20 இவ்வீழ்ச்சி 7.8%ஆக காணப்பட்டது.

### காசு நிலைமை

குழுமத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டின் எதிர்மறையான ரூபா 12,699 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 23,724 மில்லியன் சாத்தியமாக மேம்பட்டது. பிரதானமாக இது SLFRS 16 இனை அமுல்படுத்தியதன் விளைவினாலாகும்.

### நிதியியல் நிலைமை

புதிய குத்தகை கணக்கீட்டு நியமமான SLFRS 16 இன் அமுலாக்கத்தின் விளைவாக, குழுமத்தின் மொத்த சொத்துக்கள் 126.7% ஆல் அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 186,428 மில்லியனாகக் காணப்பட்டது. இது விமானம் மற்றும் ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள் (காணி, கட்டிடம் மற்றும் வாகனங்கள்) அறிக்கையிடப்படும் திகதியில் ரூபா 119,084 மில்லியன் ஆகவும் ஒத்திசைவான பொறுப்பாக ரூபா 176,327 மில்லியனும் காணப்பட்டதாலாகும். 31 மார்ச் 2019 இல் இவை நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படாததுடன் தற்போது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தாக உள்ளடக்கப்பட்டுள்ளதனாலாகும்.

**சொத்துக்கள் ரூபா மில்லியனில**




மூலதனச் செலவினங்களை ஒத்திப்போடுவதன் மூலம் நிதியாண்டில் குழுமமானது அதன் மூலதனச் செலவினங்களை குறிப்பிடத்தக்க 30.5% ஆல் ரூபா 759 மில்லியன் வரைக்கும் குறைப்பதற்கு இயலுமையாயிருந்தது. இங்கு மூலதனச் செலவினங்கள் முக்கியமான செயற்பாட்டு தேவைப்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு செலவினங்களில் இறுக்கமான கட்டுப்பாடுகளில் வைக்கப்பட்டன.

**மூலதனச் செலவினம்**




## செயற்பாட்டு மீளாய்வு

### வர்த்தகச் செயற்பாடுகள்

### பாதை வலையமைப்பு மற்றும் விமானத் தொகுதி

2019/2020 நிதியாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இன் வலையமைப்பானது 20 நாடுகளிலுள்ள 37 இயங்கலை பயண இலக்குகளில், இந்திய துணைக்கண்டத்தில் திடமான பிரசன்னத்துடன், சேவையாற்றியது. குறியீட்டுப் பகிர்வு பங்குதாரருடன் இணைந்து, விமான நிறுவனமானது 51 நாடுகளிலுள்ள 116 பயண இலக்குகளைக் கொண்ட பரவலான சேவையினை அதன் பயணிகளுக்கு வழங்கியது. இது வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை உள்ளடக்குகின்றது.

இவ்வாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடைமுறையிலுள்ள குறியீட்டுப் பகிர்வு பங்குதாரர்களான கட்டார் எயார்வேஸ் மற்றும் ஜெட்ஸ்டார் எயார்வேஸ் உடனான அதன் ஒத்துழைப்பினை விரிவாக்கியது. இது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கான பிரயாண தெரிவுரிமைகளை 8 பயண இலக்குகளாக மேம்படுத்தியும் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் 7 புதிய பயண இலக்குகளையும் சேர்த்துள்ளது. இதற்கும் மேலாக, ஸ்ரீலங்கன எயார்லைன்ஸ் கல்வ் எயார் நிறுவனத்துடன் குறியீட்டு பகிர்வு பங்குடைமையினை ஆரம்பித்து மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் மொத்தமாக 3 பயண இலக்குகளை வழங்குவதனூடாக பிரயாணத் தெரிவுரிமைகளை மேம்படுத்தியது. இதற்கமைய, மீளாய்வாண்டில், விமான நிறுவனமானது 31 நாடுகளில் குறியீட்டு பகிர்வு பங்குதாரர்களது ஒத்துழைப்புடன் பயணிகளுக்கு 77 பயண இலக்குகளுக்கான வசதியான பிரயாண தெரிவுரிமைகளை வழங்குகின்றது.

### வலையமைப்பு மேம்படுத்தல்கள் மற்றும் வருவாய்

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் சில முக்கிய சந்தைகளான சீனா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவற்றிலிருந்து கணிசமானளவு பயணிகள் முன்பதிவு குறைப்பினையும் மற்றும் ரத்துசெய்தல்களையும் விமான நிறுவனம் உடனடியாக அனுபவித்தது. இதன் விளைவாக, பயணிகள் கேள்வியில் காணப்பட்ட வீழ்ச்சிக்கேற்ப தொடர்ந்த நான்கு மாதங்களில் அட்டவணையில் ஓர் தொடரான விமானப் பயண ரத்துசெய்தல்களும் விமான தரமிறக்கங்களுக்கும் இடமளிக்கப்பட்டது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

மீளெழுவதன் ஓர் வழிமுறையாக, மேலதிக கொள்திறனானது வாய்ப்புள்ள "6ஆவது சுதந்திரம்" சந்தைகளுக்கு கொழும்பினூடான மாற்றல் போக்குவரத்தினை ஊக்குவிப்பதற்காக விரிவுறுத்தப்பட்டது. இந்த மூலோபாயமானது வெற்றிகரமாகக் காணப்பட்டதுடன் விசேடமாக மத்திய கிழக்கு மற்றும் இந்தியா போன்ற பயண வழிகளில் சாத்தியமான ஒட்டுமொத்த வருவாய் செய்திறனை, ஆரம்ப எதிர்வுகூறல்களுக்கு எதிராக, பதிவுசெய்தது. நாணயமாற்று தளம்பல்களின் மோசமான பாதிப்பின் காரணமாக பயணிகள் வருவாயானது பாதீட்டுக்கு எதிராக ருஉனு 4 மில்லியனால் வீழ்ச்சியடைந்து 2019 உடன் ஒப்பிடும்போது USD 24.4 மில்லியனால் குறைவடைந்துள்ளது.

ஈஸ்டர் சம்பவங்களின் நீடித்த தாக்கத்தின் நிமித்தம் 2019/20 நிதியாண்டிற்கான எதிர்வுகூறப்பட்ட வருவாயினை மீளாய்வாண்டில் சந்திக்க இயலாது போனது. விமான நிறுவனமானது மொத்த பயணிகள் வருவாயாக USD 807.7 மில்லியனையும் (ரூபா 147.7 பில்லியன்) சரக்கு வருவாயாக USD 88.6 மில்லியனையும் (ரூபா 15.7 பில்லியன்) பதிவு செய்தது. அதேசமயம், மொத்த விமானப் போக்குவரத்து வருவாயானது USD 919.8 மில்லியனாக (ரூபா 164.7 பில்லியன்) 2018/19 உடன் ஒப்பிடும்போது அமெரிக்க டொலரில் ஒட்டுமொத்த 7.4% வீழ்ச்சியனை பதிவுசெய்தது.

### ஓருலகம் (வன்வேல்ட்)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 1 மே 2014 இல் ஓருலக கூட்டணியில் இணைந்ததுடன் 2019 இல் அதன் 5 வருட ஆண்டுநிறைவினை அடைந்தது. இக் கூட்டணியின் அங்கத்தவராக, ஸ்ரீலங்கன் அதன் பயணிகளுக்கு உலகம் பூராவுமுள்ள 1,100 பயண இலக்குகளுக்கு பிரயாணம் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இந்திய துணைக்கண்டத்திலேயே இந்த பிரசித்திபெற்ற கூட்டணிக்குள் இணைந்த முதலாவது விமான நிறுவகம் ஸ்ரீலங்கன் ஆகும் என்பதுடன் அமெரிக்கன் எயார்லைன்ஸ், கெத்தே பசிபிப், வின்எயார், ஐபீரியா எயார்லைன்ஸ், ஜப்பான் எயார்லைன்ஸ், லாட்டாம், மலேஷியா எயார்லைன்ஸ், குவான்ட்டாஸ், கட்டார் எயார்வேஸ், றோயல் ஜோர்டானியன் மற்றும் எஸ்7 எயார்லைன்ஸ் போன்ற விமான நிறுவன வணிகத்தின் பாரிய மற்றும் உயர்மதிப்புடைய வர்த்தகச் சின்னங்களுடன் அங்கத்துவத்தினை பகிர்கின்றது.

கூட்டணியின் ஓர் அங்கத்தவராக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் வலையமைப்பினை வளர்ச்சி செய்யக்கூடியதாகவும், அதன் வர்த்தகச் சின்னத்தின் பெறுமதியினை ஓர் உலகளாவிய தளத்தினில் ஆக்கப்பயனை பெறக்கூடியதாகவும், அதன் விசுவாசத் திட்டத்தினை கட்டியெழுப்பவும் அறிவு மாற்றல்களின் ஓர் அங்கமாகவும் இருக்கக்கூடியதாயுள்ளது. ஓருலகம் கூட்டணியினுள் அதன் பிரவேசத்தினைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், நான்கு ஓருலகம் அங்கத்துவ விமான நிறுவனங்கள் உள்ளடங்களாக ஆறு விமான நிறுவனங்களுடன் குறியீட்டு பகிர்வு பங்குடைமையில் உள்நுழையக் கூடியதாயிருந்தது.

ஓருலகம் அடிக்கடி பறக்கும் அங்கத்தவர்களுக்கு பின்வரும் நலன்கள் வழங்கப்படுகின்றன, வணிக வகுப்பு பயண ஆயத்திற்கான அணுக்கம், காத்திருப்பு பட்டியலில் முன்னுரிமை, முன்னுரிமை விமானமேறுதல், மேலதிக பொதிப் படி மற்றும் உலகளவில் பரந்து காணப்படும் 550 ஓய்விடங்களுக்கான அணுக்கம் என்பன இவற்றுள் சிலவாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் இந்த கூட்டணியூடான கணிசமான நன்மைகளில் பிரதானமானவற்றில் ஒன்றாக அனைத்து கூட்டணி அங்கத்தவர்களது விமானங்களில் அடிக்கடி பறக்கும் மைல்களை உழைக்கவும் பயன்படுத்தவும் இயலுமையாயிருப்பதாகும்.

### உலகளாவிய விற்பனை மற்றும் விநியோகம்

நிதியியல் ஆண்டானது உலகளாவிய விற்பனைக் குழுவுக்கும் ஒட்டுமொத்த விமான நிறுவனத்திற்கும் உண்மையிலேயே சவால்மிக்க ஓர் ஆண்டாகும். எதிர்பாரா செயற்பாட்டு இடையூறுகளுக்கு மத்தியில் விமான நிறுவனமானது வருட இறுதியில் மொத்தமாக 5.26 மில்லியன் பயணிகளை ஏற்றிச்சென்றுள்ளதுடன், இது ஒட்டுமொத்த வானறைக் காரணியின் 80.6% ஆகும். வணிக வகுப்பு விற்பனையிலான திடமான விற்பனை அழுத்தமானது வருடம் பூராவுமான வணிக வகுப்பு வானறைக் காரணியின் சராசரியாக 55.3% இனை அடைந்தது. தூர கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு வணிகமானது தொடர்ந்தும் மிகவும் இலாபகரமான பிராந்தியங்களாகக் காணப்பட்டதுடன் இவை மொத்த விற்பனை செய்யும் இடத்திலான வருவாய்க்கு முறையே 21.5% மற்றும் 24.7% பங்களிப்பினை செய்தன. மேலும், முக்கிய வளமான சந்தையாக இந்தியா தொடர்ந்தும் காணப்பட்டதுடன் வலையமைப்பு பரவலான வருவாயில் 17.2% இனை பங்களித்தது.

எவ்வாறாயினும், இலங்கை ரூபாவிற்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதி ஏற்றத்தின் காரணமாக விற்பனை செய்யும் இடத்திலான பயணிகள் விற்பனை வருவாயின் இழப்பானது கணிசமானதாகும். 15 ஜூலை 2019 முதல் இலங்கையில் பயண டிக்கட்டுகள் அமெரிக்க டொலரில் விலையிடப்படுவதுடன், இது எதிர்காலத்தில் இலங்கை ரூபாவின் பாதகமாக தளம்பல்களின் தாக்கத்தினை வெற்றிகொள்வதற்கு உதவும்.

விற்பனை மூலோபாயத்திற்கு ஒத்தாற்போல், பொது விற்பனை முகவர்களது வலையமைப்பிற்கான கட்டுப்பாடு நீக்கப்பட்ட தரகுக்கூலி கட்டமைப்பினை புதுப்பித்ததன் மூலம் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. நாம் தற்போது செயற்திறனால் வழிநடத்தப்படும் ஊக்குவிப்புத் தொகை திட்டத்தினை பார்ப்பதுடன், ஒவ்வொரு பொது விற்பனை முகவரது செயற்திறனின் அடிப்படையில் தனிப்பயனாக்குதல், அத்துடன் உயர்ந்த செயற்திறனாளர்களை உரிய வெகுமதியுடன் ஊக்குவிக்கும் நோக்கத்தினாலாகும். இதற்கும் மேலாக, நேரடி வழியான மேம்படுத்தல்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட துணைச் சேவைகள் என்பது தொடர்ந்தும் வளர்ச்சியடைந்ததுடன் ஒட்டுமொத்த பயணிகள் அனுபவத்தினை மேம்படுத்தியது.

துறையிலும் வணிகத்திலும் வெளிக்கல செயற்பாட்டு சூழலானது தொடர்ந்தும் கணிசமானளவு மோசமான பாதிப்பினை ஏற்படுத்தும்வேளை, உலகளாவிய விதத்தில், குறைந்த கிரயத்திலான விமானங்களின் துரிதமான வளர்ச்சி, சக்தி வாய்ந்த துணைச் சேவைகள் மற்றும் எதிர்பார்க்கும் விமானங்களின் உருவமைப்புகள் என்பன விமான நிறுவனத்திற்கான சந்தையில் போட்டியுணர்வினை மேலும் அதிகரித்தது.

### மின்வணிகம்

துறையின் முன்னணி விமான நிறுவனங்களுடன் ஒத்ததாக அதன் இயங்கலை விற்பனை மேடையினை கொண்டுவரும் வேட்கையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ச்சியாக Srilankan.com இனை மேம்படுத்தியது. இவை பயனாளி இடைமுகப்பு மற்றும் அனுபவத்தினை மேம்படுத்தல் மற்றும் அதன் வாடிக்கையாளர் தளத்தின் வளர்ந்து வரும் அனைத்து பிரயாணத் தேவைகளுக்கும் வசதியளித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும்.

எமது வங்கி பங்காளிகளுடன் புதிய பங்குடைமைகளை நிறுவுதல் நோக்கி செயற்படுவதில், Srilankan.com மலேஷியாவின் மே வங்கி, தாய்லாந்தின் குருங் தாய் வங்கி மற்றும் இலங்கையின் செலான் வங்கி உள்ளடங்களான பல்வேறு வங்கிகளுடனான பங்குடைமையில் ஓர் தொடரான சிறப்பு விற்பனைகளை நடாத்தியது. இதற்கும் மேலாக, Srilankan.com இலங்கையின் என்.டி.பி. வங்கியுடன் இணைந்து Srilankan.com இல் அதன் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காட் உடைமையாளர்களுக்கு பிரத்தியேக கழிவுகளுடன் கவர்ச்சிமிக்க பயணக்கட்டணத்தை வழங்குகின்றது.

இயங்கலையில் முன்பதிவு செய்யும் வசதியினை மேலும் மேம்படுத்துவதற்காக, Srilankan.com தனிப்பட்ட அம்சமான "சிந்திக்க நேரம்" என்பதை அமுல்படுத்தியதுடன், இது Srilankan.com இல் ஓர் பெயரளவு கட்டணத்திற்கு பயணக்கட்டணத்தினை பூட்டுவதற்கு வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கின்றது. இதற்கும் மேலாக, வரவிருக்கும் முகவர் முன்பதிவு நுழைவாயிலானது பிரயாண முகவர்களுக்கு Srilankan.com உடன் இணைந்து இயங்கலை முகப்பில், கணிசமானளவில் செலவினைக் குறைத்து, விற்பனையினை அதிகரிக்கக்கூடிய ஆற்றலை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மீளாய்வாண்டில், விமான நிறுவனத்தின் மொத்த வருவாயில் இயங்கலை கோளத்தில், பயணிகளின் அனுக்கமானது 15.5% இனை எட்டி வருவாயாக USD 118 மில்லியனை கொண்டுவந்ததுடன் முன்னைய ஆண்டில் இது மொத்த வருவாயின் 14% ஆக காணப்பட்டது. இணையத்தளத்தின் மேம்படுத்தப்பட்ட தோற்றம் மற்றும் உணர்வானது இணையத்தின் புதுப்பித்தல் திட்டத்துடன் மேலும் மேப்படுத்தப்பட்டது. அத்துடன் ஒரே பார்வையில் ஆற்றல்மிக்க விமான டிக்கட்டின் விலையினை பெறுவதற்கான வசதிகளை பயணிகளுக்கு அனுமதிக்கும் செயற்திறன் சந்தைப்படுத்தல் பண்புடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் இயங்கலை வழியாக அவர்களது விரல் நுனியில் உலகினை ஓர் அடி நெருக்கமாக கொண்டுவருவதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தினை பலப்படுவதற்கு எண்ணியுள்ளது.

### துணைச் சேவைகள்

சவால்மிக்க செயற்பாட்டு சூழலுக்கு மத்தியில், மீளாய்வாண்டில் துணைச் சேவைகளிலான வருவாயானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வருடத்திற்கு வருடமாக 41% வளர்ச்சியினை அடைந்தது. இது மிகவும் இலகுவாக வருடாந்த கொள்திறன் வளர்ச்சியினை விஞ்சியதுடன் அத்தகைய பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளுக்கான வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வதில் வெற்றியினை எடுத்துக்காட்டுகின்றது.

உலகளாவிய விமான நிறுவனத் துறையில், அனேகமான விமான நிறுவனங்கள் அவற்றின் வருவாய் உருவாக்கத்தின் ஓர் முக்கிய அங்கமாக துணை வருவாயினை இனங்கண்டுள்ளதுடன் மீளாய்வாண்டில் இது ஒட்டுமொத்த பயணிகள் வருவாயில் 10% இனை தாண்டியுள்ளது. இக்காலப் பகுதியின் விமான நிறுவனத்தின் உந்துவிசைக் கொள்கையாக காணப்பட்டது என்னவெனில், வாடிக்கையாளர்களது தேவைகளை தொடர்ச்சியாக இனங்கண்டு ஓர் பெறுமதி சேர்க்கையாக அத்தகைய துணைச் சேவைகளை வழங்குவதாகும்.

இருக்கை தரமுயர்த்தல், முன்செலுத்தப்பட்ட பொதி, மேலதிக கால்இடவசதியுடைய இருக்கைகள், முன்கூட்டியே ஆசன ஒதுக்கம், விசேட உணவுகளை கட்டளையிடுதல் மற்றும் வாகன வாடகை சேவைகள் போன்ற நடைமுறையிலுள்ள துணைச் சேவைகளுக்கும் அதிகமாக விமான நிறுவனமானது பின்வரும் புதிய சேவைகளை அறிமுகப்படுத்தியது. வணிக வகுப்பு இருக்கைகளுக்கான நேரலை ஏல விலைக்கோரல்கள், மற்றும் விமான நிலையத்தில் வணிக வகுப்பு இருக்கைக்கு தரமுயர்த்துவதற்கான ஆற்றல்மிக்க விலையிடல் வசதிகளை வழங்கல் போன்றவையாகும். மேலும், எதிர்வரும் நிதியாண்டில் பயணிகளது சௌகரியம் மற்றும் வசதிக்காக பல புதிய சிறப்பம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

துறைக்கான துணைச் சேவைகளின் வளர்ச்சியடையும் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வலையமைப்பு முழுவதும் துணைச் சேவைகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இணையத்தள முன்பதிவு பொறி, அலைபேசி பயன்பாடு, அழைப்பு மையம், டிக்கட் அலுவலகங்கள் மற்றும் பிரயாண முகவர்கள் போன்ற அனைத்து வழிமுறைகளினூடாகவும் துணைச் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு வசதியளித்தல் என்பனவாகும்.

மேலதிக திட்டங்கள், விமானத்தினுள் உற்சாகமான மற்றும் புத்தாக்கமான துணைக் கருவிகளை கொள்வனவு செய்தல் மற்றும் வர்த்தக நாம விழிப்புணர்வினை உருவாக்குதல் போன்றவற்றை கிடைக்க வசதியளிப்பதனூடாக விமானத்தினுள்ளான அனுபவத்தின் விரிவாக்கத்தினை உள்ளடக்குகின்றது.

### FlySmiLes அடிக்கடி பறப்பவர் வாடிக்கையாளர் விசுவாசம்

பத்து வருடங்களுக்கும் மேலாக ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் அடிக்கடி பறப்பவர்களுக்கான விசுவாச பங்காளியான FlySmiLes, அதன் அங்கத்துவம், வருவாய் மற்றும் அங்கத்துவ ஈடுபாடு என்பவற்றில் தொடர்ந்தும் திடமாக வளர்ச்சியடைந்தது. இக்காலப் பகுதியின் பல்வேறு சவால்களுக்கு மத்தியில், அங்கத்துவமானது 10% ஆல் வளர்ச்சியடைந்து நிதியாண்டின் இறுதியில் கிட்டத்தட்ட 615,000 அங்கத்தவர்களை எட்டியது.

இத்திட்டமானது ஒட்டுமொத்த வருவாயில் 8% வளர்ச்சியினை அனுபவித்ததுடன் எமது அங்கத்தவர்கள் அவர்களது மைல்களை விமானத்தில், மிகைப் பயணப்பொதி, ஹோட்டல்களில் தங்குதல், தீர்வையற்ற பொருட் கொள்வனவு, உணவருந்துதல் மற்றும் வாழ்க்கைமுறை அனுபவங்கள் போன்ற வசதிகளுக்காக மீட்டார்கள்.

FlySmiLes, குழுவானது இத்திட்டத்திற்கு ஓர் புதுமையான சேர்க்கையுடன் நிதியாண்டினை ஆரம்பித்தது. இது FlySmiLes, அங்கத்தவராக ஒருவர் இணைந்தவுடன் “பிரயாண அனுமதிச்சீட்டு” இனை அங்கத்துவ தளத்திலுள்ள அனைவருக்கும் பல்வேறு கவர்ச்சிகரமான கழிவுகளை பல்வேறு பங்காளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கும். “பிரயாண அனுமதிச்சீட்டு” இன் நோக்கமானது உள்வரும் ஓர் பயணிக்கு இலங்கையில் அவர் தங்கியிருக்கும்போது பல்வேறு தொடு புள்ளிகளில் ஓர் முழுமையான பிரயாண அனுபவத்தினை அவருக்கு வழங்குவதாகும்.

மேலும், FlySmiLes, குழுவானது அனைத்து அங்கத்தவர் தொடர்பாடல்களை மீளாய்வு செய்தது, இவற்றை பயனாளர் தோழமை மற்றும் கவர்ச்சிகரமானவையாக மேம்படுத்துதல், மற்றும் அங்கத்தவர் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக மிகவும் தனிப்பட்ட விதமான அறிமுகப்படுத்தலை மேற்கொள்ளுதல் என்பவையாகும்.

தொழில்நுட்ப மேம்படுத்தல்களுடன் ஒத்ததாக பயணிகளது வசதிகளை மேம்படுத்துதல், மொபைல் பிரயோகமானது FlySmiLes கூட்டு வர்த்தக நாம கடனட்டை அங்கத்தவர்கள் ஓய்விட பயன்பாட்டு செயல்முறை அனைத்தையும் தன்னியக்கமயமாக்குவதற்காக தரமுயர்த்தப்பட்டது. இது தாள் அச்சிடுவதனை அகற்றி ஓய்வு பெறல் வசதியின் பயன்பாட்டினை அங்கத்தவர் ஒருவரின் விரல் நுனியில் கொண்டு வரும் வசதியினை வழங்கியது. இதற்கும் மேலாக, விமானநிலைய சேவைகள் முகப்பினை மூடுவதனூடாக செலவினங்கள் குறைக்கப்பட்டதுடன் இதே சேவைகள் மொபைல் பிரயோகம் மற்றும் 24 X 7 அழைப்பு மையங்களின் மூலம் வழங்கப்பட்டது.

அதே திசையிலான மேலும் ஓர் படியாக, FlySmiLes காசு ப்ளஸ் மைல் நகர்வுகோல் சிறப்பியல்பு வசதியினை முன்னெடுத்தது. இவ்வசதியானது அங்கத்தவர்களுக்கு ஆற்றல்மிக்க மீட்டல்களுக்கு அனுமதியளித்தல் மூலம் அவர்களுக்கு உழைத்த மைல்களை மீட்பதற்கு ஆகக்கூடிய நெகிழ்வுத்தன்மை என்பவற்றுக்கு வழிசமைத்தது. வெற்றிகரமான ஒத்திகைகளின் பின்னர், குழுவானது இந்த வசதியினை இயக்கச் சூழலில் Srilankan.com இணையத்தளத்தின் முன்பதிவு பாய்ச்சலினுள் விரிவுபடுத்தும் செயல்முறையில் உள்ளது.

FlySmiLes தடையற்ற, வசதியான பெறுமதிமிக்க விசுவாச அனுபவத்தினை எமது பயணிகளுக்கு வழங்குவதில் பாரிய மகிழ்ச்சியினை அடைவதுடன் தொடர்ச்சியாக இத்திட்டத்திற்கு மேம்படுத்தல்கள் இடம்பெற வேண்டுமென நம்புகின்றது. இத்திட்டத்தின் ஆற்றல்மிக்க தோற்றத்தினை மேம்படுத்துவதற்காக பல திட்டங்கள் தொடராக தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக, FlySmiLes, குழுவானது மைல்களை திரட்டுவதற்கும் மீட்பதற்கும் பங்காளிகளின் வரம்பினையும் பங்காளிகளது எண்ணிக்கையினையும் விரிவாக்குவதற்கு முயற்சிக்கின்றது. நாம் FlySmiLes இனை இன்னுமோர் விசுவாசத் திட்டத்திற்கு அப்பால் கற்பனை செய்வதுடன், எமது விசுவாசமான அங்கத்தவர்கள் FlySmiLes இனை அவர்களது வாழ்க்கை முறையாக தழுவிக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றது.

### உலகளாவிய தொடர்பு மையம்

உலகளாவிய தொடர்பு மையமானது எமது உலகளாவிய வாடிக்கையாளர் தளத்திற்கு கடிகார சுற்று முழுவதும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் மன்டரின் ஆகிய பல்வேறு மொழிகளில் உறுதுணையினை வழங்குகின்றது. தொடர்பு மையத்தினூடாக உலகளாவிய வாடிக்கையாளர்கள் மற்றும் FlySmiLes அங்கத்தவர்கள், முற்பதிவு, டிக்கட் வாங்குதல், திகதி மாற்றங்கள், பிரயாணம் தொடர்பான விசாரணைகள், துணை மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடங்களான பல்வேறு சேவைகளை ஒரு தொடு புள்ளியின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாயுள்ளது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

உலகளாவிய தொடர்பு மையமானது நாட்டில் ஏற்பட்ட எதிர்பாரா நெருக்கடியின்போது கடிகார சுற்று முழுவதும் கடமையாற்றியதுடன் மிகவும் தீவிரமாக திட்டங்களை மீள்ஒழுங்கு செய்யவேண்டிய தேவையுள்ள பயணிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 நோய் பரவலைத் தொடர்ந்து உள்வரும் அழைப்பு தொகைகள் 100% ற்கும் மேலாக அதிகரித்ததுடன் மாற்றுவழி பிரயாண ஒழுங்குகளை வழங்குவதன் மூலம் அத்தகைய வாடிக்கையாளர்களை கையாள்வதற்கு ஆக்கபூர்வமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

12 நாடுகளிலிருந்து அவர்களது உள்ளூர் இலக்கங்களினூடாக தொடர்பு மையத்தினை எட்டுவதற்கான வசதி வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு உள்ளது. இது ஏனைய இயங்கலை பயண இலக்குகளுக்கும் நீடிக்கப்படும்.

விமான நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட எண்மின் நிலைப்படுத்தல் முன்னெடுப்புகளுக்கு ஒத்தாற்போல், தொடர்பு மையமானது தற்போது விமான நிறுவனத்தின் சமூக ஊடகங்களான முகப்புத்தகம், கீச்சகம், நேரடிஅரட்டை என்பவற்றை கையாள்வதற்கு ஆயத்தமாயுள்ளது. ஓர் பிரத்தியேகமான குழுவொன்று சமூக ஊடக விசாரணைகள், முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டம் என்பவற்றை கடிகார சுற்று முழுவதும் முகாமைப்படுத்துவதற்கும் பதலளிப்பதற்காகவும் ஆயத்த நிலையிலுள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் தடையற்ற அனுபவத்தினை வழங்குவதற்கும் மற்றும் வாடிக்கையாளரது திருப்தியினை உறுதிசெய்வதற்கும் மத்திய தகவல் மையமாக உலகளாவிய தொடர்பு மையம் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இதன் சேவைகளை ஏனைய இணையத்தள வழி பாதைகளுக்கும் விரிவாக்குவதற்கான திட்டங்கள் உள்ளன.

### ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ்

அதன் விரிவாக்க மூலோபாயத்தில் ஓர் முக்கியமான மைல்கல்லினை அடைவதற்காக, சர்வதேச சந்தையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுப்பயண இயக்குனராகக் கடமையாற்றுவதற்கு சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ஜூலை 2019 இல் ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் உரிமத்தினை பெற்றுக்கொண்டது. இவ்வுரிமமானது ஸ்ரீலங்கன் ஹொலிடேசுக்கு வழங்குநர்களுடன் நேரடியாக கடமையாற்றுவதற்கு கதவுகளை திறந்ததுடன் பயணிகளின் நலன்கருதி கவர்ச்சிகரமான விலையினையும் இலங்கையின் சிறப்பையும் வழங்கக்கூடியதாயிருக்கும். சொகுசு நாட்டுப்புற மாளிகைகள், கோல்ஃப் மைதானம், முக்குளித்தல், தேயிலை தடங்கள், ஆயுர்வேத மருந்துகள், வனவிலங்கு பகிரலைகள் மற்றும் இயற்கையில் ஈடுபடல் போன்ற அனுபவங்களைப் பெறலாம்.

வெளிச்செல்லல் செயற்பாடுகளின் ஓர் பகுதியாக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் சந்தையினை நகரப்புற எல்லைகள் மற்றும் புறநகர்களூடாக விரிவாக்குவதற்காக ஓர் வெளிக்கள மூலோபாயத்தினை ஒன்றிணைத்தது. இது எண்மின் பணப்பை குறியீடுகள் மற்றும் இலங்கையிலுள்ள வங்கிகளூடான இந்த சேவைகளை நீடிப்பதன் மூலம் விரிவாக்கலாம். எமது வணிக நாமமானது நன்கு அறியப்பட்ட காதல் வெளியேறுதல்கள், குடும்ப விடுமுறை ஒப்பந்தங்கள், சுற்றுலா தொகுப்புகள் என்பவற்றுக்கும் மேலாக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் வெளித்தோன்றும் சந்தையினை அணுகுவதற்காக ஆர்வம் அடிப்படையிலான தொகுப்புகளை உருவாக்குவதற்கு இயலுமையானதுடன் மிகவும் தனிப்பட்ட சேவைகளையும் வழங்கியது.

உலகளாவிய ரீதியில் எண்மின் நிலைபற்றி தெரிந்துள்ள பிரயாணிகளை எட்டுவதற்காக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் அதன் இணையத்தளத்தினை பின்வருவனவற்றை உள்ளடக்கி புதுப்பித்தது. அதிக ஹோட்டல்கள், சுற்றுலாக்கள், தனித்துவப்படுத்தப்பட்ட தொகுப்புகள், நேரடியான தேடல் வடிப்பான்கள், வாடிக்கையாளர் விமர்சனங்கள், நெகிழ்ச்சியுடைய கொடுப்பனவு தெரிவுரிமைகள் மற்றும் முன்பதிவு ஜன்னல்கள் போன்றவற்றுடன் பரவலான அவையினரை எட்டக்கூடிய ஓர் சந்தைப்படுத்தல் தளமாகவும் கொண்டுவருவதாகும். இவ்வனைத்து சிறப்பம்சங்களும் அடுத்த நிதியாண்டில் உலகம் பூராவுமான விடுமுறை தொகுப்புக்களை உள்ளடக்கியதாக கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

வணிகச் சுற்றுலாவினை பலப்படுத்துவதற்காக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் கூட்டங்கள், ஊக்கமூட்டல்கள், உச்சிமாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (கூ.ஊ.உ.க.) உடன் தொடர்புடைய உள்வரும் செயற்பாடுகள், அதன் சிறகுகளை வெளிவாரி கூ.ஊ.உ.க. நிகழ்வுகளுக்கு பரப்புதல் மற்றும் வழங்குநர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உடன் கூ.ஊ.உ.க. போக்குவரத்தினை இலங்கையினுள்ளும் வெளியேயும் ஊக்குவிப்பதற்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஸ்ரீலங்கள் ஹொலிடேஸ், ஏப்ரல் 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் சுற்றுலா பயணிகளின் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்பவதிலும் சுற்றுலாத்துறைக்கு உயிரூட்டுவதிலும் முக்கிய பங்கு வகித்தது. இலங்கை சுற்றுலா ஊக்குவித்தல் பணியகம் மற்றும் இலங்கை உள்வரும் சுற்றுலா இயக்குபவர்கள் சங்கம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் தலைமைத்துவத்தில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் ஓர் விற்பனை பிரச்சாரத்தினை செயற்படுத்தி கணிசமானளவு சுற்றுலாப் பயணிகளை உருவாக்கக்கூடியதாயிருந்தது.

### சந்தைப்படுத்தல்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மீளாய்வாண்டில் ஓர் பரவலான பிரச்சாரங்கள் மற்றும் வினையூக்கங்களை அதன் வணிக நாமத்தினை அதன் உலகளாவிய வலையமைப்பு மற்றும் இலங்கையின் தாய்நாட்டு தளத்திலும் நிறுவுவதற்காக ஆரம்பித்தது.

விமான நிறுவனத்தின் இடைவிடாத மற்றும் மூலோபாய வணிக நாமக் கட்டியெழுப்பும் முயற்சிகள் உலகளாவிய மேடைகளில் அங்கீகரிக்கப்பட்டதுடன் அனைத்து கூட்டு முயற்சிகளும் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களாலும் பொதுமக்களாலும் வரவேற்கப்பட்டது.

தேசிய வானூர்தியின் மெல்பேர்ன் பயண இலக்கு அங்குரார்ப்பணத்திற்கான “இரண்டு நகரங்கள், ஒரு ஆன்மா” எனும் தலைப்பிலான பிரச்சாரமானது பசிபிக் ஆசிய பிரயாணச் சங்கத்தின் 2019 தங்க விருது வழங்கல் விழாவில் “சந்தைப்படுத்தல் வானூர்தி” க்கு தங்க விருது வழங்கப்பட்டது.

இருப்பிட முள் கருத்தாக்கத்தின் பயன்பாட்டினூடாக, மெல்பேர்ன் மற்றும் கொழும்பு எனும் இரண்டு நகரங்களுக்கிடையேயான தடையற்ற தினசரி இணைப்பில் அது அழுத்தம் செலுத்தியதுடன் விமான நிறுவனத்தின் ஏனைய வலையமைப்பிற்கு அதிலிருந்தான இலகுவான இணைப்பினில் அழுத்தம் கொடுத்தது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் வணிக நாம காணொளிகளான, “ எதிர்பார இன்பப் பெறுபேறு மிக அருகாமையில்” மற்றும் “சொர்க்கத்திற்கான வாழ்த்துப்பா” என்பவை உலகளாவிய அங்கீகாரத்தினை வென்றன. 17 மற்றும் 27 பெப்ரவரி 2020 இல் முறையே வெளியிடப்பட்ட இரண்டு காணொளிகளும் இயங்கலையில் நல்ல வரவேற்பினை பெற்றதுடன் இதனை எழுதும்போது 20 மில்லியனுக்கும் அதிகமானோர் இதனைப் பார்வையிட்டுள்ளார்கள். இவ்விரண்டும் பல வர்த்தக கண்காட்சிகள், விருது மேடைகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளில் சாத்தியமான வரவேற்பினை பெற்றன.

இரண்டு காணொளிகளும் விமர்சன ரீதியில் நல்ல வரவேற்பினைப் பெற்றதுடன், பேர்லினில் இடம்பெற்ற கோல்டன் சிட்டி தங்க விருதுகள் 2020 இல் “சர்வதேச விமான நிறுவனம்” பிரிவில் முதல் நட்சத்திர விருதுகளை பெற்றன. முக்கியமாக, “எதிர்பார இன்பப் பெறுபேறு மிக அருகாமையில்” சமூக ஊடகங்களில் இரண்டு நாட்களில் 11 மணித்தியாலங்கள் மற்றும் 5 நிமிடங்களில் 1 மில்லியன் பார்வைகளைப் பெற்று விளாசிப் பரவியது˙ இது ஸ்ரீலங்கனை இவ்வாறு இடம்பெற்ற இலங்கையின் முதலாவது வணிக நாமமாக காட்டியதுடன், தற்போது இது மாத்திரமே இந்த நிலையினை அடைந்துள்ளது. “சொர்க்கத்திற்கான வாழ்த்துப்பா” வும் திறன்பட செயற்பட்டு 14 நாட்களில் 35 மில்லியனுக்கும் அதிகமான மக்களை எட்டியது. இந்த காணொளிகளின் பிரதான நோக்கம் என்னவெனில் வணிக நாம புலப்படுந்தன்மை மற்றும் அதன் இருப்பினை மேம்படுத்துவதாகும்.




தேசிய வானூர்தி என்ற வகையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகத் தரத்திலான சேவையுடன் இலங்கையின் பண்புகளை ஒன்றிணைக்கின்றது. இது திடமான இலங்கையின் வேர்களை ஓர் உலகளாவிய வணிக நாமமாக அதன் பொதுமதிப்பினை நிலைநாட்டியுள்ளது. அத்துடன் ஸ்ரீலங்கன் இந்த செய்தியினை அதன் அனைத்து தொடர்பாடல்களிலும் சமர்ப்பிப்பதற்கு முயற்சிக்கின்றது.

அதன் பிரசன்னத்தை அவுஸ்திரேலியாவில் நிலைநாட்டும் நோக்கத்துடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2019 இல் இடம்பெற்ற வரலாற்று சிறப்புமிக்க மெல்போர்ன் மரதன் திருவிழாவில் அரை மரதன் நிகழ்விற்கு தலைப்பு அனுசரணையதளராக காணப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாக, இது அவுஸ்திரேலியாவின் முன்னணி மரதன் நிகழ்வாகும். இதற்கும் மேலாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற மற்றுமோர் விளையாட்டுத்துறை நிகழ்வான, த கிரேட் ஓசியன் ரோட் ரனிங் திருவிழா 2019 இற்கு உயர்தர பிரத்தியேக விமான நிறுவன அனுசரணையாளராக காணப்பட்டது.

மேலும், விமான நிறுவனத்தின் பின்வரும் கூட்டு முன்னெடுப்புகளூடாக இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் சினமன் ஹோட்டல்ஸ் அன்ட் ரிசோட்ஸ் போன்ற ஆதிக்கம் செலுத்தும் வணிக நாமங்களிடையே கணிசமானளவு வணிக நாம புலன் மற்றும் கவனிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தது. “சோ ஸ்ரீலங்கா ப்ரோ 2019” ஓர் உலக கடல் சருக்கல் இணைகுழு தகுதி தொடர் 3000 போட்டி மற்றும் “சினமன் வியுச்சர் ஒவ் டூவரிசம்” என்பனவாகும்.

“எதிர்பார இன்பப் பெறுபேறு மிக அருகாமையில்” ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஒற்றை மிகப்பெரிய சந்தையான இந்தியாவை முன்னெப்போதுமில்லாதவாறு இலங்கையை அனுபவிக்குமாறு வரவேற்றது. இது இலங்கையின் முன்னணி பிரமுகர்களான ஜெக்கலீன் வெர்னேன்டஸ் மற்றும் குமார் சங்ககார ஆகியோரை பயன்படுத்தி இலங்கையின் காலவரம்பற்ற வனப்பினை எடுத்துக்காட்டியது.

“சொர்க்கத்திற்கான வாழ்த்துப்பா” இலங்கையின் இயற்கை எழில், அதன் மக்கள் மற்றும் கலாச்சாரத்தினை சிறைப்படுத்தியது. இந்தக் காணொளியானது இலங்கையின் நட்சத்திர உருவங்களான ஜெக்கலீன் வெர்னேன்டஸ், குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன, பீட்டர் குருவிட்ட, மற்றும் பாத்திய மற்றும் சந்துஷ் ஆகியோரை காண்பித்தது. இவர்கள் அனைவரும் இணைந்து இலங்கையின் புதையல்களை காண்பித்ததுடன், உலகிற்கு இலங்கையின் கதையினை எடுத்துச்செல்லும் தூதராக ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை நிலைப்படுத்தியது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

**ஸ்ரீலங்கன் சரக்கு**

2019/20 நிதியாண்டானது 2009 இலிருந்து விமானவழி சரக்கனுப்பல் கேள்வியில் மிகவும் குறைவான காலமாக கருதப்பட்டது. சரக்கு தொன் கிலோமீற்றர்கள் வருடத்திற்கு வருடம் 3.3%ஆல் வீழ்ச்சியடைந்ததுடன், கிடைக்கத்தக்க சரக்கு கொள்திறனானது சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தினால் அறிக்கையிடப்பட்டவாறு 2019 இல் 2.1% ஆக உயர்ந்தது. முக்கிய சந்தைகளான சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகியவற்றுக்கிடையிலான வர்த்தக பதற்றங்கள் தணிக்கப்பட்ட பலவீனமான உலகளாவிய வர்த்தக வளர்ச்சியான 0.9% க்கு பிரதான காரணியாகக் காணப்பட்டது. உற்பத்தி செறிவான பொருளாதாரங்களின் மந்தமான மொத்த உள்ளூர் உற்பத்தியின் வளர்ச்சி, மென்மையான வணிக மற்றும் நுகர்வோர் நம்பகத்தன்மை என்பவற்றால் 2018 உடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி கட்டளைகள் வீழ்ச்சியடைந்தன.






ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 தொற்று என்பவற்றால் விமான நிறுவனத்தின் வலையமைப்பிலான மோசமான பாதிப்பானது குழுமத்தின் செயற்பாட்டு சரக்கு கொள்திறனில் வருடத்திற்கு வருடம் 9% வீழ்ச்சியினை விளைவித்ததுடன் இது 12 மில்லியன் கிலோ கிராம் வீழ்ச்சியினை பிரதிபலித்தது. எவ்வாறாயினும், கோவிட்-19 நோய் பரவலுடன் உலகளாவிய பயணிகள் செயற்பாடுகள் சுருங்கியதுடன், ஸ்ரீலங்கன் சரக்கு இச் சவாலினை ஓர் வாய்ப்பாக மாற்றக்கூடியதாயிருந்தது. இது விமான நிறுவனத்தின் பயணிகள் விமானங்களை ஒப்பந்த வாடகைக்கு மற்றும் பிரத்தியேகமான சரக்கு சேவைகளை செயற்படுத்துவதன் மூலம் அடையப்பட்டது. இந்த விசேட சேவைகள் உலகளாவிய ரீதியில் சங்காய், மாலே, டுபாய் மற்றும் ரியாட் உள்ளடங்களான பல பயண இலக்குகளுக்கு செயற்படுத்தப்பட்டதுடன் வாடிக்கையாளர்கள், பழுதடையக்கூடிய மற்றும் உற்பத்தி மூலப் பொருட்கள் என்பவற்றின் முக்கிய இணைப்பாக ஓர் மேலதிக கொள்திறனான 282 தொன்களை மார்ச் 2020 இன் இறுதி அரைவாசியில் ஏற்றிச்சென்றது.

தொற்றின் காரணமாக வழங்கப்பட்ட சரக்குக்கான வாய்ப்புக்கள் ஓர் குறைபயன்பாட்டுடைய ஏ330 விமானத்தினை குறுங்கால பிரத்தியேக சரக்கு செயற்பாட்டிற்காக முகாமைத்துவம் மாற்றுவதற்கான தீர்மானத்தினை எடுத்தது. இங்கு பயணிகள் இருக்கைகள் அகற்றப்பட்டு, விமானத்தின் உற்பத்தியாளர், ஐரோப்பிய யூனியன் விமானச் சேவைகள் பாதுகாப்பு முகவர் மற்றும் இலங்கையின் சிவில் வான்பயணவியல் அதிகாரசபை என்பவற்றால் வழங்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் சான்றிதழ்களின் கீழ் பிரதான மேற்தளம் சரக்கேற்றுவதற்காக அனுமதிக்கப்பட்டது. 100% உள்ளகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இம்மாற்றமானது அதிகரித்த கொள்திறனான விமானமொன்றுக்கு 170 கியூபிக் மீற்றருக்கு வசதியளித்ததுடன், ஆகக்கூடிய தாங்குசுமையாக 45 தொன்களை ஏற்றிச்செல்லக்கூடியதாகவும் வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட இணைப்புத் தெரிவுரிமைகளை வழங்கியது.

நிதியாண்டு முழுவதிலும் 9% கொள்திறன் குறைப்பு உள்ளடங்களாக, பல பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும், ஸ்ரீலங்கன் சரக்கு விற்பனைகள் ஓர் வருவாயாக USD 88.5 மில்லியனை அடைந்ததுடன் இது வருடத்திற்கு வருடம் 7% வீழ்ச்சியினை மாத்திரமே பிரதிபலித்தது. வீழ்ச்சியடையும் சந்தை நிலைமைகள் காணப்பட்டபோதிலும் கடுமையான விளைவினால் வழிநடத்தப்பட்ட மூலோபாயங்கள் வருடம் முழுவதும் தொடரப்பட்டதன் நிமித்தம் முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது புள்ளி விற்பனை விளைவானது USD 1.06 ஆக அளவிடப்பட்டதுடன் இது 1% வீழ்ச்சியாகும். இக்காலப்பகுதிக்கான மொத்த சரக்கு ஏற்றலானது 113,971 மெட்ரிக் தொன்னாக காணப்பட்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் 2019/20 நிதியாண்டின் மொத்த ஆகாயப் போக்குவரத்து வருவாயில் ஸ்ரீலங்கன் சரக்கு விற்பனைகள் மற்றும் அஞ்சல் பொதிகள் 10% க்கு கணக்கீடு செய்யப்பட்டதுடன் இப்பிரிவானது மொத்த ஆகாயப் போக்குவரத்து வருவாய்க்கு அதன் பங்களிப்பினை தொடர்ச்சியாக பராமரித்தது.

அதிகளவு பயணிகளது ஏற்றத்திற்கு மத்தியில் சென்னை, பெங்களூர் மற்றும் மும்பாய் ஆகிய வழிகளிலான சரக்கு கொள்திறனின் வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டிலிருந்து இந்திய துணைக்கண்ட பிராந்தியமானது ஓர் வருவாயாக USD 42 மில்லியனை அடைந்து 3% வீழ்ச்சியினை பிரதிபலித்தது. இதிலிருந்த வருவாய் இழப்பானது இலங்கையிலிருந்தான 5% அதிகரித்த

சரக்கு விற்பனையினால் ஈடுசெய்யப்பட்டது. சரக்கு வருவாயானது USD 23 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது நிலையத்திற்கு பராமரிக்கப்பட்ட விளைவு இயக்கத்திலிருந்தான மூலோபாயத்திலிருந்து எழுந்ததுடன் வருடத்திற்கு வருடம் 19% வளர்ச்சிக்கு வசதியளித்தது. சீனா USD 13 மில்லியனுக்கு கணக்கீடு செய்யப்பட்டதுடன் இது வருடத்தலிருந்து வருடத்திற்கான செயற்திறனில் 35% வீழ்ச்சியாகும். இதற்கு காரணமாக இக்காலப்பகுதியில் சரக்கு கொள்திறனில் இயக்கப்பட்ட 39% வீழ்ச்சி காணப்பட்டது. மத்திய கிழக்கு சந்தைகளிலிருந்து உருவாக்கிய வருவாயானது USD 8 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இதற்கு 50% பங்களிப்பு துபாயிலிருந்து வந்தது. விசேடமாக மாலைதீவுக்கான பெரும்பாலும் பழுதடையக்கூடிய பொருட்களின் ஏற்றுமதியினால் வருவாய் உருவாக்கப்பட்டது. ஐரோப்பா ஓர் வருவாயாக USD 6 மில்லியனை பதிவுசெய்தது. இது உயர்ந்த விளைவுடைய அசைவுகளை அவுஸ்திரேலியாவுக்கு இணைக்கும் விநியோக மூலோபாயங்களை தொடர்வதனூடாக விளைவில் 2% அதிகரிப்பினை அடையக்கூடியதாயிருந்தது.

பங்காளி விமான நிறுவனங்களுடனான விசேட விகிதப்படியான உடன்படிக்கைகள் (வி.வி.உ.) மற்றும் பண்டமாற்று வணிக உடன்படிக்கைகள் இலங்கையின் சரக்கு வாடிக்கையாளர்களுக்கு இணைப்புத் தெரிவுரிமைகளை மேம்படுத்தியதுடன், நிதியாண்டினுள் ஓர் மேம்படுத்தப்பட்ட 138 மூலஸ்தானங்களிலிருந்து 360 பிரயாண இலக்குகளுக்கு சரக்கு அசைவுகளை வெற்றிகரமாக மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. வி.வி.உ. கள் வருவாய் திறனையும் திசைச் சரக்கு பிரயாண வழிகளையும் மேம்படுத்தியது. மாலைதீவு மற்றும் மத்திய கிழக்கு என்பவற்றிலிருந்து சீனா மற்றும் அமெரிக்கா போக்குவரத்தினை இலங்கையின் வலையமைப்பு பிரயாண இலக்குகளுடன் இணைப்பதன் மூலம் இது எட்டப்பட்டது.

சரக்கு தரைக் கையாளுதல் செயற்பாடானது 249,000 மெட்ரிக் தொன்களை கையாண்டதுடன் (ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 தொற்று ஆகியவற்றுக்கு மத்தியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வாடிக்கையாளர் விமான நிறுவனங்களது செயற்பாடுகள் ரத்துசெய்யப்பட்டதன் நிமித்தம் வருடத்திலிருந்து வருடம் 9% வீழ்ச்சி) நிதியாண்டு முழுவதும் 99.95% கையாளுதல் நம்பகத்தன்மையினை பராமரித்தது. சரக்கு செயற்பாடுகளிலிருந்தான மொத்த வருவாய் பங்களிப்பானது நிதியாண்டில் USD 25.6 மில்லியனாக காணப்பட்டது. சரக்குத் துறையில் எண்மின் நிலை இட்டுக்கட்டலுக்கு ஒத்தாற்போல் செயற்திறனிலான முனைப்புடன் சரக்குச் செயற்பாடுகள் இலத்திரணியல் வான் வழிப் பட்டியல் அசைவுகளை ஊக்கப்படுத்தியதுடன், இது கொழும்புச் சந்தையில் 65% ஊடுருவலை விளைவித்ததுடன் 2021 அளவில் 100% ஊடுருவலை தொடருவோம்.

2019/20 விமான நிறுவனத்திற்கு பல சவால்களை கொண்டு வந்ததுடன், சரக்குத் துறையானது மற்றும் மிகவும் சமீபத்தில், உலகளாவிய வான்வழிப் பயணத் துறையானது விமான நிறுவனத்திற்கான வணிக மாதிரிக்கு தொடர்ந்தும் சவாலாக அமையும். மின் வணிக பிரிவானது வரவிருக்கும் நிதியாண்டில் தொடர்ந்தும் ஓர் இலாபகரமான பிரிவாக இருக்கும். இது நோய் பரவலின் பின்னரான இயங்கலை மூலமான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் உலகின் சமூக விருப்பத்தேர்வுகளினால் பயனடையும். வளர்ச்சியடையும் இடப்பெயர்வு துறையானது சேவை வழங்குநர்களுக்கு தொடர்ந்தும் சவால் விடுப்பதுடன் வாடிக்கையாளர்களது எதிர்பார்ப்பினை சந்திப்பதற்கான ஆற்றல்மிக்க மூலோபாயங்கள் உலகளாவிய வான் பயணவியல் வரலாற்றில் ஏதேனும் முன்னைய காலத்தைப் போலல்லாது மிகைப்படுத்தப்பட்டுள்ளன.

## விமானப்பயண செயற்பாடுகள்

### பாதுகாப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் செயற்பாட்டு சூழலின் தலையாய கலாச்சாரமாக உறுதியான அழுத்தத்துடன் பாதுகாப்பு காணப்படுகின்றது. அனைவருக்கும் ஓர் பாதுகாப்பான சூழலை பராமரிப்பதற்கு அவசியமான தேவைப்படும் திறன்களில் அனைத்து செயற்பாட்டு பங்காளிகளையும் நடைமுறை மற்றும் புதுப்பிக்கப்பட்டவாறு காணப்படுவதற்கு ஓர் நெருங்கிய கண்காணிப்பு செயல்முறையினூடாக கட்டாய மற்றும் காலாகாலம் பயிற்றுவித்தல் நடாத்தப்படுகின்றது. கோவிட்-19 தொற்றின் பின்னணியில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் வலையமைப்பிற்கு அப்பால் புதிய நாடுகளுக்கும் புதிய பயண இலக்குகளுக்கும் தற்காலிக திருப்பி அனுப்புதல் விமானப் பயணங்களை செயற்படுத்தியது. இங்கு பயணிகள், ஆளணியினர் மற்றும் அதேபோன்று சொத்துக்களதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் அனைத்து பங்காளிகளுடனும் இணைந்து இணக்கப்பாடு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் செயல்முறையினூடாக விரிவான இடர்நேர்கை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### நேரம் தவறாத செயற்திறன்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வலையமைப்பு முழுவதும் ஓர் நிலைபேறுள்ள நேரம் தவறாத செயற்திறன் தரப்படுத்தலை வைத்திருந்தது. அனைத்து விமான அசைவுகளும் 15 நிமிடத்திற்குள் வெளியேறலில் 85% உம் உள்வருகையில் 86% உம் சராசரியாக பராமரித்ததுடன், இது துறைசார் நியமத்தில், ஓர் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

### விமானங்கள் செயற்பாட்டு கட்டுப்பாட்டு மையம் - வி.செ.க.மை.

விமானங்கள் செயற்பாட்டு கட்டுப்பாட்டு மையம் (வி.செ.க.மை.) பிரசுரிக்கப்பட்ட அட்டவணையினை முகாமைப்படுத்துவதற்கான முன்னோடியாகவும் தொடர்பு கொள்ளல் மத்திய இடமாகவும் கடமையாற்றுகின்றது. இச்செயல்முறையில், எதிர்பாராத சீர்குலைக்கும் நிகழ்வுகளின் முகாமைப்படுத்தலானது அனைத்து பங்காளிகளுடனும் தொடர்புகொண்டு முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வி.செ.க.மை இனால் ஆற்றப்படும் அத்தியாவசிய கடமையாகும். இதன்போது பயணிகளுக்கு மற்றும் செயற்பாட்டிற்கான தாக்கம் மற்றும் அசௌகரியத்தினை ஆகக்குறைவாக வைத்திருப்பதனை உறுதிசெய்தல் வேண்டும். விசேடமாக தற்போதைய தொற்றின் பின்னணியில், ஓர் செலவு குறைந்த விதத்தில் வளங்கள் மற்றும் ஏற்பாட்டியலை உயர்ந்த மட்டத்தில் முகாமைப்படுத்துவதில் விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவை செயற்பாட்டு ஆற்றல்கள் எவ்வித தோற்றம் அல்லது உருவத்திலும் தடையேற்படுத்தாது காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்டன. வி.செ.க.மை 24 ஓ 7 செலாற்றும் ஓர் கட்டளை மையமாகும். இது பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்தும் மற்றும் ஏனைய வலையமைப்பிலிருந்தும் ஒவ்வொரு முறையும் விமானம் புறப்படுவதற்கு முன்னர் வான்பயணவியல் மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து உலகளாவிய நிகழ்வுகளிலும் நெருக்கமான கண்காணிப்பினை பேணுகின்றது.

### விமானம் அனுப்புதல் மையம் - வி.அ.மை.

சிறந்த சாதகமான வான்வழிகளில் விமானப்பயணத்தினை திட்டமிடல், பிரயாணத்திற்கான எரிபொருள் பாவனை மற்றும் ஓர் விமானத்தின் பாரம் என்பவற்றை கவனத்திலெடுத்து ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க வருவாய் சுமையினை ( செலுத்தல் சுமை) கணிப்பிடுதல் வி.அ.மை. இன் முதன்மை கடமையாகும். ஓர் விமானத்தின் பாதுகாப்பு மற்றும் செயற்திறனான செயற்பாட்டிற்கு வான்வழி அனுமதியினை பெறும்போது உள்ளூர் மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்கு கடுமையாக பின்பற்றுவதற்கு இச்செயற்பாடுகள் கட்டுப்பட்டதாகும். உலகளாவிய எரிபொருள் விலைகளை காலத்திற்கேற்ப நெருக்கமாக கண்காணித்தல் வி.அ.மை. இன் மற்றுமோர் கடமையாகும். இது கிரயத்திலான நலனைப் பெறுவதற்காகும். இதற்காக மலிவான இடங்களிலிருந்து எரிபொருளானது ஏற்றப்படுகின்றது. இது எரிபொருள் கிரயத்தினை சேமிப்பதற்காக நெருக்கமான கூர்ந்தாய்வின் கீழ் ‘எண்ணெய் ஏற்றல்’ என்ற செயல்முறையினை மேற்கொள்ளும் செயற்பாடாகும். வி.அ.மை. வெளிநாட்டு விமான நிறுவனங்களுக்கும் அதன்

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

சேவைகளை வழங்குவதுடன் ஓர் சேவை வழங்குநராக துணை வருமானங்களை உழைத்துள்ளது. இச்சேவையானது கோவிட்-19 தொற்றின் காரணமாக மார்ச் 2020 இல் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.

ஓர் விமான நிறுவனத்தின் செயற்பாட்டு செலவினத்தின் பாரிய பங்களிப்பாக எரிபொருள் காணப்படுவதனால், எரிபொருள் பயன்பாட்டில் ஓர் கடுமையான கண்காணிப்பு பொறிமுறையானது வி.அ.மை. இன் கீழ் செயற்படுகின்றது. இச்செயல்முறையானது விமானங்களுக்கான உயர்ந்த எரிபொருள் பாவனையினை இயலுமையாக்குவதுடன், மேலதிக எரிபொருள் விரயமாவதைக் குறைத்தல், மற்றும் எரிபொருள் பாவனையில் சிறந்த நடைமுறைகளிலான விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பவற்றுக்கு வசதியளிக்கின்றது. இதன் விளைவாக, பாரக் கணிப்பீட்டு செயல்முறையானது, எரிபொருள் பயன்பாட்டினை தீர்மானிக்கும் காரணி, எதிர்பார்க்கும் விளைவினை அடைவதற்காக நெருக்கமாக சிந்தித்து திட்டமிடப்படுகின்றது. இதுவும், விமானிகளின் திறன்மிக்க விமானம் ஓட்டல் நுட்பங்களும் சேர்ந்து உச்ச செயற்திறன் நியமத்தினை அடைவதற்கு இட்டுச்செல்லும் கடமைகளும் பண்புகளும் ஆகும்.

### விமானத்தினுள்ளான சேவைகள்

ஸ்ரீலங்கன் வணிக நாமத்தின் பெறுமதியினை உயர்த்துவதனை உறுதிசெய்வதற்காக, விமானத்தினுள்ளான சேவைகள் மிகவும் பெறுமதிவாய்ந்த விருந்தோம்பல் ஆச்சாரத்தினை தொடர்ந்தும் வழங்கியது. விமானத்தினுள்ளான சேவைகள் குழுவானது தளத்திலான சேவைகளில் தனிச்சிறப்பினை அடைவதற்கு தொடர்ந்தும் முயற்சிப்பதுடன் இது வணிக வகுப்பு விமானத்தினுள்ளான அனுபவத்தில் 90% சராசரி தரப்படுத்தலை பெற்றுக்கொண்டதனூடாக பிரதிபலிக்கின்றது.

மீளாய்வாண்டில் பல முக்கிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை வானறை பணியாள் விமானப்பயண அறிக்கை மற்றும் விடுமுறை திட்டம் ஆகியவற்றின் தன்னியக்கத்தினை உள்ளடக்குவதுடன், இதன் மூலம் தாள்களற்ற பணிமேற்கொள்ளும் சூழல் நோக்கி நகர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், விமானப்பயண அறிக்கையின் தன்னியக்கமயமாக்கல் ஏனைய பிரயோகங்களது நிறுவுதலுக்கும் வழி சமைத்துள்ளன. இது விமானப்பயணத்திற்கு முன்னர் அடிக்கடி பறப்பவர்களிலான தகவல்களை கிடைக்கப்பெறச் செய்தல், காட்சி வடிவத்தில் உணவு மற்றும் பானங்கள் மற்றும் பொறியியல் தொடர்பான தகவல்களில் வாடிக்கையாளர்களது வினாக்களுக்கு பதிலளித்தல என்பவையாகும்.

செயற்திறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன், வானறை பணியாட்கள் மற்றும் விமானத்தினுள்ளான அலுவலக பணியாட்கள் ஆகியோருடன் அடிக்கடியான பணியாட்கள் ஈடுபாட்டு அமர்வுகள் நடாத்தப்பட்டன. அலுவலகப் பணியாட்களுடனான வாராந்த கூட்டங்கள் மற்றும் மாதத்திற்கொருமுறை விமானப் பணியாளர்களுடன் பயனுறுதிமிக்க விதத்தில் முகாமைத்துவம் தொடர்புகளை பேணுவதற்காக "வானறைப் பணியாள் திறந்த தினம்" நடாத்தப்படுகின்றது. முகாமைத்துவத்தின் தனிப்பட்ட ரீதியில் விமானத்தின் கணக்கு எழுதுபவருடன் கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன், திணைக்களத்தின் சாதனைகளிலான விழிப்புணர்வுகள், கொண்டாட்டங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றை மேம்படுத்துவதற்காக அனைத்து விமானத்தினுள்ளான பணியாட்களுக்கும் மாதாந்த "விமானத்தினுள்ளான செய்திக்கடிதம்" விநியோகிக்கப்பட்டது.

விமானத்தினுள்ளான சேவைகளினால் பல செலவுகளை சேமிக்கும் முன்னெடுப்புகள், தரத்தை விட்டுக்கொடுக்காது அமுலாக்கப்பட்டன. அத்தகைய முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கின: நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து முன்-பொதிசெய்யப்பட்ட உற்பத்திகளை கொள்வனவு செய்தல், உணவக உபகரணங்கள் மற்றும் சில உலர் பொருட்களது ஏற்றலினை மீள் ஒழுங்குபடுத்துவதன் மூலம் எரிபொருள் பாவனையினை குறைத்தல், விமானத்திலான சேவைகளில் முன்னிறுத்தல் என்பவையாகும். மேலும், உணவு வண்டிகள், கழிவு வண்டிகள் மற்றும் கொள்கலன்கள் போன்ற சேவைக்கு பயன்படுத்தமுடியாத விமானத்தினுள்ளான நிலவறைத்தள வழி உபகரணங்களை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் என்பவை உள்வாரியாக நடாத்தப்பட்டன. மேலும், அனைத்து விமானத்தினுள்ளான கையேடுகளும் இலத்திரணியல் வடிவத்திற்கு மாற்றப்பட்டு வானறை பணியாள் வலை வாசலினூடாக இலகுவாக அணுகக்கூடியதாயுள்ளது. இதன் மூலம் 1,100 வானறை பணியாள் அங்கத்தவர்களுக்கு அச்சிடல் செலவானது சேமிக்கப்படுகின்றது.

நீண்ட தூர விமானப்பயணத்தில் பயணிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சொக்கலேட்டுகளுக்குப் பதிலாக இலங்கையின் உள்ளுணர்வினை வழங்குவதற்காக விமானத்தினுள் பல வகையான உள்ளூர் இனிப்பு வகைகள் வழங்கப்பட்டன. இதற்கும் மேலாக, பணியாட்களது மனவுறுதியினை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் திருப்தி தரப்படுத்தல்களை பேணுவதற்காகவும் ஓர் தொடரான பணியாட்கள் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.

கோவிட்-19 பின்னடைவுகளுக்கு மத்தியில் எதிர்வரும் வருடத்தில் விமானத்தினுள்ளான சேவைகள் தொடர்ந்தும் மூலோபாய முன்னுரிமைக்கு இடமளிப்பதுடன், வாடிக்கையாளரை மையப்படுத்தியதான வர்த்தக நாம வாக்குறுதியுடன் தளத்திலான சேவைகளில் சிறப்பினை உறுதிசெய்வதற்காகும். கிரயத்தினை உகப்பாக்கம் செய்யும் அதேவேளை, விமானத்தினுள்ளான பிரிவானது தேவையான பயிற்சி, ஈடுபாடு மற்றும் சேவை மேம்படுத்தல்கள் என்பவற்றில் தொடர்ந்தும் முதலீடு செய்யும்.

### விமானத்தினுள்ளான தீர்வை அற்றவை

கடைசி நிமிட கொள்வனவாகட்டும் அல்லது விரும்பிய ஒருவருக்கான ஓர் பரிசுப்பொருளாயிருக்கட்டும், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் திறந்த ஆகாயத்திலான பொருட் கொள்வனவானது பயணிகளுக்கு ஓர் விபரப் பட்டியலினை பார்ப்பதன் மூலம் பலதரப்பட்ட குறியீட்டு நாமமுடைய பொருட்களை வாங்குவதற்கான ஓர் தனித்துவமான வாய்ப்பினை வழங்குகின்றது. இவை, வாசனைப்பொருட்கள், ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள், மதுபானம், தேயிலை, ஒப்பனைப் பொருட்கள், தோல்பராமரிப்பு பொருட்கள் மற்றும் இன்னும் பலவற்றை உள்ளடக்கும். குடலளுஅடுநள அங்கத்தவர்கள் அவர்களது திரட்டிய மைல்களுடன் விமானத்தினுள் பொருட்களை வாங்கக்கூடிய சிறப்புரிமையினை பெற்றுள்ளார்கள்.

துணை வருவாய்க்கான ஓர் முன்னணி பங்களிப்பாளர் என்ற வகையில் விமானத்தினுள்ளான தீர்வை அற்றவை மீளாய்வாண்டில் செலவுகளை முகாமைப்படுத்தவும் மற்றும் வருவாயினை உகந்ததாக்கி மேம்படுத்துவதற்கு அவசியமான மூலோபாயங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏப்ரல் 2019 இல் முகங்கொடுத்த சவால்களுக்கு மத்தியில், உள்வாரியாக செயற்பாடுகளை ஆரம்பித்ததன் பின்னர், விமானத்தினுள்ளான தீர்வை அற்றவை டிசம்பர் 2019 மற்றும் ஜனவரி 2020 இல் அதியுயர்ந்த விற்பனையினை பதிவுசெய்வதில் வெற்றி கண்டுள்ளது. இந்த சாதனைக்கான பங்களிப்பு காரணிகள் பயணிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு விற்பனைகள் மற்றும் வணிக நாமமுடைய பன்முகமான உருப்படிகளின் கிடைக்கும்தன்மை என்பன பயணிகளினால் நன்கு புரிந்துகொள்ளப்பட்டது. வானறை பணியாட்களை ஓர் குழுவாக சிறப்பாகச் செயற்படுவதனை ஊக்குவிப்பதற்காக அவர்களில் உயர்ந்த விற்பனையினைப் பொறுத்து சிறந்த பணியாள் தெரிந்துகொள்ளப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



## வணிக அலகுகள் மீளாய்வு

### ஸ்ரீலங்கன் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள்

விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் அதன் பிரதான விழுமங்களான பாதுகாப்பு, துல்லியம் மற்றும் சேவை என்பவற்றை நிலைநிறுத்தி மற்றுமோர் சவால்மிக்க ஆண்டினை நிறைவுசெய்தது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 நோய் பரவல் என்பவற்றின் காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் விமான நிறுவனங்களது குறைவான செயற்பாட்டின் காரணமாக நிதியாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வருவாயில் கணிசமானளவு வீழ்ச்சியினை விளைவித்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டானது கையாளும் நம்பகத்தன்மையாக 99.7% இனையும் சரியான நேரச் செயற்திறனில் 87% இனையும் பதிவுசெய்ததுடன், இது விமான நிறுவனம் சரியான நேரத்திலான செயற்திறனில் சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கத்தின் நியமத்தினை அடைந்தது.

**கையாண்ட விமானங்களது எண்ணிக்கை**




**கையாண்ட பயணிகளது எண்ணிக்கை**




இவ்வாண்டில் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் 15,800 ஸ்ரீலங்கன் புறப்படுதல்களையும் அதே அளவிலான உள்வருகைகளையும் கையாண்டதுடன், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாக இரண்டு வழிகளிலுமாக 5.3 மில்லியன் பயணிகளையும் 7.2 மில்லியன் பயணப்பொதி துண்டுகளையும் கையாண்டது. இதற்கும் மேலாக, 12,900 வாடிக்கையாளர் விமான அசைவுகள் 4 மில்லியன் பயணிகளுடன் இரண்டு வழிகளிலும் கையாளப்பட்டது.

முறையாகக் கையாளப்படாத பயணப்பொதியின் சதவீதமானது 0.78% ஆக காணப்பட்டதுடன் இது துறைசார் வழக்கமான 1.2% இலும் பார்க்க மிகவும் குறைவாக இருந்தது. பயணிகள் பொதிகளில் விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாகவும் சீரற்ற கணக்காய்வினை நடாத்துவதனூடாகவும் பாதுகாப்புத் தோற்றம் சிறப்பாக பேணப்பட்டதுடன் மிகைப் பயணப்பொதி வருவாயினையும் அதிகரிக்கக் கூடியதாயிருந்தது.

நிதியாண்டின் இறுதியில், கோவிட்-19 தொற்றானது வணிகத்தின் அனைத்து செயலெல்லைகளிலும் முன்னெப்போதும் நிகழ்ந்திராத மட்டத்திற்கு அழுத்தத்தினை உருவாக்கியதுடன், விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் இதற்கு விதிவிலக்கல்ல. எந்த விதத்திலுமான சாத்தியப்படக்கூடிய செலவுக் குறைப்பானது அவசியம் என்பதுடன் முதலீட்டுத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. எனினும், விமான நிலைய தரைச் சேவைகள் ஓர் சிறந்த எதிர்காலத்திற்காக அதிக நம்பிக்கை மற்றும் ஆர்வத்துடன் முன்னோக்கி நகர்கின்றது. மந்தமான காலப்பகுதியில் காணப்பட்ட நேரமானது பல்வேறு பயிற்சித் திட்டங்களில் செலவழிக்கப்பட்டது. இது எதிர்காலத்தில் சவால்களை முகங்கொடுப்பதற்கு மனித வளங்களை விருத்திசெய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது வைத்துள்ள சர்வதேச வான்வழி போக்குவரத்துச் சங்கத்தின் (ச.வா.போ.ச.) தரைச் செயற்பாடுகளுக்கான கணக்காய்வானது மற்றும் ச.வா.போ.ச. செயற்பாட்டு பாதுகாப்பு கணக்காய்வு சான்றிதழ்கள் புதிய நிதியாண்டில் மீள் பதிவுசெய்யப்படவேண்டியுள்ளது. இச்சான்றிதழ்கள் ஸ்ரீலங்கன் விமான நிலைய மற்றுத் தரைச் சேவைகள் கொழும்பினூடாக பறக்கும் அனைத்து விமான நிறுவனங்களுக்கும் சிறந்த விடாமுயற்சியுடன் சேவையாற்றுவதற்கு தயாராக இருப்பதற்கும் அதேசமயம் அனைத்து பாதுகாப்பு நியமங்களை பேணவும் கூடியதாயிருக்கும்.

### ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்

வருடத்தின் முகங்கொடுத்த சவால்மிக்க நிகழ்வுகளைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் கம்பனியின் வணிக மேம்படுத்தல் முன்னெடுப்புகளில் ஓர் அவசியமான பங்கினை வகித்தது.

இப்பிரிவானது, செயற்பாட்டு மேம்பாடுகள் மற்றும் வழங்குநர்கள் மற்றும் பராமரிப்பு பங்காளர்களுடன் கட்டணம் தொடர்பான மீள் பேச்சுவார்த்தையினூடாக விமானப் பராமரிப்பு செலவினத்தில் ஓர் குறைப்பினை அடைவதற்கு முனைகின்றது. இது கம்பனியின் விமானப் பராமரிப்பு கிரயத்தில் வருடத்திற்கு வருடம் 15% வீழ்ச்சியினை வழங்கியது. அத்துடன் இப்பிரிவானது திறந்தவெளி பராமரிப்பு மற்றும் விமான நிறுத்துமிட பராமரிப்பு சேவை வழங்கல்களூடாக அதன் வருவாய் உருவாக்கத்தினை மேம்படுத்தியது.

இவ்வாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் திறந்தவெளி பராமரிப்பானது போஹிங் 737 மற்றும் 787 விமானங்களை சான்றிதழளிப்பதற்கான அங்கீகாரத்தினை சேர்த்தது. இதற்கும் மேலாக, அதன் கொழும்பு, இலங்கை மற்றும் மாலே, மாலைதீவு பராமரிப்பு நிலையங்களில் பலவிதமான எயார்பஸ் மற்றும் போஹிங் விமானங்களுக்காக சான்றிதழளித்தல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. வெளிவாரி வாடிக்கையாளர்களுக்கான விமான நிறுத்துமிடத்திலான பராமரிப்பானது மீள் ஆரம்பிக்கப்பட்டு பிராந்தியத்திலிருந்தான பல வாடிக்கையாளர் விமானங்களுக்கான பராமரிப்பு சோதனைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

அதன் பயனுறுதி மேம்பாட்டு முன்னெடுப்புகளின் ஓர் பகுதியாக, பொறியியல் பிரிவானது அதன் பணிப்பற்றறை அங்கீகாரங்கள் மற்றும் சான்றளிப்புகளை வெற்றிகரமாக விரிவாக்கியது. இதன் மூலம் முன்னர் வெளியே ஒப்படைக்கப்பட்ட பல பராமரிப்பு வேலைகள் உள்ளகத்தே மேற்கொள்வதனை இயலுமையாக்கியது. இப்பிரிவானது உள்ளகத்தே விமானத்தின் இருக்கை உறைகளை உற்பத்தி செய்வதற்கு ஆரம்பித்து கணிசமான செலவினை

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

சேமித்தது. இல்லாவிடின், வெளிநாட்டு வழங்குநர்களுக்கு இதற்கான செலவினத்தை செலுத்தவேண்டியிருந்திருக்கும்.

அதன் உள்ளக கொள்திறனை விரிவாக்குவதற்காக மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விமான உபகரணங்களது ஆரம்ப உற்பத்தியாளர்களுடன் ஒன்றுசேர்ந்து இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட விமானத்தின் பிரிவுகளை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து ஆராய்கின்றது. இது இலங்கையினை பிராந்தியத்தில் ஓர் முன்னணி விமான பராமரிப்பு மையமாக மாற்றுவதன் முயற்சியாகும்.

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் ஓர் புதிய விமான பராமாரிப்பு, திருத்தம் மற்றும் பழுதுபார்த்தல் வசதிகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் அதன் சேவைக்கான தற்போதைய இடவசதி வரையறைகளை நீக்குவதற்காகவும், விமான நிறுவனத்தினால் வெளிவாரி வாடிக்கையாளர்களது கனமான பராமரிப்பு வேலைகளின் பருமனை விரிவாக்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது.

விமான நிறுவனம் ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து கேள்விக்கான ஓர் வீழ்ச்சிக் காலப்பகுதிக்கு முகங்கொடுக்கும் சமயம் விமான நிறுவனமானது அதன் மிகையான கொள்திறனை ஏனைய விமான செயற்பாட்டாளர்களுடனான புறவாய்ப்பிற்கு முனைகின்றது. விமானத்தின் குத்தகை முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாயுள்ள பொறியியல் பிரிவானது, ஓமான் எயார் நிறுவனத்துடன் ஓர் பணியாளர்களுடனான ஓர் விமானத்திற்கான குத்தகைக்கு பேச்சுவார்த்தை நடாத்தி வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு காரணமாயிருந்தது.

விமான நிறுவனத்தின் விமான குத்தகை கிரயத்தினை குறைப்பதற்காகவும், பராமரிப்புச் செலவினத்தில் ஓர் குறைப்பினை அடைவதற்காகவும் 19 வருடம் பழமை வாய்ந்த எயார்பஸ் ஏ330 விமானத்தின் செயற்பாட்டு குத்தகையானது முடிவுறுத்தப்பட்டு விமானமானது குத்தகைக்கு விட்டவருக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது விமான நிறுவனம் அதன் பராமரிப்புச் செலவினத்தினை குறைப்பதற்கும், நிதியாண்டின் பிற்பகுதியில் பல பாரிய பராமரிப்பு நிகழ்வுகளுக்கான காசு வெளிப்பாய்ச்சல்களை தவிர்க்கக்கூடியதாகவும் இருந்தது. இதில் மிகவும் புதிய விமானத்தொகுதி நோக்கிய நகர்வினை விரைவுபடுத்துவதன் மூலம் நம்பகத்தன்மையினை மேம்படுத்தக்கூடியதாயிருக்கும். விமானங்களைக் குத்தகைக்கு விடுபவர்களுடன் பல குத்தகை மீள் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இது விமான நிறுவனத்திற்கு பல மில்லியன் டொலர்கள் சேமிப்பினை வழங்கியது.

கோவிட்-19 தொற்றின் காரணமாக, அனைத்து விமானப் பராமரிப்பு ஆளணியினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பராமரிப்பு வேலைத்தள வசதிகளில் வேலை இடத்திற்கான அரசாங்கத்தின் சுகாதார ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட்டன. உலக சுகாதார ஒழுங்கமைப்பு மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுக்கமைய விமானத்திற்கான அடிக்கடி புகையூட்டல் மற்றும் தொற்றுநீக்கம் என்பன புதிய பராமரிப்பு செயல்முறைகளாக அறிமுகப்படுத்தப்பட்டன. இது எமது பெறுமதிமிக்க பயணிகள் மற்றும் செயற்பாட்டு பணியாட்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஓர் அத்தியாவசிய சேவை வழங்குநராக, எமது பராமரிப்பு தொழில்வல்லுநர்கள் இலங்கை மற்றும் மாலைதீவில் செயற்படும் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மற்றும் வெளிவாரி வாடிக்கையாளர்களின் விமானங்களுக்கு அந்தந்த நாடுகளின் ஊரடங்கு மற்றும் முடக்குதல்கள் காலப்பகுதி முழுவதும் அவர்களது சேவையின் மூலம் துணைபுரிந்தார்கள். ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் அதன் நம்பகத்தன்மையான மற்றும் கடப்பாடுடைய சேவைக்கு பெயர்போனதாகும். இப்பிரிவானது உள்வாரியாக ஒரு எயார்பஸ் ஏ330 விமானத்தினை ஓர் குறுங்கால சரக்குவிமான உருவமைப்பிற்கு மாற்றியது.

சவால்மிக்க சந்தை நிலைமைகள் காணப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் அதன் செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு முயற்சித்தது. அத்துடன் இவ்வருடத்தில் பயிற்றுவித்தல் மற்றும் மேலதிக அபிவிருத்தித் திட்டங்களினூடாக அதன் பணியாட்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகளையும் மேற்கொண்டது. முதற் தொகுதி தொழில்வல்லுநர்கள் சிக்கன முகாமைத்துவ கொள்கைகளில் வெற்றிகரமாக அவர்களது பயிற்சியினை நிறைவு செய்ததுடன் அடுத்த வருடத்திற்கான முன்னிறுத்தல் குழுவினரை எண்மின் நிலைப்படுத்தலில் தயார்செய்வதாகும்.

### ஸ்ரீலங்கன் ஏவியேஷன் கல்லூரி (ஸ்ரீ.ஏ.க.)

தேசிய வானூர்தியின் பயிற்றுவித்தல் அங்கமான ஸ்ரீலங்கன் ஏவியேஷன் கல்லூரியானது மீளாய்வாண்டில் முக்கிய மைற்கற்களை அடைந்து ஓர் குறிப்பிடத்தக்க செயற்திறனை பதிவுசெய்தது. கல்லூரியானது நன்கு புகழ்பெற்ற பயிற்றுவித்தல் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து முற்றுமுழுதான வான்வழிக் கற்கை தெரிவுகளை மாணவர்களுக்கும் தொழில்புரியும் வல்லுநர்களுக்கும் வழங்கியது. ஸ்ரீ.ஏ.க. சர்வதேச வான்வழி போக்குவரத்துச் சங்கத்தினால் 2019/2020 ஆம் ஆண்டிற்கான ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறந்து செயற்படும் நிருவகமாக அங்கீகரிக்கப்பட்ட கௌரவத்தினைக் கொண்டுள்ளது.

ஸ்ரீ.ஏ.க. இனால் நடாத்தப்படும் உச்சநிலை பயிற்றுவிப்பான விமானப் பராமரிப்பு மற்றும் பொறியியல் பயிற்றுவித்தல், பின்வரும் அமைப்புகளிடமிருந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான தனித்த சிறப்புரிமையினைக் கொண்டுள்ளது. இலங்கை சிவில் வான்வழி அதிகாரசபை (இ.ச.வா.அ.), ஐரோப்பிய வான்வழி பாதுகாப்பு முகவர் (ஐ.வா.பா.மு.), மாலைதீவு சிவில் வான்வழி அதிகாரசபை (மா.ச.வா.அ.) மற்றும் பாகிஸ்தான் சிவில் வான்வழி அதிகாரசபை (பா.சி.வா.அ.). மேலும், ஸ்ரீ.ஏ.க. க்கு ஐஎஸ்ஓ 9001:2015 சான்றிதழ் வழங்கப்பட்டது. (தரம் முகாமைத்துவ முறைகள்).

### தனியார் பட்டம் வழங்கும் உயர் கல்வி நிருவக நிலைமையினை அடைந்தமை

ஸ்ரீ.ஏ.க. ஓர் தனியார் பட்டம் வழங்கும் உயர் கல்வி நிருவகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெறுவது நோக்கி செயற்படுகின்றது. மேற்குறிப்பிட்ட இந்த தகுதியினை அடைவதற்கு அவசியமாக நிறைவேற்றப்படவேண்டிய இரண்டு முக்கிய செயல்முறைகளான, நிருவக மீளாய்வு அறிக்கை (நி.மீ.அ.) மற்றும் பாடங்கள் மீளாய்வு அறிக்கை (பா.மீ.அ.) என்பவற்றை தற்போது ஸ்ரீ.ஏ.க. நிறைவு செய்யும் செயல்முறையிலுள்ளது. கல்வி நிருவகமானது விருந்தோம்பல் மற்றும் பிரயாண முகாமைத்துவம் (வான்வழி) இல் இளமானி விஞ்ஞானப் பட்டம் மற்றும் வான்வழி முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞான பட்டம் என்பவற்றுக்கான பாடத்திட்டத்தினை நிறைவு செய்துள்ளது. இவை இரண்டும் வழங்கப்பட உள்ள தொடக்க பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீ.ஏ.க. பல்கலைக்கழகத்தின் கல்வி நிருவக விளக்கப்படத்துடன் சட்டக் கட்டமைப்பினையும் முடிவுறுத்தல் நோக்கிய செயற்பாட்டில் உள்ளதுடன் இது தொடர்பாக சுற்றுலா மற்றும் வான்வழி அமைச்சுடன் கலந்துரையாடப்படுகின்றது.

### தேசிய வான்வழி பயிற்றுவித்தல் மேடையினை விருத்திசெய்தல்

பணிப்பாளர் நாயகம் சிவில் வான்வழி அவர்களால் தேசிய வான்வழி பயிற்றுவித்தல் இணையத்தள மேடையினை விருத்திசெய்வதற்காக ஸ்ரீ.ஏ.க. நியமிக்கப்பட்டதுடன் இது இலங்கை சிவில் வான்வழி அதிகாரசபை மற்றும் இலங்கை விமானநிலைய மற்றும் வான்வழி அதிகாரசபை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும். இந்த கூட்டு இணையத்தள மேடையானது நாட்டிலுள்ள அனைத்து முறைமைப்படுத்தப்படும் வான்வழி பயிற்றுவித்தல் வழங்குநர்கள் உலகம் பூராவும் கட்புலப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கான வழியாகும். இது இலங்கையினை வான்வழி பயிற்றுவித்தலுக்கு முன்னுரிமையான நாடாக மாற்றும்.

### 'அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு' அந்தஸ்தினைப் பெற்றுக்கொள்ளல்

ஸ்ரீ.ஏ.க. இலங்கை சிவில் வான்வழி அதிகாரசபையிடமிருந்து 'அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு' அந்தஸ்தினை பெறுவது நோக்கிய செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இவ்வங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர், ஸ்ரீ.ஏ.க. இனை வான்வழி பயிற்றுவித்தலில் அதி உயர்ந்த நிலையினை எட்டுவதனை இயலுமையாக்கும். விசேடமாக சர்வதேச விமான நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஸ்ரீ.ஏ.க. இனை பிராந்தியத்தில் முன்னுரிமையான பயிற்றுவித்தல் வழங்குநராக கருதுவதற்கு முனைகின்றது. அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பானது வானறை பாதுகாப்பு, விமான நிலைய பயணிகள் கையாளுகை, ஆபத்தான பொருட்கள் மற்றும் சரக்கு, சரிவுப்பாதை ஒருங்கிணைப்பில் அடிப்படை பாடநெறி மற்றும் ஐஊயுழு 201 சர்வதேச அனுப்புபவர் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கும்.

### தேசிய தொழில்சார் தகமையினை அடைதல் (தே.தொ.த.)

- ஸ்ரீ.ஏ.க. மற்றும் இலங்கை தொழில்நுட்ப பயிற்சியானது தொழில்சார் கல்வி நிருவகத்தின் கீழ் மூன்றாம் நிலை தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் (மூ.தொ.க.ஆ.) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்ரீ.ஏ.க. அடிப்படை விமான பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தே.தொ.த. இனை பெறும் செயல்முறையிலுள்ளது. மூ.தொ.க.ஆ. உடனான ஆரம்ப கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன் நிருவகமானது தேசிய தகுதி நியமம் (தே.த.நி.) இனை விருத்திசெய்யும் செயல்முறையிலுள்ளதுடன் உயர் கல்வி தகமைகளை (இளமானி/முதுமானி) தொடர்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு பக்கவாட்டு நுழைவிற்கு வசதியளிக்கும் செயல்முறையிலுமுள்ளது.
- ICAO 201 விமான அனுப்புவர் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தே.தொ.த. அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் செயல்முறையிலுள்ளது. இது தே.தொ.த. 6 ஆவது மட்டத்தில் (உயர் தேசிய டிப்ளோமா) செயற்படுத்தப்படவுள்ளது. இது திடலில் தொழில்புரியும் விமான அனுப்புபவர்களுக்கு துணைபுரிவதற்காகவும், அவர்களுக்கு பல்கலைக்கழக பாடத்திட்டத்திற்கு பக்கவாட்டில் நுழைவதற்கான வசதியினை வழங்கி ஓர் உயர் டிப்ளோமா தகமையினை (இளமானி/முதுமானி) தொடர்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. இச்செயல்முறையானது அதன் இறுதி ஒப்பாய்வு மட்டத்திலுள்ளது.
- ஸ்ரீ.ஏ.க. பிரயாணம் மற்றும் சுற்றுலாத்துறை நிகழ்ச்சித்திட்டத்திற்கான தே.தொ.த. சான்றிதழிளித்தலை பெறும் செயல்முறையிலுள்ளது. இது தே.தொ.த. இன் 4ஆவது மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது. இதிலிருந்து பிரயாண நிறைவேற்றுநர்/பிரயாண மற்றும் சுற்றுலா செயற்படுத்தல் நிறைவேற்றுநர்/பிரயாண முகவர்/பிரயாண உதவியாளர் தொழில்வல்லுநர்களுக்கு பல்கலைக்கழக பாடத்திட்டத்தின் மூலம் ஓர் உயர் கல்வித் தகமையினை அவர்களது பொருத்தமான தொழில்சார் அனுபவத்தினாடாக தொடர்வதற்கு பக்கவாட்டு நுழைவுக்கு வசதியளித்தல்.

### எம்பிரி ரிடல் பல்கலைக்கழகத்துடனான முன்மொழியப்பட்ட பங்குடைமை

உலகப் பிரசித்திபெற்ற எம்பிரி-ரிடல் வானூர்தி இயல் பல்கலைக்கழகத்துடன் ஓர் பங்குடைமையில் ஈடுபடுவதற்கான கலந்துரையாடல்களை முடிவுறுத்தும் செயல்முறையில் ஸ்ரீ.ஏ.க. உள்ளது. இது வான்வழி மற்றும் வான்வெளிச் சாதனத்தில் விசேடத்துவம் பெற்ற பாரிய சான்றளிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். இது வான்வழியில் வணிக நிர்வாகத்தில் முதுமானி, வானூர்தி இயலில் விஞ்ஞான முதுமானி, மற்றும் வான்வழி பராமரிப்பில் முதுமானி ஆகிய பட்டங்களை வழங்குகின்றது. அனைத்து கல்வித்திட்டங்களும் இலங்கையில் வழங்கப்படுவதுடன், இது உயர்ந்த செலவில் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டிய சுமையின்றி மாணவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும்.

### விமானப் பராமரிப்பு நடைமுறை பயிற்சித் திட்டம்

வான்பயண மின்னணுவியல் மற்றும் எந்திரவியல் துறையின் கீழ் விமானப் பராமரிப்பு பயிற்சிப் பாடத்திட்டங்களை பின்பற்றும் மாணவர்களுக்கான நடைமுறை பயிற்சியினை கல்லூரி தொடர்ந்தும் மேம்படுத்தி விருத்திசெய்கின்றது. பறக்கத்தகுதியற்ற விமானமொன்றின் முன்மொழியப்பட்ட கொள்வனவானது, அனேகமாக நிறைவடைகின்றது, இது அமைப்புமுறை பட்டறை மற்றும் மின் கம்பியியல் இடைஇணைப்பு திட்டத்திற்கு பெறுமதிக்கான நடைமுறை வசதியினை வழங்குவதுடன் பெறுமதியினையும் சேர்க்கின்றது.

### பூகோள ரீதியான பன்முகப்படுத்தல்

ஸ்ரீ.ஏ.க. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிளை பயிற்றுவித்தல் மாதிரிகளை நிறுவுவதற்கு அட்டவணைப்படுத்தியுள்ளது. இது பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு போன்ற வெளிநாட்டு சந்தைகளில் சாத்தியமான பயிற்றுவித்தல் வாய்ப்புக்களையும் ஆராய்கின்றது.

### கிங்ஸ்டனுடனான பங்குடைமை

ஸ்ரீ.ஏ.க. இரண்டு உள்வாங்கல்களை இங்கிலாந்தின் கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்துடன் பொறியியலில் (கௌரவ) மேல் பட்டத்தினை தொடர்வதற்காக வெற்றிகரமாக பதவியேற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 'EASA வகுப்பு பி உரிமச் சான்றிதழ்' வரை தகமையடைந்த மாணவர்களுக்கு ஓர் கௌரவ பட்டத்தினை பெறுவதற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பட்டமானது றோயல் வானூர்தி இயல் சங்கத்தினால் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஸ்ரீ.ஏ.க. கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்துடன் அதன் ஏற்புடையாக்கல் செயல்முறையினை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இது முழுவதுமான உயர் பட்டத்தினை வழங்குவதற்காக கிங்ஸ்டன் பல்கலைக்கழகம் சார்பாக இலங்கையின் விரிவுரையாளர்களை பயன்படுத்துவதற்காகும். இது நாட்டிலுள்ள சரியான தகமைகளுடைய எவரேனும் விரிவுரையாளருக்கு கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் குழுவின் ஓர் அங்கமாக காணப்படுதல் பாரிய வெற்றியாகும்.

கல்லூரியானது விமானிகளுக்கான வர்த்தக விமானி பயிற்றுவித்தலுக்கு வான்வழிக் கற்கைகளில் இளமானி விஞ்ஞானப் பட்டமானது (கௌரவ) முற்றான விமான நிறுவன போக்குவரத்து விமான உரிமத்துடன வழங்கப்படும். இதன் மேலதிக நலனாகக் காணப்படுவது என்னவெனில் இந்நிகழ்ச்சித் திட்டமானது இயங்கலை மூலம் வழங்கப்படுவதுடன், விமானிகள் பறக்கும் சமயம் ஓர் பிரசித்திபெற்ற தகமையினைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமாயிருக்கும்.

### சேர் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழகத்துடனான பங்குடைமை (கொ.பா.ப.)

ஸ்ரீ.ஏ.க. இரண்டு உள்வாங்கல்களை பதிவுசெய்துள்ளதுடன், இவர்கள் சேர் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினாலல் கூட்டாக வழங்கப்படும் விமானப் பராமரிப்பு பொறியியலில் இளமானி விஞ்ஞானப் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்தினை பின்பற்றுகின்றார்கள். நான்கு வருட பட்டதாரி நிகழ்ச்சித்திட்டமானது பல்கலைக்கழக மாணவர்களை விமானப் பராமரிப்பு பொறியியலாளர்கள் என்னும் அவர்களது எதிர்கால பங்கினை மிகவும் திறமையுடனும் மற்றும் நம்பிக்கையுடனும் பொறுப்பேற்பதற்கு தயார்படுத்துவதனை முன்னிறுத்துகின்றது. மேலும் கூட்டாக வான்வழி தொடர்பான தகமைகளை வழங்குவதற்கான அதிக வழிகள் மற்றும் சாத்தியப்பாடுகளை காண்பதற்காக கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீஏ.க., கொ. பா.ப. இன் வானூர்தி இயல் பொறியியல் மற்றும் விமானப் பராமரிப்பு பொறியியல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் துறைசார் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு உறுதுணை வழங்குகின்றது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி




### ஐரோப்பிய வான்வழி பாதுகாப்பு முகவர் (ஐ.வா.பா.மு.) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை மத்தியநிலையம்

ஸ்ரீ.ஏ.க. இன் பரீட்சைகள் திணைக்களம் ஐ.வா.பா.மு. இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், யாரேனும் வெளிநாட்டு அல்லது உள்ளூர் மாணவர்களுக்கு ஐ.வா.பா.மு. பகுதி 66 பரீட்சைகளை வழங்குகின்றது.

### விமானப் பராமரிப்பு பயிற்றுவித்தல் பாடநெறி மூலக்கூறுகளை புதுப்பித்தல்

ஸ்ரீலங்கன் தொழில்நுட்ப பயிற்சி, ஸ்ரீ.ஏ.க. இன் விமானப் பராமரிப்பு பயிற்றுவித்தல் அங்கம் ஓர் பாரிய திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இது ஐ.வா.பா.மு. இடமிருந்து விமான பராமரிப்பு பயிற்றுவித்தல் பாடநெறி குறிப்பிட்கான அங்கீகாரத்தினை புதுப்பித்து பெற்றுக்கொண்டதாகும். இத்திட்டமானது விரைவு படுத்தப்பட்டு நான்கு மாதங்களினுள் நிறைவு செய்யப்பட்டது. இது அனேகமாக பதினான்காயிரம் பக்கங்களது புதுப்பித்தலை உள்ளடக்குகின்றது. புதுப்பிக்கப்பட்ட நடைமுறை குறிப்புகள் உலகத்தின் சிறந்ததாகக் கருதப்படுவதுடன் முறைமைப்படுத்துபவர்களிடமிருந்து அத்தகைய உணர்ச்சிக் கருத்தினை பெற்றுக்கொண்டது.

### இயங்கலை பயிற்றுவித்தலின் ஆரம்பம்

ஸ்ரீ.ஏ.க. ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்து ஓர் ஒத்தியங்கல் தொலைவு கற்றை செயல்முறையினை (இயங்கலை பயிற்றுவித்தல்) மைக்ரோசொவ்ட் டீம்ஸ் மென்பொருளை பயன்படுத்தி அதன் இயங்கலை பயிற்றுவித்தல் மேடையாக விருத்திசெய்யது. இந்த செயல்முறையானது ஐரோப்பிய யூனியன் வான்வழி பாதுகாப்பு முகவர் (ஐ.வா.பா.மு.), இலங்கையின் சிவில் வான்வழி அதிகாரசபை (இ.சி. வா.அ.) மற்றும் மாலைதீவு சிவில் வான்வழி அதிகாரசபை (மா.சி.வா.அ.) ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய கோவிட்-19 நோய் பரவலின் காரணமாக இயங்கலை பயிற்றுவித்தலின் ஆரம்பமானது விரைவுபடுத்தப்பட்ட ஓர் தீர்வாகும். இது எவ்விதமான வான்வழி தொடர்பான பயிற்சிகளுக்கு ஓர் தெரிவாக மேலும் விருத்திசெய்யப்பட்டு வழங்கப்படும். இயங்கலை மூலமாக வழங்கப்படும் பாடத்திட்டம் விமான பராமரிப்பு பயிற்சியிலான அடிப்படை பாடநெறியாகும்.

### சூழல் நட்புடைய பயிற்சி

கல்லூரியானது கம்பனியின் பசுமை முன்னெடுப்புகளுக்கு தொடர்ந்தும் உறுதுணை வழங்கியது. இது பயிற்றுவித்தலில் சுற்றுச்சூழல் பொறுப்பான நடைமுறைகளை ஊக்குவிப்பதுடன், பயிற்றுவித்தல் கருவிகள், கையேடுகள் தயாரித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் என்பவற்றில் 'தாள்களற்ற' அதன் முயற்சிகளில் தொடர்ந்தும் முன்னிறுத்தியது. ஸ்ரீ.ஏ.க. ஆனது 'பொலிதீன் பாவனையற்ற' பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

### வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முழு உரித்துடைய ஓர் துணை நிறுவனமாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் விமானத்தினுள்ளான ஒரே உணவு வழங்குநராகக் காணப்படுவதுடன் இன்னுமோர் வெற்றிகரமான ஆண்டினை பதிவுசெய்து ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இலாபத்திற்கு கணிசமான பங்களிப்பு செய்தது. எவ்வாறாயினும், ஏப்ரல் 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் மார்ச் 2020 இல் ஆரம்பித்த கோவிட்-19 தொற்றின் காரணமாக மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில் ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் செயற்திறன் ஓர் வீழ்ச்சியினை காட்டியது. இருந்த போதிலும், கடந்த 10 வருடங்களில் அதன் செயற்திறன் அதன் பலம் மற்றும் சாத்தியப்பாடு தொடர்பாக ஓர் தெளிவான அறிகுறியினை வழங்கியுள்ளது.

அதன் பிரதான செயற்பாடான விமானத்திலுள்ளான உணவு வழங்கலுக்கு அப்பால், இது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் என்பவற்றிலுள்ள கடந்து செல்லும் பயணிகளுக்கான உணவு விடுதி மற்றும் ஓய்விடத்தினை முகாமை/இயக்குகின்றது. அதன் துணை வணிக நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கன் கேட்டரிங், செரினிதிவ ட்ரான்ஸிட் ஹோட்டல் மற்றும் இன்டஸ்ரியல் லோன்ரி என்பவற்றை முகாமை/இயக்குகின்றது.

### வருவாய்

மீளாய்வாண்டில் துணை நிறுவனத்தின் வருவாயானது 7.4% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 9,026 மில்லியனை (2018/19 -ரூபா 9,750 மில்லியன்)எட்டியதுடன், இது அனைத்து பிரிவுகளிலுமான ஓர் வீழ்ச்சியினை பிரதிபலிக்கின்றது. இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணியாக விமானத்திலுள்ளான உணவளித்தல் மற்றும் கடந்து செல்லல் பயணிகளுக்கான உணவு விடுதி ஆகியவற்றின் வருவாய் வீழ்ச்சி காணப்பட்டது. அவை முறையே 7.9% மற்றும் 6% வீழ்ச்சியினை பதிவு செய்தன.

**வருவாய் எதிர் வருவாய் வளர்ச்சி**




**வருவாய் கூட்டமைவு**




விமானச் சமையலறையில் உற்பத்தி செய்த உணவுப் பொட்டலங்களின் எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் 12.3% ஆக வீழ்ச்சியடைந்து வருடத்திற்கு 6.6 மில்லியன் உணவுக் பொட்டலங்களாக காணப்பட்டது. 2019 இன் மொத்த உணவு உற்பத்தியில் 76.1% ஆன உணவு ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு (ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பிரதான வாடிக்கையாளர்) விநியோகிக்கப்பட்ட போதிலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் விமானச் சமையலறைக்கான வருவாயின் பங்களிப்பானது இவ்வருடத்தில் 12.0% ஆல் வீழ்ச்சியடைந்தது.

பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் விமான நிலைய உணவகத்தின் (பொது மற்றும் கடந்து செல்லல்) பங்களிப்பானது துணை நிறுவனத்தின் மொத்த வருவாயின் 13.5% ஆக காணப்பட்டது. இருப்பினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது விமானநிலைய உணவகத்தின் வருவாயானது 3.7% ஆல் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஏனைய துணை வணிக புரள்வும் 9.3% ஆல் வீழ்ச்சியடைந்தது.

**உணவு பொட்டலங்களின் எண்ணிக்கை**




**வ.வ.மு.உ. இன் போக்கு**




**தேறிய இலாபப் போக்கு**




### வட்டி மற்றும் வரிக்கு முந்திய உழைப்புகள் (வ.வ.மு.உ.)

புரள்வு மற்றும் ஏனைய செலவினங்களிலான அதிகரிப்பும் ஒன்றுசேர்ந்து வட்டி மற்றும் வரிக்கு முந்திய உழைப்பில் 11.5% வீழ்ச்சியினை விளைவித்து 2018/19 இல் பதிவுசெய்த ரூபா 4,704 மில்லியனுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் ரூபா 4,162 மில்லியனை பதிவுசெய்தது.

### இலாபகரத்தன்மை

ஸ்ரீலங்கன் கேட்டரிங் மீளாய்வாண்டிற்கு வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 4,760 மில்லியனை பதிவுசெய்தது. இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடும்போது (2018/19 - ரூபா 5,602 மில்லியன்) 15.1% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோன்று துணை நிறுவனமானது ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட்-19 தொற்றின் பரவலின் விளைவாக செயற்பாட்டு இலாபத்திலும் தேறிய இலாபத்திலும் வீழ்ச்சியினை அனுபவித்தது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

### மேம்படுத்தல்கள்

மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் கேட்டரிங் பல மூலதன முதலீடுகளை மேற்கொண்டன. இவை ஏ380 உயர்-ஏற்றிகளது கொள்வனவினை உள்ளடக்கும். புதிய தரமான இரண்டு அலகு உயர்-ஏற்றிகள் மற்றும் கட்டார் எயார்வேஸ்சிடமிருந்து தரமான நான்கு அலகுகள் உயர்-ஏற்றிகள் என்பனவாகும்.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் அதன் சிறப்பான செயற்திறனுக்கு பல விருதுகளை வென்றுள்ளது. இவை, ஜனாதிபதி ஏற்றுமதி விருது 2018/19 – "பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள்" பிரிவின் கீழான சிறந்த ஏற்றுமதியாளர் விருது, ஊஹேஜ சாதனையாளர் விருதுகள் 2019- அரசாங்கத் துறையின் கீழான தேசிய தங்க விருது மற்றும் தேசிய வணிக சிறப்பு விருதுகள் 2019 – வெள்ளி ஒட்டுமொத்த வெற்றியாளர், அரசாங்கத்துறையின் கீழான வெற்றியாளர், "கூடுதல் பெரியது" பிரிவில் வணிகம் மற்றும் நிதியியல் விளைவுகளின் சிறப்பு – வெற்றியாளர் மற்றும் "கூடுதல் பெரியது" பிரிவில் வெற்றியாளருக்கு அடுத்த முதலாவது ரன்னர் அப் விருது. மேலும், ஸ்ரீலங்கன் கேட்டரிங் குழுவானது சமையல்சார் கலை உணவு எக்ஸ்போ 2019 இல் ஏழு தங்கப் பதக்கங்களையும், 10 வெள்ளி பதக்கங்களையும் மற்றும் 10 வெண்கல பதக்கங்களையும் வென்றது.

## துணைச் சேவைகள்

### ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப (த.தொ.) முறைகள்

ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் விமான நிறுவனத்தின் த.தொ. மூலோபாயத்தினை மூன்று பிரதான தூண்களின் கீழ் ஆளுமை செய்கின்றது எண்மின் நிலை உருமாற்றம் மற்றும் தொழில்நுட்ப தழுவல், வணிகத் தொடர்ச்சி மற்றும் நுண்ணறிவு, மற்றும் த.தொ. செலவு மற்றும் வருவாய் என்பனவாகும். த.தொ. மூலோபாயமானது விமான நிறுவனத்தின் தொலை நோக்குடன் ஒத்ததாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது விமான நிறுவன வணிகச் செயற்பாடுகள் மற்றும் பயணிகள் அனுபவத்தினை நவீன தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தும் மற்றும் பெறுமதி சேர்க்கும் குறிக்கோள்களைக் கொண்டதாகும்.

பிரதான தூணான எண்மின் நிலை உருமாற்றம் மற்றும் தொழில்நுட்ப தழுவலின் கீழான முக்கிய குறிக்கோள்கள் பின்வருவனவற்றை எண்மின் நிலைப்படுத்தி உருமாற்றுதலாகும். மரபுசார் வணிக செயல்முறைகள், புதிய எண்மின் நிலை வணிகங்களுடன் இயங்கலை மற்றும் நேரடி விற்பனையினை விரிவாக்குதல், தனிப்பயன் பயணிகள் சேவை, 'எண்மின் நிலை பயணிகள் பிரயான வரைபடம்' இல் விரைவான பிரயாணம் அதன் எதிர்காலத்திற்கான இலக்கு மற்றும் துறைசார் அங்கீகாரம் மற்றும் எண்மின் நிலை தலைமைத்துவம் என்பவற்றை அடைதல் ஆகியனவாகும்.

விமான நிறுவனத்தின் த.தொ மூலோபாயமானது பின்வருவனவற்றை முன்னிறுத்தியது. செயற்பணி முக்கியமான த.தொ. முறைகளில் ஐந்து-ஒன்பதுகள் கிடைக்கத்தக்க தன்மையுடன் 24 ஓ 7 தடங்கலற்ற வணிக மற்றும் செயற்பாட்டு தொடர்ச்சியினை வழங்கல், நிகழ்நேர வணிக நுண்ணறிவுடன் தீர்மானம் மேற்கொள்பவர்களை இயலுமையாக்கல் மற்றும் வலுவளித்தல் என்பவற்றுடன் இரண்டாம் தூணான வணிக தொடர்ச்சி மற்றும் நுண்ணறிவின் கீழ் அந்தரங்க மற்றம் தரவு ஆளுமை பணிப்புரைகள் என்பவையாகும்.

இதற்கும் மேலாக, ஸ்ரீலங்கன் த.தொ. முறை ஓர் வருவாய் உருவாக்கியாக, விமான நிறுவனத்தின் மேல் நிலை வருவாய்க்கு பங்களிப்பு செய்கின்றது. 2019/20 நிதியாண்டில், த.தொ. முறைகள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்து பறந்து செல்லும் வாடிக்கையாளர் விமான நிறுவனங்கள் மற்றும் குழுமத்தின் வணிக நிறுவனங்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளூடாக ஓர் மேலதிக வருவாயாக USD 2 மில்லியனை உழைப்பதற்கு பங்களிப்பு செய்தது. வருவாய் உருவாக்கும் முக்கிய விமான நிறுவனத்தின் பகுதியாக, ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் அடுத்த ஐந்து வருடங்களில் த.தொ. பகிர்ந்த சேவைகளிலிருந்து உருவாக்கும் வருவாயினை இரட்டிப்பாக்கும் இலக்கினைக் கொண்டுள்ளதுடன், விமான நிறுவனத்தின் த.தொ. செலவினை விமான நிறுவனத்தின் மொத்த வருவாயின் 2% க்கும் குறைவாக பராமரிக்கவும் முயற்சிக்கின்றது. இது த.தொ. மூலோபாயத்தின் மூன்றாம் தூணான த.தொ. செலவு மற்றும் வருவாய் இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பாகும்.

2019 /20 நிதியாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது 'ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள்' என நாமமிடப்பட்டதுடன் பின்வருவனவற்றை அடைவதற்கும் ஆகும். த.தொ. மூலோபாயத்தின் மீள்நிர்ணயமானது, அடுத்த தலைமுறை தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுடன் தேசிய வானூர்தியினை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்லல், முக்கிய விளைவுகள் தொகுப்பினை காட்சிப்படுத்தல், மற்றும் விமான நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் பெறுமதியினை அங்கிகரித்தல் என்பனவாகும்.

### மேம்படுத்தப்பட்ட பயணிகள் அனுபவம் மற்றும் திறன் பயணிகளின் பரிணாமம்

மீளாய்வாண்டில் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளுக்கான எண்மின் நிலை சாலை வரைபடமானது ஸ்ரீலங்கன் த.தொ. முறைகளினால் மேற்கொள்ளப்பட்டதுடன், இது ஸ்ரீலங்கன் ஊடாக பறக்கும் பயணிகளுக்கு அடுத்த தலைமுறை விமான நிலைய அனுபவத்தினை வழங்கும். இது அவர்களது வாசஸ்தல அடிப்படையான பண்டாரநாயக்கா சர்வதேச விமாநிலையத்தின் (ப.ச.நி.) மற்றும் ஸ்ரீலங்கன் வலையமைப்பு நிலைகள் பூராவும் தொழில்நுட்ப மேம்படுத்தல்களை சேர்ப்பதன் மூலமாக வழங்கப்படுகின்றது. ப.ச.நி. இல் பயணிகளது தொடு புள்ளிகளை கவனமாக மதிப்பீடு செய்வதன் மூலம் ஓர் விரிவான முதனிலைப் படிவமானது தயாரிக்கப்பட்டது. அத்துடன் துறையில் நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை கொண்டுவருதல், பயணிகளினால் சுய சேவைகள் பயன்படுத்துவது நோக்கி அதிக முக்கியத்துவம் வழங்கல், இது திறன் பயணிகள் கருத்தாக்கினூடாக பயணிகள் அனுபவத்தினை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.

## விமான நிறுவனத்தின் த.தொ. மூலோபாயம் ஓர் பார்வையில்

**எண்மின் நிலை உருமாற்றல் மற்றும் தொழில்நுட்ப தழுவல்**

- பாரம்பரிய விமான நிறுவன செயல்முறைகளை எண்மின் நிலைப்படுத்தி உருமாற்றல்
- நேரடி இயங்கலை விற்பனையினை விரிவுபடுத்தல் மற்றும் புதிய எண்மின் நிலை வணிகங்களிலிருந்து வருவாயினை உருவாக்குதல்
- "பயணிகள் சேவை தனிப்பயனாக்கல்" மற்றும் ஒரு வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ அமைப்பு
- ப.ச.வி. மற்றும் அனைத்து வெளிநாட்டு நிலையங்களில் விரைவான பிரயாண தொழில்நுட்பங்களை இயலுமையாக்குதல்
- எண்மின் நிலைப்படுத்தல் முன்னணிக்கு துறைசார் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல்
- கைப்பேசி பிரயோகத்தில் அதிக சிறப்பியல்புகளை மேம்படுத்தல் மற்றும் இணையத்தள முன்பதிவு என்ஜின்களூடாக புதிய சந்தைகளை எட்டுதல்

**வணிகத் தொடர்ச்சி மற்றும் நுண்ணறிவு**

- முக்கியமான த.தொ. சேவைகளில் 99.9% மான நேரத்தில் 24 X 7 தடையற்ற வணிக மற்றும் செயற்பாட்டு தொடர்ச்சியினை வழங்குதல்
- நிகழ் நேர வணிக நுண்ணறிவினை இயலுமையாக்கல் (வ.நு.)
- தகவல் பாதுகாப்பு/இரகசிய முறைமைப்படுத்தல் மற்றும் தரவு ஆளுகை பணிப்புரைகள்

**த.தொ. செலவு மற்றும் வருவாய்**

- விமான நிறுவன த.தொ. செலவினத்தினை விமான நிறுவனத்தின் வருவாயின் % ஆக மேம்படுத்தல் மற்றும் 2% க்கும் குறைவாக பராமரித்தல்
- த.தொ. பகிர்ந்த சேவைகள் வருவாயினை அதிகரித்தல்



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

### உயர் தொழில்நுட்ப மேடையிலான விரிவான கொடுப்பனவு தெரிவுரிமைகள்

ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் அமேடியஸ் கொடுப்பனவு மேடையினை இணையத்தள முன்பதிவு என்ஜினுக்காக விரிவான கொடுப்பனவு தெரிவுரிமைகளுடன் அறிமுகம் செய்தது. அத்துடன் இவ்வசதியினை மீளாய்வாண்டில் ஸ்ரீலங்கன் கைப்பேசி இணையத்தளத்திற்கும் வழங்கியது. இந்த மேடையானது புதிய மாற்றீட்டு கொடுப்பனவு முறைகளான, அலிபே, விசெட், பொலி, பேபேல், எப்பள் பே மற்றும் பல்வேறு ஏனைய கொடுப்பனவு தெரிவுரிமைகளுக்கும் எதிர்காலத்தில் உறுதுணையினை வழங்கக்கூடியதாயிருக்கும். இந்த மேம்படுத்தலுடன், இணையத்தள முன்பதிவு என்ஜின் துணையுடனான கொடுப்பனவு நாணயங்களின் எண்ணிக்கையானது 40 ஆக (முன்னர் 19) அதிகரிக்கப்பட்டு, பயணிகளுக்கு சிறந்த நெகிழ்ச்சி மற்றும் வசதியினை வழங்குவதுடன் கொடுப்பனவுகளை செயல்முறைப்படுத்தும்போது பிழைகளையும் குறைக்கின்றது.

### சுய-பயணப்பொதி போடுதல்/பயணிகள் பிரயாணத்தினை எளிதாக்கல்

ஸ்ரீலங்கள் த.தொ. முறைகள் இங்கிலாந்திலுள்ள ஈத்ரோ விமான நிலையத்தில் "சுய-பயணப்பொதி போடுதல்" கருத்தாக்கத்தினை அறிமுகப்படுத்தியது. ஸ்ரீலங்கன் வலையமைப்பில் பயணப்பொதி போடுதல் வசிதியினை தன்னியக்கமயமாக்கிய முதலாவது விமானநிலையம் இதுவாகும். தற்போது கணியக பயண ஆயத்தல் வசதியானது மஸ்கட் சர்வதேச விமானநிலையத்தில் பயணிகளது வசதிக்காக மற்றும் அவர்களது பிரயாணத்தினை எளிதாக்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் ஸ்கைஅப் எயார்லைன்ஸ் மற்றும் சலாம்எயார் என்பவை அவற்றின் செயற்பாடுகளை ப.ச.வி. இல் ஆரம்பிப்பதற்கு தரை கையாளுதல் தகவல் முறைகள் உறுதுணைக்கு வசதியளித்தது.

### இறக்குமதியாளர்களுக்கு தாள்களற்ற சரக்கு அகற்றல் செயல்முறையினை இயலுமையாக்குதல்

இலங்கையில் தாள்களற்ற சரக்கு அகற்றலுக்கு வசதியளிப்பதற்காக உலக சுங்க ஒழுங்கமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட எண்மின் நிலைப்படுத்தல் திட்டத்தின் தேவைப்பாட்டிற்கமைய ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சரக்கு இறக்குமதி தரவுகளது இலத்திரணியல் பரிமாற்றலினை அமுல்படுத்தியது. இது ஸ்ரீலங்கன் சரக்கு விற்பனை மற்றும் செயற்பாடுகள் முகாமைத்துவ முறையினை இலங்கை சுங்கத்தின் சுங்க தரவுக்கான தன்னியக்க முறையுடன் ஒன்றிணைப்பதன் மூலம் வசதியளித்தது.

### விமான நிறுவனத்தின் துணை வருவாயினை உயர்த்துதல்

ஸ்ரீலங்கன் த.தொ.முறைகள் முற்போக்கான இருக்கை ஒதுக்கல் வசதியினை மேம்படுத்தியது. இது முதலில் குறைந்த தூர பயணத் துறைகளுக்கு ஆரம்பித்து ஒடுங்கிய உருவமைப்பினையுடைய விமானங்களில் மேலதிக கால்நீட்டல் வசதியுள்ள இருக்கைகளது கிடைப்பிற்கு நீட்டியதுடன், இதன் அமுலாக்கத்தில் கணிசமானளவு செலவு சேமிப்பு பெறப்பட்டதுடன் விமான நிறுவனத்திற்கு புதிய துணை வருமானத்திற்கான வழியினை திறந்தது.

மேலும், "ஒரு பயணப்பொதி" கருத்தாக்கமானது அறிமுகப்படுத்தப்பட்டு இயங்கலை மூலம் ஊக்குவிக்கப்பட்டது. இது துணை வருவாயினை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்ததுடன், "முன் கொடுப்பனவு பயணப்பொதி" இனை ஊக்குவிப்பதற்காக இயங்கலை பயண ஆயத்த வழியினை மேம்படுத்தியது. அத்துடன் புறப்படும் வாயிலில் "சுமந்து செல்லும் மிகையான பயணப்பொதி" கருத்தாக்கத்தினையும் அறிமுகப்படுத்தியது. இதற்கும் மேலாக, உலகளாவிய விநியோக முறைகளூடாக மேற்கொள்ளப்பட்ட முன்பதிவுகளுக்கும் இயங்கலை ஊடாக "எனது முன்பதிவினை முகாமைப்படுத்துங்கள்" இன் கீழ் துணைச் சேவைகளை கொள்வனவு செய்வதற்கும் வசதியளித்தது. இது பயணிகள் அவர்களது வசதிக்கேற்றவாறு தெரிவு செய்யும் தெரிவுரிமைக்கு அனுமதியளிக்கின்றது.

### தகவல்களால் வழிநடத்தப்படும் விமான நிறுவனம்

"விமான நிறுவன நுண்ணறிவு", ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முகாமைத்துவ தகவல் முறையானது மூலோபாய மற்றும் திட்டமிட்ட தீர்மானம் மேற்கொள்வதற்கான பிரதான தகவல் மூலமாகும். விமான நிறுவன நுண்ணறிவானது ஒதுக்கீடுகள், டிக்கட்டுகள் மற்றும் அனைத்த பயணிகளதும் பிரயாணம் தொடர்பான தகவல்களை செயல்முறைப்படுத்தி சிரேஷ்ட மற்றும் நடு முகாமைத்தவத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய நுண்ணறிவினை விளைவிக்கின்றது. இது முகப்புப்பெட்டிகள், அறிக்கைகள் மற்றும் மின்னஞ்சல் விழிப்பாண்கள் என்பன விமான நிறுவனத்தின் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளுடன், விமான நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளை அளவிடுவதற்காக, வழங்கப்படுகின்றன.

அடுத்த நிதியாண்டில், விமானநிறுவன நுண்ணறிவின் முன்னிறுத்தலானது பயணிகள் மையத்தினில் ஓர் உள்வாரி வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ முறையினை அமுல்படுத்துவதுடன் மேம்படுத்துவதாகும். இது ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை முற்றான பயணிகள் மையமான தகவல்களால் இயக்கப்படும் விமான நிறுவனமாக மாற்றுவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கும்.

### ஓர் பசுமையான ஸ்ரீலங்கனுக்காக – தாள்களற்ற ஆவண முகாமைத்துவம்

கோள் நட்பான வழியில் நகர்வதில், ப.ச.வி. இல் செயற்பாட்டு அலகுகளினால் கையினால் பராமரிக்கப்படும் ஆவணங்களுக்கு இலத்திரணியல் ஆவண முகாமைத்துவ முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தாள் பதிவுருக்களைப் பராமரிப்பதற்கான தேவையை அகற்றி படிப்படியாக முழுவதுமான இலத்திரணியில் பதிவுருக்கள் பராமரிக்கும் செயற்பாட்டு அலகுகளுக்கு நகரும். இந்த தொடர்ச்சியான ஈடுபாடானது 2019/20 நிதியாண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் பூச்சிய தாள் பதிவுருக்களுடன் விமான நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படும். அதேசமயம் முறைமைப்படுத்தல் அங்கங்களின் ஆவண தேக்கி வைத்தலுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

### குழு தரவுப் பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் ஆளுகை

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் த.தொ. முறைகள் 2019/20 நிதியாண்டில் சர்வதேச நியமங்கள் மற்றும் சான்றிதழளித்தலுடன் தொடர்ச்சியாக இணங்கியொழுகியுள்ளன. ISO/IEC 27001:2013 ஸ்ரீலங்கன் குழுமத்திற்கான தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், த.தொ. பிரிவுக்கான ISO/IEC 20000:2018 த.தொ. சேவை முகாமைத்துவம், மென்பொருள் அபிவிருத்திக்கான ISO 9001:2015 தரம் முகாமைத்துவ முறை என்பனவாகும். மேலும், விமான நிறுவனத்தின் செயற்பாடுகள் ஐரோப்பிய யூனியன் பொதுவான தரவு பாதுகாப்பு முறைமைப்படுத்தலின் வழிகாட்டிகள் மற்றும் பரிந்துரைகளைச் சந்திப்பதற்காக தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டன. இவை பயணியின் பிரயாணம் முழுவதும் தரவு பாதுகாப்பு மற்றும் இரகசியம் என்பவற்றிலான அழுத்தத்துடன் மேற்கொள்ளப்பட்டன.

### தொழில்நுட்பத்தினால் வலுவளிக்கப்பட்ட விமான நிறுவனத்தின் பணியாட்கள்

ப.ச.வி. இல் பயணிகள் சேவைகளுக்கான மொழி பெயர்ப்பு சேவைகள் ஸ்ரீலங்கன் த.தொ. முறைகளின் எண்மின் நிலை உருமாற்றல் குழுவினால் விநியோகிக்கப்பட்ட மற்றுமோர் மைல்கல்லாகும். ப.ச.வி. இல் உள்ள பயணிகள் சேவைக் குழுவானது தற்போது பயணிகளது சொந்த மொழி தொடர்பாடலினை மெய்நேர மொழிபெயர்க்கும் வசதியான தொழில்நுட்பத்தினால் வலுவளிக்கப்பட்டுள்ளார்கள். இது பயணிகளுடனான மொழித் தடைகளை குறைத்து சிறந்த ஊடாட்டத்துடன் சிறப்புச் சேவைகளை மேம்படுத்தியது.

ப.ச.வி. இல் உள்ள விமானநிலைய சேவை விநியோகத்திற்கான கணியத்தினூடாக வீசா சரிபார்த்தல் சேவையிலான முதலாவது ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டது. இது புறப்படுவதற்கு ஆயத்தமாகும் செயல்முறையின் பயணிகள் ஏற்றுக்கொள்ளல்

நேரத்தினை குறைக்கும். இது வாடிக்கையாளர் விமான நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டதுடன், இதன் மூலம் அனுமதிக்க முடியாத பயணிகளின் எண்ணிக்கையினை குறைப்பதற்கு பங்களிப்பு செய்ததுடன், மீளாய்வாண்டில் அனுமதிக்க முடியாத பயணிகள் தொடர்பான தண்டப்பணங்களைக் கணிசமானளவு குறைத்ததுடன் விமான நிறுவனத்திற்கான பாரிய தண்டச் செலவினைக் குறைப்பதற்கும் பங்களித்தது.

## பாராட்டுக்கள் மற்றும் விருதுகள்

SLT Zero One விருதுகள் - 2020 வைபவத்தில் ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் அதன் குழுவினது ஆற்றல்கள் மற்றும் புத்தாக்கங்களுக்காக பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இவர்கள் "கைப்பேசியின் சிறப்பான பயன்பாடு" பிரிவில் ஒட்டுமொத்த வெற்றியாளர்களாக வந்ததுடன் பின்வரும் விருதுகளையும் பெற்றார்கள். வானறை பணியாள் பிரயாண அறிக்கை கைப்பேசி பிரயோகத்திற்கான "கைப்பேசியின் சிறப்பான பயன்பாடு" பிரிவின் வெற்றியாளர், i-Fleet கைப்பேசி பிரயோகத்திற்கான "கைப்பேசியின் சிறப்பான பயன்பாடு" பிரிவின் வெற்றியாளருக்கு அடுத்த 1ஆவது ரனர்அப், சாரிக்காவுக்கான "சிறந்த எண்மின் நிலை இயலுமையாக்கும் சாதனம்" பிரிவில் வெற்றியாளருக்கு அடுத்து 1 ஆவது ரனர் அப் என்பனவாகும். மேற்கூறப்பட்ட அனைத்து சாதனங்களும் த.தொ. குழுவினால் உள்வாரியாக விருத்திசெய்யப்பட்ட புத்தாக்கங்கள் என்பதுடன் இது SLT Zero One விருதுகள் போட்டித்தொடரில் ஸ்ரீலங்கன் த.தொ. இரண்டாவது தடவையாக அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கும் மேலாக, ஸ்ரீலங்கன் த.தொ. முறைகள் தேசிய ஐஊவு விருதுகள் - லேஞஞுயு 2019 வைபவத்தில் "உள்வாரி பிரயோகப்" பிரிவில் இரண்டு உள்ளகத்தே விருத்தி செய்யப்பட்ட ஐஊவு தீர்வுகளுக்கு வெண்கல மற்றும் தகுதி விருதுகளை வென்றமைக்காக அங்கீகரிக்கப்பட்டது. வெண்கல விருதானது ை-குடநநவ கைப்பேசி பிரயோகத்திற்காக வழங்கப்பட்டதுடன், இது ஸ்ரீலங்கன் வானூர்தியின் 360 பாகை புலப்படுதலைக் கொண்டுவரும் முற்றாக ஒன்றிணைக்கப்பட்ட கைப்பேசிமூலமாக பதிலளிக்கும் செயற்பாட்டு முறையாகும். சாரிக்கா பிரயோகத்திற்கு ஒரு தகுதி விருதானது வழங்கப்பட்டது. இது பணியாட்களுக்கு சுய சேவை டிக்கட் வழங்கலினை இயலுமையாக்கியதுடன் விமான நிறுவனத்தின் பணியாட்களுக்கு டிக்கட் வழங்கல் செயல்முறையினை ஓர் முற்றான கடிகார சுற்று முழுவதும் தன்னியக்க எண்மின் சேவை கிடைக்கும் வண்ணம் உருமாற்றியது.




விருது வென்ற 'i-Fleet' கைப்பேசி பிரயோகம்



விருது வென்ற "வானறை பணியாள் பிரயாண அறிக்கை" கைப்பேசி பிரயோகம்

## மனித வளங்கள் முகாமைத்துவம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனித வளங்கள் பிரிவானது மற்றுமோர் சவால்மிக்க ஆண்டினை வெற்றிகரமாக கடந்து சென்றது. இது பல முக்கியமான மைல்கற்கள் மற்றும் சாதனைகள் என்பவற்றுடன் கம்பனியின் தோற்றம் மற்றும் பரப்பப்படும் புதுப்பிக்கப்பட்ட தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு என்பவற்றால் இயக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 40 வருடங்கள் சேவையாற்றியுள்ளதுடன், தொடர்பாடல் மற்றும் ஈடுபாட்டினால் முன்நிலைப்படுத்தப்படும் பிரசாரங்கள் சிரேஷ்ட, நீண்டகால சேவையாற்றிய பணியாளர்களுக்கு பாராட்டுக்களை வெளிப்படுத்துவதுடன் கம்பனிக்கு அவர்களது அயராத சேவைக்கு மதிப்பளித்து அடுத்த தசாப்தத்திற்கு அவர்களால் வழங்கப்படும் பாரம்பரியங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நிகழ்த்தும் கலைகள் சங்கமானது (ஸ்ரீ.எ.ந.க.ச.), தொடர்பாடல் மற்றும் ஈடுபாட்டுக் குழுவினால் இயக்கப்பட்டது, அனைத்து பிரிவுகளிலுமுள்ள பணியாட்களை ஊக்குவித்து, இத்துறையினை மிகவும் பாதித்த பொருளாதார சவால்களில், விசேடமாக ஏப்ரல் 2019 இல் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து, அவர்களது மனவுறுதி மற்றும் உத்வேகத்தினை அதிகரிக்கக்கூடியதாயிருந்தது. இக்குழுவானது இந்த மேடைகளைப் பயன்படுத்தி பணியாட்களிடையே மாத்திரமின்றி எமது சமூகத்தினிடையே ஒற்றுமை மற்றும் திடநம்பிக்கையினை உயர்த்தியது. தொடர்பாடல் மற்றும் ஈடுபாட்டுக் குழுவானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் குழுவுடன் இணைந்து வெசக் போயா கொண்டாட்டங்கள் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை ஊக்குவித்தது. உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமைச் செய்தியினை பரப்புவதற்கான "வெசக் பக்தி கீதங்கள்" நிகழ்ச்சித்திட்டம் வருடத்தின் முக்கிய நிகழ்வாகும்.

இதற்கும் மேலாக, இக்குழுவானது புதுப்பிக்கப்பட்ட தொலைநோக்கு மற்றும் பணிநோக்கில் பணியாட்களை ஈடுபடுத்துவதற்காக ஓர் இலத்திரணியல் பிரச்சாரம் மற்றும் சுவரொட்டி பிரச்சாரம் என்பவற்றை ஆரம்பித்தது. மேலாக, கடந்த காலாண்டின் இறுதிப் பகுதியில் கோவிட்-19 தொற்றினை வெற்றிகொள்வதற்காக விசேட விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் கொண்டு வரப்பட்டதுடன், இவை நெருக்கடி தொடர்பாடல்களுக்கு ஒத்ததாக, இயங்கலை மேடைகள், அறிவித்தல்கள் மற்றும் செய்தியிடல்கள் என்பவற்றை பயன்படுத்தி சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை கவனத்திற் கொண்டுவந்தது.

ஓர் இயங்கலை ஆலோசனை மேடையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது எமது பணியாட்களின் மன நலனின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு கோவிட்-19 தொற்றின் போது சிரமமான நேரங்களை அனுபவித்தவர்களுக்கு உணர்வுபூர்வமான உறுதுணையினை வழங்குவதற்காகும்.

புத்தாக்கம் மற்றும் மறுகண்டுபிடிப்பு என்பவற்றை வலியுறுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு Blue Ocean Strategy எனப்படும் போட்டித்தன்மையற்ற மூலோபாயத்தில் ஒரு செயலமர்வானது நடாத்தப்பட்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இரண்டு தசாப்பதங்களாக மிகவும் பலம்வாய்ந்த விமான நிறுவனங்களுடன் போட்டித்தன்மை நிறைந்த சந்தைகளில் போட்டியிட்டது. இவர்கள் எமது சந்தை வெளியினுள் ஊடுருவியுள்ளதன் காரணமாக சில பிராந்தியங்களிலிருந்து நாம் விலகிவிடும் தீவிரமான வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ்,

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி

"நீடிப்புத்திறனுடைய போட்டித்தன்மையற்ற கருத்துக்கள்" கம்பனியின் பெறுமதியினை அதிகரிப்பதற்காக அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வணிக மூலோபாயங்களைப் பொறுத்தளவில் போட்டித்தன்மையற்ற மூலோபாயத்தினை அமுல்படுத்தும் கொடிய தேவையானது இனங்காணப்பட்டது.

பொறியியலுக்கான குறைந்த உருமாற்றல் திட்டங்கள் என்ஜினியரிங்கிலுள்ள ஆற்றலுள்ள மாற்றல் முகாமையாளர்களை விருத்திசெய்வதனை முன்னிறுத்தியதுடன், இது குறைவான ஆறு சிக்மா முகாமைத்துவக் கருத்து மற்றும் நுட்பங்களை பயன்படுத்தி நிறுவன சிறப்பியல்பு முன்னெடுப்புகளுக்கு வசதியளிப்பதற்காகும். இது செலவினைக் குறைப்பதனூடான போட்டித்தன்மை நலனை அடைதல், முன்னீட்டு நேரத்தினை குறைத்து தரத்தினை மேம்படுத்தல் ஆகியவற்றை அடைவதற்கு கம்பனியின் ஒவ்வொரு தனிநபரையும் இயக்குவதில் அழுத்தத்தினை பிரயோகித்தது.

விமான நிலையத்தின் முகாமைத்துவ மட்டத்தினருக்கான "சவால் மிக்க நேரங்களில் வழிநடத்தல்" நிகழ்ச்சித்திட்டமானது வரையறுக்கப்பட்ட வளங்களுடன் சவால்மிக்க நேரங்களிலும் கூட உயர்வான வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்கான தலமையேற்றல் திறன்களை கட்டியெழுப்புவதில் முன்னிறுத்தியது. வணிக சவால்கள் எதுவாக இருப்பினும், எமது பயணிகளுக்கு தவறற்ற வாடிக்கையாளர் சேவையினை வழங்குதல் மிகவுயர்ந்த முக்கியத்துவமாகும்.

பொறியியல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறமை அபிவிருத்தியானது பட்டப்படிப்பின் பின்னராக முகாமைத்துவ நிருவகத்துடன் E-3/L-3 மட்டங்களிலுள்ள பொறியியல் முகாமையாளர்களுக்கு நிறுவனத்தினுள் துறைசார் நிபுணர்களாக சீர்படுத்துவற்காக மற்றும் அபிவிருத்திசெய்வதற்காக நடாத்தப்பட்டது. இது கம்பனியின் அடுத்த மட்டத்திலான தலைமைத்துவத்தினை செயற்திறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும பொறுப்பேற்பதற்காகும்.

விமான நிலையம் மற்றும் சரக்கு ஆற்றல் தொகுப்பு, விமான நிலையம் மற்றும் சரக்கு பிரிவுகளிலுள்ள தலைமைத்துவமின்மையினை சந்திப்பதற்கு தலைமைத்துவ வழியினை தயார்படுத்துவதற்காக நடாத்தப்பட்டது. பிரிவுகளுக்கு "புதிய இரத்தம் உட்செலுத்துதல்" முக்கியமாகையினால் ஆற்றல் தொகுப்பு அங்கத்தவர்கள் கம்பனியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டார்கள். அவர்கள் ஓர் விரிவான பயற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை 08 மாதங்களில் பின்வரும் தலைப்புகளில் பின்பற்றினார்கள். தொழில்நுட்ப திறன்கள், மென் திறன்கள் மற்றும் பணியிலான பயிற்சி என்பவற்றை உள்ளடக்கியதுடன், அவர்களது இறுதி மதிப்பீடாக கற்றவற்றை பிரயோகித்து பிரிவுகளினால் முகங்கொடுக்கும் சமகால சவால்களுக்கான தீர்வுகளை தெரிவிக்கின்ற ஓர் திட்ட சமர்ப்பிப்பினை நிறைவு செய்தார்கள்.

இதற்கும் மேலாக, மனித வளங்கள் பிரிவானது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் விமானநிறுவனம் முகங்கொடுத்த பொருளாதார தாக்கத்தின் காரணமாக கம்பனியானது வரையறுக்கப்பட்ட வளங்களுடன் செயலாற்றுவதற்கான சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததனால் மக்கள் வகைமுறை மற்றும் உகப்பாக்கம் தேர்வினை செய்தது. இப்பிரிவானது பரஸ்பரமான உற்பத்தித்திறனுடன் மனித வளங்களை உகப்பாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. இந்த கருத்தாகத்தில், பின்வரும் முன்னெடுப்புகள் "மக்கள் வகைமுறை மற்றும் உகப்பாக்கம்" எனும் தூணின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

- வெளிவாரி ஆட்சேர்ப்புக்களை வரையறுத்தல், உள்வாரியாக வளர்ச்சியடைந்த ஆற்றல்களூடாக ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்வதனை முன்னிறுத்தல்
- பணி மீள்வடிவமைத்தல், ஒன்றிணைத்தல், தன்னியக்கமயமாக்கல் மற்றும் சேனை எண்ணிக்கையினை உகப்பாக்குவதற்காக புதிய வேலை வடிவங்களை அறிமுகப்படுத்தல் போன்ற சேனை உகப்பாக்க முன்னெடுப்புகளில் பணியாற்றல் மற்றும் தொடர் முகாமையாளர்களுடன் ஈடுபடல்
- இயல்பான தேய்வினை பயனுள்ளவாறு முகாமைப்படுத்தல்

### ஏற்பாட்டியல் மற்றும் சொத்துக்கள்

2019/20 ஆம் நிதியாண்டானது ஏற்பாட்டியல் மற்றும் சொத்துக்கள் பிரிவிற்கு இறுக்கமான பாதீட்டுக் கட்டுப்பாடுகளின் மத்தியில், எதிர்பார்த்த வழங்கக்கூடியவைக்கு எதிராக, இன்னுமோர் சவால்மிக்க ஆண்டாகும்.

ஓர் செயற்பாட்டு கண்ணோட்டத்தில், செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டதுடன் சேவை மட்டங்களில் நீர்த்தலின்றி, விரயமானது குறைக்கப்பட்டது. இது பின்வருவனவற்றின் மூலம் பெறப்பட்டது. மின்சாரக் கட்டணம் 6%ஆல் குறைக்கப்பட்டது, ரூபா 52 மில்லியன் செலவு சேமிப்புடன் கொழும்பினைத் தளமாகக்கொண்ட பணியாட்கள் கட்டுநாயக்காவிற்கு மாற்றப்பட்டமை, ப.ச.வி. விரிவாக்கல் திட்டத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு ஓர் புதிய இடத்திற்கு பேரளவு களஞ்சிய சாலையினை (UL சுங்கப்பிணைய களஞ்சியசாலை) இடமாற்றியமை, போக்குவரத்து மையத் தொகுப்பின் ஏற்பாட்டியல் செயற்பாட்டு வடிவங்களது மறுசீரமைப்பானது செலவுகளை ரூபா 10 மில்லியனால் குறைத்துள்ளதுடன், வெளியிலிருந்தான மனிதவளப் பயன்பாட்டினை அண்ணளவாக 40%ஆல் குறைத்தமை என்பனவாகும்.

## சமூக ஈடுபாடு

### ஸ்ரீலங்கனது அக்கறை

குழந்தை, கோளம் மற்றும் ஆற்றல் போன்ற பிரிவுகளில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கூட்டாண்மை சமூக பொறுப்பு அங்கமான ஸ்ரீலங்கனது அக்கறையானது சமுதாயத்தினது சமூகவியல், கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான நியமங்களை உயர்த்துவதற்கான திட்டங்களை மேற்கொள்கின்றது. பின்வருவன தொடர்பான திட்டங்கள் நாட்டின் நீடிப்புத்திறனுடைய அபிவிருத்தி இலக்குகளை (நீ.அ.இ.) தழுவியுள்ளன. □நல்ல ஆரோக்கியம் மற்றும் நலன்", □தரமான கல்வி□ மற்றும் □சுத்தமான தண்ணீர் மற்றும் துப்புரவு□ என்பவையாகும்.

நீ.அ.இ. இன் தரமான கல்வியுடன் ஒத்ததாக ஸ்ரீலங்கனது அக்கறை குழுவானது □திவி ஜய மக□ எனும் விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவேற்றியது, ஓர் கல்வி முகாமினை திம்புலாகல அரலகன்வில மஹா வித்தியாலயத்தில் 2019 செப்டம்பர் 13 முதல் 15 வரை நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தரங்கள் 8, 9, மற்றும் 10 இனைச் சேர்ந்த 100 மாணவர்கள் பங்கேற்றார்கள். இது முழுமையான குழுவினை கட்டியெழுப்பும் ஒரு நாள், தனித்தன்மை மற்றும் தலைமைத்துவ விருத்தி, கைப்பணி, அவசியமான தொடர்பாடல், சூழல் சிறந்த நடைமுறைகள் மற்றும் முதலுதவி போன்றவற்றில் வகுப்பு அமர்வுகளும் நடாத்தப்பட்டன. இதனை பங்குபற்றுநர்கள் கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வளமூட்டியாகவும், அனுகூலமாகவும் கருதினார்கள்.

அடுத்த சந்ததி வான்வழி தொழில்வல்லுநர்களை வளர்க்கும் மற்றும் விமான நிறுவனத் துறைக்கு நம்பிக்கை வைக்கக்கூடிய நுழைவு மட்ட ஆற்றல் வழியினை கட்டியெழுப்பும் தொலைநோக்கினால் வழிநடத்தப்பட்டு 'பாடசாலையிலிருந்து உலகத்திற்கு'- வான்வழி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கும் மேலாக, புளூ

ரோஸ் கல்லூரி கண்டி மற்றும் மொனராகலை மதுல்மினி ஆரம்ப பாடசாலை என்பவற்றுக்கு கல்வியியல் பழக்கப்படுத்தல் சுற்றுலாக்கள் நடாத்தப்பட்டன.

நீ.அ.இ. இன் நல்ல ஆரோக்கியம் மற்றும் நலன் இற்கு ஒத்தாற்போல் ஸ்ரீலங்கனது அக்கறையானது ஏமிலி மற்றும் டேனியல் லின்சே நிறுவனம் - ஐக்கிய இராச்சியம் உடன் ஒன்றிணைந்து உள்ளூர் மருத்துவ வசதிகளை விருத்திசெய்வதற்கு ஆர்வமுள்ள இலங்கையின் 9 மருத்துவ மனைகளுக்கு "நோயாளர் மாற்றல் தள்ளுவண்டி கட்டில்களை" ஓர் விசேட நன்கொடையாக வழங்கியது. இது 2010 டிசம்பர் 29 இல் ஆரம்பிக்கப்பட்டது. நாடுபூராவுமுள்ள இந்த 9 மருத்துவ மனைகளுக்கு ஏமிலி மற்றும் டேனியல் லின்சே நிறுவனம் 100 கட்டில்களுக்கு நிதியளிப்பதற்கு உறுதி வழங்கியது.

மேலும், ஸ்ரீலங்கனது அக்கறையானது சங்ரிலாஸினது அம்பாந்தோட்டை கோல்ஃப் ரிசோட் அன்ட் ஸ்பா உடன் ஒன்றிணைந்து தொடர்ந்தும் 3ஆவது ஆண்டாக 9 ஜூன் 2019 இல் அம்பாத்தோட்டையின் தெஹிகஹாலந்தவிலுள்ள தேவையுடைய சமூகத்திற்கு ஓர் விசேட மருத்துவ முகாமினை நடாத்தியது.

ஸ்ரீலங்கனது அக்கறை குழுவினால் முன்னெடுக்கப்படும் பல சமூகத் திட்டங்களில் பணியாட்களில் பெருந்தன்மை, அக்கறை தகமைகளை அவர்களது மனதில் பதியவைப்பதற்காக ஐந்து 'அக்கறை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்' வானறை பணியாள் அங்கத்தவர்களுடன் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வெலிசரயில் தெவ்சிரி செவன முதியோர் இல்லம், கந்தானையில் வின்சன்ட் டி போல் முதியோர்களுக்கான இல்லம், நீர்கொழும்பில் புனித ஜோசப் குழந்தை அபிவிருத்தி மையம் மற்றும் மொரட்டுவவில் மொரட்டுவ ஜனதார முதியோர் இல்லம் என்பவற்றில் இவை இடம்பெற்றன. பார்வையற்றவர்களுக்கான இலங்கை நலன்புரி சங்கம் மற்றும் குலியாபிட்டியவிலுள்ள பார்வை குன்றிய பெண்களுக்கான இலங்கை நலன்புரி ஒழுங்கமைப்பு என்பவற்றால் ஒழுங்குசெய்யப்பட்ட வெள்ளை பிரம்பு தின நிகழ்ச்சிக்கு ஸ்ரீலங்கனது அக்கறை குழுவும் பங்களித்தது.

1 ஒக்டோபர் 2019 இல் ஸ்ரீலங்கனது அக்கறையானது கோல் வேஸ் ஹோட்டல் மற்றும் ஈபர்ட் சில்வா ஹொலிடேசுடன் ஒன்றிணைந்து, அழிவு விளைவித்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளினால் நேரடியாக பாதிக்கப்பட்ட, நீர்கொழும்பு கட்டுவாபிட்டியவிலுள்ள 115 குழந்தைகளுடன் உலக குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கு ஒரு நாள் முழுவதுமான நடவடிக்கைகள் ஊக்கமூட்டும் கல்வியின் அடிப்படையில் அதிர்ச்சிக்குப் பின்னரான சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

## சூழலிலான முன்னிறுத்தம்

ஓர் பொறுப்புள்ள கூட்டாண்மை நிறுவனம் என்ற வகையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அதன் சூழல் முன்னெடுப்புகளை ' கோளம் நட்பான ஸ்ரீலங்கன்'குறிக்கோளுடன் நிறுவியதுடன், சர்வதேச வான்வழி போக்குவரத்துச் சங்கத்தினால் பிராந்தியத்திலேயே பாதுகாப்பு மனம்கொண்ட விமான நிறுவனம் என எந்நேரமும் புகழப்படுகின்றது. தினசரி செயற்பாட்டில் சிறந்த நடைமுறைகளை உட்புகுத்தல் மற்றும் சூழல் கொள்கைகளினால் பலப்படுத்தப்பட்டு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பின்வருவனவற்றை முன்னிறுத்தி அதன் சூழல் நிகழ்ச்சி நிரலில் எப்போதும் பெருமையடைகின்றது. பசுமை இல்ல வாயு வெளியிடல் கட்டுப்பாடு, ஐக்கிய நாடுகள் நீடிப்புத்திறனுடைய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் என்பனவாகும்.

மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில், சூழல் பாதுகாப்பில் மாத்திரம் முன்னிறுத்தப்படும் முன்னெடுப்புகளில் உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் கூட்டிணைந்து குழுவானது ஈடுபட்டது. அத்தகைய ஒரு கூட்டிணைப்பாக கொக்கா கோலா ஸ்ரீலங்காவுடனான அவர்களது "வாழ்க்கையை மீள வழங்குங்கள்" திட்டத்துடன் இணைந்தமையாகும். இத்திட்டமானது துணிகளுக்கான நூல்களை உற்பத்திசெய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ப்ளாஸ்டிக் போத்தல்களது மீள்சுழற்சி திட்டமாகும். இதற்கும் மேலாக, விமான நிறுவனமானது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் பின்வரும் திட்டத்தில் மிக நெருக்கமாக பணியாற்றுகின்றது. இது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் பொலிதீன் மற்றும் ப்ளாஸ்டிக் பாவனையினை தீர்மானிக்கும் திட்டம் என்பதுடன் இது ஓர் பாதுகாப்பு முயற்சியாகவும் மாணவர்களுக்கு கைத்தொழில் பயிற்சி வாய்ப்பாகவும் காணப்பட்டது. மேலும், இவ்விரண்டு திட்டங்களும் விமா நிறுவனத்தின் '#SayNo2plastics' 'ப்ளாஸ்டிக்குக்கு இல்லை என்று சொல்லுங்கள்' பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும் என்பதுடன், இது செயற்பாட்டில் ஒற்றை பயனுடைய ப்ளாஸ்டிக்கின் பயன்பாட்டினை குறைப்பதில் கவனஞ்செலுத்தியது.

அதன் செயற்பாடுகளுக்கும் அப்பால், விமான நிறுவனமானது சர்வதேச வான்வழி போக்குவரத்து சங்கம் மற்றும் ஒரு உலக கூட்டுறவின் சூழல் குழுக்களுடன் சூழல் முன்னெடுப்புகளில் நெருக்கமாக பணியாற்றுகின்றது. 'பசுமை பறத்தல்' திட்டமானது மிகவும் பிரசித்திபெற்ற வாடிக்கையாளர் ஈடுபாட்டு திட்டங்களில் ஒன்றாக எடுத்துக்காட்டப்படலாம். இது விமான நிறுவனத்தின் பயணிகள் கரிமம் ஈடுசெய்தல் முன்னெடுப்பாகும், இங்கு விமான நிறுவனத்தின் வானூர்தி தொடர்பான கரிமம் அடிச்சுவடுகளை ஈடுசெய்வதற்காக பயணிகள் இலங்கையில் ஓர் சிறிய நீர்மின் உற்பத்தித் திட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றார்கள்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தேசிய விளைவுகளுக்கு உதவிசெய்து பங்களிப்பது விமான நிறுவனத்தின் கடமை என நம்புகின்றது. எனவே, அந்தக் குறிப்புடன், இலங்கை தரைப்படையின் முன்னெடுப்பான, 'துரலிய வெனுவென் அபி' க்கு அதன் உறுதுணையினை வழங்குவதற்கு உறுதிசெய்துள்ளதுடன், உலக சூழல் தினம் 2019 இல் 'வில்பத்துக்கான ஒரு செடி' திட்டத்தினை முன்னெடுத்தது. இது ஓர் பணியாட்களின் ஈடுபாட்டு திட்டம் என்பதுடன், பணியாட்கள் வில்பத்து தேசிய பூங்காவின் ஒரு பகுதியில் மீள்நடுகை செய்வதற்கு பங்களித்தார்கள்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களிலான பிரயோகிக்கப்படும் அனைத்து சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை சந்தித்து அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு கடப்பாடுடையதாயுள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பயணிகள் கரிமம் ஈடுசெய்தல் பொறிமுறையான ' பசுமை பறத்தல்', உலகின் சூழல் நடவடிக்கைகளின் 100 விடயங்களாவதுடன், இது 1352 தொன் $CO2$ (கரிமம் ஈருயிரகம் சமனானவை) மீளாய்வாண்டில் ஈடுசெய்தது. இத்திட்டமானது அதன் தரம் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றுக்காக உலகப் பிரசித்திபெற்ற சரிபார்ப்பவர்களான த.உ.நி.(தர உறுதிப்படுத்தல் நியமம்) இனால் தொடர்ச்சியாக சரிபார்க்கப்படுவதுடன் சர்வதேச வான்வழி போக்குவரத்துச் சங்கத்தினால் பல தடவைகள் பாராட்டப்பட்டன. மேலும், 'பசுமை பறத்தல்' ஈடுசெய்தல் திட்டமான சிறிய அளவிலான அடவிகந்த சிறிய நீர்மின் வலு திட்டத்தில் முதலீடு செய்துள்ளது. இலங்கையில் ஆற்றின் போக்கிலான நீர்மின் நிலையம் புதுப்பிக்கத்தக்க வலுவினை உற்பத்தி செய்கின்றது. இது 13,000 தொன்கள் பசுமைஇல்ல வாயுகளைத் தவிர்ப்பதனூடாக ஒவ்வொரு வருடமும் இலங்கையின் தேசிய மின்தொகுப்பிற்கு 20 கிகாவாட் மணித்தியாலம் சுத்தமான மின்சாரத்தினை உருவாக்குகின்றது.


A330-300
SriLankan



# நிதி அறிக்கைகள்


பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 44

சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 2019/2020 48

பணிப்பாளர்களின் பொறுப்புக்களிலான கூற்று 49

சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை 50

நிதி நிலைமைக் கூற்று 54

இலாப நட்டக் கூற்று 55

விரிவான வருமானக் கூற்று 56

உரித்துவத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று 57

காசுப்பாய்ச்சல் கூற்று 58

நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 59

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபையானது 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

## பிரதான நடவடிக்கைகள மற்றும் வணிக மீளாய்வு

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள் பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சர்வதேச, அட்டவணைப்படுத்தப்பட்ட /அட்டவணைப்படுத்தாத விமானச் சேவைகளை செயற்படுத்துதல் மற்றும் சரக்கு மற்றும் அஞ்சல் என்பவற்றை எடுத்துச்செல்வதற்கு இலங்கையின் குறிப்பிடப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.க.வி.) என்பவற்றில் வான் முனைச் சேவைகளையும், விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன கம்பனியின் ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாந் தரப்பு விமானங்களுக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், விமான செயற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் மற்றும் வான்வழி தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும். நிதியாண்டில் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை. குழுமம் என்பது கம்பனியினையும் முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட அதன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கினையும் உள்ளடக்குகின்றது. கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை என்னவெனில், ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. ஊடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள்ளான உணவக வசதிகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகள் பொது மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான உணவகங்களை செயற்படுத்துதல் மற்றும் சலவை செய்யும் சேவைகளை வழங்குதல் மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றினை முகாமைப்படுத்தல் என்பனவாகும்.

## நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர்களது அறிக்கை

பிரதம நிதியியல் உத்தியோகத்தர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிறைவான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவை இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 59. இலிருந்து 103. வரை வழங்கப்பட்டுள்ளன.

## குழுமத்தின் புரள்வு

குழுமத்தின் புரள்வானது ரூபா 183,532 மில்லியன் ஆக (2018/19 : ரூபா 184,097 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் புரள்விலான விரிவான பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 21 இல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் அதன் முழு உரித்துவத்தையுடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் நியாய சந்தை விலைகளில் நடாத்தப்பட்டன.

## விளைவுகள்

குழுமத்தின் வருடத்திற்கான வரிக்குப் பிந்திய தேறிய நட்டமானது ரூபா 44,139 மில்லியன் ஆகும் (2018/19: ரூபா 41,700 மில்லியன்). குழுமத்தின் வரிச்செலவினமாக ரூபா 35 மில்லியன் காணப்பட்டது (2018/19: ரூபா 73 மில்லியன்). வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பக்கம் 55. இல் வழங்கப்பட்டுள்ளது.

## குழுமத்தின் முதலீடுகள்

இவ்வருடத்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிலான குழுமத்தின் மூலதனச் செலவினமாக ரூபா 662 மில்லியன் காணப்பட்டது (2018/19: ரூபா 1,070 மில்லியன்).

## ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

அறிக்கையிடும் திகதியிலான குழுமத்தின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 8,450 மில்லியன் ஆகும் (2018/19: ரூபா 10,222 மில்லியன்). ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மற்றும் அவற்றின் அசைவுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 4 இல் வழங்கப்பட்டுள்ளன.

## கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 51,617.44 மில்லியன் ஆகும் (2018/19: ரூபா 51,617.44 மில்லியன்).

## ஒதுக்கங்கள்

31 மார்ச் 2020 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் எதிர்மறையான ரூபா 312,791 மில்லியன் ஆகும் (2018/19: எதிர்மறை ரூபா 219,729 மில்லியன்). இவை திரண்ட நட்டங்களாக ரூபா 316,478 மில்லியனையும் (2018/19: ரூபா 223,489 மில்லியன்), மூலதன ஒதுக்கங்களாக ரூபா 3,687 மில்லியனையும் (2018/19: ரூபா 3,760 மில்லியன்) உள்ளடக்கியிருந்தன. இந்த ஒதுக்கங்களிலான அசைவுகள் நிதிக் கூற்றுக்களில் உரித்துவத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## கூட்டாண்மை நன்கொடைகள்

குழுமமானது இவ்வாண்டில் ரூபா 0.42 மில்லியன் தொகைக்கு நன்கொடைகளை மேற்கொண்டது (2018/19: ரூபா 8.75 மில்லியன்).

## வரிவிதிப்பு

இலங்கையின் முதலீட்டு சபையுடனான அதன் உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியானது 31 மார்ச் 2013 வரை ஓர் வரி விடுமுறையினை அனுபவித்தது. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இறைவரி (திருத்தியது) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான ஏற்பாடுகளின் கீழ் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலான அனைத்து வரி விதிப்புகளிலிருந்தும் 31 மார்ச் 2021 வரை விலக்களிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்புடையதாயுள்ளது. தற்போது இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகள் காணப்படாத நாடுகளில் அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் கம்பனியானது வரிக்கு பொறுப்புடையதாயுள்ளது. துணை நிறுவனமான, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இலங்கை முதலீட்டு சபையுடனான உடன்படிக்கையின் பிரகாரம் 30 மே 2021 வரை ஓர் வரி விடுமுறையினை அனுபவிக்கின்றது. தற்போது, விமானச் சமையலறை, கடந்து செல்வோருக்கான உணவகம், கடந்து செல்வோருக்கான ஹோட்டல், விமான நிலையத்தின் சலவையகம் மற்றும் நுமு ஓய்விடம் என்பவற்றின் செயற்பாடுகளிலிருந்து உழைக்கும் தேறிய இலாபத்தில் 30 மே 2021 வரை வருமான வரியிலிருந்து முற்றாக விலக்களிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், தேறிய இலாபமானது மேலும் 8 வருடங்களுக்கு 30 மே 2029 வரைக்கும் சலுகை வீதமான 15% இல் வரிக்கு பொறுப்புடையதாயிருக்கும். பொது உணவகம், வெனிலா பொட் உணவு விற்பனை நிலையங்கள், செமொந்து உணவகம் மற்றும் உள்ளூர் சலவையகம் ஆகியவற்றிலிருந்து உழைக்கும் தேறிய இலாபம் மற்றும் ஏனைய வருமானங்கள் நடைமுறையிலுள்ள வரி வீதமான 28% இல் வருமான வரிக்கு பொறுப்புடையதாயிருக்கும்.

### பங்குத் தகவல்கள்
31 மார்ச் 2020 இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் பின்வருமாறு:

| பங்கு உரித்துவம் | பங்குகளின் எண்ணிக்கை | % உரித்துவம் |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 511,574,169 | 99.11% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0. 36% |
| ஏனையோர் | 2,736,510 | 0. 53% |

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு
கம்பனி அனைத்து நேரங்களிலும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிசெய்கின்றது. இணக்கப்பாட்டிற்கான முகாமைத்துவ உத்தியோகத்தர் கணக்காய்வு குழுவினது காலாண்டு கூட்டங்களில் இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிக்கின்றார்.

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்
தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 30 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்
31 மார்ச் 2020 இல் உள்ளவாறான எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் அதே திகதியிலான மூலதனச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 27 இல் வழங்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்
நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 29 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்துவதற்கு தேவையான எவ்விதமான சூழலும் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து எழவில்லை.

### மனித வளம்/பணிக்கமர்த்தல் கொள்கைகள்
கம்பனியானது தொடர்ந்தும் மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்வதுடன் புதிய வணிக முன்னுரிமைகளுடன் சீரமையப்பட்ட பயனுறுதிமிக்க சேனையினை அமுல்படுத்துகின்றது. இது கம்பனியின் எதிர்கால வெற்றிக்கு தேவையான திறன் மற்றும் அறிவினை அதன் பணியாட்கள் விருத்தி செய்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தவும் செய்கின்றது.

குழுமத்தின் பணிக்கமர்த்தல் கொள்கைகள் தனிநபருக்கு மதிப்பளிப்பதுடன் பால், இனம் அல்லது மதத்தினை பொருட்படுத்தாத சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொழில்ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு அவதானத்தினை பெறுகின்றது. வருடத்தின் இறுதியில் கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 6,693 ஆகும் (2018/19 : 6,794) என்பதுடன் அதன் துணை நிறுவனத்தில் இது 1,008 ஆக (2018/19 – 1,050) காணப்பட்டது.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்
பணிப்பாளர்கள், அவர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, பணியாட்கள் மற்றும் அரசாங்கம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இத்திகதி வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றார்கள்.

### சூழல் பாதுகாப்பு
குழுமத்தின் வணிக நடவடிக்கைகள் சூழலில் நேரடியாக மற்றும் மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். சூழலிலான மோசமான விளைவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன் பொருத்தமான அதிகாரசபைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல் என்பன குழுமத்தின் கொள்கையாகும்.

### கூட்டாண்மை ஆளுகை/உள்ளகக் கட்டுப்பாடு
இன்றைய கூட்டாண்மை உலகில் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை கடைப்பிடித்தல் ஓர் அவசியமான தேவைப்பாடாகும். பணிப்பாளர்கள் குழுமத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைக்கு அவர்களது பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றார்கள். இந்த முறையானது, ஏனையவற்றுக்கிடையில், சொத்துக்களின் பாதுகாப்பு, ஒழுங்கான கணக்கீட்டு பதிவுகளை பராமரித்தல் மற்றும் உருவாக்கப்படும் நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மை என்பவற்றில் உறுதிப்பாட்டினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எந்த ஒரு முறையும் தவறுகள் மற்றும் முறைகேடுகள் ஓர் நியாயமான காலப்பகுதியினுள் தடுக்கப்படும் அல்லது கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு நியாயமான விதத்தில் மாத்திரமே உறுதிப்படுத்தமுடியுமே தவிர முற்றிலுமான உத்தரவாதத்தினை வழங்க இயலாது. சபையின் கணக்காய்வு குழுவினது அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பாகமாயுள்ளது. நிதிக் கூற்றுக்களை கையொப்பமிடும் திகதி வரைக்குமான காலப்பகுதியில் உள்ளகக் கட்டுபாட்டு முறையின் பயனுறுதித்தன்மையுடன் சபையானது திருப்தியடைந்துள்ளது.

### நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி
பணிப்பாளர்களது பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு, நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

### பணிப்பாளர் சபை
கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79 ஆம் உறுப்புரைக்கமைய பணிப்பாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய பணிப்பாளர்களது தோற்றுருவத்தின் சுருக்கமானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 10. இலிருந்து 11 வரை வழங்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| திரு. அசோகா காரியவசம் பத்திரகே (தலைவர்) | நியமனம் 16 டிசம்பர் 2019 முதல் |
| திரு. மொஹமட் அஷ்ரவ் ஓமார் | நியமனம் 08 ஜனவரி 2020 முதல் |
| திரு. மலிக் பர்னாந்து | நியமனம் 08 ஜனவரி 2020 முதல் |
| திரு. மனோஹர ரத்னவிபூசன டி சில்வா ஜ.ச. | நியமனம் 08 ஜனவரி 2020 முதல் |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. | நியமனம் 08 ஜனவரி 2020 முதல் |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய | நியமனம் 23 ஜனவரி 2020 முதல் |
| திரு. சன்ஜய மொஹொட்டால | நியமனம் 01 பெப்ரவரி 2020 முதல் |

# பணிப்பாளர் குழுவின் வருடாந்த அறிக்கை தொடர்ச்சி

### கடந்த கால பணிப்பாளர்கள்

01 ஏப்ரல் 2018 இல் ஆரம்பித்த நிதியாண்டில் பின்வரும் பணிப்பாளர்கள் பின்வரும் திகதிகளில் சபையிலிருந்து அவர்களது பதவி விலகல்வரை பதிவியிலிருந்தார்கள்

| | பதவி விலகிய திகதி |
|---|---|
| கலாநிதி. திருமதி. ரொஷான் பெரேரா | 21 ஜுன் 2019 |
| விமானத் தலைவர் மாஷல் (ஓய்வு.)கபில ஜயம்பதி | 22 ஆகஸ்ட் 2019 |
| திரு. சுசந்த கட்டுகம்பல | 12 செப்டம்பர் 2019 |
| திரு. விதானலகே தேஷால் பிரவீன் டி மெல் | 17 நவம்பர் 2019 |
| கனேகம சேன வித்தானகே | 18 நவம்பர் 2019 |
| செல்லம்பொல கெதர செனாரத்ன | 9 டிசம்பர் 2019 |
| திரு. சரோஜின் யொஹான் விஜேசிங்க | 8 ஜனவரி 2020 |
| சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பிரியதர்சின் டி சில்வா | 8 ஜனவரி 2020 |
| திரு. ஏ எம் பி எம் பி அத்தபத்து | 8 ஜனவரி 2020 |
| திரு. ஏ கே டி டி டி அரந்தார | 8 ஜனவரி 2020 |
| திரு. வஜிர குலதிலக | 8 ஜனவரி 2020 |

### மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு

வேதனக் குழுவின் பிரதான குறிக்கோளாகக் காணப்படுவது என்னவெனில், ஓர் வேதனக் கொள்கையின் அபிவிருத்தி மற்றும் ஓர் வேதனக் கட்மைப்பினது நிறுவுதல் என்பவற்றுக்கு ஓர் முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான செயல்முறையினை நிறுவுவதற்கு தலைமை தாங்குவதாகும்.

ஓர் வேதனக் கொள்கையானது சந்தை மற்றும் துறைசார் காரணிகள் மற்றும் குழுமத்திற்கான தனிப்பட்ட செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது தேவையானபோது கூடுகின்றது.

இந்த திகதியில் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது

திரு. மொஹமட் அஷ்ரவ் ஓமார் (தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
திரு. மனோஹர டி சில்வா ஜ.ச.
திரு. சன்ஜய மொஹொட்டால

### கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள்

நிதியாண்டில் திரு. எஸ். ஜி. சேனாரத்ன அவர்கள் 9 டிசம்பர் 2019 இல் அவர் பதவி விலகும் வரை கணக்காய்வுக் குழுவின் தலைவராக இருந்தார். இந்த திகதியில் கணக்காய்வுக் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது.

திரு. சன்ஜய மொஹொட்டால/சார்பு கால தலைவர்
திரு. மலிக் பர்னாந்து
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
திரு. மனோஹர டி சில்வா ஜ.ச.
கலாநிதி. ஹன்ச விஜேசூரிய

கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது ஆண்டறிக்கையின் 48 பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களது கூட்ட வருகைப் பதிவேடு

நிதியாண்டில் பதினைந்து சபைக் கூட்டங்கள் (இரண்டு அவசர கூட்டங்கள் மற்றும் ஒரு விசேட கூட்டம் உள்ளடங்களாக) கூட்டப்பட்டன. பணிப்பாளர்களது வருகையானது பின்வருமாறு

| நிதியாண்டு 2019/2020 காலப்பகுதியில் காணப்பட்ட பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அசோகா பத்திரகே (தலைவர்) | 3/3 |
| திரு. அஷ்ரவ் ஓமார் | 3/3 |
| திரு. மலிக் பர்னாந்து | 3/3 |
| திரு. மனோஹல டி சில்வா ஜ.ச. | 3/3 |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. | 3/3 |
| கலாநிதி. ஹன்ச விஜயசூரிய | 3/3 |
| திரு. சன்ஜய மொஹொட்டால | 2/2 |
| திரு. சுசந்த கட்டுகம்பல (12 செப்டம்பர் 2019 இல் பதவி விலகினார்) | 8/10 |
| விமானத் தலைவர் மார்ஷல் (ஓய்வு) கபில ஜயம்பதி (22ஆகஸட் 2019 இல் பதவி விலகினார்) | 8/10 |
| கலாநிதி. திருமதி. ரொஷான் பெரேரா (21 ஜுன் 2019 இல் பதவி விலகினார்) | 6/6 |
| திரு. தேஷால் டி மெல் (17 நவம்பர் 2019 இல் பதவி விலகினார்) | 3/3 |
| திரு. எஸ் ஜி விதானகே (18 நவம்பர் 2019 இல் பதவி விலகினார்) | 12/12 |
| திரு. எஸ் ஜி சேனாரத்ன (9 டிசம்பர் 2019 இல் பதவி விலகினார்) | 10/12 |
| திரு. யொஹான் விஜேசிங்க (8 ஜனவரி 2020 இல் பதவி விலகினார்) | 10/12 |
| சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா (8 ஜனவரி 2020 இல் பதவி விலகினார்) | 9/12 |
| திரு. ஏ எம் பி எம் பி அத்தபத்து (8 டிசம்பர் 2020 இல் பதவி விலகினார்) | 2/3 |
| திரு. ஏ கே டி டி டி அரந்தார (8 ஜனவரி 2020 இல் பதவி விலகினார்) | 1/2 |
| திரு. வஜிர குலதிலக்க (8 ஜனவரி 2020 இல் பதவி விலகினார்) | 1/1 |

### பணிப்பாளர்கள் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பணிப்பாளர் சபையானது பின்வருமாறு

| | |
|---|---|
| திரு. அசோகா காரியவசம் பத்திரகே (தலைவர்) | நியமனம் 24 ஜனவரி 2020 முதல் |
| திரு. மொஹமட் அஷ்ரவ் ஓமார் | நியமனம் 24 ஜனவரி 2020 முதல் |
| திரு. மலிக் பர்னாந்து | நியமனம் 24 ஜனவரி 2020 முதல் |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. | நியமனம் 24 ஜனவரி 2020 முதல் |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. | நியமனம் 24 ஜனவரி 2020 முதல் |
| திரு. சன்ஜய மொஹொட்டால | நியமனம் 01 பெப்ரவரி 2020 முதல் |

1 ஏப்ரல் 2019 இல் ஆரம்பித்த நிதியாண்டில் பின்வரும் பணிப்பாளர்கள் பின்வரும் திகதிகளில் சபையிலிருந்து அவர்களது பதவி விலகல் வரை பதவியிலிருந்தார்கள்.

| | பதவி விலகிய திகதி |
|---|---|
| கலாநிதி. திருமதி. ரொஷான் பெரேரா | 21 ஜுன் 2019 |
| விமானத் தலைவர் மார்ஷல் (ஓய்வு) கபில ஜயம்பதி | 22 ஆகஸ்ட் 2019 |
| திரு. சுசந்த கட்டுகம்பல | 12 செப்டம்பர் 2019 |
| திரு. விதானலகே தேஷால் பிரவீன் டி மெல் | 17 நவம்பர் 2019 |
| கனேகம சேன வித்தானகே | 18 நவம்பர் 2019 |
| செல்லம்பொல கெதர சேனாரத்ன | 9 டிசம்பர் 2019 |
| சரோஜின் யொஹான் விஜேசிங்க | 24 ஜனவரி 2020 |
| சிரேஷ்ட பேராசிரியர். அர்ஜுன பிரியதர்சின் டி சில்வா | 24 ஜனவரி 2020 |
| திரு. ஏ எம் பி எம் பி அத்தபத்து | 24 ஜனவரி 2020 |
| திரு. ஏ கே டி டி டி அரந்தார | 24 ஜனவரி 2020 |

### பணிப்பாளர்களது வேதனம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 168 (1) (எவ் ) இன் தேவைப்பாடுகளுக்கமைய இவ்வறிக்கையின் பக்கம் 96. இலுள்ள குறிப்பு 30 இன் கீழ் கம்பனியின் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த வேதனமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களது பங்குரித்துவங்கள்

இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர்கள் என்ற காரணத்தினால் திரு. ஏ.கே. பத்திரகே/தலைவர் அவர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்துள்ளார்.

### நலன்கள் இடாப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நலன்கள் இடாப்பினை பராமரிக்கின்றது. கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளிலான தங்களது நலன்களை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளதுடன் அந்த நலன்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192 (1) மற்றும் 192 (2) க்கு அமைவாக பணிப்பாளர்களது நலன்கள் இடாப்பில் பதியப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளின் கீழ் நலன்கள் இடாப்பானது பரிசீலனைக்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது.

### ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

கம்பனியின் வணிகம் தொடர்பான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவ்வித நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருக்கவில்லை.

### வருடாந்த பொதுக் கூட்டம்

இலங்கை, கொழும் 07, பவுத்தாலோக்க மாவத்தையிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (ப.ஞா.ச.மா.ம.) “லோட்டஸ் மண்டபத்தில்” வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி செப்டம்பர் மாதம் 2020 இல் முற்பகல் 10.00 மணிக்கு கம்பனியின் நாற்பத்து இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெறும்.

வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 113 இல் காணப்படுகின்றது.

### கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் உறுப்பு 36 க்கு ஏற்றாற்போல் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் கம்பனியின் கணக்காய்வாளர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றார். கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியுடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ (கணக்காய்வாளர் தவிர்த்த) எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

பணிப்பாளர் சபையின் சார்பில் கையொப்பிமிடப்பட்டது,

**அசோகா பத்திரகே**
*தலைவர்*

**சன்ஜய மொஹொட்டால**
*பணிப்பாளர்*

**டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலக சேவைகளின் தலைமை*

31 ஜுலை 2020
கொழும்பு

# சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 2019/2020

**பங்களிப்பு மற்றும் பொறுப்பு**

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபை கணக்காய்வுக் குழுவினது நோக்கெல்லை மற்றும் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சபை கணக்காய்வுக் குழு பட்டயத்தினால் ஆளுமை செய்யப்படுகின்றது. சபை கணக்காய்வு குழுவின் நோக்கும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு பின்வருவனவற்றில் துணைபுரிவதாகும். உள்ளகக் கட்டுப்பாடுகள் அமைப்பு, நிதியியல் அறிக்கையிடல் செயல்முறை, இடர்நேர்கை முகாமைத்துவ செயல்முறை, ஆளுகைச் செயல்முறை, கணக்காய்வுச் செயல்முறை மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தைநெறி ஆகியவற்றுடன் இணங்கியொழுகுவதனைக் கண்காணிக்கும் கம்பனியின் செயல்முறை என்பவற்றை நிறைவேற்றுவதற்கான அதன் பொறுப்புக்கு துணைபுரிகின்றது.

**குழுவின் கூட்டமைவு**

2020 மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்தில் சபை கணக்காய்வுக் குழுவில் சேவையாற்றிய சபை பணிப்பாளர்களின் விபரம் பின்வருமாறு. கலாநிதி. திருமதி. ரொஷான் பெரேரா (அங்கத்தவர், 2019 ஜூன் 21 இல் பதவிவிலகினார்), விமானப் படைத்தளபதி (ஓய்வுபெற்றவர்) கே. ஜயம்பத்தி (அங்கத்தவர், 2019 ஆகஸ்ட்டில் பதவிவிலகினார்), திரு.எஸ். கட்டுகம்பல (அங்கத்தவர், 2019 செப்டம்பர் 12 இல் நீங்கினார்), திரு. டி. டி. மெல் (அங்கத்தவர், 2019 ஆகஸ்ட் 22 நியமிக்கப்பட்டு 2019 நவம்பர் 17 இல் பதவிவிலகினார்), திரு. எஸ்.ஜி.சேனாரத்ன (தலைவர் கணக்காய்வுக் குழு, 2019 டிசம்பர் 09 இல் பதவிவிலகினார்), சிரேஷ்ட பேராசிரியர். அர்ஜுன பி. டி. சில்வா (அங்கத்தவர், 2020 ஜனவரி 08 இல் பதவிவிலகினார்), திரு. ஏ.எம். பி.எம்.பி. அத்தபத்து (அங்கத்தவர், 2019 ஆகஸ்ட் 22 நியமிக்கப்பட்டு 2020 ஜனவரி 08 இல் பதவிவிலகினார்), திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார (அங்கத்தவர், 2019 செப்டம்பர் 12 நியமிக்கப்பட்டு 2020 ஜனவரி 08 இல் பதவிவிலகினார்), திரு. எஸ். மொஹொட்டால (சார்புகால தலைவர், 2020 ஜனவரி 24 இல் நியமிக்கப்பட்டார்), திரு. எம். பர்னாந்து (அங்கத்தவர், 2020 ஜனவரி 24 இல் நியமிக்கப்பட்டார்), திரு. எஸ். ரத்வத்த ஜ.ச. (அங்கத்தவர், 2020 ஜனவரி 24 இல் நியமிக்கப்பட்டார்), திரு. எம்.டி. சில்வா ஜ.ச. (அங்கத்தவர் 2020 ஜனவரி 24 இல் நியமிக்கப்பட்டார்), மற்றும் கலாநிதி. எச். விஜயசூரிய (அங்கத்தவர் 2020 ஜனவரி 24 இல் நியமிக்கப்பட்டார்). செல்வி. ஏ.டி. தில்ருக்ஷி, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு மேலதிகாரி ஓர் சுயாதீன அவதானிப்பாளராக கணக்காய்வுக் குழு கூட்டங்களில் சமூகமளிப்பார்.

**கூட்டங்கள்**

2020 மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டில் சபையின் கணக்காய்வு குழுவானது ஐந்து (5) கூட்டங்களை நடாத்தியது. குறிப்பிட்ட விடயங்களில் சபை கணக்காய்வு குழுவிற்கு விளக்கமளிப்பதற்காக வரவேற்பின் பேரில் முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் கூட்டத்தில் சமூகமளிப்பார்கள்.

**குழுமத்தின் உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவு**

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் குழும உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவானது (குஉஆசே)உள்வாரி கணக்காய்வுகளை மேற்கொண்டு சபை கணக்காய்வுக் குழுவுக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது. குஉஆசே போதுமை, பயனுறுதி மற்றும் தகவல் அமைப்பு/தகவல் தொழில்நுட்பம் உள்ளடங்களாக உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் விளைவுடமை என்பவற்றில் சுயாதீனமான மற்றும் பொருட்டுடனா மதிப்பீட்டினை வழங்குவதுடன் நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவ (நிஇமு) வரம்புறுகையின் அமுலாக்கத்திற்கும் வசதியளிக்கின்றது. குஉஆசே வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவ அமைப்பு, ஆளுகை மற்றும் இணக்கப்பாட்டு செயல்முறைகள் என்பவற்றில் முகாமைத்துவத்திற்கு ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகின்றது.

**இந்த நிதியாண்டில் சபை கணக்காய்வு குழுவின் முக்கிய நடவடிக்கைகள்**

- வருடாந்த உள்வாரி கணக்காய்வு திட்டம் மற்றும் தகவல் அமைப்பு/தகவல் தொழில்நுட்பம் உள்ளடங்களான உள்வாரி கட்டுப்பாடுகள் அமைப்பிலான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் என்பவற்றின் அமுலாக்கல் மற்றும் கணக்காய்வு பரிந்தரைகளது அமுலாக்கத்தின் நிலைமை என்பவற்றை மீளாய்வு செய்தது.
- வணிக இடர்நேர்கையினை இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பவற்றிற்காக முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்படும் இடர்நேர்கை முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் வழிமுறைகளை மீளாய்வு செய்தது.
- கம்பனியின் இணக்கப்பாட்டு வரம்புறுகையானது, பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன இணங்கியொழுகப்பட்டுள்ளன எனும் நியாயமான உறுதியினை வழங்குவதனை தீர்மானிப்பதற்காக மீளாய்வு செய்யப்பட்டது.
- வணிகள குறுக்கீடுகள்/ பேரிடர்களிலிருந்தான இடர்நேர்கைகளின் விளைவுகளை குறைப்பதற்காக வணிக தொடர்ச்சி நிலையின் அமுலாக்கம் மீளாய்வு செய்யப்பட்டது.
- வெளிவாரி கணக்காய்வின் தன்மை, நோக்கெல்லை மற்றும் அணுகுமுறையினை உறுதிப்படுத்துவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கலந்தாலோசித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சபைக்கு பரிந்துரைப்பதற்கு முன்னர் மீளாய்வு செய்தமை.
- வெளிவாரி கணக்காய்வாளரது முகாமைத்துவ கடிதம் மற்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள் என்பன பொருத்தமான நடவடிக்கைகள் சரியான நேரத்தில் எடுக்கப்பட்டுள்ளன என திருப்திகொள்வதற்காக மீளாய்வு செய்யப்பட்டது.
- குழுமத்தின் உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் கடமை நடவடிக்கைகளை, அதன் அறிக்கையிடும் கடப்பாடுகளின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரம் மற்றும் உள்வாரி கணக்காய்வு திட்டம் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டது.
- வெளிவாரி கணக்காய்வாளரின் சுயாதீனத்தன்மையினை மதிப்பீடு செய்தமை மற்றும் வெளிவாரி கணக்காய்வு கடமையினை கண்காணித்தமை.

**திரு. எஸ். மொஹொட்டால**
*சார்பு கால தலைவர்*
சபை கணக்காய்வு குழு

31 ஜூலை 2020

# பணிப்பாளர்களின் பொறுப்புக்களிலான கூற்று

கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பக்கம் 53 இல் காணப்படும் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டமானது பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென்பதுடன் இவை உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை வழங்கும் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியாண்டின் இறுதியிலான விடயங்களின் நிலைமை மற்றும் நிதியாண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் இலாப நட்டக் கணக்கினையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருத்தல், நியாயமான மற்றும் விவேகமான அபிப்பிராயங்கள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல், மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனம் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் நிலைமையின் நியாயமான துல்லியத்தன்மையினை வெளிப்படுத்துவதற்கு போதுமான கணக்கீட்டு ஆவணங்கள் வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களை வழங்குகின்றது எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். இவர்கள் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும், மற்றும் அதேபோன்று மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுக்கும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளை நிறுவுவதற்கு முறையான கவனத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கம்பனியின் செற்பாட்டு மற்றும் நிதியியல் நிலைமையினை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் கம்பனியினை மறுசீரமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை கருத்திற்கொண்டு மற்றும் வங்கி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆறுதல் கடிதங்களை வழங்குவதன் மூலம் கம்பனிக்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் உறுதுணையளிப்பதனை கவனத்திலெடுத்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பணிப்பாளர்கள் 'நிறுவனத் தொடர்ச்சி நிலையினை' தொடர்ந்தும் கடைப்பிடித்தார்கள். மேலும், இலங்கை அரசாங்கமானது 2020 ஜூன் 17 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம், நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பு செயல்முறையானது நிறைவுசெய்யும் வரை கம்பனி அதன் செயற்பாட்டினை 'நிறுவனத் தொடர்ச்சி நிலையில்' தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நிதிக் கூற்றுக்களில் அபிப்பிராயத்தினை உருவாக்குவதினை இயலுமையாக்குவதற்கு உகந்தது என கருதும் ஏதேனும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கேற்ப, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்

**டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனி காரியதரிசி*

31 ஜூலை 2020

# சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. AVA/C/SLAL/06/19/111 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 19 August 2020

**வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்**

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கமைய 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசித்து இவற்றுக்கிணங்க, 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானம், உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய 31 மார்ச் 2020 நிறைவடைந்த வருடத்திற்கான, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ("கம்பனி") நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனங்களது ஒருங்கிணைக்கப்பட்ட ("குழுமம்") நிதிக் கூற்றுக்கள் என்பவற்றில் எனது வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையானது பாராளுமன்றத்தில் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொது தொழிலுள்ள ஓர் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் எனக்கு துணைபுரிந்தது.

எனது அபிப்பிராயத்தின்படி, இதனுடனிணைந்த கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் கம்பனி மற்றும் குழுமத்தின் 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான நிதியியல் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய ஓர் மெய்யமான மற்றும் நியாயமான கருத்தினை வழங்குகின்றது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடாத்தினேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விளக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்காக ஓர் அடிப்படையினை வழங்குவதற்கு எனக்கு கிடைக்கப்பெற்ற கணக்காய்வு சான்றுகள் போதுமானதும் மற்றும் பொருத்தமானதுமென நான் நம்புகின்றேன்.

### 1.3 விடயங்களின் முக்கியத்துவம்

**அ) நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான கணிசமான நிச்சயமற்றதன்மை**

குறிப்பு 3 ஆனது, 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கு கம்பனியானது தேறிய நட்டமாக ரூபா 47,197.86 மில்லியனை ஈட்டியுள்ளதுடன் அத்திகதியிலான திரண்ட நட்டம் ரூபா 326,341.48 மில்லியன் என்பதையும், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 211,645.13 மில்லியனால் விஞ்சியிருப்பதனையும் கம்பனியின் மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை ரூபா 273,369.08 மில்லியனால் விஞ்சியுள்ளதனையும் குறிப்பிடுவதை நான் கவனத்தில் கொண்டுவருகின்றேன். மேலும் குழுமமானது 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கு தேறிய நட்டமாக ரூபா 44,139.40 மில்லியனை ஈட்டியுள்ளதுடன் அத்திகதியிலான திரண்ட நட்டம் ரூபா 316,477.65 மில்லியன் மற்றும் குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 200,878.32 மில்லியனால் விஞ்சியுள்ளதுடன் மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை ரூபா 261,173.54 மில்லியனால் விஞ்சியுள்ளது.

குறிப்பு 3 இல் கூறியுள்ளவாறு, இந்த நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள், குறிப்பு 3 இல் தெளிவுறுத்தப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் குழுமத்தின் /கம்பனியின் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சியினை தொடர்வதற்கான ஆற்றலில் கணிசமான சந்தேகத்தைத் தோற்றுவிப்பதுடன் ஓர் கணிசமான நிச்சயமற்றதன்மையினையும் குறிப்பிடுகின்றது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව — இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. — No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ஜாதிக விகணன கார்யாலய
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 பரவலினைத் தொடர்ந்து, குழுமம் /கம்பனி என்பன, அரசாங்கத்தின் பிரயாணக் கட்டுப்பாடு சுமத்தல்கள், தீர்ப்பனவுகளிலான தாமதங்கள் மற்றும் கடன் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்கைகள் என்பவற்றின் காரணமாக குழுமம் /கம்பனியினது வருவாய் இழப்பு உள்ளடங்கலான தாக்கங்களுக்கு முகங்கொடுக்கின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1, குழுமத்தின் / கம்பனியின் எதிர்கால வாய்ப்புக்கள், செயற்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல்களில் கோவிட்-19 நோய் பரவலின் தாக்கத்தினை விளக்குகின்றது. இந்த நிதிக் கூற்றுக்களை நிறைவு செய்யும் நேரத்தில் நோய் பரவலானது வியாபித்திருப்பதனால் இந்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைமைகளை முகாமைத்துவம் எவ்வாறு கையாளுவதற்கு திட்டமிட்டுள்ளது என்பதனை விளக்கியுள்ளது.

குறிப்பு 03 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தணிப்பதற்கான காரணிகளுடன் ஓர் "நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி' ஆக அதன் செயற்பாடுகளை தொடருவதற்கு, 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான சட்டரீதியான கணக்காய்வின் நோக்கத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டு, கம்பனிக்கு இலங்கை அரசாங்கத்தின் உதவியினை உறுதிப்படுத்தும் திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட 29 ஜுன் 2020 திகதியிடப்பட்ட கடிதம் மற்றும் 17 ஜுன் 2020 இல் வழங்கப்பட்ட அமைச்சரவையின் அங்கீகாரம் என்பவற்றை கருத்திலெடுத்து இந்த நிதிக் கூற்றுக்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அனுமானங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஆ) ஏ 350-900 விமானங்களது முன் விநியோகக் கொடுப்பனவுகள்**

31 மார்ச் 2020 இல் உள்ளவாறான முன் விநியோகக் கொடுப்பனவுகள் 2020 மற்றும் 2021 இல் விநியோகிப்படவேண்டிய நான்கு எயார்பஸ் ஏ 350-900 விமானங்களுக்கான முன் விநியோகக் கொடுப்பனவுகளான ரூபா 2,528.12 மில்லியனை (USD 19.21 மில்லியன்) உள்ளடக்கியிருப்பதுடன், 31 மார்ச் 2020 இல் எயார்பஸ் நிறுவனத்திற்கு செலுத்தப்படாத முன் விநியோகக் கொடுப்பனவாக USD 207.89 மில்லியன் காணப்படுவதாக குறிப்பு 6 குறிப்பிடுவதனை நான் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

குறிப்பு 06 இல் கூறப்பட்டுள்ளவாறு, கம்பனியானது எயார்பஸ் நிறுவனத்துடன் இவ்வுடன்படிக்கை தொடர்பாக மீளப்பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு கலந்தாலோசித்துள்ளது. எனவே, சபையானது மீள்பேச்சுவார்த்தையிலிருந்து முன்விநியோகக் கொடுப்பனவுகளில் ஒரு இழப்பினையோ அல்லது தண்டத்தையோ எதிர்பார்க்கவில்லை. எவ்வாறாயினும், 30 ஜுலை 2020 வரையிலும் எவ்விதமான இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இவ்விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது மாற்றியமைக்கப்படவில்லை.

### 1.4 ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது. ஏனைய தகவல்கள் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றது, ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரது அறிக்கை என்பவற்றை உள்ளடக்கவில்லை. இந்த நிதிக் கூற்றுக்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்கவில்லை.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் இவற்றில் எந்தவிதமான உத்தரவாத முடிவினையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களில் எமது கணக்காய்வு தொடர்பாக எனது பொறுப்பு ஏனைய தகவல்களை வாசித்தல், மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் அல்லது கணக்காய்வில் நாம் பெற்றுக்கொண்ட அறிவில் பொருண்மையான முரண்பாடுடையதாக உள்ளதா அல்லது இல்லையெனில் பொருண்மையானளவு தவறாகக் கூறப்பட்டுள்ளதா என கருதவேண்டியுள்ளது. நாம் மேற்கொண்ட வேலையின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் உள்ளன என்று நாம் முடிவுக்குவந்தால், நான் அந்த உண்மையினை அறிக்கையிடுவதற்கு வேண்டப்பட்டுள்ளேன். இதுதொடர்பாக அறிக்கையிடுவதற்கு எனக்கு ஏதும் இல்லை.

### 1.5 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய ஓர் மெய்யானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தினை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளதுடன் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தாலன்றி அல்லது யதார்த்தமான எவ்வித மாற்றுவழியுமின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, உகந்தவாறு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாயுள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இற்கமைய கம்பனி மற்றும் குழுமமானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக அதன் அனைத்து வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கு கணக்காய்வாளர்களது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்வுகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்வையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்வையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தினது உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமமானது நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஓர் அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்கு குழுமத்தினுள் காணப்படும் நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளது நிதியியல் தகவல் தொடர்பான போதுமையான பொருந்துதன்மையுடைய கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். குழுமத்தின் கணக்காய்வினது வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் செயற்திறனுக்கு நான் பொறுப்பாளியாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

- கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (1) (டி) மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனி முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.
- குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.

செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், இவை கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், கம்பனியின் ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு

**டபிள்யு பி சி விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் அதிபதி*

# நிதி நிலைமைக் கூற்று

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| **மார்ச் 31 இல் உள்ளவாறானது** | குறிப்பு | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 4 | 8,449.51 | 10,221.90 | 5,767.28 | 7,542.19 |
| சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை | 5 | 119,083.74 | - | 118,751.75 | - |
| விமான முன்விநியோக கொடுப்பனவுகள் | 6 | 2,528.12 | 2,528.12 | 2,528.12 | 2,528.12 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 7 | 18,603.60 | 19,981.17 | 18,603.60 | 19,981.17 |
| விமானம் மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள் | | 4,241.81 | 6,403.16 | 4,241.81 | 6,403.16 |
| அருவச் சொத்துக்கள் | 8 | 103.92 | 131.98 | 78.50 | 99.51 |
| முதலீடுகள் | 9 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 153,011.10 | 39,266.73 | 150,013.50 | 36,596.59 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 10 | 5,128.63 | 5,191.55 | 4,813.41 | 4,849.87 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 11 | 8,820.33 | 20,604.31 | 7,683.59 | 19,570.39 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 7 | 16,290.06 | 13,747.07 | 16,290.06 | 13,747.07 |
| விமானம் மற்றும் உதிர் என்ஜின் வைப்புகள் | | 542.22 | 303.60 | 542.22 | 303.60 |
| முதலீடுகள் | 9.1 | 1,039.24 | 922.45 | 613.64 | 590.45 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 12 | 1,596.98 | 2,212.02 | 1,233.18 | 1,681.03 |
| | | 33,417.46 | 42,981.00 | 31,176.10 | 40,742.41 |
| **மொத்த சொத்துக்கள்** | | 186,428.56 | 82,247.73 | 181,189.60 | 77,339.00 |
| **உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **உரித்துவம்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| ஒதுக்கங்கள் | 14 | 3,686.67 | 3,759.59 | 1,354.96 | 1,416.40 |
| திரண்ட நட்டங்கள் | | (316,477.65) | (223,488.73) | (326,341.48) | (230,590.07) |
| **மொத்த உரித்துவம்** | | (261,173.54) | (168,111.70) | (273,369.08) | (177,556.23) |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 15 | - | 1,000.00 | - | - |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 16 | 191,315.43 | 10,321.02 | 190,480.17 | 10,234.42 |
| ஏனைய நீண்ட-கால பொறுப்புக்கள் | 17 | 21,990.89 | 18,332.01 | 21,257.28 | 17,579.14 |
| | | 213,306.32 | 29,653.03 | 211,737.45 | 27,813.56 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 15 | 1,000.00 | - | - | - |
| ஊர்திகளுக்கான முன் விற்பனை | 18 | 17,835.18 | 25,316.76 | 17,835.18 | 25,316.76 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | 19 | 108,386.45 | 82,152.15 | 118,086.76 | 88,676.41 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | | 212.57 | 201.24 | 175.45 | 175.45 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 16 | 106,861.58 | 113,036.25 | 106,723.84 | 112,913.05 |
| | | 234,295.78 | 220,706.40 | 242,821.23 | 227,081.67 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 447,602.10 | 250,359.43 | 454,558.68 | 254,895.23 |
| **மொத்த உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | 186,428.56 | 82,247.73 | 181,189.60 | 77,339.00 |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஷமிந்த சமரவீர**
*பிரதம நிதியியல் அதிகாரி*

பணிப்பாளர் சபையானது இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பிற்கும் பொறுப்பாளியாயுள்ளது.
சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**அசோக் பத்திரகே**
*பணிப்பாளர்*

**சன்ஜய மொஹொட்டால**
*பணிப்பாளா*

பக்கங்கள் 59 முதல் 103 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

27 ஜூலை 2020
கொழும்பு

# இலாப நட்டக் கூற்று

| | | குழு | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. |
| **வருவாய்** | 21 | **183,531.82** | 184,097.04 | **180,151.02** | 180,340.32 |
| **செலவினம்** | | | | | |
| விமான எரிபொருள் செலவு | | **(55,327.75)** | (60,672.78) | **(55,327.75)** | (60,672.78) |
| பணியாட்கள் செலவு | | **(22,903.06)** | (21,927.63) | **(21,205.44)** | (20,368.42) |
| விமானநிலையம், வழிப்பாதை மற்றும் பயணிகள் செலவு | | **(25,276.94)** | (25,813.06) | **(29,217.18)** | (29,779.59) |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | | **(22,820.26)** | (26,333.09) | **(22,820.26)** | (26,333.09) |
| தேய்மானம்/பெறுமதிக் குறைப்பு | 2.3.1.1 | **(1,544.60)** | (1,567.61) | **(1,214.05)** | (1,349.28) |
| விற்பனை,சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவு | | **(14,549.74)** | (15,785.68) | **(14,540.51)** | (15,775.49) |
| விமானப் பணிக்குழுச் செலவுகள் | | **(6,557.11)** | (6,581.52) | **(6,557.11)** | (6,581.52) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 23.1 | **(14,906.24)** | (15,380.71) | **(13,835.87)** | (14,301.56) |
| பரிமாற்றல் நட்டம் | | **(5,270.29)** | (2,328.28) | **(6,118.51)** | (3,414.22) |
| **சொத்துப் பயன்பாட்டு உரிமை** SLFRS 16 **செம்மையாக்கலுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 23 | **14,375.83** | 7,706.68 | **9,314.34** | 1,764.37 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் முதற் தடவை SLFRS 16 இன் அமுலாக்கத்தின் தாக்கம் | 2.3.1.1 | **(19,543.07)** | (30,931.17) | **(19,485.02)** | (30,768.71) |
| தொழிற்பாட்டு நட்டம் | | **(5,167.24)** | (23,224.49) | **(10,170.68)** | (29,004.34) |
| ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள் | 22 | **1,351.51** | 952.19 | **3,046.13** | 4,222.74 |
| நிதியியல் வருமானம் | 24.1 | **377.88** | 128.61 | **317.28** | 89.72 |
| நிதியியல் நடவடிக்கைகளில் முதற் தடவை SLFRS 16 இன் அமுலாக்கத்தின் தாக்கம் | 24.2 | **(23,643.08)** | (164.91) | **(23,514.38)** | (164.91) |
| நிதியியல் மற்றும் ஏனைய செலவுகள் | 24.2 | **(17,023.79)** | (19,318.31) | **(16,876.21)** | (19,165.88) |
| **மொத்த நிதியியல் செலவுகள்** | | **(40,666.87)** | (19,483.22) | **(40,390.59)** | (19,330.79) |
| **வரிக்கு முந்திய நட்டம்** | | **(44,104.72)** | (41,626.91) | **(47,197.86)** | (44,022.67) |
| **வருமான வரிச் செலவினம்** | 26 | **(34.68)** | (73.42) | **-** | - |
| **ஆண்டிற்கான நட்டம்** | | **(44,139.40)** | (41,700.33) | **(47,197.86)** | (44,022.67) |

பக்கங்கள் 59 முதல் 103 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. |
| **ஆண்டிற்கான நட்டம்** | | (44,139.40) | (41,700.33) | (47,197.86) | (44,022.67) |
| **ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்)** | | | | | |
| **அடுத்த காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படக்கூடாத ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்):** | | | | | |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்) | 17.2 | (20.86) | 25.92 | (8.87) | 29.10 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது மீள்மதிப்பீடு | | - | 602.82 | - | - |
| ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகளிலான ஒத்திவைக்கப்பட்ட வரி | | - | (90.90) | - | - |
| | | (20.86) | 537.84 | (8.87) | 29.10 |
| **அடுத்த காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படவேண்டிய ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்):** | | | | | |
| காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரணில் தேறிய அசைவு | | (61.44) | (1,366.32) | (61.44) | (1,366.32) |
| | | (61.44) | (1,366.32) | (61.44) | (1,366.32) |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம், வரி கழித்த பின்னர்** | | (82.30) | (828.48) | (70.31) | (1,337.22) |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம், வரி கழித்த பின்னர்** | - | (44,221.70) | (42,528.81) | (47,268.17) | (45,359.89) |

பக்கங்கள் 59 முதல் 103 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# உரித்துவத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று

| குழுமம்<br>மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம்<br>ரூபா மில்லி. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | திரண்ட நட்டம்<br>ரூபா மில்லி. | மொத்தம்<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **31 மார்ச் 2018 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 4,953.48 | (333.10) | (181,820.71) | (125,582.89) |
| வருடத்தில் மேற்கொண்ட விற்பனை காரணமாக மீள்மதிப்பீட்டு மிகையின் தள்ளுபடி | - | (6.39) | - | 6.39 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (41,700.33) | (41,700.33) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 602.82 | (1,366.32) | 25.92 | (737.58) |
| ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகளிலான ஒத்திவைக்கப்பட்ட வரி | - | (90.90) | - | - | (90.90) |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | 511.92 | (1,366.32) | (41,674.41) | (42,528.81) |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 5,459.01 | (1,699.42) | (223,488.73) | (168,111.70) |
| SLFRS 16 மாறுதல் நிலையின் தாக்கம் (குறிப்பு 2.3.1.1) | - | - | - | (48,840.14) | (48,840.14) |
| **1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான செம்மையாக்கப்பட்ட மீதி** | 51,617.44 | 5,459.01 | (1,699.42) | (272,328.87) | (216,951.84) |
| வருடத்தில் மேற்கொண்ட விற்பனை காரணமாக மீள்மதிப்பீட்டு மிகையின் தள்ளுபடி | - | (11.48) | - | 11.48 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (44,139.40) | (44,139.40) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (61.44) | (20.86) | (82.30) |
| **மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)** | - | - | (61.44) | (44,160.26) | (44,221.70) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 5,447.53 | (1,760.86) | (316,477.65) | (261,173.54) |

| கம்பனி<br>மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம்<br>ரூபா மில்லி. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | திரண்ட நட்டம்<br>ரூபா மில்லி. | மொத்தம்<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **31 மார்ச் 2018 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 3,115.82 | (333.10) | (186,596.50) | (132,196.34) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (44,022.67) | (44,022.67) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (1,366.32) | 29.10 | (1,337.22) |
| **மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)** | - | - | (1,366.32) | (43,993.57) | (45,359.89) |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,699.42) | (230,590.07) | (177,556.23) |
| SLFRS 16 மாறுதல் நிலையின் தாக்கம் (குறிப்பு 2.3.1.1) | - | - | - | (48,544.68) | (48,544.68) |
| **1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான செம்மையாக்கப்பட்ட மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,699.42) | (279,134.75) | (226,100.91) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (47,197.86) | (47,197.86) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (61.44) | (8.87) | (70.31) |
| **மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)** | - | - | (61.44) | (47,206.73) | (47,268.17) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,760.86) | (326,341.48) | (273,369.08) |

பக்கங்கள் 59 முதல் 103 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| **மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது** | | 2020 | 2019 | 2020 | 2019 |
| | குறிப்பு | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (பயன்படுத்தப்பட்டது)** | | | | | |
| வருமான வரிச் செலவினத்திற்கு முன்னரான நட்டம் | | **(44,104.72)** | (41,626.91) | **(47,197.86)** | (44,022.67) |
| **செம்மையாக்கல்கள்** | | | | | |
| பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு/வலுக்குன்றல்கள் | | **19,391.52** | 1,868.40 | **19,013.81** | 1,643.67 |
| நிதிச் செலவுகள் | 24.2 | **40,666.87** | 19,483.22 | **40,390.59** | 19,330.79 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனையிலான (இலாபம்/நட்டம் | | **8.71** | (2.29) | **(3.49)** | (3.41) |
| நிதியியல் வருமானம் | 24.1 | **(377.88)** | (128.61) | **(317.28)** | (89.72) |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஒதுக்கம் | 11.2 | **37.35** | 327.83 | **32.94** | 319.79 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான ஒதுக்கம் | 9.1 | **113.58** | 214.47 | **91.75** | 223.32 |
| பராமரிப்பு ஒதுக்கத்தின் வலுக்குன்றலுக்கான ஒதுக்கம் | 6.2 | **4,349.64** | 4,797.17 | **4,349.64** | 4,797.17 |
| எய்தப்பெற்றிராத பரிமாற்றல் நட்டத்தின் தாக்கம் | | **4,330.87** | 2,819.29 | **5,045.97** | 3,618.66 |
| முன் விற்பனையின் மீள் பதிவு | | **(1,818.01)** | (1,342.87) | **(1,818.01)** | (1,342.87) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 17.2 | **1,126.34** | 891.80 | **1,031.33** | 807.74 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு நட்டம்** | | **23,724.27** | (12,698.50) | **20,619.39** | (14,717.53) |
| இருப்புக்களின் குறைவு/(அதிகரிப்பு) | | **(50.66)** | (650.04) | **(55.29)** | (651.67) |
| ஊர்தியின் முன்விற்பனையிலான (குறைவு)/அதிகரிப்பு | | **(5,663.49)** | 3,022.23 | **(5,663.49)** | 3,022.23 |
| ஏனைய வருமதிகளின் (அதிகரிப்பு)/குறைவு | | **10,584.47** | (3,096.35) | **10,718.09** | (3,007.90) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகளின் அதிகரிப்பு/(குறைவு) | | **27,056.52** | 35,858.47 | **29,361.49** | 37,074.78 |
| பராமரிப்பு ஒதுக்கங்களிலான (அதிகரிப்பு)/குறைவு | | **(6,367.39)** | (7,194.00) | **(6,367.39)** | (7,194.00) |
| விமானப் பாதுகாப்பு வைப்புகளின் குறைவு/(அதிகரிப்பு) | | **132.68** | (109.55) | **132.68** | (109.55) |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட (பயன்படுத்தப்பட்ட) காசு** | | **49,416.40** | 15,132.26 | **48,745.48** | 14,416.36 |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவு | | **(22,699.41)** | (11,088.21) | **(22,432.00)** | (10,948.93) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 17.2 | **(587.07)** | (721.06) | **(543.52)** | (664.92) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுக் பாய்ச்சல்** | | **26,129.92** | 3,322.99 | **25,769.96** | 2,802.51 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | **132.57** | 108.93 | **88.57** | 73.68 |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | **(735.56)** | (1,040.34) | **(399.28)** | (940.02) |
| குறுங்கால முதலீடுகளின் (முதலீடு)/மீளப்பெறல் | | **(72.08)** | (88.22) | **4.92** | 79.78 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **(23.44)** | (51.93) | **(20.26)** | (50.88) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனை வருவாய் | | **5.10** | 5.01 | **3.84** | 3.47 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **(693.41)** | (1,066.55) | **(322.21)** | (833.97) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | | **(39,704.62)** | (8,940.53) | **(39,579.34)** | (8,823.21) |
| குத்தகை பொறுப்பின் மிள்செலுத்துகை | | **(19,452.56)** | (320.57) | **(19,421.89)** | (320.57) |
| வட்டி அறவிடப்படும் கடன்களது உள்வருகை | | **30,556.46** | - | **30,556.46** | - |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(28,600.72)** | (9,261.10) | **(28,444.77)** | (9,143.78) |
| காசும் காசுக்குச் சமனானவையின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(3,164.21)** | (7,004.66) | **(2,997.02)** | (7,175.24) |
| வருடத்தின் ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்குச் சமனானவையும் | 12 | **(6,920.22)** | 84.44 | **(7,451.21)** | (275.97) |
| **வருடத்தின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமனானவையும்** | 12 | **(10,084.43)** | (6,920.22) | **(10,448.23)** | (7,451.21) |

பக்கங்கள் 59 முதல் 103 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**1. கூட்டாண்மை தகவல்கள்**

**1.1 பொதுவானவை**

**கம்பனி**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் (“கம்பனி”) இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், இலங்கையில் அமைந்துள்ளது.

**1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டின் தன்மை**

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல்களை ஏந்திச் செல்வதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச, அட்டவணைப்படுத்தாத வான்வழிச் சேவைகளை உள்ளடக்கும் என்பதுடன் இது இலங்கையின் நியமிக்கப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (“ப.ச.வி.ந.”) மற்றும் மத்தல ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் (“ம.ரா.ச.வி.நி.”) என்பவற்றில் வான் தரிப்பிட சேவைகளை வழங்குதல் மற்றும் விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறை தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பினருக்கான விமானப் பராமரிப்பினை வழங்குதல், விமானச் செயற்பாட்டுச் சேவைகள் மற்றும் வான்வழிப் பயணம் தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும்.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை ப.ச.வி.நி. மற்றும் ம.ரா.ச.வி.நி. ஆகிவற்றினூடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள் உணவு வழங்கல் சேவைகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் மாற்றுப்பயணியர் உணவு விடுதிகள், சலவை செய்தல் சேவைகளை வழங்கல் மற்றும் மாற்றுப்பயணியர் ஹோட்டலினை முகாமைப்படுத்தல் என்பன காணப்படுகின்றன.

**1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையானது 27 ஜூலை 2020 இல் அதிகாரமளித்தது.

**2. பொதுவாக கணக்கீட்டுக் கொள்கைகள்**

**2.1 தயாரிப்பின் அடிப்படை**

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்று கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணம் என்பன நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

SLFRS 16 – “குத்தகைகள்” பிரயோகிக்கப்பட்ட முதலாவது நிதிக் கூற்றுக்கள் இதுவாகும். குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் குறிப்பு 2.4 இல் விவரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கிட்டிய மில்லியன் ரூபாய்க்கு, இல்லையெனில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த, முழுமையாக்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 நோய் பரவலானது 2020 இல் விரைவாக விருத்தியாகியுள்ளதுடன், உலகளாவிய ரீதியில் கணிசமானளவு நோய்த் தொற்றுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த நோய்க்கிருமியின் பரவலை கட்டுப்படுத்துவதற்கும் மந்தமாக்குவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மக்களது நடமாட்டம் மற்றும் விமானங்களது கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக உலக பொருளாதாரத்தை கணிசமானளவு பாதித்தது. இது உலகளாவிய வான்வழிப் பிரயாணச் சந்தைக்கு குறுங்காலத்தில் கணிசமானளவு இடையூறினை ஏற்படுத்தியது. ஓர் விமானக் கம்பனி என்ற விதத்தில், கம்பனியானது அதன் வழக்கமான முழு பயணிகள் சேவையினை வளம்பெறக்கூடிய விதத்தில் செயலாற்ற இயலவில்லை என்பதுடன் கம்பனியின் வருவாயானது நோய் பரவலின் விளைவாக எதிர்மறையாக பாதிக்கப்பட்டதுடன் இதன் முழு தாக்கத்தையும் மற்றும் இடையூறு செய்யப்படும் காலம் என்பவற்றை நிச்சயமாக எதிர்வுகூறமுடியாதுள்ளது.

இந்த நெருக்கடியினூடாக குழுமமானது வணிகத்தினை முகாமைப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. புதிய வருவாய் உருவாக்கும் வாய்ப்புக்களை ஆரம்பித்தல் (சரக்கு வானூர்திப் பயணங்களை அட்டவணைப்படுத்தல் மற்றும் ஓர் பயணிகள் விமானத்தை தனியான சரக்கு விமானமாக மாற்றியமைத்தல்), செலவினத்தை சேமிக்கும் வழிமுறைகளை அமுல்படுத்துதல், சமயோசிதமான மூலதனச் செலவினங்களில் குறைப்பு மற்றும் மேலதிக செயற்பாட்டு மூலதன வசதிகளுக்கு பேச்சுவார்த்தை நடாத்துதல் என்பவையாகும். இந்த நடவடிக்கைகள், நிறுவன தொடர்நிலை குறிப்பில் வெளிப்படுத்தியுள்ளவாறு இலங்கை அரசாங்கத்திடமிருந்து கடப்பாடுடைய உறுதுணையினை பெற்றுக்கொள்வதனையும் உள்ளடக்குகின்றது.

மேற்குறிப்பிட்டவையின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஓர் நிறுவன தொடர்நிலை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், குழுமத்தில் கோவிட்-19 இன் தாக்கம் காரணமாக, ஓர் வலுக்குன்றல் சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் எவ்விதமான வலுக்குன்றல்களும் இனங்காணப்படவில்லை. முகாமைத்துவமானது அதன் தொடர்ச்சியான தாக்க மதிப்பீட்டின் ஓர் அங்கமாக கோவிட்-19 இனை தொடர்ச்சியாக மிகவும் நெருக்கமாக கண்காணிக்கின்றது.

**2.1.1 இணங்கியொழுகுதல் கூற்று**

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இக.நி.) அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பும் சமர்ப்பிப்பும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியொழுகுகின்றன.

**2.1.2 ஒப்பிடப்படும் தகவல்கள்**

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது காட்சியளிப்பும் வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த காட்சியளிப்பிற்காகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன. குறிப்பு 32 இல் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பிடப்படும் தகவல்கள் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை**

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும். குழுமமானது வெளிப்படும்போது அல்லது உரிமைகள் காணப்படும்போது பின்வருவனவற்றில் கட்டுப்பாடுகளை அடைகின்றது. முதலீடு செய்தவருடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையக்கூடிய விளைவுகள் மற்றும் முதலீடு செய்தவரின் மீது செலுத்தப்படும் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளை பாதிக்கக்கூடிய ஆற்றல் என்பவையாகும். விசேடமாக, குழுமம் பின்வருவனவற்றை வைத்திருந்தால் மாத்திரமே கம்பனியானது ஓர் முதலீடு செய்தவரை கட்டுப்படுத்தும்:

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

- முதலீடு செய்தவர் மீதான அதிகாரம் (அதாவது, முதலீடு செய்தவரின் பொருத்தமான நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கான நடைமுறை ஆற்றலை வழங்கும் நடைமுறை உரிமைகள்)
- முதலீடு செய்தவருடன் அதன் ஈடுபாட்டிலிருந்தான மாற்றமடையும் விளைவுகளுக்கான வெளிப்பாடுகள், அல்லது உரிமைகள்
- அதன் விளைவினை பாதிப்பதற்கு முதலீடு செய்தவர் மீது அதிகாரத்தினை பயன்படுத்தக்கூடிய ஆற்றல்

கருத்துக்களும் மற்றும் சூழ்நிலைமைகளும் கட்டுப்பாட்டின் மூன்று ஆதாரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றங்களை குறிப்பிடுமாயின் குழுமமானது அது முதலீடு செய்தவரை கட்டுப்படுத்துகின்றதா அல்லது இல்லையா என மீள் மதிப்பீடு செய்கின்றது. ஓர் துணை நிறுவனத்தின் ஒருங்கிணைப்பானது குழுமம் துணை நிறுவனத்தில் கட்டுப்பாட்டினை பெறும்போது ஆரம்பித்து கம்பனி துணை நிறுவனத்தில் கட்டுப்பாட்டினை இழக்கும்போது நிறுத்தப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானத்தின் ஒவ்வொரு கூறும் கம்பனியின் உரித்துடைமையாளர்களது உடைமையாகக் கருதப்படுகின்றது. அவசியமாயின், குழுவின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஒத்தாற்போல் துணை நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை கொண்டுவருவதற்காக துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து உள்-குழுமச் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரித்துடைமை, வருமானம், செலவினங்கள் மற்றும் குழுமத்தின் அங்கத்தவர்களிடையேயான கொடுக்கல் வாங்கல் தொடர்பான காசுப்பாய்ச்சல்கள் என்பன ஒருங்கிணைப்பின்போது முற்றாக அகற்றப்படுகின்றன.

ஓர் துணைநிறுவனத்தின் உரித்துவ நலன்களிலான மாற்றமானது, கட்டுப்பாட்டினை இழக்காது, ஓர் உரித்துவ கொடுக்கல் வாங்கலாக கணக்கிடப்படுகின்றது.

குழுமமானது துணை நிறுவனத்தில் கட்டுப்பாட்டினை இழந்தால், அது தொடர்புடைய சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய உரித்துவத்தின் கூறுகளை அங்கீகரிக்காததுடன் ஏதேனும் விளைவின் இலாபம் அல்லது நட்டம் இலாப நட்டக் கணக்கில் அங்கீகரிக்கப்படுகின்றது. வைத்திருக்கப்படும் ஏதேனும் முதலீடானது நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்த நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத் காலங்களிலும் கீழ்காணும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.3.1 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

குழுவானது SLFRS 16 – "குத்தகை" மற்றும் IFRIC பொருள் விளக்கம் 23 "வருமான வரியினை கையாளும் விதத்திலான நிச்சயமற்றதன்மை" என்பன முதந்தடவையாக 1 ஏப்ரல் 2019 இல் ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்கு செயற்பாட்டிற்கு வந்தது. குழுமமானது வழங்கப்பட்டுள்ள ஆனால் செயற்பாட்டிற்கு வராத எவ்வித நியமம், பொருள்விளக்கம் அல்லது திருத்தத்தினை முன்னதாகவே கடைப்பிடிக்கவில்லை.

கீழ்காணப்படும் மாற்றங்கள் தவிர, குழுமமானது இந்த நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் கீழே குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ச்சியாக பிரயோகித்துள்ளது.

#### 2.3.1.1 நிலைமாற்றம் மற்றும் SLFRS 16 – "குத்தகைகள்" கடைப்பிடிக்கப்படுவதன் தாக்கம்

குழுமமானது 1 ஏப்ரல் 2019 முதல் திருத்தியமைக்கப்பட்ட பின்நோக்கிய அணுகுமுறையினை பயன்படுத்தி SLFRS – 16 இனை பிரயோகித்துள்ளது. எனவே ஒப்பிடப்படும் தகவல்கள் மீள் எடுத்துச்சொல்லப்படாது தொடர்ந்தும் LKAS 17 மற்றும் IFRIC 4 கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. LKAS 17 மற்றும் IFRIC 4 கீழான கணக்கீட்டுக் கொள்கைகளின் விபரமானது அவை SLFRS – 16 கீழ் வருவதிலிருந்து வித்தியாசப்பட்டிருப்பின் தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாற்றங்களின் தாக்கமானது குறிப்பு 2.4.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

SLFRS 16 க்கு நிலைமாறும்போது. குழுமமானது நடைமுறைக்கு உகந்த முறையினை பிரயோகித்ததுடன் எந்த ஒப்பந்த ஒழுங்குகள் SLFRS 16 இன் கீழ் தகுதிபெறும் என்று மீள்மதிப்பு செய்யாமலிருத்தல் தெரிவுசெய்யப்பட்டது. இது SLFRS 16 இன் நிலைமாற்றல் விதியினை LKAS 17 மற்றும் IFRIC 4 இன் பிரகாரம் முன்னர் இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கு மாத்திரம் பிரயோகித்தது. SLFRS 16 இன் கீழான குத்தகையின் வரைவிலக்கணமானது நிலைமாற்றல் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்பட்டது. மேலும், கம்பனியானது அனுமதிக்கப்பட்ட பின்வரும் நடைமுறைக்கு உகந்த முறையினை ஒவ்வொரு குத்தகைக்கும் பிரயோகித்துள்ளது.

- நியாயமான விதத்தில் ஒத்த பண்புகளையுடைய குத்தகைத் தொகுதிகளுக்கு தனியான கழிவு வீதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது
- நிலைமாற்றல் திகதியிலிருந்து 12 மாதங்களினுள் முதிர்வடையும் குத்தகைகளுக்கு புதிய குத்தகை அளவீட்டு விதிகள் பிரயோகிக்கப்படவில்லை என்பதுடன் அவை குறுங்கால குத்தகைகளாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளன்
- குத்தகையுடன் தொடர்புபட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்து அளவீட்டிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன்
- நீடித்தல்/முடிவுறுத்தல் தெரிவுகளுடனான ஒப்பந்தங்களுக்கு குத்தகை காலத்தினை தீர்மானிப்பதில் பின்னறிவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

LKAS 17 இனை பயன்படுத்தி முன்னர் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகள் தொடர்பான நிலைமாற்றல் திகதியில் உள்ளவாறான குத்தகை பொறுப்பு மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகையிலும் எவ்வித மாற்றமும் இல்லை. அத்தகைய சொத்துக்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களலிருந்து பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

SLFRS 16 இன் கடைப்பிடித்தலானது குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது ஏனெனில் அது ஐந்தொகைக்கு அப்பாலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஐந்தொகையினுள் கொண்டுவருகின்றது. குத்தகைகளின் வகைகள் மற்றும் அங்கீகாரம் மற்றும் அளவீட்டுத் தாக்கம் என்பன இக்குறிப்பில் சுருக்கிக்கூறப்பட்டுள்ளன.

ஒருங்கிணைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டக் கூற்றினைப் பொறுத்தமட்டில், செயற்பாட்டு குத்தகை செலவினமானது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்திலான பெறுமானத்தேய்வாகவும் குத்தகை பொறுப்பிலான வட்டியாகவும் மாற்றீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக குத்தகையின் ஆரம்ப காலப்பகுதியில் மொத்த செலவினம் அதிகமாகவும் பின்னைய வருடங்களில் குறைவாகவும் காணப்படுகின்றது.

செயற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்கான குத்தகை பொறுப்புக்களை அளவிடும்போது கம்பனியானது 1 ஏப்ரல் 2019 இல்

உள்ளவாறான அதிகரிக்கும் கடன்பெறும் வட்டி வீதத்தினை பயன்படுத்தி குத்தகைக் கொடுப்பனவுகளை கழிவுசெய்துள்ளது. ஒவ்வொரு குத்தகையிடப்பட்ட சொத்து பிரிவுகளுக்கும் பிரயோகிக்கப்பட்ட நிறையிடப்பட்ட சராசரி வட்டி வீதங்கள் பின்வருமாறு.

- விமானங்கள்/கட்டிடங்கள் (USD) – 6%
- வாகனங்கள்/கட்டிடங்கள் (ரூபா) – 14.3%

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் அவை கொண்டு செல்லப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது, SLFRS 16 ஆரம்ப திகதியிலிருந்து பிரயோகிக்கப்பட்டிருக்கும் என்றவகையில், ஆரம்ப விண்ணப்ப திகதியில் உள்ளவாறான வட்டி வீதத்தை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது.

குத்தகைகளிலான இலாபம் அல்லது நட்டக் கூற்றிலான தாக்கம் பின்வருமாறு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது ரூபா மில்லி. | 31 மார்ச் 2019 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது ரூபா மில்லி. | 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது ரூபா மில்லி. | 31 மார்ச் 2019 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது ரூபா மில்லி. |
| குத்தகை விமானங்களிலான வாடகை | (1,393.67) | (29,099.13) | (1,393.67) | (29,099.13) |
| பராமரிப்புச் செலவினம் (திரும்பல் செலவு) | - | (620.19) | - | (620.19) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு | (17,304.95) | - | (17,304.95) | - |
| குத்தகை பொறுப்பின் நிதிச் செலவு | (10,246.84) | - | (10,246.84) | - |
| குத்தகை பொறுப்பின் பரிமாற்றல் நட்டம் | (12,879.86) | - | (12,879.86) | - |
| | (41,825.32) | (29,719.32) | (41,825.32) | (29,719.32) |
| குத்தகை கட்டிடங்களிலான வாடகை | (291.08) | (866.03) | (282.20) | (704.82) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு | (228.54) | - | (181.37) | - |
| குத்தகை பொறுப்பின் நிதிச் செலவு | (341.88) | - | (213.18) | - |
| குத்தகை பொறுப்பின் பரிமாற்றல் நட்டம் | (25.49) | - | (25.49) | - |
| | (886.99) | (866.03) | (702.23) | (704.82) |
| குத்தகை வாகனங்களிலான வாடகைகள் | (11.37) | (51.43) | (9.38) | (50.18) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு | (41.05) | - | (41.05) | - |
| குத்தகை பொறுப்பின் நிதிச் செலவு | (9.06) | - | (9.06) | - |
| | (61.48) | (51.43) | (59.49) | (50.18) |
| LKAS 17 **இன் கீழ் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளின் தாக்கம்** | | | | |
| பெறுமானத் தேய்வு | (272.40) | (294.39) | (272.40) | (294.39) |
| குத்தகை பொறுப்பின் நிதிச் செலவு | (84.72) | (106.80) | (84.72) | (106.80) |
| குத்தகை பொறுப்பின் பரிமாற்றல் நட்டம் | (55.23) | (58.11) | (55.23) | (58.11) |
| | (412.34) | (459.30) | (412.34) | (459.30) |
| மொத்த தாக்கம் | (43,186.13) | (31,096.08) | (42,999.39) | (30,933.61) |
| | | | | |
| பெறுமானத் தேய்வு | (17,846.95) | (294.39) | (17,799.77) | (294.39) |
| பராமரிப்புச் செலவினம் (திரும்பல் செலவு) | - | (620.19) | - | (620.19) |
| குத்தகைச் சொத்துக்களிலான வாடகைகள் | (1,696.12) | (30,016.59) | (1,685.25) | (29,854.13) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தாக்கம்** | (19,543.07) | (30,931.17) | (19,485.02) | (30,768.71) |
| குத்தகை பொறுப்பின் நிதிச் செலவு | (10,682.53) | (106.80) | (10,553.83) | (106.80) |
| குத்தகை பொறுப்பின் பரிமாற்றல் நட்டம் | (12,960.55) | (58.11) | (12,960.55) | (58.11) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலான தாக்கம்** | (23,643.08) | (164.91) | (23,514.38) | (164.91) |
| | (43,186.13) | (31,096.08) | (42,999.39) | (30,933.61) |

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஓர் தனியான உருப்படியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதனுடன் தொடர்புடைய குத்தகைப் பொறுப்புக்கள் 'வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களினுள்' உள்ளடக்கப்பட்டுள்ளன. (குறிப்பு 16).

## நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

நிலைமாற்றல் திகதியில் (1 ஏப்ரல் 2019) இல் குழுமம் மற்றும் கம்பனியின் தக்கவைக்கப்பட்ட உழைப்புக்களிலான SLFRS 16 – “குத்தகைகள்” கடைப்பிடிப்பதன் நிலைமாற்றல் தாக்கம் பின்வருமாறு.

| | குழுமம | | கம்பனி | |
|---|---|---|---|---|
| **31 மார்ச் 2019 இல் அறிக்கையிடப்பட்ட திரண்ட நட்டம்** | | (223,488.73) | | (230,590.07) |
| **SLFRS 16 கடைப்பிடிப்பதன் தாக்கம்** | | | | |
| விமானத்திலான தாக்கம் | (48,032.95) | | (48,032.95) | |
| குத்தகை கட்டிடங்களிலான தாக்கம் | (807.19) | | (511.73) | |
| | | (48,840.14) | | (48,544.68) |
| SLFRS 16 இன் பின்னர் 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் | | (272,328.87) | | (279,134.75) |

### 2.3.1.2 IFRIC பொருள்விளக்கம் 23 – வருமான வரி செய்கைமுறையிலான நிச்சயமற்றதன்மை

வரிச் செய்கைமுறைகள் நிச்சயமற்றதன்மையினை உள்ளடக்கி இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 12 – “வருமான வரிகள்” பிரயோகிப்பினை பாதிக்கும்போது பொருள்விளக்கமானது வருமான வரிகள் கணக்கீட்டினை கையாள்கின்றது. இது LKAS 12 இன் நோக்கெல்லைக்கு அப்பாலான வரிகள் மற்றும் கட்டணங்களுக்கு பிரயோகிக்கப்படாது என்பதுடன் அது நிச்சயமற்ற வரி செய்கைமுறைகளுடன் இணைக்கப்பட்ட வட்டி மற்றும் தண்டப்பணங்கள் தொடர்பான தேவைப்பாடுகளை விசேடமாக உள்ளடக்காது. பொருள்விளக்கமானது விசேடமாக பின்வருவனவற்றை கையாள்கின்றது:

- ஓர் நிறுவனம் நிச்சயமற்ற வரி செய்கைமுறையினை தனியாக கருதுகின்றதா
- வரிவிதிப்பு அதிகாரிகளினால் வரி செய்கைமுறைகளின் பரிசீலனைகள் பற்றி ஓர் நிறுவனம் மேற்கொள்ளும் அனுமானம்
- எவ்வாறு ஒரு நிறுவனம் வரிவிதிக்கப்படும் இலாபம் (அல்லது நட்டம்), வரி அடித்தளங்கள், பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள், பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் வரி வீதங்களை தீர்மானிக்கின்றது
- செய்தி மற்றும் சூழ்நிலைகளிலான மாற்றங்களை எவ்வாறு ஒரு நிறுவனம் கருதுகின்றது

வருமான வரி செய்கைமுறைகளிலான நிச்சயமற்றவைகளை இனங்காண்பதில் குழுமமானது குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளை பிரயோகிக்கின்றது. குழுமமானது அதன் வரி இணங்கியொழுகுவதன் அடிப்படையில் அதன் வரி செய்கைமுறைகள் வரிவிதித்தல் அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்படும் சாத்தியம் உள்ளது என தீர்மானிக்கின்றது. இப்பொருள்விளக்கமானது குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

### 2.3.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் பகுத்தறிவுகள்

குழுவின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகைகளான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். முக்கியமான பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அதனுடனிணைந்த அனுமானங்கள் என்பன தொடர்ச்சியான அடிப்படையில் கணிப்பிடப்படுவதுடன் அவை மரபு ரீதியான அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புகள் உள்ளடங்களாக ஏனைய காரணிகள் என்பவற்றின் அடிப்படையிலாகும்.

பின்வரும் முக்கிய பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன ஏனையவற்றுக்கிடையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளில் குறிப்பிடத்தக்க விளைவை உடைய தற்சார்புடையவற்றையும் கையாள்கின்றது.

#### (அ) பகுத்தறிவுகள்

**(i) நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி**

குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் ஓர் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(ii) எதிர்பாராது நிகழக்கூடிய பொறுப்புக்கள் - வழக்காடல்கள்**

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் குழுமத்திற்கு பல்வேறு தரப்பினருடன் பல வழக்காடல்கள் நிலுவையில் உள்ளன. குழுமத்தின் சட்ட வழக்குரைஞர்களுடனான ஆலோசனையின் பின்னர் பணிப்பாளர் சபையானது ஒவ்வொரு வழக்கினதும் குணநலன்களை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் வளங்களது வெளிப்பாய்ச்சல் இடம்பெறும் சாத்தியம் தீர்மானிக்கப்பட்டால் அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் வாடிக்கையாளர்களினால் குழுமத்திற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய சாத்தியமான கோரல்கள், வழங்குநர்கள், மற்றும் பணியாட்கள் தொடர்பாக கம்பனியின் வணிகப் போக்கில் ஏதேனும் எதிர்பாரா பொறுப்புக்கள் எழுவது தொடர்பாக ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை பணிப்பாளர்கள் எதிர்பார்க்கவில்லை.

**(iii) குத்தகைகள் (1 ஏப்ரல் 2019 இன் பின்னர் பிரயோகிக்கப்படும் கொள்கை)**

ஒப்பந்தங்கள் அவை ஒரு குத்தகையாக அல்லது குத்தகையினை உள்ளடக்கியுள்ளனவா என்று மதிப்பிடப்படுகின்றது. ஒரு ஒப்பந்தம், அல்லது அது குத்தகையினை உள்ளடக்கியிருந்தால், அந்த ஒப்பந்தம் ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஓர் காலப்பகுதிக்கு மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்கின்றது. ஓர் இனங்காணப்பட்ட சொத்தினது பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்று மதிப்பிடுவதற்கு கருத்திலெடுக்கப்படும் காரணிகள் பின்வருமாறு: ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்குகின்றது, பயன்படுத்தப்படும் காலம் முழுவதிலும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து கிடைக்கும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமாக பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமையினை குழு கொண்டிருத்தல், சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையைக் குழு கொண்டிருத்தல்.

**(iv) நிதியியல் மற்றும் செயற்பாட்டு குத்தகைகள் (1 ஏப்ரல் 2019 இற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட கொள்கை)**

ஒரு குத்தகையானது உடைமையினது அனைத்து இடர்நேர்கைகளும் மற்றும் வெகுமதிகளும் கணிசமான விதத்தில் குழுமத்திற்கு மாற்றல் செய்யப்படும்போது அது நிதியியல் குத்தகையாக வகைப்படுத்தப்படுகின்றது. பொருத்தமான வகைப்படுத்தலை தீர்மானிப்பதில், கொடுக்கல் வாங்கலின் பொருளானது வடிவத்தைவிட கருத்திலெடுக்கப்படுகின்றது. கருத்திலெடுக்கப்படும் காரணிகள்

பின்வருவற்றை உள்ளடக்குகின்றது ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படவில்லை: குத்தகை தவணைக்காலத்தின் இறுதியில் சொத்தின் உடைமையினை குத்தகையானது குத்தகையாளருக்கு மாற்றல் செய்கின்றதா் அமல்படுத்தப்படும் திகதியில் உள்ள நியாயப் பெறுமதியிலும் பார்க்க போதுமானளவு குறைவாகக் காணப்படக்கூடியது என எதிர்பார்க்கப்படும் விலையில் குத்தகையாளருக்கு சொத்தினை கொள்வனவு செய்யும் தெரிவு உள்ளதா் குத்தகைக் காலமானது, குத்தகையின் ஆரம்பத்தில் உரித்தானது மாற்றல் செய்யப்பட்டிராவிட்டாலும், சொத்தின் பொருளாதார வாழ்நாளின் பெரும் பகுதியாக இருத்தல் வேண்டும். இதில், ஆகக்குறைந்த குத்தகை கொடுப்பனவுகளது நிகழ்காலப் பெறுமதியானது ஆகக் குறைந்தது குத்தகை சொத்துக்களின் அனைத்து நியாயப் பெறுமதிக்கு சமனாக இருத்தல் வேண்டும்.

## (ஆ) மதிப்பீடுகள்

### (i) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு

முகாமைத்துவமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு சொத்துக்களின் உத்தேசித்த பயன்பாடு மற்றும் அவற்றின் பொருளாதார வாழ்நாட்கள் என்பவற்றின் அடிப்படையில் பயன்பாட்டு வாழ்நாட்களையும் எஞ்சிய பெறுமதிகளையும் ஒதுக்குகின்றது. முகாமைத்துவமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள், மற்றும் பெறுமானத்தேய்வு /பெறுமானக் குறைப்பு முறைகளை மீளாய்வு செய்கின்றது. இது இந்த சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருளாதார நலன்களது நுகா்வினது முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகள் என்பவற்றுடன் ஒவ்வுமையினை உறுதிப்படுத்துவதற்காகும். இந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் எஞ்சிய பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பெறுமதிக்குறைப்பு கட்டணங்களில் மீளாய்வினை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3. (பி) மற்றும் 2.4.4. இனை பார்க்கவும்)

### (ii) அடிக்கடி பறப்பவர் திட்டம்

வருவாயின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மறுபயன்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஒருங்கமைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றினில் ஓர் பொறுப்பாக (ஒத்திவைக்கப்பட்ட வருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல் வரவுகளின் நியாயப் பெறுமதியினை தீா்மானிப்பதற்கு மதிப்பீட்டு நுட்பங்கள பயன்படுத்தப்படுவதுடன் பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினை பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயா்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு வரலாற்று போக்குகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவா்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும மைல்கள் மற்றும் முதிா்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன.

மைல்களின் நியாயப் பெறுமதியினை திா்மானிப்பதற்கு உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஓர் மட்டத்திலான பகுத்தறிவினை பிரயோகிக்கின்றது.

### (iii) பராமரிப்பு ஒதுக்கம்

கம்பனியானது செயற்பாட்டு குத்ததைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளில் குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவுகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். காலாகாலம் முகாமைத்துவமானது மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடுசெய்கின்றது. ஓர் சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 06 இனை பார்க்கவும்)

### (iv) விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களுக்கான ஏற்பாடு

பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் செயற்பாட்டு குத்தைககளின் கீழ்வரும் விமானங்களில், கம்பனியானது விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடானது பழுதுபார்த்தலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரீசீலனை மேற்கொள்ளும் நேரத்தில் சொத்தின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும். இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வுசெய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன.

### (v) விமானப் போக்குவரத்து சேவைகள் தொடா்பாக நேரடி செயற்பாட்டு செலவினங்களுக்கான ஏற்பாடு

விமானப் போக்குவரத்து சேவைகளை செயற்படுத்தலானது எரிபொருள், தரை கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள், விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள், ஒதுக்கீட்டு முறைகள், நேரடிச் செலவுகள், முன்பதிவு கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடா்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்கமுடியாததாகும். மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்த சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன், இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டு செல்லப்படும் பொறுப்புக்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது.

### (vi) இருப்புக்கள்

கம்பனியானது நிரந்தர இருப்பு எண்ணிக்கை அடிப்படையில் இருப்புக்களின் உளதாம் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. ஏற்பாடுகள், முகாமைத்துவம் பழமைபட்டுப்போன இருப்பினை தீா்மானிக்கும்போது மற்றும்/அல்லது மீளப்பெறத்தக்க பெறுமதியில் ஓர் குறைப்பினை மதிப்பீடு செய்யப்படும்போது மேற்கொள்ளப்படுகின்றன.

### (vii) நிதியியிலல்லாத சொத்துக்களுக்கான வலுக்குன்றல்

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் ஒரு சொத்து வலுக்குன்றுமா என்ற அறிகுறி காணப்படுகின்றதா என்று மதிப்பீடு செய்கின்றது.

முகாமைத்துவமானது மீளப்பெறுவதிலான நிச்சயமற்றதன்மையினை குறிப்பிடும் ஏதேனும் ஏனைய காரணிகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருந்தால் மற்றும் அவை நிலுவையிலுள்ள காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அத்தகைய வலுக்குன்றல்களை மதிப்பிடுவதில் கருத்தினை பயன்படுத்துகின்றது.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

**(viii) நிதியியல் சொத்துக்களிலான வலுக்குன்றல்**

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுவானது மதிப்பிடுகின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினை குறிக்கும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் கருத்தினை பயன்படுத்துகின்றது.

**(இ) அனுமானங்கள்**

**(i) வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்**

இலங்கையினைத் தளமாகக் கொண்டு பணியாட்களது ஓய்வுபெறல் நலன் திட்டத்தின் செலவானது ஓர் காப்பீட்டுக் கணிப்பீட்டு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதங்கள், விசேட வட்டம், ஓய்வுபெறல் வயது மற்றும் கம்பனியின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16 இனை பார்க்கவும்)

**(ii) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு**

ஓர் சுயாதீன தகமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளை பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்படுகின்றன.

## 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

### 2.4.1. வெளிநாட்டு நாணயப் பெயர்வு

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்கு பரிமாற்றல் வீதத்தை பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியியலல்லாத உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

### 2.4.2 வரிவிதிப்பு

**(i) தற்போதுள்ள வருமான வரி கம்பனி**

**(அ) உள்ளூர் வரிவிதிப்பு**

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இறைவரிகள் (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் 1 ஏப்ரல் 2011 முதல் 2021 மார்ச் 31 வரையான 10 வருட காலப்பகுதிக்கு வரி விலக்களிப்பிற்கான உரிமையினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க இறைவரிச் சட்டமானது சட்டமயமாக்கப்பட்டதுடன் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் 1 ஏப்ரல் 2018 முதல் வருமான வரிக்கு பொறுப்பாயுள்ளது.

**(ஆ) வெளிநாட்டு வரிவிதிப்பு**

கம்பனியானது அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறையாண்டில் கம்பனிக்கு கிடைக்கக்கூடிய எடுத்துச் செல்லப்படும் வரி நட்டங்களின் நிமித்தம் எவ்வித பொறுப்புமில்லை.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

வருமான வரிச் செலவினமானது தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. வருமான வரிச் செலவினமானது உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்படும் உருப்படிகள் தொடர்பான அளவினைத் தவிர்த்து இலாபம் அல்லது நட்டக் கணக்கில் அங்கீகரிக்கப்படுகின்றது. உரித்துவம் தொடர்பானவை உரித்துவத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும்.

**(ii) ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி**

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது, பொறுப்புக்கள் முறையினை பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித் தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றை கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### 2.4.3 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

**(அ) கிரயம் மற்றும் பெறுமதியிடல்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படும். கிரயமானது கையகப்படுத்தல் மற்றும் கட்டுமாணம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக கணிசமானளவு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னரான கிரயங்கள் சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக, உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது அந்த உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு

அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

**(i) விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள்**
விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள், இவை உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது "விமானம் தொடர்பான உபகரணம்" இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

**(ii) மூலதன நடப்பு வேலைகள்**
மூலதன நடப்பு வேலைகள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து கிரயங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

### (ஆ) பெறுமானத்தேய்வு
பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய தொகைகளை பதிவழிப்பதற்காக சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| விமானம் தொடர்பான உபகரணங்கள | 8 வருடங்கள் அல்லது குத்தகை காலம் |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள | உபகரணத்தின் வகையின் அடிப்படையில் 3 முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதி |
| கட்டிடங்கள் | எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்களை வரை |

செயற்பாட்டு குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் - 10 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம் இவற்றுள் எது குறைந்ததோ.

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### (இ) அங்கீகரிப்பு நீக்கம்
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஓர் உருப்படியானது அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகரிப்பு நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமான கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

### 2.4.4 அருவச் சொத்துக்கள்
அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்படமுடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிகுறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்திசெய்யப்படும் கணினி மென்பொருளானது அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின் அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்பு காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் இந்த சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### 2.4.5 குத்தகைகள்
**1 ஏப்ரல் 2019 முதல் பிரயோகிக்கப்படும் கொள்கை**
ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஓர் இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழுமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது :-

- ஒப்பந்தம் ஓர் இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது - இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீகரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு பௌதீகரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டு உரிமையினை கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமம் மற்றும்
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினை கொண்டுள்ளது. குழுமமானது சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினை கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும் :-
  - சொத்தினை செயற்படுத்துவதற்கான உரிமையினை குழுமம் கொண்டுள்ளது அல்லது
  - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் சொத்தினை வடிவமைத்திருந்தால்.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

இக்கொள்கையானது 1 ஏப்ரல் 2019 இல் அல்லது அதற்கு பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் அல்லது மாற்றப்பட்டவற்றிற்கு பிரயோகிக்கப்படும்.

ஓர் குத்தகை கூறினை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் மீள்மதிப்பீட்டில், குழுமமானது ஒப்பந்தத்திலுள்ள மறுபயனை ஒவ்வொரு குத்தகை கூறுக்கும் அவற்றின் பொருத்தமான தனியான விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகின்றது.

எவ்வாறாயினும், காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையில் அது குத்தகையாளராக இருந்தால், குழுமமானது குத்தகையல்லாத கூறுகளை பிரிக்காது குத்தகை மற்றும் குத்தகையல்லாத கூறுகளை ஓர் தனியான குத்தகை கூறாக காண்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது.

**பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்**

குழுமமானது ஓர் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினையும் மற்றும் ஓர் குத்தகை பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. ஆரம்பத் தொகையான குத்தகை பொறுப்பினை, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினை கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஓர் மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை புணருத்தாரணம் செய்வதற்கு அல்லது அது நிறுவப்பட்டுள்ள தளத்தினை புணருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகை சலுகைகளை கழித்தல் என்பனவாகும்.

**(அ) விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை**

கம்பனியானது விமானங்களையும் என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்கு எடுக்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 4 முதல் 12 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினை திருப்பிக் கொடுக்கும் நிலைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் தேவைப்படும் நிலைமைக்கு புணருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஓர் மதிப்பீடானது கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. ஏனைய விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்ப்பு மற்றும் தரையிறக்கல் பொறி பழுதுபார்த்தல் செலவினங்கள் தவிர்த்தவை) ஓர் ஆட்பட்ட அடிப்படையில், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஓர் மேலதிக தொகையாக கருதப்படுகின்றது.

வைப்பானது ளுடுகுசுளு 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன் இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் முதல் தொகைக்கும் வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது ளுடுகுசுளு 9 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

1 ஏப்ரல் 2019 இலிருந்து 12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(ஆ) காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகை**

குழுமமானது இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுக்கின்றது. காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 9 வருடங்களுக்கு செல்லுபடியாகும். சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, ரத்து செய்யப்படமுடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது. வைத்திருக்கப்படும் விரிவாக்கல் தெரிவுரிமைகள் குழுமத்தினால் மாத்திரமே கையாளப்படலாம், குத்தகைக்கு விடுபவரினால் இயலாது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

**(இ) வாகனங்களது குத்தகை**

குழுமத்தின் வாகனக் குத்தகைகள் 2 முதல் 5 வருடங்கள் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

**(ஈ) தகவல் தொழில்நுட்ப மற்றும் ஏனைய உபகரணங்களின் குத்தகை**

குழுமமானது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்களை ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரையான ஒப்பந்தக் காலப்பகுதிக்கு குத்தகைக்கு எடுக்கின்றது. இந்த குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு தெரிவுசெய்துள்ளது. உரிய குத்தகைக் கொடுப்பனவுகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு**

ஆரம்ப திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகை காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. ஆதனம் மற்றும் உபகரணம் போன்ற அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம் குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகை பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

**குத்தகைப் பொறுப்பு**

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுவதுடன், வட்டி வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்படமுடியாவிடின், குழுமத்தின் அதிகரிக்கும் முறை வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினை கழிவு வீதமாக பயன்படுத்துகின்றது.

குத்தகை பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகை கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிலையான கொடுப்பனவுகள், பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக்
- ஓர் சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டிவீதத்தினை பயன்படுத்தி ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்
- ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாக கையாளும் என நியாயமாக காணப்பட்டால், குழுமமானது ஓர் நீடிப்பு தெரிவுரிமையினை கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஓர் தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையின் முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகை பொறுப்பானது பயனுறுதிமிக்க வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டிவீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினை குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகை பொறுப்பானது இவ்வாறு மீளஅளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கல் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது பூச்சியத்திற்கு குறைக்கப்பட்டிருந்தால் அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது.

**குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களிலான குத்தகைகள்**

தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளடங்களான குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குத்தகை காலத்தினைக் கொண்ட குறுங்கால குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்த குத்தகை கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

**1 ஏப்ரல் 2019 க்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட கொள்கை**

**(அ) செயற்பாட்டு குத்தகைகள்**

குத்தகைக்கு விடுபவர் செயல்திறன்மிக்க விதத்தில் குத்தகைக் காலப்பகுதியில் உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் நலன்களை கணிசமானளவு தக்க வைத்திருப்பின் அத்தகைய குத்தகைகள் செயற்பாட்டு குத்தகைகளாக கருதப்படுகின்றன. செயற்பாட்டு குத்தகை கொடுப்பனவுகள் குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஓர் செயற்பாட்டு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இது வேறுவிதமான முறைப்படியான அடிப்படையானது பயன்பாட்டாளரது நலனின் நேரப் போக்கினை பிரதிபலிப்பதாக இருந்தாலொழிய செயற்பாட்டு குத்தையாக கருதப்படமாட்டாது.

செயற்பாட்டு குத்தகைகளின் கீழ் சொத்துக்களின் மீள் உருவமைப்புக்காக ஏற்பட்ட செலவினமானது மூலதனமயமாக்கப்பட்டு எஞ்சியுள்ள குத்தகைக் காலப்பகுதி மற்றும் பயன்பாட்டு வாழ்நாள், இவற்றில் எது குறைவானதோ, அக்காலப்பகுதிக்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனை பார்க்கவும்.

**(ஆ) நிதியியல் குத்தகைகள்**

குத்தகை உருப்படியின் உடைமையினைத் தொடர்ந்து அனைத்து இடர்நேர்கைகளையும் நலன்களையும் கணிசமானளவு குழுமத்திற்கு மாற்றும் குத்தகைகள், குத்தகையின் ஆரம்பத்தில் காணப்பட்ட குத்தகைச் சொத்தின் நியாயப் பெறுமதியில் மூலதனமாக்கப்படுவதுடன் அல்லது, அதற்கு குறைவாயின், ஆகக் குறைந்த குத்தகை கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியிலாகும். குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிச் செலவுகளுக்கும் குத்தகை பொறுப்பின் குறைப்பிற்கும் இடையில் பகிரப்படுகின்றது. இது பொறுப்பின் எஞ்சியுள்ள மீதியில் ஓர் நிலையான வட்டி வீதத்தினை அடைவதற்காக செய்யப்படுகின்றது. நிதியியல் கட்டணங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் நிதிச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

மூலதனமயமாக்கப்பட்ட சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமாக வெளிப்படுத்தப்பட்டு குழுமமானது குத்தகைச் சொத்துக்களின் பயன்பாட்டிலிருந்தான நலனை எதிர்பார்க்கும் காலப்பகுதியில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனை பார்க்கவும்.

**(இ) விற்பனை மற்றும் குத்தகைக்கெடுத்தல்**

விற்பனை மற்றும் குத்தகைக்கெடுத்தல் கொடுக்கல் வாங்கலிலிருந்து எழும் இலாபங்கள் காரணமாக செயற்பாட்டு குத்தகைகளாக விளைவிப்பவை உடனடியாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் குறிப்பிட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை விற்பனை வருவாய் விஞ்சாத அளவுக்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.6 இருப்புக்கள்

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச் சேவைகள் தொடர்பான கையிருப்புகள், மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களை உள்ளடக்குகின்றது.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இருப்புக்களின் கிரயத்தினை கணிப்பிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

### 2.4.7 நிதியல்லாத சொத்துக்களிலான வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என்று மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படும்.

கோவிட் - 19 தொற்றினைத் தொடர்ந்து, குழுமமானது அறிக்கையிடப்படும் திகதியில் நிதியில்லாத சொத்துக்களில் (பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் உள்ளடங்களாக) ஏதேனும் குறிப்பிடத்தக்க வலுக்குன்றல் காணப்படுகின்றதா என்று கருதுவதற்காக ஓர் பகுப்பாய்வினை செய்கின்றது. இந்த பகுப்பாய்வின் அடிப்படையில், 31 மார்ச் 2020 இல் எவ்விதமான வலுக்குன்றல்களும் இனங்காணப்படவில்லை.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 2.4.8 நியாயப் பெறுமதி அளவீடு

குழுமமானது அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 04 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஓர் பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் இரு விதங்களில் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையிலாகும்.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தியில், அல்லது
- முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை.

முதன்மை சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தை பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலை கணக்கிலெடுக்கின்றது.

குழுமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும்.

நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 – ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 – நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்
- மட்டம் 3 – நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று குழுமமானது தீர்மானிக்கின்றது. (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்).

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் ஈடுபடுவார்கள். வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களினை தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது. தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்நேர்கைகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம்.

### 2.4.9 நிதியியல் கருவிகள்

### 2.4.9.1. நிதியியல் சொத்துக்கள்

**ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு**

நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் வகைப்படுத்தப்பட்டு, ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி.

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்களாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஓர் தரப்பினராக வந்த வர்த்தகத் திகதியின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியியல் சொத்தானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை கருத்திலெடுக்கின்றது.

**பிற்பட்ட அளவீடு**

நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது பொதுவாக ஓர் நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது அது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது.

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஓர் வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின் மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஓர் உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு சமாப்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், விமான பராமரிப்பு ஒதுக்கம், விமான உதிரி என்ஜின் வைப்புகள், முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**

நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது குழுமமானது ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகரிப்பு நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும் மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது.

ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகரிப்பு நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(i) பெறப்பட்ட மறுபயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினை கழித்தல் உள்ளடங்களாக) மற்றும்
(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்**

ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன் அனைத்து வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளுக்கு ஓர் வாழ்நாள் எதிர்பார்க்கப்படும் நட்ட படியும் பயன்படுத்தப்படுகின்றது.

குழுமமானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கும் ஓர் நிதியியல் கருவியின் எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டத்தினை அளவிடுகின்றது.

(அ) ஓர் பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்வாய்ப்பு நிறையிடப்பட்ட தொகையானது சாத்தியமான வீச்சான விளைவுகளை மதிப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது
(ஆ) பணத்தின் நேரப் பெறுமதி மற்றும்
(இ) அறிக்கையிடப்படும் திகதியில் கடந்தகால நிகழ்வுகள், தற்போதைய நிபந்தனைகள், மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமைகளிலான எதிர்வுகூறல் பற்றி ஓர் நியாயமான மற்றும் மிதமிஞ்சிய கிரயம் அல்லது முயற்சி இன்றி கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதாரமான தகவல்கள்.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லும் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

உலகளாவிய பொருளாதாரத்திலான கோவிட்-19 இன் தாக்கம் மற்றும் எவ்வாறு அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் நுகர்வோர்கள் பதிலளிப்பார்கள் என்பது நிச்சயமற்றதாகும். இந்த நிச்சயமற்றதன்மையானது குழுமத்தின் கடன் தொகுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களிலான மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்படுவதுடன் இவை பல முகாமைத்துவ பகுத்தறிவுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

கோவிட் -19 இன் தாக்கத்தின் சூழலினுள் பகுத்தறிவுகளும் இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்த சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்களாகும்.

### 2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்களாக) குழுமமானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஓர் தரத்தவராக வரும் வர்த்தக தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

குழுமமானது அதன் நிதியியல் பொறுப்புக்களை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. இது பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்.

ஒரு நிதியியல் பொறுப்பானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஓர் உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றது.

**பிற்பட்ட அளவீடு**

குழுமமானது வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பிற்கான ஒதுக்கம் மற்றும் பழுதுபார்த்தல் கிரயம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலின் திருப்பிசெலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக்குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகைக்கும், முதிர்வுத் தொகையிலிருந்து வலுக்குன்றலுக்காக ஏதேனும் தொகையினை கழித்ததன் பின்னர் வரும் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயல்திறனான வட்டி முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**

பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகாரம் நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை

கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு, தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்;

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்படல் வேண்டும் மற்றும்
- ஓர் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.

### 2.4.9.4 காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கம்

கம்பனியானது அதன் இனங்காணத்தக்க வெளிநாட்டு நாணயத்திலான கடன்களை ஓர் இழப்புக் காப்பரணாக உயர்ந்த நேரிடக்கூடிய, விசேடமாக வெளிநாட்டு நாணயத்தில் இனங்காணப்பட்ட எதிர்கால வருவாய்க்கு எதிராக குறிப்பிடுகின்றது. இதனூடாக கம்பனியானது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களினால் ஏற்பட்ட தளம்பல்களின் மூலம் எழும் இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய இடர்நேர்கையினை காப்பரண் செய்தது.

இழப்புக் காப்பரண் கருவியிலான இலாபம் அல்லது நட்டத்தின் செயல்திறனான பகுதியானது ஏனைய விரிவான வருமானத்தில் காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கமாக நேரடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் ஏதேனும் செயல்திறனான பகுதியானது உடனடியாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட தொகையானது இழப்புக் காப்பரண் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்போது இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது (எதிர்வுகூறப்பட்ட வருவாய் கைகூடும்போது).

எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலானது இடம்பெறுவதற்கு எதிர்பாாக்கப்படாதபோது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது. இழப்புக் காப்பரண் கருவியானது முதிர்வடைந்தால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், மாற்றீடு செய்யப்படாமல் அல்லது தொடர் உருள்வு செய்யப்படாமல் நீக்கப்பட்டால் அல்லது செயல்முறைப்படுத்தப்பட்டால், அல்லது ஓர் இழப்புக் காப்பரண் என்ற அதன் குறிப்பீடு ரத்துசெய்யப்பட்டால், ஏனைய விரிவான வருமானத்தில் ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டமாக முன்னர் அங்கீகரிக்கப்பட்டவை, இழப்புக் காப்பரண் உடன்படிக்கையின் படி எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்வரைக்கும் உரித்துவத்தில் நிலைத்திருக்கும்.

கோவிட்-19 இன் தாக்கமானது மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக வெளிநாட்டு நாணயத்திலான எதிர்கால வருவாயினையும் பாதித்துள்ளது. வெளிநாட்டு நாணயத்திலான கடன்கள் இதற்கமைய மீள்அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இழப்புக் காப்பரணின் செயற்திறனற்ற பகுதியானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது மாதாந்த அடிப்படையில் எதிர்கால என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினை பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக மீளப்பெறுகின்றது. (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்).

தன்மையினைப் பொறுத்து விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்களாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மேலே குறிப்பு 2.4.9.1. (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.12 முதலீடுகள்

**துணை நிறுவனத்திலான முதலீடு**

கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில், தற்காலிக பெறுமதிக்குறைவு தவிர்த்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு, கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.13 குறுங்கால முதலீடுகள்

மூன்று மாதங்களுக்கு குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

### காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசம் காசுக்குச் சமனானவைகள் என்பது பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்கைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட காசு என்பவற்றை உள்ளடக்குகின்றது. குறைந்த முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகளும் (கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.15 ஏற்பாடுகள்

**(i) பொதுவானவை**

ஓர் கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஓர் நடைமுறை கடப்பாட்டினைக் கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிள்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும். குழுமமானது ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல்வேண்டும் என எதிர்பார்த்தால், அந்த

செலவீடானது ஓர் தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால் அந்த செலவீடானது கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே.

**(ii) விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள்**

குழுமமானது விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவினங்கள் குறிப்பு 2.3.2 (ஆ) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் கிரயமானது உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

### 2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள்

#### (அ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் குழுமமானது உரிய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஓர் காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்கின்றது. வெளிநாட்டு நிலையங்களில் இது பிரயோகிக்கப்படவேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

#### (ஆ) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

### 2.4.17 அடிக்கடி பறப்பவர் திட்டம்

திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் “FlySmiLes” அடிக்கடி பறப்பவர் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டூறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

### 2.4.18 வருவாய் அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயானது ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு பிரதியாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும் மறுபயனை பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### (அ) விமான வருவாய்

பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்தல், விமானநிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயினை உருவாக்குகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து /சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன்விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை பயன்படுத்தப்படாமலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் முதிர்வடைந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.

(v) விமானச் செயற்பாடு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### (ஆ) விமான உணவகச் சேவைகளிலிருந்தான வருவாய்

**பொருட்களின் விற்பனை**

ஒரு வாடிக்கையாளருக்கு ஓர் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கடப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தக கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின்

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லைலை.

### (இ) பங்கிலாப வருமானம்

கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்பட்டதன் பின்னர் பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

### (ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானமானது ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### (உ) வட்டி வருமானம்

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்த நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயல்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

### (ஊ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.19 செலவின அங்கீகரிப்பு

செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஓர் செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை சமா்ப்பிக்கும் நோக்கத்திற்காக "செலவினங்களின் தன்மை" முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக சமா்ப்பிக்கின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

### 2.4.20 கடன் கிரயம்

பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால் அதன் கையகப்படுத்தல், கட்டுமாணம் அல்லது உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடமையாக்கப்படக்கூடிய கடன் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

### 2.4.21 பிரிவு பிரிவான அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் ஈடுபட்டுள்ள வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம் குழுமத்தின் இடர்நேர்கைகள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாக பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயல்முறைகளின் அடிப்படையில் பிரதான பிரிவுகள் தீா்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் புரள்வின் பகுப்பாய்வானது எந்த பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்த பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காணமுடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

பூகோள ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை ஒதுக்குவதில் ஓர் பொருத்தமான அடிப்படை காணப்படவில்லை என முகாமைத்துவம் கருதுகின்றது. இதற்கமைய, பூகோள ரீதியான பிரிவுகள் மூலம் பிரிவு பிரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய பிரிவு பிரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வணிகப் பிரிவுகளிலான இரண்டாந்தர அறிக்கையிடலானது குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டதாகும். குழுமமானது இரண்டு பிரதான வணிகப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளது – விமானப் போக்குவரத்து மற்றும் அதன் துணை நிறுவனமூடான விமானத்திலுள்ளான உணவக சேவைகள்.

### 2.5 வழங்கப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் செயற்பாட்டிற்கு வரவில்லை

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகமானது பின்வரும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை (LKASs/SLFRSs) வழங்கியுள்ளதுடன் இவை 1 ஜனவரி 2020 க்கு பின்னா் ஆரம்பிக்கும் எதிர்கால நிதியியல் காலப்பகுதிக்கு பிரயோகிக்கப்படும். இதற்கமைய, இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் குழுமமானது பின்வரும் புதிய நியமங்களை பிரயோகிக்கவில்லை.

பின்வரும் திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதனையும் ஏற்படுத்தாது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களில் கருத்துவடிவான வரம்புறுகைகளுக்கான பரிந்துரைகளிலான திருத்தங்கள்
- இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 1 "நிதிக் கூற்றுக்களுக்கான முன்னிலைப்படுத்தல்கள்" மற்றும் இலங்கை கணக்கீட்டு நிமயம் - LKAS 8 "கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள், பிழைகள்" என்பவற்றுக்கான திருத்தங்கள்.
- இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 3 வணிக சேர்க்கைகள் க்கான திருத்தங்கள்
- SLFRS 9, LKAS 39, மற்றும் SLFRS 7 – வட்டி வீத மட்டக்குறி மறுசீரமைப்பு இலான திருத்தங்கள்

## 3. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நடைமுறையாண்டில் கம்பனியானது ரூபா 47,197.86 மில்லியன் ரூபாயினை நட்டமாக பதிவுசெய்ததுடன் (2019 - ரூபா 44,022.67 மில்லியன்) 31 மார்ச் 2020 இல் ஓர் திரண்ட நட்டமாக ரூபா 326,341.48 மில்லியன் (2019 - ரூபா 230,590.07 மில்லியன்) காணப்படுகின்றது. மேலும், கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 211,645.13 மில்லியனால் விஞ்சியதுடன் (2019 – 186,339.26 மில்லியன்) அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியின் மொத்த உரித்துவமானது ஓர் எதிர்மறையான ரூபா 273,369.08 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. (2018- எதிர்மறை ரூபா 177,556.23 மில்லியன்).

குழுமமானது இவ்வருடத்தில் ரூபா 44,139.40 மில்லியனை நட்டமாக (2019 – 41,700.33 மில்லியன்) பதிவுசெய்ததுடன் 31 மார்ச் 2020 இல் ஓர் திரண்ட நட்டமாக ரூபா 316,477.65 மில்லியனை (2019 - ரூபா 223,488.73 மில்லியன்) பதிவுசெய்தது. மேலும் குழுமத்தின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூபா 200,878.32 மில்லியனால் (2019 – 177,725.40) விஞ்சியதுடன் அறிக்கையிடப்படும் தினத்தில் குழுமத்தின் உரித்துவமானது ஓர் எதிர்மறையான ரூபா 261,173.54 மில்லியனாக (2019 – எதிர்மறை ரூபா 168,111.70 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

கம்பனியின் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியிலும் பார்க்கக் குறைவாயுள்ளதுடன் கடுமையான மூலதன இழப்பிற்கு முகங்கொடுக்கின்றது. எனவே, கம்பனியானது ஓர் அதிவிசேட பொதுக் கூட்டம் (அ.பொ.கூ.)ஒன்றினை 25 ஜூன் 2019 இல் நடாத்தியதுடன் (அதே நோக்கத்திற்காக முன்னர் இடம்பெற்ற இரண்டு அ.பொ.கூ. க்கும் மேலதிகமாக) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 220 பிரிவிற்கமைய பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டன.

கோவிட்-19 இன் நோய் பரவலுடன் தொழிற்படும் சூழலானது நிச்சயமற்றதாகவும் மற்றும் சவால்மிக்கதாகவும் மாறியுள்ளது. கோவிட்-19 தொற்றின் காரணமாக நவீன யுகத்தில் உலகளாவிய விமான நிறுவனத் துறையானது அதன் கொடிய நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்றது. ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முகாமைத்துவமானது திரவத்தன்மையினை பாதுகாப்பதற்காக விமான நிறுவனத்தின் முக்கிய வழங்குநர்களுடன் ஒத்திவைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் சலுகைகளை பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் உரிய செயல்முறைகளை ஏற்கனவே எடுத்துள்ளது. இவ்வாறு செய்யும்போது, விமான நிறுவனமானது தொடர்ச்சியாக புதிய வணிக வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு முனைவதுடன் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக செலவினங்களை சேமிக்கும் வழிமுறைகளில் முன்னிறுத்துகின்றது.

2020/21 பாதீடானது குத்தகைகள், பணியாட்கள் செலவு, செலவு மேம்படுத்தல்கள் மற்றும் சரக்கு செயற்பாடுகளை மேம்படுத்துதல் உள்ளடங்களாக புதிய வருவாய் வழிகள் என்பவற்றை ஒன்றிணைத்து தயாரித்தது. முகாமைத்துவமானது தொடர்ச்சியாக வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு முனைகின்றது. மேலும், நான்கு எயார்பஸ் ஏ350-900 விமானங்களுக்கு மேற்கொண்ட முன்விநியோக கொடுப்பனவுகள் எயார்பஸ் நிறுவனத்துடன், நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 6 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு, மீளப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. ஏனைய வழிமுறைகள் பணியாட்களுக்கு 2.5%இலிருந்து 25% வரையான கட்டாய சம்பளக் குறைப்பு, 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தவிருந்த அனைத்து சம்பள அதிகரிப்புகளையும் நிறுத்திவைத்தல் என்பவற்றை உள்ளடக்கும். மேலும், மார்ச் 2020 இலிருந்து 30 ஒக்டோபர் 2020 வரை கொடுப்பனவற்ற விசேட லீவுத் திட்டமானது பணியாட்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

இலங்கை அரசாங்கமானது மீளாய்வாண்டில் தொடர்ந்தும் கம்பனிக்கு உறுதுணை வழங்கியதுடன், இக்காலப்பகுதியில் முதிர்வடைந்த USD 205.4 மில்லியன் மற்றும் ரூபா 27.6 பில்லியன் பெறுமதியான அனைத்து ஆறுதல் கடிதங்களையும் மீள வழங்குவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இவை இரண்டு அரச வங்கிகளுக்கும் குறுங்கால கடன் வசதிகளை கம்பனிக்கு வழங்குவதனை தொடர்வதற்காகும். இலங்கை அரசாங்கமானது ஜூன் 2019 இல் USD 175 மில்லியனுக்கான இறையாண்மை உத்தரவாதத்தினை மீள் வழங்கியது. இது 27 ஜூன் 2019 இல் முதிர்வடைந்த ஓர் சர்வதேச முறிக்கு மீள்நிதியளிப்பதற்கு கம்பனிக்கு இயலுமையாக்கியது. மேலும், அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர், திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தினை அடிப்படையாகக்கொண்டு இரண்டு அரச வங்கிகளும் தொழிற்படு மூலதன நோக்கங்களுக்காக USD 75 மில்லியனுக்கு புதிய வசதிகளை அங்கீகரித்தது. மேலும், இலங்கை அரசாங்கமானது 17 ஜூன் 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் மற்றும் திறைசேரியின் செயலாளருக்கு 29 ஜூன் 2020 இல் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலமும், முன்மொழியப்பட்டுள்ள மீள்கட்டமைப்பு செயல்முறையானது நிறைவடையும்வரை இலங்கை அரசாங்கமானது, கம்பனியானது அதன் செயற்பாட்டினை “நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி” அடிப்படையில் தொடருவதற்கு வேண்டிய நிதியியல் உறுதுணையினை வழங்குவதற்கு உறுதிசெய்துள்ளது.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
### 4.1 குழு

| | காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா மில்லி. | பொறித்தொகுதியும் உபகரணமும் ரூபா மில்லி. | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்பாடுகள் ரூபா மில்லி. | விமானம் தொடர்பான உபகரணங்கள் ரூபா மில்லி. | குத்தகை பொறித்தொகுதியும் உபகரணமும் ரூபா மில்லி. | முற்பணங்கள்/மூலதன நடப்புவேலைகள் ரூபா மில்லி. | மொத்தம் ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| **01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி** | 4,555.84 | 9,261.14 | 2,218.83 | 9,449.73 | 2,582.94 | 11.82 | 28,080.30 |
| கொள்வனவுகள்/ திருத்தங்கள்/மேம்பாடுகள் | 14.75 | 450.82 | - | 171.06 | - | 25.36 | 661.99 |
| நடப்பு வேலைகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்டது | 31.41 | - | - | - | - | (31.41) | - |
| செம்மையாக்கல்கள் | - | 1.04 | - | (8.50) | - | - | (7.46) |
| பயன்பாட்டிற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கு மாற்றல் | - | - | - | - | (2,500.45) | - | (2,500.45) |
| மீள்வகைப்படுத்தல்கள் | - | 82.49 | - | - | (82.49) | - | - |
| விற்பனை/ஒய்வுகள் | - | (53.95) | (135.23) | (28.15) | - | - | (217.33) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 4,602.00 | 9,741.54 | 2,083.60 | 9,584.14 | - | 5.77 | 26,017.05 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| **01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி** | 313.40 | 6,452.39 | 1,993.62 | 7,444.31 | 1,654.68 | - | 17,858.40 |
| வருடத்திற்கான கட்டணம் | 309.86 | 666.58 | 54.24 | 483.80 | - | - | 1,514.48 |
| பயன்பாட்டிற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கு மாற்றல் | - | - | - | - | (1,601.82) | - | (1,601.82) |
| மீள்வகைப்படுத்தல்கள் | - | 52.86 | - | - | (52.86) | - | - |
| விற்பனை/ஒய்வுகள் | - | (40.50) | (135.23) | (27.79) | - | - | (203.52) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 623.26 | 7,131.33 | 1,912.63 | 7,900.32 | - | - | 17,567.54 |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 3,978.74 | 2,610.22 | 170.97 | 1,683.82 | - | 5.77 | 8,449.51 |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 4,242.44 | 2,808.75 | 225.21 | 2,005.42 | 928.26 | 11.82 | 10,221.90 |

4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி.)

4.2 (a) 31 மார்ச் 2018 இல் நிறைவடைந்த நிதியாண்டில் ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டின் மூலம் கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது தீர்மானிக்கப்பட்டதுடன் 31 மார்ச் 2019 இல் திரு. ஜி.எச்.ஏ.பி.கே.பர்னாந்து, (ஸ்ரீலங்கா) மதிப்பீட்டாளர்கள் நிருவகத்தில் ஒன்றிணைக்கப்பட்ட மதிப்பீட்டாளர், அவர்களால் துணை நிறுவனத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமயலறை உபகரணங்களின் நியாயப் பெறுமதியானது தீர்மானிக்கப்பட்டது.

குழுமத்தின் காணி, கட்டிடம் மற்றும் ஏனைய பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மதிப்பீட்டின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன்

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கப்படமுடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்படமுடியாத உள்ளீடுகளுக்கான நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப் பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை மதிப்பீட்டு முறை | 31 மார்ச் 2018 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூபா 18 மில்லியன் | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு/கட்டுநாயக்கா | பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம் | 31 மார்ச் 2018 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூபா 643.47 - ரூபா 8,092.50 | | |
| **துணை நிறுவனம்** | | | | | |
| கட்டிடங்கள் - கட்டுநாயக்கா | சந்தைப் பெறுமதி | 31 மார்ச் 2019 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூபா 4,000 - ரூபா 16,000 | | |
| விமானச் சமையலறை உபகரணங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன - கட்டுநாயக்கா | திறந்த சந்தை மதிப்பீட்டு முறை | 31 மார்ச் 2019 | ஒவ்வொரு உபகரணத்தின் நியாயப் பெறுமதியும் தேறிய பதிலீட்டு கிரய (தே.ப.க.) அணுகுமுறையினை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளது. | | |

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீள்மதிப்பீட்டு சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது சொத்துக்கள் கொள்விலையிலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு பின்வருமாறு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூபா மில்லி. | திரண்ட பெறுமானத்தேய்வு சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டிருப்பின் ரூபா மில்லி. | தேறிய கொண்டுசெல்லல் தொகை 2019 ரூபா மில்லி. | தேறிய கொண்டுசெல்லல் தொகை 2018 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் | 3,032.00 | 1,990.88 | 1,041.12 | 1,100.25 |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 2,288.72 | 2,076.62 | 212.10 | 264.51 |

(b) இவ்வாண்டில், குழுமமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை மொத்தப் பெறுமதியான ரூபா 661.99 மில்லியனுக்கு (2019 - ரூபா 1,069.85 மில்லியன்)கொள்வனவு செய்தது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வாண்டில் ரூபா 735.56 மில்லியன் (2019 - ரூபா 1,040.34 மில்லியன்) காசாகச் செலுத்தப்பட்டது.

(c) குழுமத்தின் ஆதனம், பொறித்தொகுதி மற்றம உபகரணம் என்பன முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லல் தொகை ரூபா 12,029.11 மில்லியன் ஆகும். (2019 - ரூபா 11,951.10 மில்லியன்).

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

## 4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி.)

### 4.3 கம்பனி

| | காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா மில்லி. | பொறித்தொகுதியும் உபகரணமும் ரூபா மில்லி. | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்பாடுகள் ரூபா மில்லி. | விமானம் தொடர்பான உபகரணங்கள் ரூபா மில்லி. | குத்தகை பொறித்தொகுதியும் உபகரணமும் ரூபா மில்லி. | முற்பணங்கள்/மூலதன நடப்புவேலைகள் ரூபா மில்லி. | மொத்தம் ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| **01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி** | 2,990.35 | 8,121.47 | 2,218.83 | 9,449.73 | 2,582.94 | - | 25,363.32 |
| கொள்வனவுகள/திருத்தங்கள்/ மேம்பாடுகள் | 0.45 | 133.36 | - | 171.06 | - | 20.84 | 325.71 |
| நடப்பு வேலைகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்டது | 15.76 | - | - | - | - | (15.76) | - |
| செம்மையாக்கல்கள் | - | 1.04 | - | (8.50) | - | - | (7.46) |
| மீள்வகைப்படுத்தல்கள் | - | 82.49 | - | - | (82.49) | - | - |
| பயன்பாட்டிற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கு மாற்றல் | - | - | - | - | (2,500.45) | - | (2,500.45) |
| விற்பனை/ஓய்வுகள் | - | (35.87) | (135.23) | (28.15) | - | - | (199.25) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 3,006.56 | 8,302.49 | 2,083.60 | 9,584.14 | - | 5.08 | 22,981.87 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| **01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி** | 313.41 | 6,415.11 | 1,993.62 | 7,444.31 | 1,654.68 | - | 17,821.13 |
| வருடத்திற்கான கட்டணம் | 226.62 | 429.51 | 54.24 | 483.80 | - | - | 1,194.17 |
| மீள்வகைப்படுத்தல்கள் | - | 52.86 | - | - | (52.86) | - | - |
| பயன்பாட்டிற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கு மாற்றல் | - | - | - | - | (1,601.82) | - | (1,601.82) |
| விற்பனை/ஓய்வுகள் | - | (35.87) | (135.23) | (27.79) | - | - | (198.89) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 540.03 | 6,861.60 | 1,912.63 | 7,900.32 | - | - | 17,214.59 |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 2,466.53 | 1,440.88 | 170.97 | 1,683.82 | - | 5.08 | 5,767.28 |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 2,676.94 | 1,706.36 | 225.21 | 2,005.42 | 928.26 | - | 7,542.19 |

**4.4 a)** 31 மார்ச் 2018 இல் நிறைவடைந்த நிதியாண்டில் திரு. ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) ஓர் சுயாதீன மதிப்பீட்டாளரினால் மீள்மதிப்பு செய்யப்பட்டதன் மூலம் கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களது நியாயப் பெறுமதியானது தீர்மானிக்கப்பட்டன. அத்தகைய மதிப்பீடுகளின் விளைவானது 31 மார்ச் 2018 முதல் நிதிக் கூற்றுக்களில் ஒன்றிணைக்கப்பட்டன.

மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கப்படமுடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்படமுடியாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப் பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை மதிப்பீட்டு முறை | ஹ31 மார்ச் 2018 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூபா 18 மில்லியன் | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு/கட்டுநாயக்கா | பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம் | 31 மார்ச் 2018 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூபா 643.47 - ரூபா 8,092.50 | | |

**b)** நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீள்மதிப்பீட்டு சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது சொத்துக்கள் கொள்விலையிலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு பின்வருமாறு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூபா மில்லி. | திரண்ட பெறுமானத்தேய்வு சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருப்பின் ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2020 ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2019 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் | 1,239.49 | 907.34 | **332.15** | 371.09 |

**c)** இவ்வாண்டில் கம்பனி ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ரூபா 325.71 மில்லியன் மொத்தப் பெறுமதிக்கு (2019 - ரூபா 890.18 மில்லியன்) கொள்வனவு செய்தது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு காசுக் கொடுப்பனவாக ரூபா 399.28 மில்லின் (2019-ரூபா 940.02 மில்லியன்) செலுத்தப்பட்டது.

**d)** கம்பனியின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கொண்டுசெல்லல் தொகையான ரூபா 12,029.11 மில்லியனை (2019 - ரூபா 11,576.10 மில்லியன்) உள்ளடக்குகின்றது.

## 5. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

### 5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்

| | குழுமம் | | | | | கம்பனி | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூபா மில்லி. | காணியும் கட்டிடமும் ரூபா மில்லி. | வாகனங்கள் ரூபா மில்லி. | விமானத் தூண்டி ரூபா மில்லி. | மொத்தம் ரூபா மில்லி. | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூபா மில்லி. | காணியும் கட்டிடமும் ரூபா மில்லி. | வாகனங்கள் ரூபா மில்லி. | விமானத் தூண்டி ரூபா மில்லி. | மொத்தம் ரூபா மில்லி. |
| SLFRS 16 **க்கு நிலைமாறல்** | 134,439.71 | 1,384.24 | 66.99 | - | 135,890.94 | 134,439.71 | 1,005.08 | 66.99 | - | 135,511.78 |
| ஆ.பொ.உ. இலிருந்தான மாற்றல்கள் | - | - | - | 898.63 | 898.63 | - | - | - | 898.63 | 898.63 |
| **1 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி** | 134,439.71 | 1,384.24 | 66.99 | 898.63 | 136,789.57 | 134,439.71 | 1,005.08 | 66.99 | 898.63 | 136,410.41 |
| சேர்க்கைகள் | - | 104.81 | 19.80 | - | 124.61 | - | 104.81 | 19.80 | - | 124.61 |
| பெறுமானத்தேய்வு | (17,304.95) | (228.54) | (41.05) | (255.90) | (17,830.44) | (17,304.95) | (181.37) | (41.05) | (255.90) | (17,783.27) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 117,134.76 | 1,260.51 | 45.74 | 642.73 | 119,083.74 | 117,134.76 | 928.52 | 45.74 | 642.73 | 118,751.75 |

- குழுமமானது ஸ்டுகுசுஸ 16 - குத்தகைகள் இனை 1 ஏப்ரல் 2019 முதல் கடைப்பிடித்துள்ளது. முன்னர் தொழிற்பாட்டு குத்தகையாக வகுப்பிடப்பட்ட அனைத்து குத்தகை ஒப்பந்தங்களும் மீளஅளவிடப்பட்டு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நிலைமாறலிலிருந்து 12 மாதங்களுக்குள் நிறைவடையும் குத்தகை ஒப்பந்தங்களும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் தவிர்த்த இது தொடர்பான பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**குறுங்கால குத்தகைகள்**

12 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குத்தகை காலத்தினைக்கொண்ட விமானங்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களது குறுங்கால குத்தகைகளை பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களாக அங்கீகரிக்காமலிருப்பதனை குழுவானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

| | குழுமம் 2020 ரூபா மில்லி. | கம்பனி 2020 ரூபா மில்லி. |
|---|---|---|
| குத்தகை விமானங்களிலான வாடகைகள் | **1,393.67** | 1,393.67 |
| காணி மற்றும் கட்டிடங்களிலான வாடகைகள் | **291.08** | 282.20 |
| வாகனங்களிலான வாடகைகள் | **11.37** | 9.38 |

**குறைவான பெறுமதியிலா சொத்துக்கள்**

குழுமமானது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் நகல் எடுப்பான் இயந்திரங்கள் உள்ளடங்களான குறைவான பெறுமதியான சொத்துக்களது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காமிலிருப்பதற்கு தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவிமாக அங்கீகரிக்கின்றது.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 6. விமான முன்விநியோக கொடுப்பனவுகள்

அறிக்கையிடப்படும் திகதியன்று உள்ள முன்விநியோக கொடுப்பனவுகள் 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்படவேண்டிய நான்கு எயார்பஸ் ஏ350-900 விமானங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட முன்விநியோக கொடுப்பனவுகளான ரூபா 2,528.12 மில்லியனை (USD 19.21 மில்லியன்) உள்ளடக்குகின்றன. கம்பனியானது நான்கு ஏ350-900 விமானங்களுக்கான கொள்வனவு உடன்படிக்கையினை மறுபரிசீலனை செய்வதற்கான தேவைப்பாட்டினை எயார்பஸ் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன் அறிக்கையிடும் திகதியன்று எயார்பஸ் நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டிய முன்விநியோக கொடுப்பனவாக USD 207.89 மில்லியன் காணப்படுகின்றது. கம்பனியானது எயார்பஸ் நிறுவனத்துடன் கலந்துரையாடியுள்ளதுடன் அதன் பின்னர் எயார்பஸ் நிறுவனமானது குறித்த கொள்வனவு உடன்படிக்கையினை திருத்தியமைத்து அதற்கு பதிலாக ஏ321 நியோ மற்றும் அல்லது ஏ330 நியோ விமானங்களை வழங்கும் பிரேரணையினை முன்வைத்துள்ளது. இது தற்போது கலந்துரையாடப்பட்ட வண்ணமுள்ளது. இதன் பிரகாரம் இந்த மீள்ஒப்பந்தப் பேச்சிலிருந்து தண்டப்பணங்கள் அல்லது முன்விநியோக கொடுப்பனவுகளது இழப்போ இடம்பெறுமென சபையானது எதிர்பார்க்கவில்லை.

### 7. விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

| குழுமம்/கம்பனி | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 44,507.42 | 34,517.81 |
| கொடுப்பனவுகள் | 12,901.46 | 11,819.73 |
| பதிவழிப்புகள் | (6,035.89) | (1,844.10) |
| மீளப்பெறுகைகள் | (6,534.07) | (4,625.72) |
| பரிமாற்றல் இலாபம் | 3,622.30 | 4,639.70 |
| | 48,461.22 | 44,507.42 |
| கழி: வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 7.2) | (13,567.56) | (10,779.18) |
| **31 மார்ச் இல் தேறிய மீளப்பெறத்தக்க மீதி (குறிப்பு 7.1)** | 34,893.66 | 33,728.24 |

### 7.1 நடைமுறை/நடைமுறையற்ற வகைப்பாடு

| | மொத்தம்<br>ரூபா மில்லி. | வலுக்குன்றலுக்கான ஏற்பாடு<br>ரூபா மில்லி. | தேறியது<br>ரூபா மில்லி. | ஒரு வடத்தினுள் மீளப்பெறக்கூடியது<br>ரூபா மில்லி. | ஒரு வருடத்திற்கு பின்னர் மீளப் பெறக்கூடியது<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | 48,461.22 | (13,567.56) | 34,893.66 | 16,290.06 | 18,603.60 |
| 31 மார்ச் 2019 இல் உள்ளவாறான மீதி | 44,507.42 | (10,779.18) | 33,728.24 | 13,747.07 | 19,981.17 |

### 7.2 வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளின் அசைவுகள்

| | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 10,779.18 | 7,567.00 |
| இவ்வருடத்தில் குறைக்கப்பட்டது | 4,349.64 | 4,797.17 |
| பதிவழிப்புகள் | (6,035.89) | (1,844.09) |
| செம்மையாக்கல்கள்ழ | 3,397.80 | (907.42) |
| பரிமாற்றல் நட்டம் | 1,076.83 | 1,166.52 |
| 31 மார்ச்சில் உள்ளவாறான மீதி | 13,567.56 | 10,779.18 |

* 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கான செம்மையாக்கல்கள் பராமரிப்பு ஒதுக்கத்திலிருந்து ஏற்பாடுகளை எதிர்கால விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினத்திற்கு செய்யப்பட்ட மாற்றலினை பிரதிபலிக்கின்றது. இது முன்னதாக திருப்பிகொடுக்கப்பட்ட விமானம் மற்றும் அட்டவணையிடப்பட்ட சில பழுதுபார்த்தல் நிகழ்வுகளில் ஏற்பட்ட மாற்றங்களினாலாகும். (31 மார்ச் 2019 இல் நிறைவடைந்த வருடத்திற்கான செம்மையாக்கல்கள் பராமரிப்பு ஒதுக்கத்தில் வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளை அட்டவணையிடப்பட்ட சில பழுதுபார்த்தல் நிகழ்வுகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் மீள்திருப்பியதை பிரதிபலிக்கின்றது) இது தொடர்பான ஏற்பாடானது குறிப்பு 17 இல் வழங்கப்பட்டுள்ள எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினத்திற்கான ஏற்பாட்டில் பிரதிபலிக்கப்படுகின்றது.

## 8. அருவச் சொத்துக்கள்

| | குழுமம் | | | கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|
| **கணினி மென்பொருள்** | **மென்பொருள்** ரூபா மில்ல். | **மூலதன நடப்பு வேலை** ரூபா மில்ல். | **மொத்தம்** ரூபா மில்ல். | **மென்பொருள்** ரூபா மில்ல். | **மூலதன நடப்பு வேலை** ரூபா மில்ல். | **மொத்தம்** ரூபா மில்ல். |
| **கிரயம்** | | | | | | |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான மீதி** | 1,387.02 | 27.74 | 1,414.76 | 1,301.20 | 27.74 | 1,328.94 |
| கொள்வனவுகள/திருத்தங்கள்/மேம்பாடுகள் | 6.53 | 19.53 | 26.06 | 3.35 | 19.53 | 22.88 |
| நடப்பு வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 20.94 | (20.94) | - | 20.94 | (20.94) | - |
| மாற்றல்கள/செம்மையாக்கல்கள் | 1.09 | (8.62) | (7.53) | 1.09 | (8.62) | (7.53) |
| விற்பனைகள் | (5.34) | - | (5.34) | (5.34) | - | (5.34) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 1,410.24 | 17.71 | 1,427.95 | 1,321.24 | 17.71 | 1,338.95 |
| **திரண்ட பெறுமதி குறைப்புகள்** | | | | | | |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான மீதி** | 1,282.78 | - | 1,282.78 | 1,229.43 | - | 1,229.43 |
| வருடத்திற்கான கட்டணம் | 46.59 | - | 46.59 | 36.36 | - | 36.36 |
| விற்பனைகள் | (5.34) | - | (5.34) | (5.34) | - | (5.34) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 1,324.03 | - | 1,324.03 | 1,260.45 | - | 1,260.45 |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 86.21 | 17.71 | 103.92 | 60.79 | 17.71 | 78.50 |
| **31 மார்ச் 2019 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 104.24 | 27.74 | 131.98 | 71.77 | 27.74 | 99.51 |

அறிக்கையிடப்படும் திகதியன்று குழுமம் மற்றும் கம்பனியின் அருவச் சொத்துக்கள் முற்றாக பெறுமதி குறைக்கப்பட்ட கொண்டு செல்லப்படும் சொத்துக்களின் பெறுமதியான ரூபா 1,231.53 மில்லியன் மற்றும் ரூபா 1,1196.46 மில்லியனை முறையே உள்ளடக்குகின்றன (2019 - ரூபா 1,122.69 மில்லியன் மற்றும் ரூபா 1,087.83 மில்லியன்).

## 9. முதலீடுகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| **நடைமுறையல்லாத முதலீடுகள்** | **2020** ரூபா மில்லி. | **2019** ரூபா மில்லி. | **2020** ரூபா மில்லி. | **2019** ரூபா மில்லி. |
| **இலங்கையிலள்ள துணை நிறுவனத்திலான முதலீடு** | | | | |
| - ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட் (940,268,456 பங்குகள், 100மு உடைமை) (தேறிய சொத்தின் அடிப்படையில் பணிப்பாளர்களது மதிப்பீடு ரூபா 12.24 பில்லியன் (2019-ரூபா 9.49 பில்லியன்) | **-** | - | **42.24** | 42.24 |
| - எயார் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் (40,000 பங்குகள்)* | | 0.40 | **0.20** | 0.20 |
| | **0.40** | 0.40 | **42.44** | 42.44 |

* எயார் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்டின் 50% பங்குகள் கம்பனியினால் வைத்திருக்கப்படுவதுடன் எஞ்சிய 50% துணை நிறுவனத்தினால் வைத்திருக்கப்படுகின்றது.

ஆரம்பத்திலிருந்தே எயார் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஓர் இயக்கமற்ற நிறுவனம் என்பதுடன் இதன் சிறப்பில்லா நிலையின் நிமித்தம் ஒன்றுசேர்க்கப்படவில்லை.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 9. முதலீடுகள் (தொடர்ச்சி.)

### 9.1. நடைமுறை முதலீடுகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
| வங்கியிலுள்ள நிலையான வைப்பு | 1,039.24 | 922.45 | 613.64 | 590.45 |

### 10. இருப்புகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
| என்ஜினியரிங் தொடர்பான இருப்பு | 6,172.67 | 6,179.33 | 6,172.67 | 6,179.33 |
| தரைச் சேவை தொடர்பான இருப்பு | 497.50 | 493.56 | 497.50 | 493.56 |
| மூலப் பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் | 894.85 | 890.63 | 548.41 | 539.56 |
| | 7,565.02 | 7,563.52 | 7,218.58 | 7,212.45 |
| கழி: மெதுவாக அசையும் இருப்புக்கான ஏற்பாடு (குறிப்பு 10.1) | (2,436.39) | (2,371.97) | (2,405.17) | (2,362.58) |
| | 5,128.63 | 5,191.55 | 4,813.41 | 4,849.87 |

### 10.1 மெதுவாக அசையும் இருப்புக்கான ஏற்பாடு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | (2,371.97) | (2,195.66) | (2,362.58) | (2,177.42) |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | (113.58) | (214.47) | (91.75) | (223.32) |
| இவ்வருடத்தில் பதிவழிக்கப்பட்டவை | 49.16 | 38.16 | 49.16 | 38.16 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | (2,436.39) | (2,371.97) | (2,405.17) | (2,362.58) |

### 11. வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. | 2019<br>ரூபா மில்லி. |
| வர்த்தக வருமதிகள் | 8,291.73 | 17,999.61 | 7,365.46 | 17,208.05 |
| கழி: வருமதிகளிலான வலுக்குன்றுலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.2) | (1,623.40) | (1,646.55) | (1,558.10) | (1,585.23) |
| | 6,668.33 | 16,353.06 | 5,807.36 | 15,622.82 |
| வைப்புகள், முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள் | 2,084.93 | 4,188.66 | 1,836.37 | 3,913.77 |
| | 8,753.26 | 20,541.72 | 7,643.73 | 19,536.59 |
| கம்பனி உத்தியோகத்தர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 67.07 | 62.59 | 39.86 | 33.80 |
| | 8,820.33 | 20,604.31 | 7,683.59 | 19,570.39 |

வர்த்தக வருமதிகளுக்கு வட்டி அறவிடப்படமாட்டாது என்பதுடன் அவை பொதுவாக 30 நாட்கள் கடன் தவணையினை கொண்டதாகும்.

**11.1 மார்ச் 31 இல் உள்ளவாறான வர்த்தக வருமதிகளின் வயது ஆய்வியல் பின்வருமாறு:**

31 மார்ச் 2020 இல் வர்த்தக வருமதிகளான ரூபா 1,623.40 மில்லியன் தொகையானது குழு தொடர்பாகவும் ரூபா 1,558.10 மில்லியன் தொகையானது கம்பனி தொடர்பாகவும் வலுக்குன்றியுள்ளதுடன் முற்றாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டினது அசைவானது குறிப்பு 11.2 இல் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி | மொத்தம் | கெடு முடியாத வலுக் குன்றாதவை | கெடு முடிந்தவை மற்றும் வலுக்குன்றியவை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 30-60 | 61-90 | 91-180 | 181-365 | >365 |
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| **கம்பனி** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 7,365.46 | 3,721.38 | 1,854.75 | 319.21 | 64.71 | 71.36 | 1,334.05 |
| கழி: வருமதிகளிலான வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.2) | (1,558.10) | (2.04) | (11.06) | (74.88) | (64.71) | (71.36) | (1,334.05) |
| | 5,807.36 | 3,719.34 | 1,843.69 | 244.33 | - | - | - |
| **குழுமம்** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 8,291.73 | 4,451.69 | 1,971.02 | 333.61 | 76.97 | 71.36 | 1,387.09 |
| கழி: வருமதிகளிலான வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.2) | (1,623.40) | (2.04) | (11.06) | (74.88) | (76.97) | (71.36) | (1,387.09) |
| | 6,668.33 | 4,449.65 | 1,959.97 | 258.72 | - | - | - |

**11.2 வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளிலான அசைவுகள்**

| | குழுமம் | கம்பனி |
|---|---|---|
| | ரூபா மில்லி. 2020 | ரூபா மில்லி. 2020 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | **1,646.55** | 1,585.23 |
| வருடத்திற்கான ஏற்பாடுகள் | **37.35** | 32.94 |
| பதிவழிப்புகள் | **(60.50)** | (60.07) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | **1,623.40** | 1,558.10 |

அறிக்கையிடப்படும் திகதியன்று தொடர்புடைய நபர்கள் சம்பந்தமான வலுக்குறைப்பிற்கான ஏற்பாடுகளது தொகை ரூபா 1,018.10 மில்லியனாக காணப்பட்டது (2019 - ரூபா 1,108.10 மில்லின்).

**12. காசுப்பாய்ச்சல் கூற்றில் காணப்பட்ட காசும் காசுக்குச் சமனானவைகளும்**

காசும் காசுக்குச் சமனானவற்றின் கூறுகள்

**12.1 சாதகமான காசும் காசுக்குச் சமனானவற்றின் மீதி**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | **1,596.98** | 2,212.02 | **1,233.18** | 1,681.03 |
| **12.2 சாதகமற்ற காசும் காசுக்குச் சமனானவற்றின் மீதி** | | | | |
| வங்கி மேலதிகப் பற்று (குறிப்பு 16) | **(11,681.41)** | (9,132.24) | **(11,681.41)** | (9,132.24) |
| **காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக மொத்த காசும் காசுக்குச் சமனானவைகளும்** | **(10,084.43)** | (6,920.22) | **(10,448.23)** | (7,451.21) |

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

## 13. கூறப்பட்ட மூலதனம்

### 13.1 வழங்கப்பட்ட மூலதனம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2019 ரூபா மில்லி. |
| வழங்கப்பட்ட மற்றும் முற்றாக செலுத்தப்பட்ட 516,174,355 சாதாரண பங்குகள் | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
LKAS 24 – "தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" க்கமைய அனைத்து அரசாங்கக் கட்டுப்பாட்டு/தொடர்புடைய நிறவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் அவற்றின் பருமன் மற்றும் நடைமுறையில் ஒவ்வாததன் காரணமாக தனித்தனியே குறிப்பிடத்தக்களவு கொடுக்கல் வாங்கல்கள் பற்றி வரையறுத்த வெளிப்பாடுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 30. தொடர்புடைய தரப்பினரது வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 30.2 குழுமம் (தொடர்ச்சி)

**இவ்வருடத்தில் குழுமம் அத்தகைய அரசாங்க கட்டுப்பாடுள்ள/தொடர்புடைய நிறுவனங்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:**

- இலங்கை மின்சார சபை
- இறைவரித் திணைக்களம்
- அரச மருந்துக் கூட்டுத்தாபனம்
- வெளிவிவகார அமைச்சு
- இலங்கை விமானப்படை
- இலங்கை தரைப்படை
- இலங்கை கடற்படை
- இலங்கை தபால் அதிகாரசபை
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு செயலகம்

மேலும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப பணியாட்கள் ஓய்வுபெறல் நலன்களுக்கான பங்களிப்பு தொடர்பாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 30.3 கம்பனி

வழக்கமான வணிகப் போக்கில் இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனம் உள்ளடங்களாக பின்வரும் நிறுவனங்களுடன் குறிப்பிடத்தக்களவ கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

| கம்பனியின் பெயர் | தொடர்பு | கொடுக்கல் வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | வருமதிகள்/ (கொடுக்குமதிகள் மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2020 ரூபா மில்லி | 2019 ரூபா மில்லி | 2020 ரூபா மில்லி | 2019 ரூபா மில்லி |
| வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் | துணை நிறுவனம் | சரக்கனுப்பும் சேவைகள் | 16.85 | 25.48 | - | - |
| | | வானூர்தி உணவளித்தல் மற்றும் ஏனைய சேவைகள் | (5,340.65) | (5,696.05) | (9,459.41) | (7,638.70) |
| | | பங்கிலாபம் | 1,701.25 | 3,280.18 | - | - |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | அரசுக்குச் சொந்தமானது | எரிபொருள் | (30,463.50) | (33,909.42) | (51,437.52) | (26,826.20) |
| | | ஒத்திவைக்கப்பட்ட வழங்குநர் கொடுப்பனவுகள் | - | - | (3,148.50) | (5,695.94) |
| | | தவணைகடந்த கொடுப்பனவுகளிலான நிதிச் செலவினம் | (2,174.30) | (1,007.55) | (2,332.04) | (551.50) |
| வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் வான்வழி சேவைகள் | அரசுக்குச் சொந்தமானது | தரையிறங்கல், தரித்தல், வானூர்தி பாலம், ஓய்விடம்,வாடகை, வர்த்தகஉரிமை கட்டணம் மற்றும் கழிவு எரித்தல் கட்டணங்கள் | (3,027.54) | (3,069.72) | (2,239.95) | (1,823.57) |
| சிவில் வான்பயண அதிகாரசபை | அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் | உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கட்டணங்கள் | (10,593.35) | (11,771.42) | (943.68) | (0.01) |
| மிஹின் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | அரசுக்குச் சொந்தமானது | களஞ்சியசாலை வாடகை | 2.01 | 23.36 | 770.79 | 768.79 |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | அரசுக்குச் சொந்தமானது | காப்புறுதிச் சேவைகள் | (365.36) | (511.38) | - | - |
| இலங்கை வங்கி | அரசுக்குச் சொந்தமானது | கடன் | - | - | (31,880.00) | (30,500.00) |
| | | குறுங்கால வைப்புகள் | - | - | 599.96 | 491.47 |
| | | தேறிய வட்டி | (3,087.13) | (3,148.06) | - | - |
| | | வங்கி மேலதிகப்பற்று | - | - | (11,681.41) | (9,132.24) |
| | | வாடகை | (0.66) | (1.99) | - | - |

| கம்பனியின் பெயர் | தொடர்பு | கொடுக்கல் வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | வருமதிகள்/ (கொடுக்குமதிகள் மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2020 ரூபா மில்லி | 2019 ரூபா மில்லி | 2020 ரூபா மில்லி | 2019 ரூபா மில்லி |
| மக்கள் வங்கி | அரசுக்குச் சொந்தமானது | பெற்ற கடன்/வட்டியினை முதலாக்கியது | - | 2,299.23 | - | - |
| | | கடன் | - | - | (34,703.51) | (33,249.23) |
| | | வட்டி | (3,476.75) | (3,442.88) | - | - |

அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியானது இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 2,059.64 மில்லியன் (2019-ரூபா 2,313.60 மில்லியன்) வங்கி உத்தரவாதத்தினை பயன்படுத்தியிருந்தது.

அரசினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிடமிருந்து/நிறுவனங்களுக்கான மீதிகள் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்/கொடுக்குமதிகள் மற்றும் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்புடைன தரப்பினர் சம்பந்தமாக ரூபா 894.16 மில்லியன் (2019-ரூபா 872.12 மில்லியன்) வலுக்குன்றலாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இ.க.நி. 24 - “தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" க்கமைய அனைத்து அரசாங்கக் கட்டுப்பாட்டு/தொடர்புடைய நிறவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் அவற்றின் பருமன் மற்றும் நடைமுறையில் ஒவ்வாததன் காரணமாக தனித்தனியே குறிப்பிடத்தக்களவு கொடுக்கல் வாங்கல்கள் பற்றி வரையறுத்த வெளிப்பாடுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் கம்பனி அத்தகைய அரசாங்க கட்டுப்பாடுள்ள/தொடர்புடைய நிறுவனங்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

- இலங்கை மின்சார சபை
- இறைவரித் திணைக்களம்
- அரச மருந்துக் கூட்டுத்தாபனம்
- வெளிவிவகார அமைச்சு
- இலங்கை விமானப்படை
- இலங்கை தரைப்படை
- இலங்கை கடற்படை
- இலங்கை தபால் அதிகாரசபை
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு செயலகம்

மேலும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப பணியாட்கள் ஓய்வுபெறல் நலன்களுக்கான பங்களிப்பு தொடர்பாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வணிக விதிமுறைகளில் நடைபெற்றன.

## 31. நிதியியல் இடர்நேர்கை முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

குழுமத்தின் பிரதான நிதியியல் பொறுப்புக்கள் கடன்கள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுபடவேண்டியவைகள், மற்றும் ஏனைய நிதியியல் பொறுப்புக்களை உள்ளடக்கியிருந்கின்றது. இந்த நிதியியல் பொறுப்புக்களின் முக்கிய நோக்கம் குழுமத்தின் தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காகும். குழுமத்தின் நிதியியல் சொத்துக்கள் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் அதன் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாக பெற்றுக்கொண்ட காசு மற்றும் குறுங்கால வைப்புகளை உள்ளடக்குகின்றது.

கூட்டாண்மை முகாமைத்துவமானது காலாகாலம் ஓர் விரிவான இடர்நேர்கை முகாமைத்துவ அணியை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தி கணிசமான அளவு தாக்கத்தை உடைய பின்வரும் நிதியியல் இடர்நேர்கைகளை இனங்கண்டுள்ளது.

(i) சந்தை இடர்நேர்கை
  - வட்டி வீத இடர்நேர்கை
  - நாணய இடர்நேர்கை

(ii) திரவத்தன்மை இடர்நேர்கை

(iii) கடன் இடர்நேர்கை

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 31. நிதியியல் இடர்நேர்கை முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் (தொடர்ச்சி)

குழுமமானது அதன் இடர்நேர்கை முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை சந்தைகளிலான மாற்றங்களை பிரதிபலிப்பதற்காக மற்றும் ஏனைய நிதியியல் இடர்நேர்கை பொறுப்பேற்கப்படும் நடவடிக்கைளின் அடிப்படையில் வழக்கமான அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது. இவை நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுக்கமைய இடர்நேர்கைகள் இனங்காணப்பட்டு, அளவிடப்பட்டு மற்றும் முகாமைப்படுத்தப்படுவதினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான கொள்கைகள் மற்றும் செயல்முறைகளினால் ஆளுமைப்படுத்தப்படுகின்றன.

**(i) சந்தை இடர்நேர்கை**

**வட்டி வீத இடர்நேர்கை**

வட்டி வீத இடர்நேர்கை என்பது சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஒரு நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதியானது தளம்பலடையும் என்ற இடர்நேர்கையாகும். சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களது இடர்நேர்கைக்கான குழுமத்தின் வெளிப்பாடானது பிரதானமாக குழுமத்தின் மிதக்கும் வட்டி வீதங்களில் பெறப்பட்ட நீண்டகால கடன் பொறுப்புக்கள் தொடர்பானதாகும்.

வட்டி வீத தளம்பல்களின் தாக்கத்தினை குறைப்பதற்காக விமான குத்தகை உள்ளடங்களான நிலையான மற்றும் மாற்றமடையும் வட்டிவீத கடன்களிடையே ஓர் பொருத்தமான சமநிலையினை பராமரிப்பது குழுவின் கொள்கையாகும்.

கடன்களிலான வட்டி வீதங்களில் நியாயமான சாத்தியப்படக்கூடிய மாற்றங்களுக்கு பின்வரும் அட்டவணையானது உணர்திறனை செயல் விளக்கமளிக்கின்றது. ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக இருக்கும்போது. குழுமம்/கம்பனியினது வரிக்கு முந்திய நட்டமானது மிதக்கும் வட்டி வீதங்களின் தாக்கத்தினுாடாக பின்வருமாறு பாதிக்கப்பட்டிருக்கலாம்.

| | 2020 வரிக்கு முந்திய நட்டத்தின் விளைவு | | 2019 வரிக்கு முந்திய நட்டத்தின் விளைவு | |
|---|---|---|---|---|
| | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. |
| வட்டி வீதத்திலான அதிகரிப்பு (வீழ்ச்சி) | | | | |
| +1% | 773.61 | 772.01 | 779.53 | 777.53 |
| -1% | (773.61) | (772.01) | (779.53) | (777.53) |

* வட்டி வீதங்களிலான அதிகரிப்பானது அதிகரித்த நட்டத்தினை விளைவிக்கும்.

**வெளிநாட்டு நாணய இடர்நேர்கை**

வெளிநாட்டு நாணய இடர்நேர்கை என்பது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக ஓர் நிதியியல் கருவியின் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நியாயப் பெறுமதியானது தளம்பலடையும் இடர்நேர்கையாகும். குழுமமானது அதன் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட வருவாய், செலவினங்கள், கடன்பெறுகைகள் மற்றும் ஏனைய நிதியியல் கருவிகளின் காரணமாக வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் தளம்பல்களின் தாக்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குழுமமானது இயலுமானவரை பொருந்தும் கொள்கையினை, ஒவ்வொரு தனியான நாணயத்திலும் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை பொருந்தியும், விசேடமாக இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணய வருவாயினை இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்களுடன் இழப்புக் காப்பு செய்தும் வெளிநாட்டு பரிமாற்றக வெளிப்படுத்தல்களை முகாமைப்படுத்துகின்றது.

கீழ்காணும் அட்டவணையானது ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாயிருக்கும்போது குழுமத்தின்/கம்பனியின் வரிக்கு முந்திய இலாபத்தின் அமெரிக்க டொலர்களுக்கு எதிரான இலங்கை ரூபாவின் நியாயமான சாத்தியப்படக்கூடிய மாற்றலது உணர்திறனை வெளிப்படுத்துகின்றது. (அறிக்கையிடப்படும் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் நிலுவையிலுள்ள பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் நிமித்தம்) ஏனைய அனைத்து நாணயங்களிலுமான குழுமத்தின் வெளிநாட்டு நாணய மாற்றங்களுக்கான வெளிப்பாடு குறிப்பிடத்தக்களவில் இல்லை.

| | 2020 | | | | 2019 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏ.வி.வ. லான தாக்கம் | | வரிக்கு முந்திய வட்டியிலான தாக்கம் | | ஏ.வி.வ. லான தாக்கம் | | வரிக்கு முந்திய நட்டத்திலான தாக்கம் | |
| | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. | குழுமம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. |
| USD எதிர் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றம் (பெறுமதி வீழ்ச்சி) | | | | | | | | |
| +3% | 273.54 | 273.54 | 8,439.40 | 8,791.32 | 553.93 | 553.93 | 2,701.83 | 2,726.15 |
| -3% | (273.54) | (273.54) | (8,439.40) | (8,791.32) | (553.93) | (553.93) | (2,701.83) | (2,726.15) |

* அமெரிக்க டொலரின் பெறுமதி ஏற்றமானது அதிகரித்த நட்டத்தினை விளைவிக்கும்.

**(ii) திரவத்தன்மை இடர்நேர்கை**

திரவத்தன்மை இடர்நேர்கை என்பது குழுவானது அதன் தற்போதைய மற்றும் எதிர்கால காசுக் கடப்பாட்டினை அவை செலுத்தவேண்டிய சமயத்தில் அதனைச் சந்திக்க இயலாமல் போகும் இடர்நேர்கையாகும். குழுமமானது நாளாந்த/வாராந்த/மாதாந்த மற்றும் வருடாந்த காசு முகாமைத்துவம் மற்றும் பாதீட்டு செயல்முறை ஆகியவற்றை பயன்படுத்தி அதன் நிதிப் பற்றாக்குறை இடர்நேர்கையினை கண்காணிக்கின்றது. குழுமமானது நீண்ட கால மற்றும் குறுங்கால கடன்கள், வங்கி மேலதிகப்பற்று வசதிகள் மற்றும் நிதியியல்/செயற்பாட்டு குத்தகை போன்ற பல்வேறு நிதியளித்தல் மூலங்களை இடர்நேர்கையினை குறைப்பதற்காக நிதியியல் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

கீழ்காணும் அட்டவணையானது குழுமத்தின்/கம்பனியின் நிதிப் பொறுப்புக்களை ஒப்பந்த கழிவிறக்கம் செய்யாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் முதிர்வுத் தோற்றுருவத்தின் சுருக்கத்தினை வழங்குகின்றது.

| | 2020 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **குழுமம்** | கேட்பதன் பேரில் ரூபா மில்லி. | மூன்று மாதங்களுக்குக் குறைவானது ரூபா மில்லி. | 3 முதல் 12 மாதங்கள் ரூபா மில்லி. | 1 முதல் 5 வருடங்கள் ரூபா மில்லி. | 5 வருடங்களுக்கு மேல் ரூபா மில்லி. | மொத்தம் ரூபா மில்லி. |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 11,681.41 | 4,031.93 | 74,760.35 | 42,416.77 | - | 132,890.46 |
| குத்தகைப் பொறுப்பு | 299.52 | 8,006.92 | 23,960.43 | 115,565.39 | 73,751.16 | 221,583.42 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 5,227.08 | 513.63 | 12,844.16 | 13,743.50 | 1,698.01 | 34,026.38 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 69,485.42 | - | - | - | 69,485.42 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 65.05 | 1,065.05 | - | - | 1,130.10 |
| | 17,208.01 | 82,102.95 | 112,629.99 | 171,725.66 | 75,449.17 | 459,115.78 |
| **கம்பனி** | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 11,681.41 | 3,998.33 | 74,700.56 | 42,416.77 | - | 132,797.07 |
| குத்தகைப் பொறுப்பு | 299.52 | 7,965.47 | 23,834.15 | 114,805.09 | 70,909.99 | 217,814.22 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 5,227.08 | 513.63 | 12,844.16 | 13,743.50 | 1,698.01 | 34,026.38 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 79,185.71 | - | - | - | 79,185.71 |
| | 17,208.01 | 91,663.14 | 111,378.87 | 170,965.36 | 72,608.00 | 463,823.38 |

# நிதி அறிக்கைக் குறிப்புகள் தொடர்ச்சி

### 31. நிதியியல் இடர்நேர்கை முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் (தொடர்ச்சி)

| 2019 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **குழுமம்** | **கேட்பதன் பேரில்** ரூபா மில்லி. | **மூன்று மாதங்களுக்குக் குறைவானது** ரூபா மில்லி. | **3 முதல் 12 மாதங்கள்** ரூபா மில்லி. | **1 முதல் 5 வருடங்கள்** ரூபா மில்லி. | **5 வருடங்களுக்கு மேல்** ரூபா மில்லி. | **மொத்தம்** ரூபா மில்லி. |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 9,132.24 | 34,212.30 | 71,517.72 | 10,777.73 | - | 125,639.99 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,512.34 | 3,338.83 | 20,085.52 | 9,217.61 | 3,195.90 | 37,350.20 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 51,589.43 | - | - | - | 51,589.43 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 65.05 | 65.05 | 1,195.15 | - | 1,325.25 |
| | 10,644.58 | 89,205.62 | 91,668.29 | 21,190.49 | 3,195.90 | 215,904.88 |
| **கம்பனி** | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 9,132.24 | 34,180.45 | 71,423.13 | 10,690.42 | - | 125,426.24 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,512.34 | 3,338.83 | 20,085.52 | 9,217.61 | 3,195.90 | 37,350.20 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 58,178.53 | - | - | - | 58,178.53 |
| | 10,644.58 | 95,697.82 | 91,508.65 | 19,908.03 | 3,195.90 | 220,954.97 |

**(iii) கடன் இடர்நேர்கை**

கடன் இடர்நேர்கை என்பனது ஒரு நிதியியல் கருவி, அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தம் என்பவற்றின் கீழ் எதிர்தரத்தவர் அவர்களது கடப்பாடுகளை சந்திக்கத்தவறும் பட்சத்தில் விளைவிக்கும் நிதியியல் நட்டமாகும். குழுமமானது பிரதானமாக அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கடன் இடர்நேர்கைகக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (முதன்மையாக வர்த்தக வருமதிகள்).

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் விற்பனைகள் ச.வி.போ.ச. இன் அங்கீகாரம் பெற்ற முகவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய விற்பனைகளின் கடன் இடர்நேர்கையானது பரவலான பன்முகப்படுத்தலின் காரணமாக சார்பளவில் மிகவும் சிறிதாக காணப்படுகின்றது. இந்த முகவர்களிடமிருந்தான தீர்ப்பனவுகள் ச.வி.போ.ச. இன் பயணிகள் மற்றும் சரக்கு தீர்ப்பனவு திட்டங்களின் கீழ் திரட்டப்படுகின்றது. திரட்டப்படும் நிதியானது நேரடியாக ச.வி.போ.ச. ஆல் விமான நிறுவனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் அத்தகைய முகவர்களது கடன் செலுத்தும் ஆற்றலை மேலும் உறுதிப்படுத்துகின்றது. பாரிய விமான நிறுவனங்களிடையேயான வருமதிகள் மற்றும் கொடுக்குமதிகள் பிரதானமாக ச.வி.போ.ச. இன் தீர்வக இல்லத்தினூடாக தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. வருமதிகள் மற்றும் கொடுக்குமதிகள் பொதுவாக நிகர்செய்யப்பட்டு வாராந்த இடைவெளிகளில் தீர்ப்பனவு செய்யப்படுவதால் தவறுதல் இடர்நேர்கை மிகவும் குறைக்கப்படுகின்றது. ஏனைய சேவை தொடர்புகளுக்கு சேவையின் தன்மை மற்றும் நோக்கெல்லையினைப் பொறுத்து பிணையம் தேவைப்படுகின்றது. கடன்பட்டவர்களிடமிருந்தான அத்தகைய பிணையங்கள், வங்கி உத்தரவாதங்கள்ள பாதுகாப்பு வைப்புகள் மற்றும் ஏனைய பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

சந்தேகத்திற்கிடமான வருமதிகளில் இடர்நேர்கை இனங்காணப்படும்போது வலுக்குன்றல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மூலதன முகாமைத்துவம்**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 3 இல் முற்றாக விளக்கியுள்ளவாறு வணிகத் திட்டத்தின் அடிப்படையில், இலங்கை அரசாங்கமானது அரச உத்தரவாதம்/ஆறுதல் கடிதம் என்பவற்றின் மூலம் கடன் நிதியினை திரட்டுவதன் மூலம் தேவையான நிதியினை உட்புகுத்துவதற்கு கடப்பாடுடன் உள்ளது என்பதை வெளிக்காட்டியுள்ளது.

## 32. ஒப்பிடப்படும் தகவல்கள்

சிறந்த காட்சியளிப்பினை அடைவதற்காக இலாப நட்டக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று என்பவற்றிலுள்ள பின்வரும் உருப்படிகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | குழுமம் | | | கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | மீள்வகைப்படுத்தல்கள் | 2019 மீள்வகைப்படுத்தப்பட்டது | 2019 | மீள்வகைப்படுத்தல்கள் | 2019 மீள்வகைப்படுத்தப்பட்டது |
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| **இலாப நட்டக் கூற்று** | | | | | | |
| குத்தகை விமானங்களிலான வாடகைகள் | (29,099.13) | 29,099.13 | - | (29,099.13) | 29,099.13 | - |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் | (26,953.28) | 620.19 | (26,333.09) | (26,953.28) | 620.19 | (26,333.09) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (1,862.00) | 294.39 | (1,567.61) | (1,643.67) | 294.39 | (1,349.28) |
| ஏனைய இயக்க செலவு | (16,298.17) | 917.46 | (15,380.71) | (15,056.56) | 755.00 | (14,301.56) |
| கடைப்பிடிப்பதன் தாக்கம் SLFRS 16 | - | (30,931.17) | (30,931.17) | - | (30,768.70) | (30,768.70) |
| | | - | | | - | |
| பரிமாற்றல் நட்டம் | (10,732.40) | 8,404.12 | (2,328.28) | (11,805.18) | 8,390.96 | (3,414.22) |
| நிதிச் செலவுகள் | (11,079.10) | (8,404.12) | (19,483.22) | (10,939.83) | (8,390.96) | (19,330.79) |
| | | - | | | - | |
| **காசுப்பாய்ச்சல் கூற்று** | | | | | | |
| நிதிச் செலவுகள் | 11,079.10 | 8,404.12 | 19,483.22 | 10,939.83 | 8,390.96 | 19,330.79 |
| எய்தப்பெற்றிராத பரிமாற்றல் நட்டதிலான தாக்கம் | 11,223.41 | (8,404.12) | 2,819.29 | 12,009.62 | (8,390.96) | 3,618.66 |
| | | - | | | - | |

முதன் முறையாக SLFRS 16 கடைப்பிடித்ததன் நிமித்தம் குத்தகை வாடகைகள் செம்மையாக்கப்பட்டன. இதனுடன், நிதியில் நடவடிக்கைகள் தொடர்பான பரிமாற்றல் நட்டங்கள் குத்தகை நிதிச் செலவினம் மற்றும் குத்துகை பொறுப்புக்களின் பரிமாற்றல் உருமாற்றத்தின் தாக்கமானது இலாப நட்ட கூற்றில் நடைமுறையாண்டின் காட்சியளிப்புடன் ஒப்பிடுவதற்காக மீள்வகைப்படுத்தப்பட்டது.

# அருஞ்சொல் விளக்கக்கோவை

**கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர் (கி.இ.கி.)**
விற்பனைக்கு வழங்கப்பட்ட இருக்கைகளும் அதில் அவை பயணித்த தூரத்தினதும் பெருக்கற்பலன்

**கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர் (கி.தொ.கி.)**
இது போக்குவரத்துச் சாதனங்களை அளவிடும் ஒன்றாகும்.

பறப்பொன்றின் மூலம் உருவாக்கப்பட்ட கி.தொ.கி. என்பது தொன்களில் அளவிடப்பட்ட விமானத்தின் தாங்குசுமை கொள்திறனை பறந்த தூரத்தினால் பெருக்குதலாகும்.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் (வ.ப.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் அவர்கள் கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்

**வருமான தொன் கிலோமீற்றர் (வ.தொ.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் பொதிகளதும் தொன்களில் அளவிடப்பட்ட சுமையினதும் அவை கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்.

**சுமைக் காரணி**
வழங்கப்பட்ட கொள்திறனுக்கும் வருமானச் சுமைக்கும் இடையேயான தொடர்பின் சதவீதம்.

கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர்களுக்கு வருமானப் பயணிகள் கிலோமீற்றர் தொடர்பிலானதாக பயணிகள் சுமைக் காரணியானது விளங்குகையில் ஒட்டுமொத்த சுமைக் காரணியானது கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர்களுக்கு வருமானத் தொன் கிலோமீற்றர் தொடர்பிலானதாக விளங்குகின்றது.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம்**
வருமானம் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானமானது வருமானப் பயணிகள் கிலோமீற்றருடன் பயணிகள் வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**அலகொன்றிற்கான செலவு**
அலகொன்றிற்கான செலவு கிடைக்கத்தக்க தொன் கிலேமீற்றருடன் மொத்த செயற்பாட்டு செலவுகள் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**ஒட்டுமொத்த விளைவு**
ஒட்டுமொத்த விளைவானது வருமான தொன் கிலோமீற்றருடன் தேறிய போக்குவரத்து வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

தேறிய போக்குவரத்து வருமானமானது பயணிகள், மிகைப் பொதிக்கட்டணம் மற்றும் அஞ்சல் வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.

**இலாப நட்டமற்ற சுமைக் காரணி**
அட்டவணையிடப்பட்ட விமானச் செயற்பாடுகளிலிருந்தான வருமானத்தை செயற்பாட்டு செலவினங்களுடன் சமப்படுத்துவதற்கு தேவையான சுமைக் காரணி என்று பொருள்படும்.



# பத்து வருட பகுப்பாய்வு

| | | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | | |
| வருமானம் | ரூபா மில். | 77,125.45 | 92,867.93 | 119,570.90 | 121,585.83 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூபா மில். | 81,334.34 | 111,775.88 | 146,700.24 | 150,389.46 |
| தேறிய இலாபம்/(நட்டம்) | ரூபா மில். | (381.61) | (19,778.03) | (26,088.57) | (32,408.34) |
| **நிதிநிலைமைக் கூற்று** | | | | | |
| பங்கு மூலதனம்/கூறப்பட்ட மூலதனம் | ரூபா மில். | 5,146.35 | 19,432.67 | 32,032.75 | 51,617.44 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | ரூபா மில். | 19,862.87 | 37,591.58 | 23,338.28 | 25,212.47 |
| நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா மில். | 18,276.59 | 22,072.71 | 54,905.22 | 37,154.23 |
| மொத்த சொத்துக்கள் | ரூபா மில். | 38,139.46 | 59,664.29 | 78,243.50 | 62,366.70 |
| நடைமுறை பொறுப்புக்கள் | ரூபா மில். | 28,017.97 | 64,235.43 | 71,346.64 | 88,609.07 |
| **விளைவு/அலகொன்றிற்கான செலவு** | | | | | |
| ஒட்டுமொத்த விளைவு | ரூ.தொன்.கி.மீ. | 60.27 | 64.47 | 74.31 | 77.26 |
| அலகொன்றிற்கான கிரயம் (நிதிச் செலவினம் மற்றும் பி.வை.வ. நீங்கலாக) | ரூ.தொன்.கி.மீ. | 44.59 | 53.26 | 63.15 | 65.00 |
| சமநிலை சுமைக் காரணி | % | 73.99 | 82.61 | 84.98 | 84.13 |
| வ.ப.கி. ஒன்றிற்கான வருமானம் | ரூ./வ.ப.கி. | 6.31 | 6.63 | 7.60 | 7.78 |
| **உற்பத்தி** | | | | | |
| பயணிகள் தொள்திறன் | கி.இ.கி. மில். | 12,481.41 | 14,248.94 | 15,944.31 | 15,780.54 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | கி.தொ.கி.மில். | 1,755.23 | 1,978.33 | 2,186.96 | 2,187.18 |
| **போக்குவரத்து** | | | | | |
| கொண்டுசெல்லப்பட்ட பயணிகள் | ஆயிரங்களில் | 2,867 | 3,459 | 4,255 | 4,175 |
| கொண்டுசெல்லப்பட்ட பயணிகள் | வபகி மில். | 9,584.02 | 11,270.23 | 12,968.74 | 12,810.95 |
| பயணகிகள் சுமைக் காரணி | % | 76.79 | 79.10 | 81.34 | 81.18 |
| கொண்டுசெல்லப்பட்ட சரக்கு | தொன்கள் | 86,053 | 87,750 | 101,100 | 94,410 |
| கொண்டுசெல்லப்பட்ட சரக்குச் சுமை | வதொகி மில். | 332.98 | 345.67 | 377.75 | 355.59 |
| கொண்டுசெல்லப்பட்ட ஒட்டுமொத்த சுமை | வதொகி மில். | 1,184.13 | 1,338.30 | 1,513.70 | 1,466.74 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | 67.46 | 67.65 | 69.22 | 67.06 |
| **பணியாட்கள்** | | | | | |
| சராசரி பலம் | எண்ணிக்கை | 4,998 | 5,594 | 6,359 | 6,578 |
| பணியாள் ஒருவருக்கான வருமானம் | ரூபா | 15,431,263 | 16,601,346 | 18,803,412 | 18,483,708 |
| பணியாள் ஒருவருக்கான கொள்திறன் | தொன் - கி.மீ. | 351,186 | 353,652 | 343,916 | 332,499 |
| பணியாள் ஒருவருக்கான கொண்டுசென்ற சுமை | தொன் - கி.மீ. | 236,922 | 239,238 | 238,041 | 222,976 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | 4 | 7 | 8 | 8 |
| A321-200 | எண்ணிக்கை | - | - | - | - |
| A320neo | எண்ணிக்கை | - | - | - | - |
| A321neo | எண்ணிக்கை | - | - | - | - |
| A330-200 | எண்ணிக்கை | 5 | 7 | 7 | 7 |
| A330-300 | எண்ணிக்கை | - | - | - | - |
| A340-300 | எண்ணிக்கை | 5 | 6 | 6 | 6 |
| டேர்போ ஒட்டர் | எண்ணிக்கை | 2 | 2 | 1 | - |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானம் | எண்ணிக்கை | 16 | 22 | 22 | 21 |
| விமானப் பயன்பாடு | நாளொன்றிற்கான திரள் மணித்தியாலங்கள் | 14.05 | 13.48 | 12.82 | 12.76 |

| 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| 131,922.13 | 129,480.41 | 135,491.19 | 161,433.87 | 180,340.32 | **180,151.02** |
| 145,983.35 | 137,311.44 | 146,760.80 | 175,883.85 | 209,344.66 | **190,321.69** |
| (16,494.66) | (12,621.69) | (28,929.99) | (17,213.57) | (44,022.67) | **(47,197.86)** |
| | | | | | |
| 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | **51,617.44** |
| 22,836.77 | 23,548.01 | 24,660.56 | 37,476.46 | 36,596.59 | **150,013.50** |
| 49,721.49 | 26,901.02 | 26,973.07 | 30,090.50 | 40,742.41 | **31,176.10** |
| 72,558.26 | 50,449.03 | 51,633.63 | 67,566.96 | 77,338.99 | **181,189.60** |
| 103,414.31 | 100,334.44 | 126,302.55 | 130,358.61 | 227,081.67 | **242,821.23** |
| | | | | | |
| 80.32 | 79.06 | 80.08 | 84.24 | 91.32 | **99.03** |
| | | | | | |
| 62.00 | 58.72 | 61.61 | 65.74 | 74.31 | **74.22** |
| 77.18 | 74.27 | 76.94 | 78.04 | 81.37 | **74.95** |
| 8.22 | 8.17 | 8.45 | 8.62 | 9.43 | **10.15** |
| | | | | | |
| 16,180.27 | 15,790.28 | 15,608.10 | 18,487.54 | 18,925.40 | **18,041.41** |
| 2,224.87 | 2,165.21 | 2,167.92 | 2,549.88 | 2,577.53 | **2,454.30** |
| | | | | | |
| 4,348 | 4,328 | 4,446 | 5,839 | 5,663 | **5,256** |
| 12,963.71 | 12,727.66 | 12,455.05 | 15,280.78 | 15,689.19 | **14,547.97** |
| 80.12 | 80.60 | 79.80 | 82.65 | 82.90 | **80.64** |
| | | | | | |
| 101,878 | 102,082 | 116,221 | 132,958 | 125,753 | **113,971** |
| 373.32 | 356.76 | 374.46 | 401.66 | 408.71 | **363.31** |
| 1,519.93 | 1,484.77 | 1,475.29 | 1,749.14 | 1,806.58 | **1,664.49** |
| | | | | | |
| 68.32 | 68.57 | 68.05 | 68.60 | 70.09 | **67.82** |
| | | | | | |
| 6,987 | 6,959 | 7,021 | 7,019 | 6,794 | **6,693** |
| 18,881,084 | 18,606,181 | 19,297,991 | 22,999,555 | 26,544,057 | **26,916,333** |
| 318,430 | 311,139 | 308,776 | 363,283 | 379,383 | **366,697** |
| 217,537 | 213,359 | 210,126 | 249,201 | 265,908 | **248,691** |
| | | | | | |
| 6 | 6 | 6 | 5 | 5 | **5** |
| 2 | 2 | 3 | 3 | 2 | **2** |
| - | - | 2 | 2 | 2 | **2** |
| - | - | - | 3 | 4 | **4** |
| 7 | 6 | 6 | 6 | 7 | **5** |
| 2 | 7 | 7 | 7 | 7 | **7** |
| 4 | - | - | - | - | **-** |
| - | - | - | - | - | **-** |
| 21 | 21 | 24 | 26 | 27 | **25** |
| | | | | | |
| 12.90 | 12.02 | 12.44 | 13.25 | 12.60 | **12.18** |

# விமானப் பயண வரைபடம்




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது ஐரோப்பா, மத்திய கிழக்கு, தெற்காசியா, தென் கிழக்கு ஆசியா, தூர கிழக்கு மற்றும் வட அமெரிக்கா போன்ற 51 நாடுகளில் 116 பயண இலக்குகளுக்கு சேவையாற்றுகின்றது.


Oslo
Helsinki
Stockholm
Moscow
Edinburgh
Copenhagen
Manchester
Amsterdam
Dublin
Brussels
Düsseldorf
Prague
London
Frankfurt
Vienna
Paris
Munich
Geneva
Zurich
Turin
Venice
Milan
Belgrade
Sofia
Istanbul
Madrid
Barcelona
Rome
Thessaloniki
Palermo
Catania
Athens
Larnaca
Casablanca
Amman
Kuwait
Dammam
Bahrain
Riyadh
Doha
Dubai
Karachi
Jeddah
Abu Dhabi
Muscat
Lahore
Amritsar
New Delhi
Lucknow
Jaipur
Patna
Guwahati
Dhaka
Kolkata
Bhubaneswar
Mumbai
Bangalore
Hyderabad
Chennai
Coimbatore
Tiruchirappalli
Kochi
Madurai
Trivandrum
Colombo
Malé
Gan Island
Seychelles
Nairobi
Johannesburg
Cape Town
Beijing
Chitose
Tokyo (Narita)
Tokyo (Haneda)
Osaka (Itami)
Nagoya
Fukuoka
Osaka (Kansai)
Shanghai
Guangzhou
Hong Kong
Hanoi
Yangon
Bangkok
Phnom Penh
Ho Chi Minh
Phuket
Langkawi
Penang
Kuala Lumpur
Singapore
Jakarta
Darwin
Brisbane
Perth
Sydney
Adelaide
Melbourne
Auckland

# மைல்கற்கள்

## 2009/2010

கம்பனியானது ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு எயார்பஸ் ஏ 320 விமானங்களது விநியோகத்தினைப் பெற்றுக்கொண்டது.

## 2010/2011

கம்பனியானது ஒரு ஏ 320 விமானம் மற்றும் ஒரு எயார்பஸ் ஏ 330 அகலமான உருவமைப்புடைய விமானத்தினை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் விநியோகத்தினைப் பெற்றுக்கொண்டது. ஜூலை 2010 இல் இலங்கை அரசாங்கமானது கம்பனியில் எமிரேட்ஸ் வைத்திருந்த 42.63% உரித்துவத்தின் கொள்வனவிற்கு வசதியளித்தது.

## 2011/2012

கம்பனியானது நான்கு எயார்பஸ் ஏ 320 விமானங்கள், இரண்டு எயார்பஸ் ஏ 330 அகலமான உருவமைப்புடைய விமானங்கள் மற்றும் ஒரு ஏ 340 அகலமான உருவமைப்புடைய விமானம் ஆகியவற்றை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் விநியோகத்தினைப் பெற்றுக்கொண்டது. விமான நிறுவனத்தினை மீள் மூலதனமளிப்பதற்காக அமைச்சரவையானது USD 500 மில்லியன் உரித்துவ முதலீட்டிற்கு அங்கீகாரமளித்தது.

## 2012/2013

எயார்பஸ் ஏ 320 விமானிகளை பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது ஏ 320 விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது. கம்பனியானது ஒரு எயார்பஸ் ஏ 320 விமானத்தின் விநியோகத்தினை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொண்டது. மத்தல சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானப் பயணங்களை ஆரம்பித்தமை. மே 2012 இல் கம்பனியானது USD 175 மில்லியன் தொகைக்கான நிதியளிப்பினை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் சேர்ந்தமை.

## 2013/2014

எயார்பஸ் ஏ 330 விமானத்திற்கான விமானிகள் பயிற்சிக்காக விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது. டிசம்பர் 2013 இல், கம்பனியானது அமடியஸ் அல்டியாவுடன் ஓர் புதிய பயணிகள் சேவை முறைக்கு மாறியது. மார்ச் 2014 இல், USD 150 மில்லியன் தொகைக்கான மத்திய கால கடனொன்றை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் சேர்ந்தமை.

## 2014/2015

கம்பனியானது மே 2014 இல் ஒருலகக் கூட்டணியில் இணைந்தது. ஜூன் 2014 இல் கம்பனி முதற்தடவையாக ஓர் ஐந்து வருட சர்வதேச முறியினை வழங்கியது. கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக மூன்று புத்தம் புதிய ஏ 330-300 விமானங்களின் விநியோகத்தினை முறையே ஒக்டோபர் 2014 மற்றும் மார்ச் 2015 இல் பெற்றுக்கொண்டது.

## 2015/2016

விமான நிறுவனமானது பின்வரும் நான்கு பிரசித்திபெற்ற விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது: ஏபெக்ஸ் பயணிகள் தெரிவு விருதுகள் 2015 இல் ஆசியா மற்றும் அவுஸ்திரேலிய பிராந்தியத்தில் சிறந்தது, சிறந்த விமானத்தினுள்ளான பிரசுரிப்பு, 'சிறந்த விமானத்தினுள்ளான காணொளி' மற்றும் சிறந்த தரை அனுபவம் என்பவையாகும். இதுவே முதற்தடவையாக விமான நிறுவனம் நான்கு பிரிவுகளுக்கு பெயரிடப்பட்டது. ஏபெக்ஸ் போர்ட்லண்ட் ஓரிகன் செப்டம்பர் 2015 இல் விமான நிறுவனமானது ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாயில் பயணிகள் அனுபவத்திற்கான உயர்வான சாதனை விருதினை வென்றது. அதேபோல் சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவ விருதுகள் ஆசியா 2015 இல் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான சிறந்த முழுமையான சேவை விமானநிறுவன விருதினை வென்றது. கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக நான்கு புதிய ஏ 330-300 விமானங்களது விநியோகத்தினை ஆகஸ்ட் மற்றும் நவம்பரிலும் இரண்டு விமானங்களது விநியோகத்தினை டிசம்பர் 2015 இலும் பெற்றுக்கொண்டது.

## 2016/2017

பெப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 இல் இரண்டு ஏ 320 நியோ விமானங்களது அறிமுகம் - முதலாவது இரண்டு புதிய என்ஜின் தெரிவு விமானங்கள், ஸ்ரீலங்கன் விமானங்களுடன் சேர்ந்து பதினொரு கிளர்ச்சியூட்டும் புதிய பயண இலக்குகளை ஆரம்பித்தது. அவை லாஹோர், ஜக்கார்த்தா, டாக்கா, கல்கத்தா, மதுரை, வரனாசி, புத்தகாயா, மஸ்கட், பாரேன், சீசெல்ஸ் மற்றும் கேன் தீவுகள் என்பனவாகும். எதிர்கால பிரயாண அனுபவம் ஆசியா 2016 வைபவத்தில், தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக "உயர்ந்த பிரயாண விருது", "தெற்காசியாவின் சிறந்த விமான நிறுவனம்", "மத்திய மற்றும் தெற்காசியாவின் சிறந்த முழுமையான சேவைகள் விமான நிறுவனம்" ஆகிய விருதுகளை வென்றது. விமான நிறுவனமானது 7ஆவது ஆசிய பணிக்கொள்பவர் வணிக நாம விருதுகளில், "பயிற்றுவித்தல் தனிச்சிறப்பு விருது" மற்றும் "வணிகத்துடன் ஒத்ததான சிறந்த மனித வள மூலோபாயம்" என்பவற்றை வென்றது.

## 2017/2018

கம்பனியானது அதன் விமானங்களின் ஓர் பகுதியாக மூன்று புதிய எயார்பஸ் ஏ321நியோ விமானங்களது விநியோகத்தினை ஜுன், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் 2017 இல் பெற்றுக்கொண்டது. ஸ்ரீலங்கன் அதன் சேவைகளை நான்கு புதிய பயண இலக்குகளுக்கு ஆரம்பித்தது – மெல்போர்ன், ஐதராபாத், கோயம்புத்தூர் மற்றும் விசாகபட்டினம். விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) விமான நிறுவனமானது நான்கு நட்சத்திர தரப்படுத்தல் தனிச்சிறப்பினைப் பெற்றது. அத்துடன், சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவங்கள் விருது 2017 இல் விமான நிறுவனமானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக சிறந்த சேவைக்கான விருதினை வென்றது. கம்பனி சிங்கப்பூரில் இடம்பெற்ற விமானத்தினுள்ளான ஆசிய பசிபிக் விருதுகள் 2017 இல் "வர்த்தக விமான நிறுவன வானறைகளிலான புத்தாக்கம்" விருதினை வென்றது.

## 2018/2019

கம்பனியானது மற்றுமோர் புத்தம் புதிய எயார்பஸ் ஏ 321 நியோ விமானத்தின் விநியோகத்தினை ஜுலை 2018 இல் பெற்றதுடன் நியோ விமானங்களின் அறிமுகத்தினை நிறைவுசெய்தது. செப்டம்பர் 2018 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகின் மிகவும் நேரம் தவறாத விமான நிறுவனமாக வந்தது. இது Flightstats.com எனும் விமானத் தரவுகள் பகுப்பாய்வுக் கம்பனியினால் தரப்படுத்தப்பட்ட 'உலகளாவிய விமான நிறுவனம்' மற்றும் 'பாரிய விமான நிறுவனங்கள்' போன்ற முக்கிய பிரிவுகளிலாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக விமான நிறுவன பயணிகள் அனுபவங்கள் சங்கத்தின் நான்கு நட்சத்திர தரத்தினை பேணியதுடன் பல புகழ்மிக்க சர்வதேச விருதுகளையும் வென்றது. இவை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்து சமுத்திரத்திற்கான உலகின் முன்னணி விமான நிறுவனம் மற்றும் ITB பேர்லினில் மூன்று தங்க சிட்டி கேட் விருதுகளையும் வென்றது.

## 2019/2020

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 40 வருடங்கள் சேவையினை செப்டம்பர் 2019 இல் கொண்டாடியது. விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) தேசிய வானூர்தியானது உலகளாவிய "சிறந்த சந்தைப்படுத்தல் புத்தாக்கம்" விருதினைப் பெற்றது. ஸ்ரீலங்கன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக பாரிய விமான நிறுவனங்கள் பிரிவில் நான்கு நட்சத்திர தரத்தினை வென்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 'இரண்டு நகரங்கள், ஒரு ஆன்மா' பிரச்சாரத்திற்காக பாட்டா தங்க விருதினையும் ITB பேர்லின் கோல்டன் சிட்டி கேட் 2019 விருதுகளில் இன்னும் மூன்று விருதுகளையும் வென்றது. ITB பேர்லின் கோல்டன் சிட்டி கேட் 2020 விருதுகளில் மூன்று பிரிவுகளில், ("சர்வதேச விமான நிறுவனம்", "சர்வதேச இசை" மற்றும் "பிரச்சாரம்") ஒரு நட்சத்திர விருதுகளைப் பெற்றுக்கொண்டது. உலக பிரயாண விருதுகள் ஆசியா மற்றும் ஓசியானாவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புகழ்மிக்க 'உலகின் முன்னணி விமானநிறுவனம்' மற்றும் 'இந்து சமுத்திரத்திற்கான ஆசியாவின் முன்னணி விமான நிறுவனம்' விருதினை வென்றது.

# கூட்டாண்மை தகவல்கள்

**கம்பனியின் பெயர்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

**கம்பனி பதிவீட்டு இலக்கம்**
PB 67

**சட்ட வடிவம்**
பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி

**பணிப்பாளர் சபை**
திரு. அசோகா காரியவசம் பத்திரகே (தலைவர்)
திரு. மொஹமட் அஷ்ரவ் ஓமார்
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச.
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு. சஞ்சய மொஹொட்டால

**சபை கணக்காய்வுக் குழு**
திரு. சஞ்சய மொஹொட்டால/சார்புகால தலைவர்
திரு. மலிக் பர்னாந்து
திரு. சமந்த ரத்வத்த
திரு. மனோஹர டி சில்வா
கலநிதி. ஹன்ச விஜயசூரிய

**சபை மனித வளம் மற்றும் ஊதியக் குழு**
திரு. மொஹமட் அஷ்ரவ் ஓமார் (தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
திரு. மனோஹர டி சில்வா ஜ.ச.
திரு. சஞ்சய மொஹொட்டால

**கம்பனி செயலாளர்/கூட்டாண்மை செயலகத்தின் தலைவா**
திருமதி. டெல்ரீன் திருக்குமார் (ACIS)

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கி
சம்பத் வங்கி பி.எல்.சி.
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி.
ஹட்டன் நெஷனல் வங்கிபி.எல்.சி.
கொமர்ஷல் பேங் ஒவ் சிலோன் பி.எல்.சி.
அமானா பேங் பி.எல்.சி.
கெரெடிட் சூயிஸ்

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் அதிபதி
தேசிய கணக்காய்வு காரியாலயம்
306/72
பொல்துவ வீதி
பத்தரமுல்ல.

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**
விமானச்சேவை மையம்
பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம்
கட்டுநாயக்கா
இலங்கை

**கூட்டாண்மை இணையத்தளம்**
www.srilankan.com

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

# கூட்டம் பற்றிய அறிவித்தல்

இவ் அறிவித்தல் மூலம் கூறப்படுவது யாதெனில், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பங்குதாரர்களுக்கான நாற்பத்து இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டம் 2020 செப்டம்பர் 25, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07, இலங்கையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) 'லோட்டஸ் மண்டபத்தில்' பின்வரும் நோக்கங்களுக்காக நடைபெறும் என்பதாகும்.

1. பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த நிதி ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுடன் அவற்றிலான கணக்காய்வாளரது அறிக்கையினையும் பெற்று ஆலோசனை செய்வதற்கு.

கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் நிறுவனத்தின் கணக்காய்வினை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் 36 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்வார்.

சபையின் கட்டளையின் பிரகாரம்

**கையொப்பமிட்டவர்**
**டெல்பீன் திருக்குமார்**
*கம்பனிச் செயலாளர்*

கட்டுநாயக
19 ஆகஸ்ட் 2020

### குறிப்புக்கள்

### 1. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகள் (சுகாதார அமைச்சு) அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகள் மற்றும் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் அனைவரதும் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்வதற்காக நிகழ்விடத்தினால் அமுல்படுத்தப்பட்ட நியமங்கள் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகி இக்கூட்டம் நடைபெறும். அத்தகைய வழிகாட்டிகள் மற்றும் நியமங்களுடன் இணங்கியொழுகுவதில் பின்வருவனவற்றை கவனத்திற்கொள்ளவும்:

அ) அனைத்து பங்கேற்பாளர்களும் வெப்பநிலை சோதனைக்கு உட்படல் வேண்டும் என்பதுடன் தொடர்புகொள்ளல் விபரங்கள், வரலாற்று மற்றும் தற்போதைய சுகாதார நிலை, சமீபத்தைய வெளிநாட்டு பிரயாணம் மற்றும் வெளித்தொடர்பு உள்ளடங்களான ஓர் உறுதிமொழி பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

ஆ) சுகாதார அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அதிகமாக வெப்பநிலையினை பதிவுசெய்யும் நபர்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இ) இருமல், சளி, தொண்டை வலி உள்ளடங்களான ஏதேனும் வகையான சுவாச தொற்றுநோய் அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த நோய் அறிகுறிகளையுடைய நபர்கள் கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஈ) கைகுலுக்குதல் போன்ற உடல் ரீதியான தொடர்பு அனுமதிக்கப்படாததுடன் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பங்கேற்பாளர்கள் புறப்படாமல் காலங்கடத்துவதற்கோ அல்லது தங்கியிருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உ) முகக்கவசம் அணிதல் மற்றும் ஆகக்குறைந்த சமூக இடைவெளியினை பேணுதல் உள்ளடங்களாக சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகள் மற்றும் நியமங்களை கடைப்பிடிக்காத எவரேனும் நபர் கூட்டத்தை விட்டு வெளியேறுமாறு வேண்டப்படுவார்.

### 2. பதிலாளால் வாக்களிப்பு

எமது அங்கத்தவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு எமக்கு முக்கியமாதலால், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவரை, பதிலாள் மூலம் அங்கத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்து அவர்கள் சார்பில் வாக்களிப்பதற்கு, நியமிக்குமாறு அங்கத்தவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். பதிலாள் படிவத்தின் மறுபுறத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய அங்கத்தவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் விசேட தீர்மானங்களில் தங்களது வாக்களிப்பு விருப்பத்தேர்வுகளை மற்றும் பதிலாள் படிவத்தினை நிரப்பி அதனை கம்பனியிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

### 3. கூட்டத்தில் பங்கேற்றல்

ஓர் அங்கத்தவர் நேரில் அல்லது பதிலாளூடாக (கம்பனியின் பணிப்பாளர் அல்லாத ஒருவர்) கூட்டத்தில் பங்கேற்க விரும்பினால் அத்தகைய அங்கத்தவர் அல்லது அவர்களது பதிலாள் பின்வருமாறு வேண்டப்படுகின்றார்கள்:

அ) பதிவு செய்வதற்கு, கட்டாய சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு மற்றும் தேவைப்படும் படிவங்களை நிரப்புவதற்கு மற்றும் நெருக்கமாய் கூடுவதனை தவிர்ப்பதற்காக நேரத்திற்கு முன்பாகவே வருகை தருதல்;

ஆ) கூட்டத்தில் பங்கேற்கும்போது பொருத்தமான ஓர் முகக்கவசம் அணிதல்; மற்றும்

இ) கம்பனியினால் அமுல்படுத்தப்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளுடன், பிரிவு (1) இல் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன, இவற்றுக்கு ஒத்துழைத்தல். கூட்டத்தில் அனைத்து பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கத்தவர்கள் மற்றும்/அல்லது அவர்களது பதிலாட்கள் சுகயீனமுற்று காணப்பட்டால், COVID-19 அறிகுறிகள் அல்லது அவற்றை வெளிப்படுத்தினால் அல்லது தனிமைப்படுத்தப்பட்டு இருந்தால் அல்லது வீட்டிலிருக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தால் கூட்டத்திற்கு சமூகளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கூட்டத்தில் பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு, கூட்டம் தொடர்பாக கம்பனி ஏதேனும் மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டால், COVID –19 தொற்று காரணமாக, மற்றும்/அல்லது அரசாங்கத்தினால் ஏதேனும் தொடர்பாடல்கள், வழிகாட்டிகள், பணிப்புரைகள் அல்லது கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய நடவடிக்கையின் அறிவித்தலானது கம்பனியின் இணையத்தளத்தம் - www.srilankan.com இலும், மற்றும் டெய்லி நியூஸ், சிலுமின, தினகரன் நாளிதழ்களிலும் பிரசுரிக்கப்படும்.

# பதிலாள் படிவம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

*நான்/நாங்கள்,.................................................................................................................................................................................................................. இன்

......................................................................................................................................................................................................................................

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் அங்கத்தவராக /அங்கத்தவர்களாக இருப்பதால் ..................................................................................................

...................................................................................................................................................................................................................... இன்

....................................................................................................................................................................................................................இத்தால்

நியமிக்கின்றேன் அல்லது அவர் இல்லாவிடின் பின்வரும் பணிப்பாளர்களுள் ஒருவரை

திரு. அசோகா காரியவசம் பத்திரகே
திரு. மொஹமட் அஷ்ரப் ஓமார்
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர டி சில்வா ஜ.ச.
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு. சஞ்சய மொஹொட்டால

*எனது /எமது பதிலாளாக என்னை/எம்மை பிரதிநிதித்துவப்படுத்தி எனது/எமது சார்பில் இலங்கை, கொழும்பு 07, பவுத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 'லோட்டஸ் மண்டபம்' பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 25 செப்டம்பர் 2020, காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ள வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பங்குதாரர்களுக்கான நாற்பத்து இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிப்பதுடன் மற்றும் அதிலிருந்தான ஏதேனும் ஒத்திவைப்புக்களுக்கும் அனுமதியளிக்கின்றேன்/அனுமதியளிக்கின்றோம்.

1. பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை மற்றும் 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் அதிலிருந்தான கணக்காய்வாளர்களின் அறிக்கையினை பெற்று ஆலோசிப்பதற்கு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தின் 36 ஆவது உறுப்பின் ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வாளர் அதிபதி நிறுவனத்தின் கணக்காய்வினை மேற்கொள்ளல் வேண்டும்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு .............................................................. மாதம் ................................................................ திகதியில் கையொப்பமிடப்பட்டது.

.............................................................
கையொப்பம்/கையொப்பங்கள்

**குறிப்பு:**

(அ)* தயவுசெய்து பொருத்தமற்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்
எந்த வார்த்தைகளும் நீக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது பதிலாள் வைத்திருப்பவர் எவ்வாறு பதிலாள் வைத்திருப்பவர் வாக்களித்தல் வேண்டும் என்பதில் ஏதேனும் சந்தேகம் காணப்படின் (பதிலாள் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விதத்தின் காரணமாக) பதிலாள் வைத்திருப்பவர் தனக்கு பொருத்தம் என்று தோன்றும் வழியில் வாக்களிப்பார்.

**பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**

1. ஒரு அங்கத்தவர் அவருக்குப் பதிலாக சமூகமளிப்பதற்கு மற்றும் வாக்களிப்பதற்கு பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளார். பதிலாள் அங்கத்தவர் ஒருவராக இருக்க வேண்டிய அவசியமில்லை.
2. பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவமானது 'எயார்லைன் மத்தியநிலையம்', பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் 23 செப்டம்பர் 2020 முற்பகல் 10.00 க்கு பிந்தாது வைப்பிலப்படுதல் வேண்டும், இது கூட்டம் இடம்பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணித்தியாலங்கள் முன்னதாகும்.
3. ஓர் கூட்டாண்மையினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆள் ஒருவர் கூட்டாண்மையின் பிரதிநிதியாக அவர் செயலாற்றுவதற்கு அனுமதிக்கும் தீர்மானத்தின் சான்றளிக்கப்பட்ட பிரதியினை வைத்திருக்குமாறு வேண்டப்படுகின்றார். பிரதிநிதியொருவர் அங்கத்தவர் ஒருவராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

# குறிப்புக்கள்

# குறிப்புக்கள்

SriLankan
Airlines

எயர்லயின் சென்டர், பண்டாரநாயக இன்டர்நேஷனல் ஏர்போர்ட், கட்டுநாயக, ஸ்ரீ லங்கா.

**www.srilankan.com**